# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூன் 2023

**www.tnpscthervupettagam.com**



















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 10
தமிழ்நாடு செய்திகள் ..... 20
தமிழக வாக்காளர்கள் ..... 20
பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சான்றிதழ்களை வழங்கச் செய்வதற்கான வழிகாட்டுதல்கள் ..... 20
தேனிக்கு முதல் ரயில் ..... 21
கீழ்நமண்டி அகழாய்வுத் தளம் ..... 21
அதிக பட்ச நிலக்கரித் தேவை ..... 22
தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம் ..... 22
தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு தரவரிசையில் தமிழ்நாட்டின் சிறந்த கல்லூரிகள் ..... 22
வெம்பக்கோட்டை தொல்லியல் தளம் ..... 23
இலங்கைக்கான பயணிகள் கப்பல் ..... 24
பசுமை சாம்பியன் விருதுகள் 2022 ..... 24
500 நகர்ப்புறச் சுகாதாரம் மற்றும் நல மையம் ..... 25
தேசிய மின்சாரத் திட்டம் ..... 25
ஒரு நாளில் பதிவான அதிகபட்ச மழை ..... 26
ஒற்றைக் கல் மற்றும் பெருங்கற்காலப் புதைவிடங்கள் ..... 26
மேட்டூர் அணை திறப்பு 2023 ..... 27
பொது ஒப்புதலை திரும்பப் பெறுதல் ..... 27
தமிழ் மொழியில் பொறியியல் படிப்புகள் ..... 28
அமைச்சர்களின் இலாகாக்கள் மறு ஒதுக்கீடு ..... 28
40 லட்சம் டன் நெல் கொள்முதல் ..... 28
காற்றுத் திட்டம் ..... 29
தென்னக ரயில்வே வழித்தடத்தில் யானைகளுக்கான முதல் சுரங்க வழிப் பாதை ..... 29
தமிழ்நாடு நிதிசார் தொழில்நுட்ப நகரம் ..... 30
சூரியசக்தி-காற்றாற்றல் கலப்பின முறை ..... 30
குறைந்தபட்ச ஆதரவு விலையைப் பெறும் நெல் விவசாயிகள் ..... 31
தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வில் தேர்ச்சி ..... 32
முதுமக்கள் தாழியில் குழந்தையின் எலும்புகள் கண்டெடுப்பு ..... 32
அரசின் இணையச் சந்தை கொள்முதலில் இரண்டாவது மிக அதிக உயர்வு ..... 33
சோழர் காலத்து கலைப்பொருட்கள் ..... 33
தமிழகத்தின் அரிசித் தேவை ..... 34
ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள் ..... 35
மாநிலப் பறவைகள் ஆணையம் ..... 35
இந்தியாவின் முதல் கூட்டுறவு சங்கம் ..... 36
தமிழகத்தில் சுழிய எண்ணிக்கையிலான கோவிட் பாதிப்பு பதிவு ..... 36

FSSAI ஆணையத்தின் சரியான உணவு முறைச் சான்றிதழ் – கடலூர் ..... 37
கோவில் அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் ..... 38
தேசியச் செய்திகள் ..... 39
சிறப்புப் பாதுகாப்புக் குழுவிற்கான புதிய விதிகள் ..... 39
ஊட்டச்சத்துக் குறைபாடு குறித்த ஒரு கூட்டு மதிப்பீட்டு அறிக்கை ..... 40
AISHE கணக்கெடுப்பு 2020-21 ..... 41
ஃபௌக்கால்ட்ஸ் ஊசற்குண்டு ..... 42
வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு 2023 ..... 43
கல்வி அமைச்சகத்தின் அறிக்கை ..... 44
CITIIS 2.0 திட்டம் ..... 44
கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டம் ..... 45
PM-JAY திட்டத்தின் கீழ் 5 கோடி மருத்துவமனைச் சேர்க்கைகள் ..... 46
வரைவு விமான மசோதா – 2023 ..... 46
மின்னணுப் பழுதுபார்ப்புத் துறைக்கான சோதனைத் திட்டம் ..... 47
இந்தியாவுடனான நாடு ரீதியிலான  கூட்டுப் பங்காண்மை உத்தி: 2023-2027 ..... 47
அருமண் நிரந்தரக் காந்த ஆலை ..... 48
தேசிய மின்சாரத் திட்டம் 2022-32 ..... 49
ஸ்வச் ஜல் சே சுரக்சா பிரச்சார அறிக்கை ..... 49
ரயில் தடம் புரளல் பற்றிய இந்திய ரயில்வேயின் அறிக்கை ..... 49
தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) 2023 ..... 50
அணைகளின் நிலநடுக்கப் பாதுகாப்பிற்கான தேசிய மையம் ..... 52
டைம்ஸ் உயர் கல்வி (THE) தாக்கங்கள் குறித்த தரவரிசை 2023 ..... 52
கவாச் அமைப்பு ..... 53
வழிகாட்டுதலுக்கான தேசியத் திட்டம் (NMM) ..... 54
2021-22 நிதியாண்டுக்கான நிலைத்தன்மை அறிக்கை ..... 54
கையால் துப்புரவுப் பணி மேற்கொள்ளல் குறித்த அறிக்கை ..... 55
நியாய விகாஸ் இணையதளம் ..... 55
அக்னி-1 ஏவுகணை ..... 56
செயல்திறன் அடிப்படையிலான வழிசெலுத்தல் அமைப்பின் செயல்விளக்கம் ..... 56
பிரேர்னா: வட்டார மொழிப் பள்ளி ..... 57
உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2023 ..... 58
பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் - 2023 ..... 58
நிலவுடைமைப் பாத்தியம் கோரல் ..... 59
தேசத் துரோக சட்ட அறிக்கை ..... 60
புதிய ஈர நிலம் மற்றும் சதுப்புநில வளங்காப்புத் திட்டம் ..... 61
13 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல்லறை போன்ற கட்டமைப்பு ..... 62
குடிநீர் வழங்கீடு பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை ..... 62
மேம்படுத்தப் பட்ட மற்றும் அதிக தாக்கம் கொண்ட ஆராய்ச்சிக்கான தேசியத் திட்டம் ..... 63
கல்விப் பட்டங்களுக்குப் புதிய பெயர்கள் ..... 64

காரீஃப் பருவப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு ........ 65
நிலக்கரி மற்றும் லிக்னைட் ஆய்வுத் திட்டம் ........ 66
மாற்றியமைக்கப்பட்ட குறைகடத்திகள் இந்தியா திட்டம் ........ 67
விமானந் தாங்கிப் போர்க் கப்பல் குழும நடவடிக்கை ........ 67
நீரிழிவு நோய் பற்றிய இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் ஆய்வறிக்கை ........ 68
விக்யான் விதுஷி – 2023 ........ 69
E27 எரிபொருள் ........ 69
அதிகம் மேம்பாடு அடைந்த தொகுதி ........ 70
Fame -II மானியம் குறைப்பு ........ 70
அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் ஊடக சம்மான் விருதுகள் ........ 71
அஞ்சதீப் & சன்சோதக் போர்க் கப்பல்கள் ........ 71
பழங்குடியினருக்கான புதிய மனித வள மேம்பாட்டுக் குறியீடு ........ 71
நடுவண் தீர்ப்பாயச் சட்டத்தின் சீர்திருத்தம் ........ 72
தேசியச் செயல்பாட்டுத் திட்டக் குறியீடு – 2023 ........ 73
காற்றாலை ஆற்றல் ஏற்பில் முன்னணியில் விளங்கும் மாநிலங்கள் ........ 73
4வது தேசிய நீர் விருதுகள் ........ 73
திறந்த நிலைச் சந்தை விற்பனை ரத்து ........ 74
இந்திய மொழிகள் திட்டம் ........ 75
2023 ஆம் ஆண்டில் கல்விக் கடன் அதிகரிப்பு ........ 75
ஓமைக்ரானுக்கு எதிரான சிகிச்சைக்காக உருவாக்கப்பட்ட mRNA தடுப்பு மருந்து ........ 76
தேசிய வெளியீட்டு நேர ஆய்வு 2023 அறிக்கை ........ 76
நீதிமன்ற நடவடிக்கைகள் கடிகாரங்கள் ........ 77
இந்தியாவில் நகர்ப்புறப் பிரிவினையின் நிலைகள் ........ 77
மக்கும் வேளாண் சார்ந்த உப தயாரிப்புப் பாத்திரங்களுக்கான BIS தரநிலைகள் ........ 78
ஒரு நாடு ஒரு உதவி எண் ........ 78
மேக விதைப்புத் தொழில்நுட்பத்திற்கானச் சோதனை ........ 79
VAIBHAV புத்தாய்வு மாணவர் திட்டம் ........ 80
கனிமப் பாதுகாப்புக் கூட்டாண்மை ........ 80
ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் இரயில் ........ 81
தேசிய எரிசக்தித் தரவு: கணக்கெடுப்பு மற்றும் பகுப்பாய்வு 2021-22 ........ 81
'பல்வேறு வகை உணவு உட்கொள்ளுதல்' குறித்த பிரச்சாரம் ........ 82
'தக்ஷதா' கல்வி ........ 83
சர்வதேசச் செய்திகள் ........ 83
உலகச் செல்வ வள மாநாடு ........ 83
மீள்நிரப்பல் செயல்முறை ........ 84
அனைவருக்குமான ஆரோக்கியம் - உலக சுகாதார அமைப்பு ........ 84
மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவில் போலியோ ஒழிப்பு முயற்சிகள் ........ 85
சென்சூவோ-16 ஆய்வுத் திட்டம் ........ 85
பழங்குடியின மக்களின் ஆரோக்கியத்திற்கான உலகளாவியச் செயல் திட்டம் ........ 86

நீரில் மூழ்கி உயிரிழப்பதைத் தடுப்பதற்கான உலகளாவியக் கூட்டணி .......... 87
மையப்படுத்தப்பட்ட ஆய்வக வலையமைப்பு .......... 87
பலதரப்புக் கடற்படைப் பயிற்சி - கொமோடோ .......... 88
சபாங் துறைமுக சாத்தியக்கூறு பற்றிய கூட்டு அறிக்கை .......... 88
உள்நாட்டுக் குறுகிய தூர விமானங்களுக்கு தடை .......... 89
ஹெல்மண்ட் நதிநீர் சச்சரவு .......... 89
இந்தியாவின் அன்னிய நேரடி முதலீட்டிற்கான சிறந்த தேர்வு .......... 90
மைக்ரோனேசியாவில் கடலுக்கடியில் கம்பி வட இணைப்புத் திட்டம் .......... 91
எண்ணெய் உற்பத்திக் குறைப்பு .......... 91
ககோவ்கா அணை சேதம் .......... 91
பைசர் நிறுவனத்தின் RSV தடுப்பு மருந்து .......... 92
மிகவும் சக்திவாய்ந்த மீயொலி காற்றோட்டச் சோதனை ஊடகம் .......... 92
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர் நாடுகள் .......... 93
ஏர் டிஃபென்டர் 23 .......... 94
ஃப்ரேசர் தீவின் பெயர் மாற்றம் .......... 94
அட்லாண்டிக் பிரகடனம் .......... 95
அகதிகளைச் சமமான முறையில் ஏற்பதற்கான ஒப்பந்தம் .......... 95
கோபர்நிகஸ் ஆய்வுத் திட்டம் .......... 96
முத்தரப்பு எரிசக்தி வர்த்தக ஒப்பந்தம் .......... 97
ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படையினருக்கான நினைவுச் சுவர் .......... 97
முதல் பெருங்கடல் ஒப்பந்தம் .......... 98
கான் குவெஸ்ட் 2023 பயிற்சி .......... 98
உலக எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு உச்சி மாநாடு .......... 99
ஒரினச் சேர்க்கை திருமணத்தினைச் சட்டப்பூர்வமாக்கிய எஸ்தோனியா .......... 99
இந்தியப் பிரதமரின் தனித்துவமிக்கப் பரிசுகள் .......... 100
நேட்டோ பிளஸ் .......... 101
பாகிஸ்தான்-அணுமின் நிலையம் .......... 101
INDUS X நிகழ்வு .......... 102
வங்காளதேசத்தில் மாறுநிலைப் பண மதிப்பு நிர்ணயம் .......... 102
செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேசப் பொருளாதார மன்றம் .......... 103
எகிப்து - ஹீலியோபோலிஸ் நினைவகம் .......... 103
வியட்நாம் நாட்டிற்கு ஐஎன்எஸ் கிர்பான் கப்பல் பரிசளிப்பு .......... 104
அமெரிக்காவில் மீன்கள் கொத்தாக உயிரிழப்பு .......... 104
ஹிரோஷிமா செயற்கை நுண்ணறிவுச் செயல்முறை .......... 105
'அமெரிக்க நாட்டிற்குள் இருந்தபடியே' H-1B நுழைவு இசைவுச் சீட்டினை புதுப்பித்தல் .......... 105
பொருளாதாரச் செய்திகள் .......... 106
இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2022-23 .......... 106
போலியான 500 ரூபாய்த் தாள்களின் புழக்கம் அதிகரிப்பு .......... 107
2023 ஆம் நிதியாண்டின் நிதிப் பற்றாக்குறை இலக்கு .......... 108

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ........ 108
இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி ........ 109
இணைய வழி மேல்முறையீடுத் திட்டம் 2023 ........ 110
உலகின் 2வது பெரிய கச்சா எஃகு உற்பத்தியாளர் நாடு ........ 110
நிதி உள்ளடக்கக் கட்டுப்பாட்டகம் ........ 111
இந்தியாவின் இணையப் பொருளாதாரம் ........ 111
மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கை ........ 112
2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் உற்பத்தி ........ 112
நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கான முக்கிய நடவடிக்கைகள் ........ 113
உலக எண்ணிமப் பண வழங்கீடுகள் ........ 114
மூன்றாவது வரிப் பகிர்வு ........ 114
கடல்சார் உணவுப்பொருட்களின் அதிக ஏற்றுமதி ........ 115
முதல் இழப்பு இயல்புநிலை உத்தரவாதம் ........ 116
ரஷ்ய எண்ணெய் இறக்குமதியானது வரலாறு காணாத அளவிற்கு உயர்வு ........ 117

அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 117

வழிகாட்டுச் செயற்கைக்கோள் – NVS 01 ........ 117
GS-9209 அண்டத்தில் மீப்பெரும் கருந்துளை ........ 118
சிறிய வகை அணுக்கரு உலைகள் ........ 118
டாம் திநிரல் ........ 119
2023 FW13 ........ 120
இஸ்ரேல்-1 மீத்திறன் கணினி ........ 120
நியூராலிங்க் சில்லுகள் ........ 121
புதிய புறக்கோள் ........ 121
ஃபட்டா / கான்குவரர் ஏவுகணை ........ 122
வருணாஸ்திரா கடற்கணை ........ 122
ஒளியால் இயங்கும் மீ மின்தேக்கிகள் ........ 123
மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தின் 20வது ஆண்டு நிறைவு விழா ........ 124
இனச்சேர்க்கை நிகழாமலேயே முட்டையிட்ட முதலை ........ 124
விண்வெளியில் வறுத்தல் செயல்முறையினை மேற்கொள்ளச் செய்வதற்கான பரிசோதனை ........ 125
சூரியப் புயலின் மூல ஆதாரம் ........ 125
சுவாச சிங்க்சியல் வைரசினைக் கட்டுப்படுத்துதல் ........ 126
தபஸ் ஆளில்லா வான்வழி வாகனம் ........ 127
சிரல் போஸ்-திரவ நிலை ........ 128
நிலநடுக்கங்களுக்கும் காஸ்மிக் கதிர்வீச்சுக்கும் இடையிலான தொடர்பு ........ 128
காகிதத்தினால் ஆன மீமின்தேக்கி ........ 129

சுற்றுச்சூழல் செய்திகள் ........ 130

சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்ட வழிநடத்தல் குழு ........ 130
கோம்போறிமா இராஜகுருயி ........ 130
அண்டார்டிகாவில் ஆழ்கடல் நீரோட்டங்கள் ........ 131

பொரியாலிஸ் சகதிமண் எரிமலை ....... 132
பிசோடோனோபிஸ் கலிங்கா ....... 132
Saving Our Stripes முயற்சி ....... 133
எரிசக்திப் பயன்பாட்டு முன்னேற்ற அறிக்கை 2023 ....... 133
உலகளாவியப் பெருங்கடல் கணக்கெடுப்பு ....... 134
பைபர்ஜாய் புயல் ....... 135
எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் முன்னணித்துவ திட்டத்தின் நிகர சுழிய உமிழ்வுச் சான்றிதழ்கள் ....... 136
இந்துகுஷ் இமயமலையில் பனிப்பாறையின் அளவில் குறைவு ....... 137
களிமண்ணைப் பயன்படுத்தி மருத்துவக் கழிவுகளை அகற்றுதல் ....... 138
ப்ளூ பான்சி வண்ணத்துப்பூச்சி ....... 138
பர்மிய மயில் போன்ற அடையாளக் குறியீடுகளைக் கொண்ட மிருதுவான ஓடு உடைய ஆமைகள் ....... 139
கிலாவியா எரிமலை ....... 139
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....... 140
உலக அடிமை நிலைக் குறியீடு 2023 ....... 140
பட்டினி நிலை அதிகம் நிலவும் பகுதிகள் – FAO/WFP அறிக்கை ....... 141
11வது உலக வேலை அறிக்கை ....... 141
ஆற்றல் மாற்றத்திற்கான குறைந்த நிதி ஒதுக்கீட்டு அறிக்கை ....... 142
பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் அறிக்கை ....... 143
உலகளாவிய வாய்வழி சுகாதார நிலை அறிக்கை - உலக சுகாதார அமைப்பு ....... 144
சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை ....... 145
பாலினச் சமூக விதிமுறைகள் குறியீடு – 2023 ....... 145
உலக நாடுகளின் போக்குகள்: 2022 ஆம் ஆண்டில் ஒரு வலுக்கட்டாயமான வகையிலான புலம்பெயர்வு ....... 146
சமூக உணர்வுக் குறியீடு ....... 147
ஃபோர்ப்ஸ் இதழின் உலகின் 2000 முன்னணி நிறுவனங்களின் பட்டியல் ....... 148
அணு ஆயுதங்கள் பற்றிய SIPRI நிறுவனத்தின் கண்டுபிடிப்புகள் ....... 148
பாலின இடைவெளி அறிக்கை, 2023 ....... 149
ராண்ட்ஸ்டாட் முதலாளிகளின் நிறுவனச் சந்தைப்படுத்துதல் மீதான உத்தி சார்ந்த நிறுவனத் தரவரிசை ஆய்வு (REBR) 2023 ....... 150
உலகப் புத்தொழில் நிறுவனச் சூழலமைவு அறிக்கை 2023 ....... 151
ஐரோப்பாவின் பருவநிலை 2022 அறிக்கை ....... 151
EIU உலகின் வாழத் தகுந்த சிறந்த நகரங்கள் குறியீடு 2023 ....... 152
THE இதழின் ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசை 2023 ....... 152
டைம்ஸ் இதழின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நிறுவனங்கள் – 2023 ....... 153
உணவுக் கண்ணோட்ட அறிக்கை ....... 153
உலகப் போதைப்பொருட்கள் அறிக்கை 2023 ....... 154
IMD - உலக போட்டித் தன்மை தரவரிசை ....... 155
மாநிலச் செய்திகள் ....... 156
அகமதுநகர் பெயர் மாற்றம் ....... 156

மிகப்பெரிய சூரியசக்தி நகரத்திற்கான திட்டம்....156
மாநிலச் சட்டமன்ற அமர்வுகள் பற்றிய ஆராய்ச்சிப் பகுப்பாய்வு....156
சடலத்துடன் பாலுறவுறல் (நெக்ரோபிலியா) மீதான தீர்ப்பு....157
2023 நிதியாண்டில் அமைப்புசார் வேலைவாய்ப்பு உருவாக்கம்....158
ஒட்டு மொத்தச் சுற்றுச்சூழல் செயல்திறன்....159
KFON இணைய இணைப்பு....159
உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் விரைவாக்கத் திட்டம்....160
முதல் சரக்கு வாகனப் பரிமாண வரம்பு மீட்சிப் போக்குவரத்து....161
காரி இஷாத் மாம்பழம்....161
ஒடிசாவில் உள்ள ‘இயற்கை வளைவு’....161
"சீர்திருத்த இல்லங்களாக" சிறைகள்....162
பஞ்சாப் காவல்துறை திருத்த மசோதா, 2023....162
கர்நாடகாவின் அன்ன பாக்யா திட்டம்....163
வட இந்தியாவின் முதல் தோல் வங்கி....163
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்....164
உலக சுகாதார அமைப்பின் வெளியுறவு கணக்குத் தணிக்கையாளர்....164
தென்னாப்பிரிக்காவில் காந்தி தொடர்பான ரயில் சம்பவத்தின் 130 ஆண்டுகள் நிறைவு....164
சத்ரபதி சிவாஜி அவர்களின் முடிசூட்டு விழாவின் 350வது ஆண்டு நிறைவு....165
கடற்படைத் தளபதி K.S. சுப்பிரமணியன்....165
SMOPS-2023....166
ஸ்பினோசா பரிசு....167
UITP விருது - மும்பை BEST முன்னெடுப்பு....167
சர்வதேசப் பசுமை ஆப்பிள் விருதுகள்....167
தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது 2022-23....167
தமிழ் எழுத்தாளருக்கு பால் சாகித்ய புரஸ்கார் விருது....168
தமிழ் எழுத்தாளருக்கு யுவ புரஸ்கார் விருது....168
2023 ஆம் ஆண்டு இக்பால் மசிஹ் விருது - லலிதா நடராஜன்....168
புள்ளியியல் துறைக்கான சர்வதேச பரிசு....169
எகிப்தின் 'ஆர்டர் ஆஃப் த நைல்' விருது....169
சாகித்ய அகாடமி விருதுகள்....170
கிராமி விருதுகளின் விரிவாக்கம்....171
விளையாட்டுச் செய்திகள்....172
டி20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஆட்டமிழப்புகள்....172
ஆண்கள் ஜூனியர் ஹாக்கி ஆசியக் கோப்பை 2023....172
3வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்....172
உலக ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி....173
பிரெஞ்ச் ஓபன் போட்டி 2023....173
FIFA U20 உலகக் கோப்பை 2023....174
37வது இந்திய தேசிய விளையாட்டுகளுக்கான உருவச் சின்னம்....174

சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டு போட்டிகள் 2023 ..... 175
முக்கிய தினங்கள் ..... 175
கோவா மாநில தினம் - மே 30 ..... 175
உலக பால் தினம் - ஜூன் 01 ..... 176
தெலுங்கானா தினம் - ஜூன் 02 ..... 176
உலகப் பெற்றோர் தினம் - ஜூன் 02 ..... 176
சர்வதேசப் பாலியல் தொழிலாளர்கள் தினம் - ஜூன் 02 ..... 177
உலக மிதிவண்டி தினம் - ஜூன் 03 ..... 177
வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - ஜூன் 04 ..... 178
உயிரினங்களுக்கு எதிரான உலக தினம் - ஜூன் 05 ..... 178
உலகச் சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 05 ..... 178
சட்டவிரோத, வெளிவராத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தலுக்கு எதிரான ஒரு போராட்டத்திற்கான சர்வதேச தினம் 2023 - ஜூன் 05 ..... 179
உலகப் பூச்சி தினம் - ஜூன் 06 ..... 180
ஐக்கிய நாடுகளின் ரஷ்ய மொழி தினம் - ஜூன் 06 ..... 180
உலக உணவுப் பாதுகாப்புத் தினம் - ஜூன் 07 ..... 181
உலக மூளைக் கட்டி தினம் - ஜூன் 08 ..... 181
உலகப் பெருங்கடல் தினம் - ஜூன் 08 ..... 181
உலக அங்கீகாரத் தினம் 2023 - ஜூன் 09 ..... 182
குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 12 ..... 183
சர்வதேச வெண்தோல் நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 13 ..... 183
சர்வதேச ஆவணக் காப்பக தினம் - ஜூன் 09 ..... 183
உலக இரத்தத் தான தினம் - ஜூன் 14 ..... 184
உலக காற்று தினம் - ஜூன் 15 ..... 184
உலக முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினம் - ஜூன் 15 ..... 184
ASEAN டெங்கு தினம் - ஜூன் 15 ..... 185
வெளிநாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜூன் 16 ..... 185
பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்ப்பதற்கான உலக தினம் - ஜூன் 17 ..... 185
உலக அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 19 ..... 186
உலகப் பொழுதுபோக்கு நடை தினம் - ஜூன் 19 ..... 187
தேசிய வாசிப்பு தினம் - ஜூன் 19 ..... 187
உலக முதலை தினம் - ஜூன் 17 ..... 187
நிலையான சமையல் கலை தினம் - ஜூன் 18 ..... 188
வெறுப்பினை உண்டாக்கும் பேச்சை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 18 ..... 189
மோதல் காலங்களில் நிகழும் பாலியல் வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 19 ..... 189
உலக அகதிகள் தினம் - ஜூன் 20 ..... 189
உலக நீர்நிலையியல் தினம் - ஜூன் 21 ..... 190
உலக இசை தினம் - ஜூன் 21 ..... 190
சர்வதேச யோகா தினம் - ஜூன் 21 ..... 190

சர்வதேச சங்கிராந்தி தினம் - ஜூன் 21 ..... 191
சர்வதேச விதவைகள் தினம் - ஜூன் 23 ..... 191
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை தினம் - ஜூன் 23 ..... 191
அரசுமுறைச் செயல்பாடுகளில் பெண்களின் பங்கேற்பிற்கான சர்வதேச தினம் - ஜூன் 24 ..... 192
உலக வெண் புள்ளி நோய் தினம் - ஜூன் 25 ..... 192
சர்வதேசக் கடலோடிகள் தினம் - ஜூன் 25 ..... 193
போதைப்பொருட்களின் தவறான பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் - ஜூன் 26 ..... 193
சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு சர்வதேச தினம் - ஜூன் 26 ..... 194
உலகக் குளிர்பதனத் தொழில்நுட்பத் தினம் - ஜூன் 26 ..... 194
சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நுட்ப நிறுவனங்கள் தினம் - ஜூன் 27 ..... 194
தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29 ..... 194
சர்வதேச வெப்ப மண்டலத் தினம் - ஜூன் 29 ..... 195
உலக குறுங்கோள் தினம் - ஜூன் 30 ..... 196
சர்வதேசப் பாராளுமன்றத் தினம் - ஜூன் 30 ..... 196
இதரச் செய்திகள் ..... 197
பாதாள உலகத்தின் நுழைவாயில் ..... 197
லிபிசான் குதிரைகள் ..... 197
புராண கிலா அகழ்வாராய்ச்சிகள் ..... 198
வெப்பக் குறியீட்டு அடிப்படையிலான காப்பீட்டுத் திட்டம் ..... 198
ஹோமோ நலேடி புதைவிடங்கள் மற்றும் கீறல் ஓவியங்கள் ..... 199
எனது கணக்கு எனது பெயர் திட்டம் ..... 199
அமெரிக்காவில் தோல் பாவைக் கூத்து நிகழ்ச்சி ..... 200
பேரழிவுகரமான உள்நோக்கிய அழுத்த வெடிப்பு ..... 200
வரலாற்றுக்கு முந்தையக் காலகட்டத்தினைச் சேர்ந்தப் பாறை ஓவியங்கள் – குண்டூர் ..... 201
ITU - IMT 2030 ..... 202
வாத்தினைப் போன்ற அலகுடைய டைனோசர் ..... 202
அல்-ஹக்கீம் மசூதி – எகிப்து ..... 203

# TNPSC துளிகள்

- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராகப் பிரவீன் குமார் ஸ்ரீவஸ்தவா நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியப் பேட்மிண்டன் வீரரான HS பிரணாய், மலேசியாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு மாஸ்டர்ஸ் இறுதிப் போட்டியில் சீனாவைச் சேர்ந்த வெங் ஹாங் யாங் என்பவரைத் தோற்கடித்து தனது முதல் BWF உலக விளையாட்டுப் போட்டிக்கானப் பட்டத்தினை வென்றார்.
- புகை பிடிப்பவர்களுக்குத் தீங்கைக் குறைக்கும் கருவியாக மின்-சிகரெட்டுகள் குறித்த (vaping) சாத்தியமான நன்மைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மே 30 ஆம் தேதியன்று உலக வேப் தினம் (மின்னணு சிகரெட்டு) கொண்டாடப் படுகிறது.
- அசாமின் குவஹாத்தி மற்றும் மேற்கு வங்காளத்தின் ஜல்பைகுரி ஆகியப் பகுதிகளை இணைக்கும் அசாம் மாநிலத்தின் முதல் வந்தே பாரத் விரைவு இரயிலைப் பிரதமர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- G20 ஊழல் எதிர்ப்பு பணிக் குழுவின் இரண்டாவது கூட்டமானது, சமீபத்தில் ரிஷிகேஷ் நகரில் நடைபெற்றது.
- தெலுங்கானா மாநிலமானது, பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா எனப்படும் திட்டத்தின் மூலம், அனைத்து மக்களுக்கும் வங்கிச் சேவைகளை வழங்கிய ஒரு மாநிலமாக மாறி உள்ளது.
- UNFCCC அமைப்பின் பங்குதாரர்கள் மாநாட்டின் 28வது அமர்வின் தலைவருக்கான ஒரு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக முகேஷ் அம்பானி நியமிக்கப் பட்டுள்ளார்.
- சண்டிகர் ஒன்றியப் பிரதேசத்தின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, கால்நடைகளின் மருத்துவச் சிகிச்சைப் பதிவேடுகளை கணினிமயமாக்கியதற்காக மின்-ஆளுமைச் சேவைக்கான 2023 ஆம் ஆண்டு ஸ்கோச் சில்வர் விருதினைப் பெற்று உள்ளது.
- ஊடுகதிர் முனை வாக்கமானி செயற்கைக்கோளை (XPoSat) உருவாக்கச் செய்வதற்காக பெங்களூருவில் உள்ள ராமன் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (RRI) இஸ்ரோ இணைந்து செயல்படுகிறது.
    - இது இந்தியாவின் முதலாவது மற்றும் உலகின் இரண்டாவது முனை வாக்கமானி ஆய்வுப் பணியாகும்.
- மாநில அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமான வழிகாட்டல் தமிழ்நாடு, ஜப்பானிய நாட்டு மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி நிறுவனமான ஓம்ரான் ஹெல்த்கேர் என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து தமிழக மாநிலத்தில் தனது உற்பத்தி அலகு ஒன்றினை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- கனடாவின் மாணவர்கள் நுழைவு இசைவு SDS திட்டத்தினைப் பயன்படுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய மதிப்பெண்ணாக TOEFL (ஓர் அயல்நாட்டு மொழியாக ஆங்கில மொழிப் பயன்பாட்டுத் தேர்வு) மதிப்பினை கனடா தற்போது அங்கீகரித்துள்ளது.
    - SDS திட்டம் மூலம் பயன்பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஆங்கில மொழிச் சோதனை விருப்பத் தெரிவாக இதுவரை IELTS தேர்வு மட்டுமே விளங்கியது.
- எடின்பர்க் பல்கலைக்கழகம் தனது முதல் திறந்தநிலை அணுகல் வகையிலான கல்விப் படிப்பினை இந்தி மொழியில் உருவாக்குவதற்கு ஐக்கியப் பேரரசில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் கை கோர்த்துள்ளது.

- காத்மாண்டுவில் நடைபெற்ற மத்திய ஆசியக் கைப்பந்துச் சங்கங்களின் (CAVA) பெண்களுக்கான வாலிபால் சேலஞ்ச் கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் இந்திய அணி கஜகஸ்தான் அணியினை வீழ்த்தித் தங்கப் பதக்கத்தினை வென்றது.
- மூத்த ஆட்சிப்பணி அதிகாரி அங்சுமாலி ரஸ்தோகி, கனடாவின் மாண்ட்ரீயல் நகரில் உள்ள சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) சபையில் இந்தியப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய வெளியுறவுத் துறை விவகாரங்கள் அமைச்சகம், இந்தியாவிற்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு மற்றும் ஆசியச் சங்கமம் என்ற அமைப்பு ஆகியவை இணைந்து மேகாலயாவில் இந்திய - ஐரோப்பிய ஒன்றிய இணைப்புத் தொடர்பான ஒரு மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளன.
- பஜாஜ் அலையன்ஸ் ஆயுள் காப்பீட்டு நிறுவனமானது, 'பஜாஜ் அலையன்ஸ் லைஃப் நீரிழிவு காலக் காப்பீட்டுத் திட்டம் உள்வகை 8 HbA1c' எனப்படும் ஒரு பிரத்தியேக காலக் காப்பீட்டுத் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது
  - இது வகை - 2 நீரிழிவு நோயாளிகள் மற்றும் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையில் உள்ள நபர்களுக்காக வடிவமைக்கப்பட்ட முதல் வகையான காப்பீட்டுத் திட்டம் ஆகும்.
- ஒடிசா மாநிலத்தில் செயற்கை நுண்ணறிவின் (AI) ஆற்றலினை மேம்படுத்துவதற்காக, 'செயற்கை நுண்ணறிவிற்கான ஒடிசா' மற்றும் 'இளைஞருக்கான செயற்கை நுண்ணறிவு' என்ற இரண்டு முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
- 76வது உலக சுகாதார சபையின் போது மனித ஆரோக்கியத்தின் மீது, இரசாயனங்கள், கழிவுகள் மற்றும் மாசுபாடு தாக்கம் குறித்த வரைவுத் தீர்மானத்தினை உலக சுகாதார அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.
- முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி பெயரில் சென்னையில் ஒரு சர்வதேச மாநாட்டு மையம் அமைக்கப் படவுள்ளது.
- உலக சுகாதார நிறுவனம் தனது இணையதளத்தில் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டத்தைப் பற்றிய ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது.
  - இது அனைத்து மக்களும் சுகாதாரச் சேவையை அணுகுவதற்காக வேண்டி தமிழக அரசின் சுகாதாரத் திட்டமாகும்.
- தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாட்டை ஊட்டியில் தொடங்கி வைத்தார்.
- ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம் (UPI) எனப்படும் யுபிஐ மூலம் செய்யப் பட்ட பரிமாற்றமானது மே மாதத்தில் 9.41 பில்லியன் பரிவர்த்தனைகளுடன் மொத்த மதிப்பானது அதிகபட்சமாக ரூ. 14.3 டிரில்லியன்கள் எனற அளவை எட்டியது.
- முரட்டு யானை அரிகொம்பன் சமீபத்தில் பிடிக்கப்பட்டு களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் கோதையாறு பகுதியை அடுத்து உள்ள முத்துக்குழிவயல் என்ற பகுதியில் விடப்பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஷாலினி சிங் என்பவர் இமயமலைப் பகுதியில் மலையேறும் படிப்பை முடித்த முதல் இந்தியத் தேசிய மாணவர் படையின் பெண் உறுப்பினர் என்ற சாதனையைப் படைத்து உள்ளார்.
- ஜம்மு காஷ்மீரின் பதேர்வா பள்ளத்தாக்கில் இரண்டு நாள் "லாவெண்டர் திருவிழா" தொடங்கப் பட்டுள்ளது.

- ஐநா பொதுச் சபையானது (UNGA) அதன் 78வது அமர்வின் தலைவராக டிரினிடாட் மற்றும் டொபாகோ நாட்டின் ஐநாவிற்கான ஒரு நிரந்தரப் பிரதிநிதியான டென்னிஸ் பிரான்சிஸைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- ஐக்கிய அரபு அமீகரத்தைச் சேர்ந்த டாக்டர் அப்துல்லா அல் மண்டூஸ் உலக வானிலை அமைப்பின் (WMO) புதிய தலைவராக 2023 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வனவிலங்குக் காப்பாளர் மற்றும் மாவட்ட வனத் துறை அதிகாரியான ஜெகதீஷ் பாக்கன் என்பவர் 2023 ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ உயிர்க்கோளக் காப்பக மேலாண்மைக்கான மைக்கேல் பாட்டிஸ் என்ற விருதை வென்றுள்ளார்.
- தி இந்து குரூப் பப்ளிஷிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் தலைவராக நிர்மலா லட்சுமண் என்பவர் ஒருமனதாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- சிவகங்கை மாவட்டத்தில் காளையார் கோவிலுக்கு அருகே உள்ள பாண்டியன் கோட்டையில் கீறல் குறியீடுகளுடன் கூடிய பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிற்கு சுரினாம் நாட்டின் ஒரு உயரியக் குடிமை விருதான கிராண்ட் ஆர்டர் ஆஃப் தி செயின் ஆஃப் தி யெல்லோ ஸ்டார் என்ற விருது ஆனது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
  - இது சுரினாம் குடியரசு நாட்டின் மிகவும் மதிப்பு மிக்க அரசு விருது ஆகும்.
- ‘ஆர்க்டிக் சேலஞ்ச் 2023’ என்ற ஆர்க்டிக் பகுதி ராணுவப் பயிற்சியை நேட்டோ நாடுகள் தொடங்கி உள்ளது.
- தபால் தொழில்நுட்பத்தை மேம்படுத்த புதுதில்லியில் சர்வதேச தபால் கூட்டமைப்பின் மண்டல அலுவலகம் நிறுவப்பட உள்ளது.
- உலக வானிலை அமைப்பின் முதல் பெண் பொதுச் செயலாளராக அர்ஜென்டினா நாட்டினைச் சேர்ந்த செலஸ்ட் சாலோ என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- தேசிய மருத்துவ ஆணையமானது சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிற்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- மறைந்த முதல்வர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுத் தமிழகத்தின் நெடுஞ்சாலையோரங்களில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினை தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கைக் குழுவானது (MPC) பணப்புழக்கச் சீரமைப்பு வசதியின் (LAF) கீழான கொள்கை சார் ரெப்போ வட்டி விகிதத்தினை மாற்றாமல் 6.50% ஆகவே வைத்திருக்க முடிவு செய்துள்ளது.
- மத்திய சுகாதார அமைச்சகமானது, 2004 ஆம் ஆண்டு சிகரெட் மற்றும் பிற புகையிலை பொருட்கள் சட்டத்தின் கீழான திருத்தப்பட்ட சில விதிகளை அறிவித்ததன் மூலம், OTT தளங்களில் புகையிலைப் பயன்பாடு எதிர்ப்பு சார்ந்த ஒரு எச்சரிக்கை வெளியீடுகளை ஒழுங்குமுறைப் படுத்திய உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- மகாரஷ்டிரா மாநிலத்தின் தானே மாவட்டத்தில் உள்ள பிவாண்டி என்ற தாலுக்காவில், கார்பன் நடுநிலைத் தன்மை கொண்ட இந்தியாவின் முதல் கிராமமானது உருவாக்கப் பட்டு வருகிறது.

- இந்தியாவிலேயே முதன்முறையாக லித்தியம்-அயனி வகை மின்கலங்களை உற்பத்தி செய்வதற்காக கிகா-தொழிற்சாலை (மின்சார வாகனங்களுக்கான மின்கலங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் ஒரு ஆலை) ரகத்திலான முதல் தொழிற்சாலையானது குஜராத்தில் தொடங்கப்பட உள்ளது.
- கர்நாடக மாநில அரசின் சாதாரணப் பேருந்துச் சேவைகளில் பெண்களுக்கு இலவசப் பயண வசதியினை வழங்கும் 'சக்தி' திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அந்த மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- வடகிழக்குப் பிராந்தியத்தில் முதலாவதாக, அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் மாவட்ட நல்லாட்சிக் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டது.
  - இது நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள் துறை (DARPG) மற்றும் அருணாச்சலப் பிரதேச அரசு ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.
- நாக்பூர் அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனமானது, மதிப்புமிக்க மருத்துவ மனைகள் மற்றும் சுகாதார நலச் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் அங்கீகாரத்தினைப் பெற்ற நாட்டின் முதல் அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனமாக மாறியுள்ளது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக சுகாதார பணிக் குழுவின் 3வது கூட்டம் ஹைதராபாத் நகரில் நடைபெற்றது.
- 'கழிவுகளை மதிப்புள்ளவையாக மாற்றுதல்' முன்னெடுப்பினை விரிவுபடுத்துவதற்காக சாகர் சம்ரித்தி எனப்படும் இயங்கலை வழியான ஒரு தூர்வாரல் பணிக் கண்காணிப்பு அமைப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
  - இது துறைமுகம், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டது.
- இந்தியா, பிரான்சு மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் தங்களின் மூன்று கடற்படைகளுக்கு இடையே முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட முத்தரப்புக் கடல்சார் கூட்டுப் பயிற்சியை ஓமன் வளைகுடாவில் நிறைவு செய்துள்ளன.
- மகாராஷ்டிரா மாநில அரசானது ஆசியாவின் மிகப்பெரிய, மிகவும் உயர் இலட்சிய மிக்க மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைத் தானே நகரில் தொடங்கியுள்ளது.
  - இந்த மறுவடிவமைக்கப்பட்ட நகரமைப்புப் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய சுகாதார மையம், கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, வாகன நிறுத்தம், மண்டி மற்றும் குடிமை வசதி அமைப்புகள் ஆகியவை உள்ளன.
- தருமபுரி மாவட்டத்தில் உள்ள பூதிநத்தம் கிராமத்தில் புதியக் கற்காலத்தைச் சேர்ந்த கோடாரிக் கருவி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் 11,955 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் விநியோகக் கழகத்தின் நிகர இழப்பு ஆனது 2023 ஆம் நிதியாண்டில் 5,523 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.
- தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது, ஒரு ஆரோக்கியமான மற்றும் அடிமையாதல் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான "அடிமையாதல் இல்லாத அம்ரித் கால்" என்ற ஒரு தேசியப் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் புதியத் தலைமை இயக்குநராக ஜனார்த்தன் பிரசாத் நியமிக்கப் பட்டுள்ளார்.

- மெட்டா நிறுவனம் மற்றும் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து அம்ரித் தலைமுறை எனும் ஒரு பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளன.
  - இன்ஸ்டாகிராம் மற்றும் ஃபேஸ்புக் ஆகிய சமூக ஊடகங்களில் ரீல்கள் எனப்படும் சில காட்சிகளை உருவாக்குவதன் மூலம் அவர்களின் படைப்பாற்றலை வெளிப் படுத்தவும், அவர்களின் விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ளவும் நாடு முழுவதிலும் உள்ள 16 முதல் 18 வயதுடையவர்களுக்கு இது அழைப்பு விடுத்தது.
- இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளின் கடற்படைகள் ஆறாவது ஏகதா என்றப் பயிற்சியினை மேற்கொண்டன.
- லண்டனில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் 2023 ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப் போட்டியில் இந்திய அணியினை வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.
- நைனிடால் மாவட்டத்தில் உள்ள கௌலா ஆற்றில் ஜூன் 30 ஆம் தேதி வரை மணல் அள்ளும் பணிகளைத் தொடரச் செய்வதற்கு உத்தரகாண்ட் மாநில அரசிற்கு ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.
- காவல்துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் M. ஷகீல் அக்தர் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் தலைமைத் தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - தமிழக காவல்துறையின் முன்னாள் கூடுதல் தலைமை இயக்குநரான P. தாமரைக் கண்ணன், R. பிரியகுமார், டாக்டர் K. திருமலைமுத்து மற்றும் டாக்டர் M. செல்வராஜ் ஆகியோர் மாநிலத் தகவல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- உயர்நிலைத் தணிக்கை நிறுவனங்கள்-20 (SAI20) என்பதின் ஈடுபாட்டுக் குழுவின் உச்சி மாநாடானது கோவாவில் நடைபெற உள்ளது.
- இந்தியாவின் சில்லறைப் பணவீக்கமானது 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 4.25 சதவீதமாகக் குறைந்தது.
- பழங்குடியின எழுத்தாளர்களின் முதல் தேசிய மாநாடானது ஜம்மு காஷ்மீரில் நடத்தப் பட்டது.
- "When Climate Change Turns Violent" என்ற தலைப்பிலான ஓர் இந்திய ஆவணப்படமானது உலக சுகாதார அமைப்பின் 4வது வருடாந்திரமான அனைவருக்குமானச் சுகாதாரம் என்ற ஒரு திரைப்பட விழாவில் (HAFF) 'அனைவருக்குமான சுகாதாரம்' பிரிவில் சிறப்புப் பரிசை வென்றுள்ளது.
- இந்திய ஹாக்கி அணி ஜப்பானில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொரியக் குடியரசை வீழ்த்தி தனது முதல் மகளிர் ஜூனியர் ஹாக்கி ஆசியக் கோப்பை 2023 பட்டத்தை வென்றது.
- வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியக் கல்லூரிக்கு (தன்னாட்சி ஆளுமை) சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) பசுமை சாம்பியன் விருது வழங்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி அருகே உள்ள பெருமுகை என்னுமிடத்தில் இரண்டு ஹெக்டேர் பரப்பளவில் 250 படுக்கைகள் கொண்ட கலைஞர் நினைவு நூற்றாண்டுத் தங்கும் விடுதியைத் தமிழக அரசு கட்டமைக்க உள்ளது.
- சென்னையில் கிண்டியில் அமைக்கப் பட்டுள்ள 1,000 படுக்கைகள் கொண்ட கலைஞர் நூற்றாண்டுப் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையினைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

- இது சென்னை ஓமந்தூராரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அடுத்த இரண்டாவது பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ மனை ஆகும்.

❖ W20 உச்சி மாநாடானது மாற்றம், செழிப்பு மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கான பெண்கள் தலைமையிலான மேம்பாடு என்ற கருத்துருவுடன் மகாபலிபுரத்தில் நடத்தப் பட்டது.

❖ எல்லைப் பாதுகாப்புப் படையின் புதியத் தலைமை இயக்குநராக நிதின் அகர்வால் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

❖ இந்திய ராணுவமானது, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட "உத்திசார் குறும்பரப்புப் பிணைய அமைப்பு (LAN) ரேடியோ" இணைப்பு என்ற அமைப்பினை வாங்குவதற்காக பெங்களூருவைச் சேர்ந்த நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

❖ இந்திய இராணுவம் மற்றும் மாலத்தீவு பாதுகாப்புப் படை ஆகியவற்றிற்கு இடையேயான "எகுவெரின் ராணுவப் பயிற்சி" எனப்படும் 12வது கூட்டு இராணுவப் பயிற்சியானது உத்தரகாண்டில் தொடங்கியது.

❖ இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக அமித் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ டெல்லியில் நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகச் சங்கம் என்ற பெயரானது, 'பிரதமர்' அருங்காட்சியகம் மற்றும் நூலகச் சங்கம் என்று மாற்றப் பட்டுள்ளது.

❖ 2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிகளவில் முதலீடு செய்துள்ள நாடாக சிங்கப்பூர் உருவெடுத்துள்ள நிலையில், அதைத் தொடர்ந்து மொரீஷியஸ், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

❖ பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது சர்வதேசச் சமூகப் பாதுகாப்புச் சங்கத்தின் (ISSA) துணை உறுப்பினர் அந்தஸ்தினைப் பெற்றுச் சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற உள்ளது.

❖ இந்தியக் கடற்படையின் போர்க் கப்பலான ஐஎன்எஸ் சாத்புரா, இந்தோனேசியாவின் மகஸ்ஸர் என்னுமிடத்தில் நடைபெற்ற கொமோடோ எனப்படும் 4வது பலதரப்புக் கடற் படைப் பயிற்சியில் பங்கேற்றது.

❖ அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் வீட்டில் இருப்பதற்காகவும், மகிழ்ச்சியானச் சுற்றுலா அனுபவத்திற்காக வேண்டி வெளிப்புறப் பகுதிகளில் கூடி மகிழும் சிறந்தச் சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காகவும் ஜூன் 18 ஆம் தேதியன்று சர்வதேசக் குடும்பச் சுற்றுலாத் தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ தந்தையின் அன்பு மற்றும் அவரது தியாகத்திற்கு மரியாதை அளிக்கும் விதமாக ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையன்றுத் தந்தையர் தினம் கொண்டாடப் படுகிறது.

❖ ஹைதராபாத்தில் உள்ள இந்தியப் புவியியல் ஆய்வுப் பயிற்சி நிறுவனமானது (GSITI), தேசியக் கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கான அங்கீகார வாரியத்தினால் (NABET) "ஆதி உத்தம்" என அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

❖ பிரதமர் சிறு தானியங்களின் நன்மைகள் மற்றும் உலகப் பட்டினிப் பிரச்சினையைப் போக்குவதில் அதன் செயல்திறனை நன்கு மேம்படுத்துவது குறித்துப் பரப்புரையைச் செய்திட வேண்டி ஒரு சிறப்புப் பாடலுக்காக என்று, கிராமி விருது வென்ற இந்திய-அமெரிக்கப் பாடகரான ஃபால்குனி ஷாவுடன் கை கோர்த்துள்ளார்.

❖ 2023 ஆம் ஆண்டு லண்டனின் மத்திய வங்கி விருதுகள் விழாவில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சக்தி காந்த தாஸ் 'ஆண்டின் சிறந்த ஆளுநர்' விருதைப் பெற்று உள்ளார்.

- கௌகாத்தியில் அமைந்துள்ள ஜெட்விங்ஸ் ஏர்வேஸ் என்ற ஒரு விமானச் சேவை நிறுவனமானது, இந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளுக்கு பிராந்திய விமானச் சேவையைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது.
- சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர், ஜகார்த்தாவில் நடைபெற்ற பேட்மிண்டன் சூப்பர் 1000 போட்டியில் பட்டம் வென்ற முதல் இந்திய இரட்டையர் இணையர் என்ற சாதனையைப் படைத்துள்ளனர்.
- தமிழ்நாட்டில் சென்னையின் எக்ஸ்பிரஸ் அவென்யூ வணிக வளாகத்தில் நடைபெற்ற உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பின் உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் மலேசியா அணியினை வீழ்த்தி எகிப்து அணி சாம்பியன் பட்டத்தினை வென்றது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான மூன்றாவது G20 நிலையான நிதிசார் செயற்குழு (SFWG) கூட்டமானது தமிழ்நாட்டில் உள்ள மகாபலிபுரம் எனுமிடத்தில் நடைபெற்றது.
- தொலைதூரப் பகுதிகளில் தனியாகப் பயணம் செய்யும் பெண்கள் தாங்கள் பாதுகாப்பு அற்றதாக உணர்ந்தால் காவல்துறையின் உதவியை நாடும் வகையிலான ஒரு புதியச் சேவையைத் தமிழ்நாடு காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இனிமேல் தனியாக பயணம் செய்யும் பெண்கள் மற்றும் காவல்துறை உதவியை நாடுபவர்கள் 1091, 112, 044-23452365 மற்றும் 044-28447701 ஆகிய எண்களுக்கு அழைக்கலாம்.
- வடகிழக்குப் பகுதியின் இரயில்வே நிர்வாக அதிகாரத்தின் கீழ் செயல்படும் அசாமின் கௌஹாத்தி இரயில் நிலையத்திற்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தினால் 'சரியான உணவு முறையினைப் பின்பற்றும் நிலையம்' என சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது.
- மூத்த இந்தியக் காவல்பணி அதிகாரி ரவி சின்ஹா இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW) எனப்படும் இந்தியாவின் வெளிப்புற புலனாய்வு அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாக இயக்குநர் சுவாமிநாதன் ஜானகிராமன் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) துணை ஆளுநர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- கலாச்சார அமைச்சகம், ஒடிசா மாநில அரசு மற்றும் KIIT பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் முதலாவது ஜன்ஜாதியா கேல் மஹோத்சவ் எனப்படும் ஒரு மாபெரும் விளையாட்டுப் போட்டி நிகழ்வினை நடத்தின.
- அகிம்சை மற்றும் பிற காந்திய முறைகள் மூலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்திற்கான சிறந்தப் பங்களிப்பினை வழங்கியதற்காக கோரக்பூரில் உள்ள கீதா அச்சகத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி பரிசு வழங்கப்பட உள்ளது.
- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தேசிய யோகா ஒலிம்பியாட் 2023' போபால் நகரில் நடைபெற்றது.
- உலக வங்கியானது (WB) 358 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்கி, தெற்காசியாவில் வங்காளதேசத்தில் தனது முதல் பிரத்தியேக சாலைப் பாதுகாப்பு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெற்ற தமிழ்நாட்டினைச் சேர்ந்த C.A. பவானி தேவி சீனாவின் வூசி எனுமிடத்தில் நடைபெற்ற ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவிற்கான முதல் பதக்கத்தினை (வெண்கலம்) வென்று வரலாறு படைத்துள்ளார்.

- ஒவ்வோர் ஆண்டின் கோடைகால சங்கிராந்தி நாளான ஜூன் 21 ஆம் தேதியன்று, மனித நேயத்தை ஒரு தத்துவார்த்த வாழ்க்கை நிலைப்பாடாகப் பரப்புரை செய்வதற்காக என்று உலக மனிதநேய தினம் கொண்டாடப்படுகிறது.
- தமிழ்நாடு மாநில சந்தைப்படுத்தல் கழகத்தினால் (டாஸ்மாக்) நடத்தப்பட்டு வந்த 500 சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் ஜூன் 22 ஆம் தேதி முதல் மூடப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- யோகா மூலம் நாட்டினை முன்னிலைப்படுத்திய முதல் வெளிநாட்டு அரசு என்ற ஒரு வரலாற்றை ஓமன் உருவாக்கியுள்ளது.
- மத்தியக் கல்வி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் காபோன் நாட்டின் முதல் வேளாண்-சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தைப் புது டெல்லியில் இருந்து காணொளி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.
- ஒடிசாவின் கலிங்கா மைதானத்தில் நடைபெற்ற, 2023 ஆம் ஆண்டு ஹீரோ சர்வதேசக் கோப்பை கால்பந்துப் போட்டியில் லெபனான் அணியை வீழ்த்தி இந்திய அணி ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றது.
- மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை அமைச்சகமானது, வங்கக் கடலில் கலைஞர் பேனா நினைவுச் சின்னத்தினை அமைக்கும் தமிழக அரசின் திட்டத்திற்கு 15 நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியினை வழங்குவதற்குக் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்திற்கு (CRZ) அனுமதி வழங்கியுள்ளது.
- இராஜாஜி, காமராஜர், கருணாநிதி ஆகிய மூன்று முதல்வர்களுடன் பணியாற்றிய தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் P. சபாநாயகம் (100) சமீபத்தில் சென்னையில் காலமானார்.
- சர்வதேச யோகா தினத்தன்று கில்தான், சென்னை, ஷிவாலிக், சுனைனா, திரிசூல், தர்காஷ், வகிர், சுமித்ரா மற்றும் பிரம்மபுத்ரா போன்ற இந்தியக் கடற்படைக் கப்பல்களில் 'ஓஷன் ரிங் ஆஃப் யோகா' எனப்படும் கப்பல்களில் மேற்கொள்ளப்படும் ஒரு யோகா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் கொச்சியில் உள்ள தெற்குக் கடற்படைக் கட்டுப்பாட்டுப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள, ‘துருவ்’ எனப்படும் ஒருங்கிணைந்த மாதிரியாக்கப் பயிற்சி வளாகத்தினைத் திறந்து வைத்தார்.
  - வழிசெலுத்தல், கடற்படைச் செயல்பாடுகள் மற்றும் கடற்படை உத்திகள் ஆகியவற்றின் நிகழ்நேர அனுபவத்தை வழங்கும் நோக்கில் இது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவானது (IOC), 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் முறையாக நடைபெறுவதனை உறுதி செய்வதில் மகத்தானப் பங்கினை ஆற்றியதற்காக உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைமை இயக்குநர் டாக்டர் டெட்ரோஸ் கெப்ரெயெசுசிற்கு ஒலிம்பிக் ஆர்டர் என்ற விருதினை வழங்கியது.
- சர்வதேச ஒலிம்பிக் தினம் ஆனது ஜூன் 23 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- பெங்களூரு மற்றும் அகமதாபாத் ஆகிய இரண்டு நகரங்களில் அமெரிக்கா தனது புதிய தூதரகங்களைத் திறக்கவுள்ளது.
- அமெரிக்காவிடமிருந்து 31 பிரிடேட்டர் ரக ஆளில்லா விமானங்களை வாங்குவதற்கான 4 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தினை சமீபத்தில் இந்தியா மேற்கொண்டு உள்ளது.

- 9வது சர்வதேச யோகா தினத்தை நினைவு கூரும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்ற தனித்துவமான யோகா அமர்வானது ஐநா சபையின் தலைமையகத்தில் நடைபெற்றது.
- ஹுருன் இந்தியா அமைப்பின் 2022 ஆம் ஆண்டு பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா அமைப்பின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலின்படி ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனமானது இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க தனியார் நிறுவனமாக உள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து டாடா ஆலோசனைச் சேவை நிறுவனம் மற்றும் HDFC வங்கி ஆகியவை உள்ளன.
- பீகாரின் கிழக்கு சம்பாரன் மாவட்டத்தில் 'உலகின் மிகப்பெரிய இராமாயணக் கோவிலின்' கட்டுமானப் பணிகள் தொடங்கப் பட்டன.
- அமெரிக்க நாடாளுமன்றத்தில் இரண்டு முறை உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையினைப் பெற்றவர் நரேந்திர மோடி ஆவார்.
    - இதன் மூலம் அவர் நெல்சன் மண்டேலா மற்றும் வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் பெஞ்சமின் நெதன்யாகு போன்ற தலைவர்களின் குழுவில் இடம் பெற்றுள்ளார்.
- அமுல் குழந்தை (கேர்ள்) விளம்பரச் சின்னத்துடன் கூடிய 'முழுமையான வெண்ணெய்' (அட்டரலி பட்டர்லி) என்றப் பிரச்சாரத்தினை (1966) உருவாக்கிய சில்வெஸ்டர் டகுன்ஹா சமீபத்தில் மும்பையில் காலமானார்.
- மேதா சர்வோ டிரைவ்ஸ் பிரைவேட் லிமிடெட் எனப்படும் இந்தியாவின் மிகப்பெரிய தனியார் இரயில் பெட்டித் தொழிற்சாலையானது ஹைதராபாத் அருகே உள்ள ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ள கொண்டகால் கிராமத்தில் திறக்கப்பட்டது.
- நிதி ஆயோக் அமைப்பு மற்றும் இந்தியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முகமை ஆகியவை இந்திய அரசு - ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு ஒத்துழைப்புக் கட்டமைப்பு 2023-2027 என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
    - இது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு அமைப்பிற்கான உலக நாடுகள் அளவிலான முதன்மைத் திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதலுக்கான ஒரு கருவியாகும்.
- கிறிஸ்டியானோ ரொனால்டோ 200 சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்ற முதல் ஆண் வீரர் என்ற கின்னஸ் உலகச் சாதனைப் பட்டத்தினைப் பெற்றார்.
- இல்லத்தரசிகள் தங்கள் கணவரின் வருமானத்தில் வாங்கப் படும் சொத்தில் சமமான பங்கினைப் பெறுவதற்கு உரிமை உண்டு என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறி உள்ளது.
- V.P. சிங் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் முன்னாள் பிரதமர் V.P. சிங் அவர்களின் சிலையினை நிறுவுவதற்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- அடையாறு புற்றுநோய் மருத்துவ நிறுவனத்தின் (WIA) இயக்குனர் செல்வலட்சுமி கணேசராஜா சமீபத்தில் காலமானார்.
- ஃபோர்ப்ஸ் இதழின் 50 செல்வாக்குமிக்க தலைமைச் சந்தைப்படுத்தல் அதிகாரிகளின் பட்டியலில் டாடா குழுமத்தின் நிறுவனப் பொறுப்பு அதிகாரி ஹரீஷ் பட் (10வது) முதல் பத்து செல்வாக்கு மிக்க தலைமைச் சந்தைப்படுத்தல் அதிகாரிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- இந்தியக் கடற்படையானது லடாக் பகுதியில், அதன் பழமையான சேவையைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், இளைஞர்கள் மற்றும் பொதுச் சமூகத்துடன் நன்கு ஈடுபடுவதற்கும் வாய்ப்பளிக்கிற வகையில் "ஜுல்லி லடாக்" (ஹலோ லடாக்) என்ற பெயரிலான ஒரு விழிப்புணர்வுத் திட்டத்தினை மேற்கொண்டு வருகிறது.

- ரியூட்டர்ஸ் இதழியல் கல்வி நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான எண்ணிமச் செய்தி அறிக்கையின் படி தூர்தர்ஷன் இந்தியா மற்றும் அகில இந்திய வானொலி ஆகியவை நாட்டின் மிகவும் நம்பகமான மின்னணு ஊடக அமைப்புகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளன.
- பாரத் ஜாக்ருதி அமைப்பினால் நிறுவப்பட்ட பேராசிரியர் கொத்தப்பள்ளி ஜெயசங்கர் விருதுக்கு ஆச்சார்யா N.கோபி தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் மற்றும் பெரு கல்வெட்டுகளைக் கொண்ட 1000 ஆண்டுகள் பழமையான இரண்டு சதுர வடிவ தூண்கள், ஹைதராபாத்தின் ரங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள எனிகேபள்ளி என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- சந்திரயான்-2 ஆய்வுக் கலத்தின் பெயரைப் போலவே சந்திரயான்-3 ஆய்வுத் திட்டத்தின் தரையிறங்குக் கலத்திற்கு 'விக்ரம்' என்றும் அதன் உலவு ஆய்வுக் கலத்திற்கு 'பிரக்யான்' என்றும் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய விமானச் சேவை வழங்கீட்டு நிறுவனமான இண்டிகோ, 500 ஏர்பஸ் A320 ரக விமானங்களை கொள்முதல் செய்ய விமானப் போக்குவரத்துச் சேவை வரலாற்றிலேயே மிகப்பெரியக் கொள்முதல் ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இந்தியத் தேசிய இணைய சேவைப் பரிமாற்ற அமைப்பானது (NIXI) ஜூன் 19 ஆம் தேதி அன்று அதன் 20வது நிறுவனத் தினத்தினைக் கொண்டாடியது.
- அசாமின் முதல் நீரடி இரயில்தடச் சுரங்கப் பாதையானது, நுமாலிகர் மற்றும் கோஹ்பூர் ஆகிய பகுதிகளுக்கு இடையே கட்டமைக்கப்பட உள்ளது.
- தேசிய மருத்துவர்கள் தினத்தை நன்கு நினைவு கூரும் வகையில் இந்திய மருத்துவச் சங்கத்தினால் நிறுவப்பட்ட விருதிற்கு ஆலப்புழாவைச் சேர்ந்த டாக்டர் K. வேணு கோபால் என்பவர் சமூகச் சேவைப் பிரிவின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- சர்வதேசக் கால்பந்துக் கூட்டமைப்புகளின் சங்கத்தின் (FIFA) சபையானது U-17 உலகக் கோப்பைப் போட்டியினை நடத்துவதற்கு பெருவுக்குப் பதிலாக இந்தோனேசியாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.
  - FIFA கூட்டமைப்பானது, கொலம்பியா 2024 ஆம் ஆண்டு U-20 மகளிர் உலகக் கோப்பைப் போட்டியினை நடத்த உள்ளதாகவும், டொமினிகா U-17 மகளிர் உலகக் கோப்பைப் போட்டியினை நடத்த உள்ளதாகவும் அறிவித்துள்ளது.
- இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் தங்களது இருதரப்பு உறவினை "உத்திசார் கூட்டாண்மை என்ற நிலைக்கு" மேம்படுத்துவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளன.
- புகழ்பெற்ற இன்டர்சோலார் ஐரோப்பா 2023 கண்காட்சியானது ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெற்றது.
- வெப்பமண்டலப் பகுதியில் அதிகம் விளையும் அன்னாசிப் பழத்தினைப் போற்றும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 27 ஆம் தேதியன்று சர்வதேச அன்னாசிப் பழத் தினம் கொண்டாடப் படுகிறது.
- பல்வேறு சூழ்நிலைகளில் பாதுகாப்பினை வழங்கும் காப்பீட்டுத் திட்டம் குறித்தும், அதில் முதலீடு செய்வதன் பலன்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூன் 28ஆம் தேதியன்று தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு தினமானது அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழக வாக்காளர்கள்

- தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கையானது, எட்டு லட்சம் குறைந்து 6.12 கோடிக்கு மேல் உள்ளது.
- இதில் 3.11 கோடி பெண்கள், 3.01 கோடி ஆண்கள் மற்றும் 7,900க்கும் மேற்பட்டோர் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் உள்ளனர்.
- இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் பதிவான மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6.20 கோடியாகும்.
- இதில் 3.15 கோடி பெண்கள், 3.04 கோடி ஆண்கள் மற்றும் 8,000க்கும் மேற்பட்டவர்கள் மூன்றாம் பாலினத்தவர் ஆவர்.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியானது 6,51,077 வாக்காளர்களுடன் மாநிலத்திலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட ஒரு தொகுதியாகத் தொடர்ந்து திகழ்கிறது.
- இதற்கு அடுத்தபடியாக 4,54,919 வாக்காளர்களுடன் கோவை மாவட்டத்தின் கவுண்டம் பாளையம் சட்டமன்றத் தொகுதி இடம் பெற்றுள்ளது.
- சென்னை மாவட்டத்தின் துறைமுகம் என்ற ஒரு சட்டமன்றத் தொகுதியானது 1,69,292 வாக்காளர்களுடன் மாநிலத்திலேயே குறைந்த அளவிலான எண்ணிக்கையிலான வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி 1,69,750 என்ற அளவு வாக்காளர்களுடன் மாநிலத்திலேயே குறைந்த வாக்காளர்களைக் கொண்ட இரண்டாவது தொகுதியாக உள்ளது.

## பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சான்றிதழ்களை வழங்கச் செய்வதற்கான வழிகாட்டுதல்கள்

- சமீபத்தில், நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவில் இருந்து பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலுக்கு மாற்றப் பட்டுள்ளன.
- தற்போது தமிழக அரசானது, இவ்விருச் சமூகத்தினருக்கும் சாதிச் சான்றிதழ் வழங்கும் செயல்முறையினை முறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது.
- அவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
    - எந்த சாதிச் சான்றிதழும் இல்லாதவர்கள்
    - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சான்றிதழ் பெற்றவர்கள் மற்றும்
    - சில புகார்களுடன் கூடிய அல்லது சம்பந்தப்பட்ட தாலுக்கா அலுவலகத்தில் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் விடுபட்டுள்ளச் சான்றிதழ்களை வைத்து இருப்பவர்கள்.

## தேனிக்கு முதல் ரயில்

- தெற்கு ரயில்வேயானது தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூரை சென்னையுடன் இணைக்கும் முதலாவது விரைவு ரயிலை ஜூன் 15 ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்த உள்ளது.
- மதுரைக்கு வெளியே தேனி மாவட்டத்தை இணைக்கும் முதல் ரயில் இதுவாகும்.
- 1996 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தேனி ஒரு தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டது.




## கீழ்நமண்டி அகழாய்வுத் தளம்

- பெரும்பாலும் கத்திகள் மற்றும் கோடாரிகள் போன்ற இரும்புக் கருவிகள், கர்னேலியன் மணிகள், பானைகள் மற்றும் கல்லால் ஆன பாக்கு வெட்டிகள் ஆகியவை கீழ்நமண்டியில் உள்ள அகழ்வாராய்ச்சித் தளத்தில் இருந்து கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- அகழ்வாராய்ச்சித் தளத்தில் இரும்புக் காலத்தின் பிற்பகுதியில் மனிதக் குடியிருப்புகள் இருந்ததை இது குறிக்கிறது.
- இக்குழு அந்த இடத்தில் 12 செவ்வக வடிவ கல்லால் ஆன சவப்பெட்டிகளையும் கண்டு பிடித்துள்ளது.
- இங்கு கறுப்பு சிவப்பு மட்பாண்டம் மற்றும் செம்பூச்சு மட்கலன்கள் அதிக அளவில் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் இந்தத் தளம் இரும்புக் காலத்தைச் சேர்ந்தது எனலாம்.
- திருவண்ணாமலையில் உள்ள வந்தவாசி நகரத்திலிருந்து சுமார் 20 கிமீ தொலைவில் கீழ்நமண்டி அமைந்துள்ளது.



## அதிக பட்ச நிலக்கரித் தேவை

- 2030 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் உள்ள மின் துறையின் நிலக்கரித் தேவை அதிக பட்சமாக 65.7 மில்லியன் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் நிலக்கரி நுகர்வு 27.95 மில்லியன் டன்களாக இருந்தது.
- டெலாய்ட் நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கையானது இந்தியா முழுவதும் உண்மையாகவும் நியாயமாகவும் தேவைப்படும் நிலக்கரியின் அளவை வெளிக் கொணர்கிறது.

## தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம்

- தமிழக அரசு வண்டலூர் உயிரியல் பூங்காவில் உள்ள ஓட்டேரி ஏரியில் தமிழ்நாடு சதுப்பு நில இயக்கத்தை அறிமுகப் படுத்திள்ளது.
- தமிழக மாநில ஈரநில ஆணையம் சதுப்பு நில இயக்கத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 100 சதுப்பு நிலங்களைச் சுற்றுச்சூழல் ரீதியாக மீட்டு எடுக்க உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்புக்காக என்று தேர்ந்தெடுக்கப்பட்ட 100 சதுப்பு நிலங்களில் ஓட்டேரி ஏரியும் ஒன்று ஆகும்.
- அடுத்த ஐந்து ஆண்டுக்குள் 100 சதுப்பு நிலங்களை மீட்க அரசு ஏற்கனவே 115 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

## தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு தரவரிசையில் தமிழ்நாட்டின் சிறந்த கல்லூரிகள்

- தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு தரவரிசையில் (NIRF) முதல் 100 பல்கலைக் கழகங்களில் தமிழகத்தில் இருந்து மொத்தம் 22 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்று உள்ளன.
- இந்த ஆண்டுக்கான NIRF பட்டியலில் முதல் 100 கல்லூரிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்பத்தைந்து கல்லூரிகள் இடம் பெற்றுள்ள நிலையில், இது கடந்த ஆண்டை விட மூன்று அதிகம் ஆகும்.
- இந்த ஆண்டுக்கான ஒட்டு மொத்தப் பிரிவில் அமிர்தா விஸ்வ வித்யாபீடம் 15வது இடத்தையும், வேலூர் தொழில்நுட்பக் கழகம் (VIT) 17வது இடத்தையும் பெற்றுள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகம் ஒட்டு மொத்தப் பிரிவில் 18வது இடத்தைப் பிடித்துள்ளது.
- திருச்சியில் உள்ள தேசியத் தொழில்நுட்பக் கழகம் 21வது இடத்தைப் பிடித்துள்ளது.
- முதல் 100 இடங்களில் தமிழ்நாட்டின் சுமார் 20 பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் இடங்களைப் பெற்றுள்ளன.
- பல்கலைக்கழகப் பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் 14வது இடத்தையும், பாரதியார் பல்கலைக்கழகம் 24வது இடத்தையும் பெற்றுள்ளது.
- பல்கலைக் கழகத் தரவரிசையில் 2022 ஆம் ஆண்டில் 39வது இடத்தில் இருந்த சென்னைப் பல்கலைக் கழகத்தின் தரவரிசை 2023 ஆம் ஆண்டில் 50வது இடமாக ஆகக் குறைந்துள்ளது.

- ஆனால் கடந்த ஆண்டு 70வது இடத்தில் இருந்த இதன் ஒட்டு மொத்தத் தர நிலை என்பது இந்த ஆண்டு 63 ஆக முன்னேறியுள்ளது.
- இந்த ஆண்டுக்கான பல்கலைக் கழகப் பிரிவில் அமிர்தா விஸ்வ வித்யாபீடம் ஏழாவது இடத்தையும், வேலூர் தொழில்நுட்பக் கழகம் எட்டாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- இந்த ஆண்டுக்கான கல்லூரிகளின் தரவரிசையில் மாநிலக் கல்லூரி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- முதல் 100 கல்லூரிகளின் தரவரிசையில் தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 35 கல்லூரிகள் இடம் பிடித்துள்ளன.

India Rankings 2023: College

| Institute ID | Name | City | State | Score | Rank |
|---|---|---|---|---|---|
| IR-C-C-43921 | Presidency College | Chennai | Tamil Nadu | 71.18 | 3 |
| IR-C-C-41046 | PSGR Krishnammal College for Women | Coimbatore | Tamil Nadu | 71.05 | 4 |
| IR-C-C-44006 | Loyola College | Chennai | Tamil Nadu | 70.46 | 7 |
| IR-C-C-43965 | Madras Christian College | Chennai | Tamil Nadu | 66.61 | 16 |
| IR-C-C-36513 | Thiagarajar College | Madurai | Tamil Nadu | 65.08 | 18 |
| IR-C-C-41124 | PSG College of Arts and Science | Coimbatore | Tamil Nadu | 64.61 | 20 |
| IR-C-C-35860 | St. Joseph's College | Tiruchirappalli | Tamil Nadu | 62.48 | 25 |
| IR-C-C-41157 | V.O. Chidambaram College | Tuticorin | Tamil Nadu | 62.14 | 27 |
| IR-C-C-41106 | Kongunadu Arts & Science College | Coimbatore | Tamil Nadu | 61.56 | 29 |
| IR-C-C-41126 | Sri Krishna Arts and Science College | Coimbatore | Tamil Nadu | 59.74 | 33 |
| IR-C-C-35875 | Bishop Heber College | Tiruchirappalli | Tamil Nadu | 59.15 | 34 |
| IR-C-C-43931 | Stella Maris College for Women | Chennai | Tamil Nadu | 58.19 | 37 |
| IR-C-C-43964 | Madras School of Social Work | Chennai | Tamil Nadu | 58.02 | 39 |
| IR-C-C-35787 | Holy Cross College, Tiruchirappalli | Tiruchirappalli | Tamil Nadu | 57.88 | 40 |
| IR-C-C-36411 | Sacred Heart College (Autonomous) | Tirupattur | Tamil Nadu | 57.49 | 42 |

## வெம்பக்கோட்டை தொல்லியல் தளம்

- தமிழக அரசின் தொல்லியல் துறையால் வெம்பக்கோட்டையில் நடந்த இரண்டாம் கட்ட அகழாய்வின் போது இரண்டு தங்கத் துண்டுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- இது விருதுநகர் மாவட்டத்தின் சாத்தூர் அருகே உள்ளது.
- இங்கு 1.15 மீ முதல் 1.59 மீ வரையிலான ஆழத்தில் தங்கப் பொருள்கள் கண்டெடுக்கப் பட்டு உள்ளன.
- இதில் ஒரு தங்கத் துண்டு கூம்பு வடிவத்திலும் மற்றொன்று செவ்வக வடிவத்திலும் கிடைத்துள்ளது.
- இந்த இரண்டாம் கட்ட அகழாய்வின் போது தந்தத்தால் ஆன பகடை, டெரகோட்டா (களிமண்) புகைக்கும் குழாய், காதணி மற்றும் கல்லாலான எடைக் கல் ஆகியவையும் கண்டுடெக்கப் பட்டன.




## இலங்கைக்கான பயணிகள் கப்பல்

- முதல் சர்வதேசச் சுற்றுலாப் பயணிகள் கப்பலான எம்வி எம்பிரஸ் கப்பலானது இலங்கையில் உள்ள மூன்று துறைமுகங்களை இணைக்கும் வகையில் சென்னை துறைமுகத்தில் இருந்து தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- எம்வி எம்பிரஸ் இலங்கையில் உள்ள ஹம்பன்தோட்டா, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஆகிய மூன்று துறைமுகங்களுக்கும் சென்று பின்னர் மீண்டும் சென்னையை வந்தடையும்.
- கூடுதலாக இந்தியாவிலிருந்து இலங்கை, தாய்லாந்து மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளை இணைக்கும் பயணிகள் கப்பல்களை இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## பசுமை சாம்பியன் விருதுகள் 2022

- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) 2022 ஆம் ஆண்டுக்கான பசுமை சாம்பியன் விருதுகளை வழங்கியது.
- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய நெகிழிகளுக்கு மாற்றாக ஏற்றவாறான பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக பங்களித்த தனிநபர்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- சென்னையில் உள்ள நீதியரசர் பஷீர் அகமது சயீத் மகளிர் கல்லூரி அல்லது SIET கல்லூரி என்றழைக்கப்படும் இந்தக் கல்லூரி இவ்விருதையும், அக்கல்லூரி முதல்வர் அம்துல் அஜீஸின் குழுவினர் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசையும் பெற்றனர்.
- இதர விருது பெறுநர்கள்:
    - அரசு மேல்நிலைப் பள்ளி, பழைய பெருங்களத்தூர்;
    - பேட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அடையாறு;
    - ஹேண்ட் இன் ஹேண்ட் தன்னார்வ அமைப்பு , அசோக் நகர்;
    - ஜி.தங்கராஜ், தேசியப் பசுமைப்படை; மற்றும்
    - கேட்டர்பில்லர் இந்தியா பிரைவேட் லிமிடெட், பவர் சிஸ்டம்ஸ் பிரிவு, ஒசூர்.
- மொத்தம் 92 உறுப்பினர்கள் தலா ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் இந்த விருதையும் வென்றுள்ளனர்.

## 500 நகர்ப்புறச் சுகாதாரம் மற்றும் நல மையம்

- மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புறச் சுகாதாரம் மற்றும் நல மையங்களை தமிழக முதலமைச்சர் திறந்து வைத்தார்.
- இந்த மையங்களில் பணி புரியும் ஊழியர்கள் 12 விரிவான ஆரம்பச் சுகாதாரச் சேவைகளை வழங்கும் வகையில் நியமிக்கப் பட்டுள்ளனர்.
- இது இந்தியாவில் மேற்கொள்ளப்படும் இவ்வகையிலான முதல் முன்னெடுப்பாகும்.

A total of 593 Urban Health and Wellness Centres were sanctioned for 2021-2022 and 115 for 2022-2023 across Tamil Nadu

**Health Unit Districts (HUD)/Corporations getting most number of centres**

| District | HUD/Corporation | Total number of Urban Health and Wellness Centres |
|---|---|---|
| Chennai | Greater Chennai Corporation | 200 |
| Coimbatore | Coimbatore Corporation | 64 |
| | Coimbatore | 8 |
| Madurai | Madurai Corporation | 62 |
| | Municipality | 2 |
| Tiruppur | Tiruppur Corporation | 34 |
| | Municipality | 5 |
| Tiruchi | Tiruchi Corporation | 36 |
| | Tiruchi | 7 |
| | Salem Corporation | [illegible] |




**Features of the centres**

- Will function from 8 a.m. to noon, and from 4 p.m. to 8 p.m.
- A doctor, staff nurse,
- Will offer 12 services, including antenatal care and treatment for minor

## தேசிய மின்சாரத் திட்டம்

- மத்திய மின்சார ஆணையமானது (CEA) ‘தேசிய மின்சாரத் திட்டம் தொகுதி-I: உற்பத்தி’ என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள லிக்னைட் இருப்பான 40.9 பில்லியன் டன் என்ற அளவில் சுமார் 82 சதவீதத்தினைத் தமிழ்நாடு கொண்டுள்ளது.
- தமிழகத்தில் 33,309.53 மில்லியன் டன்கள் லிக்னைட் இருப்பு உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து ராஜஸ்தானில் 4,835.29 மில்லியன் டன்களும், குஜராத்தில் 2,722.05 மில்லியன் டன்களும் உள்ளன.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் 25.55 மில்லியன் டன்கள் லிக்னைட் இருப்பு உள்ளன.
- கேரளா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஒரு சேர 11.44 மில்லியன் டன்கள் லிக்னைட் இருப்பு உள்ளன.
- தேசிய மின்சாரத் திட்டமானது 2022-27 ஆகிய காலகட்டத்திற்கான ஒரு விரிவானத் திட்டத்தினையும் 2027-32 காலகட்டத்திற்கான ஒரு தொலைநோக்குத் திட்டத்தினையும் உள்ளடக்கியது.
- இது 2026-27 ஆம் ஆண்டில் 28.74 பில்லியன் அலகு என்ற அளவில் மொத்த லிக்னைட் சார்ந்தப் பொருட்களின் உற்பத்தியும், 2031-32 ஆம் ஆண்டில் 28.18 பில்லியன் அலகு உற்பத்தியும் பதிவாகும் என்று கணித்துள்ளது.
- 2026-27 ஆம் ஆண்டில் தமிழகத்தின் உச்சகட்ட மின் தேவை 21,736 மெகாவாட்டாகவும், 2031-32 ஆம் ஆண்டில் 28,291 மெகாவாட்டாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## ஒரு நாளில் பதிவான அதிகபட்ச மழை

- சமீபத்தில் வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த ஆலங்கட்டி மழை பெய்தது.
- தமிழக மாநிலத்தில், இந்தப் பருவத்தில் ஒரு நாளில் பதிவான அதிகபட்ச மழைப் பொழிவு (55 மிமீ) இதுவாகும்.
- வேலூரில் 41.7 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ள நிலையில் இது இந்த கோடைப் பருவத்தில் தமிழக மாநிலத்தில் பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலையாகும்.

## ஒற்றைக் கல் மற்றும் பெருங்கற்காலப் புதைவிடங்கள்



- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையானது, ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடு மணல் என்னுமிடத்தில் அமைந்துள்ள ஐந்து 'மென்ஹிர்' (ஒற்றைக் கல்) மற்றும் பெருங் கற்காலப் புதைவிடங்களைப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவித்து ள்ளது.
- கொடுமணல் எனுமிடமானது நொய்யலாற்றின் வடக்குக் கரையில் ஈரோட்டில் இருந்து சுமார் 42 கி.மீ. தொலைவில் உள்ளது.
- ரோமானிய வெள்ளி நாணயங்கள், விலையுயர்ந்தக் கற்கள் மற்றும் குவார்ட்ஸ் கற்கள் ஆகியவற்றோடுச் சேர்த்து, தமிழ்-பிராமி மொழியின் எழுத்து வடிவங்களில் பொறிக்கப் பட்டப் பெயர்களைக் கொண்ட பானை ஓடுகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன.
- சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு ஒரு தொழிலகம் மற்றும் வர்த்தக மையம் இருந்ததை இந்தக் கண்டுபிடிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

## மேட்டூர் அணை திறப்பு 2023

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் மதகினைத் திறந்து வைத்தார்.
- ஜூன் 12 ஆம் தேதியன்று அணையில் இருந்து 19வது முறையாக தண்ணீர் திறக்கப் பட்டது.
- குறுவைப் பயிர்ச் சாகுபடிக்குத் தண்ணீர் விடுவதற்கான பாரம்பரியத் தேதி இதுவாகும்.
- 75.95 கோடி ரூபாய் மதிப்பிலான குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத் திட்டம் (குறுவைப் பயிர்ச் சாகுபடித் திட்டம்) திட்டத்தினையும் முதல்வர் அவர்கள் அறிவித்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பெரும் மானிய விலையில் உரங்கள் மற்றும் வேளாண் பொருட்கள் வழங்கப் படும்.

**Cauvery realisation over the last five years**

| Year | Quantity realised (in TMC) | Excess quantity (in TMC) |
|---|---|---|
| 2018-19 | 405.43 | 228.18 |
| 2019-20 | 275.16 | 97.90 |
| 2020-21 | 211.38 | 34.13 |
| 2021-22 | 281.06 | 103.81 |
| 2022-23 | 667.55 | 490.30 |

## பொது ஒப்புதலை திரும்பப் பெறுதல்

- மத்தியப் புலனாய்வுத் துறைக்கு அளித்தப் பொது ஒப்புதலைத் தமிழக அரசு திரும்பப் பெற்றுள்ளது.
- மத்தியப் புலனாய்வுத் துறையானது இனி ஒரு விசாரணையை மேற்கொள்வதற்கு என்று தமிழக அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும்.
- 1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல் பிரிவு ஸ்தாபனச் சட்டத்தின் 6வது பிரிவின் படி, மத்தியப் புலனாய்வுத் துறையானது தங்கள் அதிகார வரம்பில் விசாரணையை மேற்கொள்வதற்கு அந்தந்த மாநில அரசுகளிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும்.



- மத்தியப் புலனாய்வுத் துறைக்கு மாநில அரசுகள் வழங்கும் ஒரு பொது ஒப்புதலானது, அத்தகைய இடையூறுகள் இல்லாமல் விசாரணைகளை மேற்கொள்ள இந்த மத்திய முகமைக்கு உதவுகிறது.
- தற்போது மிசோரம், மேற்கு வங்காளம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, கேரளா, ஜார்க்கண்ட், பஞ்சாப் மற்றும் மேகாலயா ஆகிய ஒன்பது மாநிலங்கள் ஏற்கனவே மத்திய புலனாய்வுத் துறைக்கு அளித்தப் பொது ஒப்புதலைத் திரும்பப் பெற்றுள்ளன.

## தமிழ் மொழியில் பொறியியல் படிப்புகள்

- அண்ணாப் பல்கலைக்கழகமானது 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல், மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல், மின் மற்றும் மின்னணுப் பொறியியல், கணினி அறிவியல் மற்றும் வேதிப் பொறியியல் போன்ற முக்கியப் பொறியியல் படிப்புகளைத் தமிழ் மொழியில் தொடங்க உள்ளது.
- ஏற்கனவே கட்டிடப் பொறியியல் மற்றும் இயந்திரப் பொறியியல் ஆகியப் படிப்புகள் தமிழில் வழங்கப் படுகின்றன.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், அண்ணாப் பல்கலைக்கழகமானது அதனுள் அங்கம் வகிக்கும் கல்லூரிகளில் தமிழ்ப் பாடப் பிரிவுகளைத் தேர்வு செய்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அவற்றை இடைநிறுத்தி வைக்க முடிவு செய்தது.

## அமைச்சர்களின் இலாகாக்கள் மறு ஒதுக்கீடு

- தமிழக ஆளுநர் R.N. ரவி அவர்கள் அமைச்சர்களின் இலாகாக்களை மறு ஒதுக்கீடு செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- மின்சாரம் மற்றும் புதுப்பிக்க இயலாத (மரபுசாரா) எரிசக்தி மேம்பாட்டுத் துறையானது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- மதுவிலக்கு மற்றும் கலால், சர்க்கரைக் கழிவு ஆகிய துறைகள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் S.முத்துசாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
- அவர்கள் இருவரும் தற்போது தாங்கள் கொண்டுள்ள பல்வேறு பொறுப்புகளுடன் சேர்த்து கூடுதலாக இந்தப் புதிய இலாகாக்களின் பொறுப்பினையும் ஏற்றுள்ளனர்.
- அமைச்சர் செந்தில் பாலாஜி இலாக்கா இல்லாத அமைச்சராகத் தொடர்வார்.


## 40 லட்சம் டன் நெல் கொள்முதல்

- தமிழ்நாடு மாநிலமானது நெல் கொள்முதலில் 40 லட்சம் டன்கள் வரம்பினைத் தாண்டி மும்முறை சாதனையினை எட்டியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 40 லட்சம் டன்களுக்கும் சற்று அதிகமாக இருந்தது.
- சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு வரை, 2011-12 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 23.87 லட்சம் டன்கள் என்ற அளவே இதுவரை இல்லாத அளவிலான அதிக கொள்முதலாகக் கருதப் பட்டது.
- ஆனால் இது 2019-20 ஆம் ஆண்டில் 32.4 லட்சம் டன்கள் கொள்முதல் மேற்கொள்ளப்பட்ட போது இந்தச் சாதனையானது முறியடிக்கப்பட்டது.

- இதைத் தொடர்ந்து 2020-21 ஆம் ஆண்டில் 44.9 லட்சம் டன்களும், 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 43.3 லட்சம் டன்களும் கொள்முதல் செய்யப்பட்டன.

| Year | Paddy procured (in tonnes) | Farmers benefitted | MSP paid (₹ in crore) | State govt.'s Incentive (₹ in crore) | Total amount paid to farmer (₹ in crore) |
|---|---|---|---|---|---|
| 2018-2019 | 19,10,665 | 5,06,821 | 3,367.47 | 119.34 | 3,486.81 |
| 2019-2020 | 32,40,990 | 5,85,241 | 5,925.19 | 204.83 | 6,130.02 |
| 2020-2021 | 44,90,222 | 8,52,152 | 8,448.95 | 285.73 | 8,734.68 |
| 2021-2022 | 43,27,616 | 8,27,249 | 8,453.79 | 397.34 | 8,851.14 |
| 2022-2023* (till June 14) | 39,92,251 | 5,04,783 | 8,181.80 | 351.68 | 8,533.48 |

## காற்றுத் திட்டம்




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, காற்றுத் திட்டம் எனப் பெயரிடப்பட்ட குறைந்த விலையிலான இணைய உலகம் (IoT) அடிப்படையிலான இயக்க வகையிலான காற்று மாசுபாடு கண்காணிப்புக் கட்டமைப்பினை உருவாக்கி உள்ளது.
- இது பேருந்துகள், மகிழுந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்களில் பொருத்தப்பட்டு, தற்காலிகமான இடம் சார்ந்த மற்றும் நேரம் சார்ந்த வகையில் காற்றிற்கான தரத்தின் மீதான தரவுகள் இதன் மூலம் சேகரிக்கப் படுகின்றன.
- இந்தச் சாதனங்கள் மூலம் சாலையின் கடினத்தன்மை, பள்ளங்கள் மற்றும் புற ஊதாக் குறியீடு ஆகியவற்றை மதிப்பிட முடியும்.

## தென்னக ரயில்வே வழித்தடத்தில் யானைகளுக்கான முதல் சுரங்க வழிப் பாதை

- தெற்கு ரயில்வே நிர்வாகத்தினால் கட்டமைக்கப்பட்டு வரும் காட்டு யானைகளுக்கான முதல் சுரங்கவழிப் பாதைகளின் கட்டுமானப் பணி இறுதிக் கட்டத்தினை எட்டியுள்ளது.
- இது கோயம்புத்தூர் அருகே எட்டிமடை - வாளையார் பகுதியில் பெரிய அளவிலான விலங்கினங்களின் நடமாட்டத்திற்காக கட்டமைக்கப் படுகிறது.

- வனத்துறையின் புள்ளி விவரங்களின்படி, 2008 ஆம் ஆண்டு முதல் தமிழகப் பகுதியில் மட்டும் 6 பெரிய விபத்துகளில் மொத்தம் 11 யானைகள் உயிரிழந்துள்ளன.


0


## தமிழ்நாடு நிதிசார் தொழில்நுட்ப நகரம்

- தமிழக முதல்வர் அவர்கள் நந்தம்பாக்கத்தில் நிதிசார் தொழில்நுட்ப நகரம் மற்றும் நிதிசார் தொழில்நுட்பக் கட்டிடம் ஆகியவற்றினைக் கட்டமைப்பதற்காக என்று அடிக் கல்லினை நாட்டினார்.
- நிதிசார் தொழில்நுட்ப நகரமானது, 12,000 கோடி முதலீடுகளை ஈர்க்கும் என்றும் 80,000 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- நிதிசார் தொழில்நுட்பப் பிரிவானது வழிகாட்டல் வாரியத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலையில் தொழில்துறை அமைச்சர் தலைமையிலான ஒரு நிதிசார் தொழில்நுட்ப ஆளுமைக் குழு ஒன்றினையும் அரசாங்கம் அமைத்துள்ளது.
- அரசானது, 50 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு மாநிலத்தினை நிதிசார் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒரு உலகளாவிய மையமாக மாற்றும் நோக்கிலான 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிசார் தொழில்நுட்பக் கொள்கை என்ற சிறப்புக் கொள்கையை தமிழ்நாடு அரசானது முன்னதாக வெளியிட்டுள்ளது.

## சூரியசக்தி-காற்றாற்றல் கலப்பின முறை

- குடிமக்கள் நுகர்வோர் மற்றும் குடிமை நடவடிக்கை குழு (CAG) ஆனது புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் செயல் திறன் குறித்த அறிக்கையைச் சமீபத்தில் வெளியிட்டது.
- தமிழ்நாடு புதுப்பிக்க இயலாத எரிசக்தியை விட புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் நிறுவப்பட்ட திறனை அதிகமாகக் கொண்டிருந்தாலும், மின்சாரம் தயாரிப்பதற்கு தமிழக மாநிலம் நிலக்கரியையே அதிகம் சார்ந்துள்ளது.
- மேலும், சூரியசக்தி-காற்றாற்றல் கலப்பு அமைப்பின் கட்டமைப்பானது தமிழகத்தில் இன்னும் உருவாக்கப்படவில்லை.
- 2020-2021 ஆம் ஆண்டில் மின் உற்பத்திக்கான புதுப்பிக்க இயலாத ஆதாரங்களின் நிறுவப் பட்ட திறன் 16,219 மெகாவாட் (MW) ஆகும்.

- காற்றாற்றல், சூரியசக்தி, நீர்வளம் மற்றும் உயிரி வளம் ஆகியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் திறன் 16,276 மெகாவாட் ஆகும்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் பங்கு, மொத்த மின்சாரக் கலப்பில் வெறும் 22% மட்டுமே ஆகும்.




## குறைந்தபட்ச ஆதரவு விலையைப் பெறும் நெல் விவசாயிகள்

- தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) முறையின் கீழ் பாதுகாப்பு பெறும் நெல் விவசாயிகள், மாநிலத்தில் உள்ள பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதியின் (PM-KISAN) விவசாயிகளின் சராசரி எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஆவர்.
- மாநில அரசின் ஆவணங்களின்படி, மொத்தச் சாகுபடி பரப்பளவில் நெல் சாகுபடியின் அளவு 35% ஆகும்.
- PM-KISAN என்ற திட்டமானது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் செயல்படுத்தப் பட்டதோடு நிலத்தின் அளவைப் பொருட்படுத்தாமல், நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளின் குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு விவசாயி-பயனாளிக்கும் ஆண்டுக்கு ரூ6,000 ஆனது மூன்று தவணைகளில் வழங்கப் படுகின்றது.
- அதிகாரப்பூர்வத் தரவுகளின்படி, தமிழ்நாட்டில் 48 லட்சம் விவசாயிகள் இத்திட்டத்தின் பயனைப் பெறுவதற்காக அதிகாரிகளிடம் பதிவு செய்துள்ளனர்.

### Differences in scale

The table compares the number of farmers covered under Minimum Support Price (MSP) and Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN) Scheme in the State

| Year | Paddy-raising farmers covered under MSP | Beneficiaries of PM-KISAN |
|---|---|---|
| 2018-19 | 5,06,821 | 21,61,247* |
| 2019-20 | 5,85,241 | 32,60,755 |
| 2020-21 | 8,52,152 | 41,55,035 |
| 2021-22 | 8,27,249 | 37,19,121 |
| 2022-23 | 5,04,783 | 24,96,943 |


## தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வில் தேர்ச்சி

**Contrasting trends**

The table compares the number of students who attempted NEET with those who qualified in the State

| Year | All schools in T.N. | | Govt schools in T.N. | |
|---|---|---|---|---|
| | Appeared | Qualified | Appeared | Qualified |
| 2017-18 | 1,14,602 | 45,336 | 3,739 | 825 |
| 2018-19 | 1,23,078 | 59,785 | 8,550 | 1,151 |
| 2019-20 | 99,610 | 57,215 | 3,553 | 918 |
| 2020-21 | 1,08,318 | 58,992 | 8,061 | 1,957 |
| 2021-22 | 1,32,167 | 67,787 | 14,979 | 4,118 |
| 2022-23 | 1,44,516 | 78,693 | 12,997 | 3,982 |

▪ The graph shows the percentage of non-government school students and government school students who appeared for NEET as a percentage of those who clear Class XII




- ❖ 2018 ஆம் ஆண்டில் 22.1% ஆக இருந்த அரசுப் பள்ளி மாணவர்களின் நீட் தேர்வு தேர்ச்சி விகிதமானது 2023 ஆம் ஆண்டில் 30.6% ஆக அதிகரித்துள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் 14,979 ஆக இருந்த தேர்வு எழுதிய அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையானது 2023 ஆம் ஆண்டில் 13% குறைந்து 12,997 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நீட் தேர்வில் பங்கேற்ற மாணவர்களின் சராசரி எண்ணிக்கை சுமார் 6,000 மட்டுமே ஆகும்.
- ❖ 4,32,231 உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளி மாணவர்களில் 1,31,519 (30.4%) பேர் மட்டுமே இந்த ஆண்டு நீட் தேர்வினை எழுதினர்.
- ❖ ஒப்பீட்டளவில், 3,71,154 அரசுப் பள்ளி மாணவர்களில் 12,997 (3.5%) பேர் மட்டுமே இந்த ஆண்டு நீட் தேர்வினை எழுதினர்.

## முதுமக்கள் தாழியில் குழந்தையின் எலும்புகள் கண்டெடுப்பு

- ❖ ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சித் தளத்தில் கண்டெடுக்கப்பட்ட சிறிய முதுமக்கள் தாழியில் குழந்தையின் எலும்புகள் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ இது ஆபரணங்களைக் குறிப்பாக சிறிய அளவிலான வளையல்களைக் கொண்டுள்ளது.
- ❖ ஒரு சிறிய மண்டை ஓடு மற்றும் கை எலும்பு உள்ளே காணப்பட்டதால், அது ஐந்து முதல் எட்டு வயது வரையிலான குழந்தையாக இருக்கலாம் என கருதப்படுகின்றது.
- ❖ வெண்கலம் மற்றும் வெள்ளி ஆகியவற்றின் கலவையால் ஆன நான்கு வளையல்கள் இதில் காணப் பட்டன.
- ❖ குறிப்பாக முதுமக்கள் தாழிகளுக்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் என்பது ஒரு முக்கியமான தொல்லியல் அகழாய்வுத் தளமாகும்.

## அரசின் இணையச் சந்தை கொள்முதலில் இரண்டாவது மிக அதிக உயர்வு

- ❖ அரசின் இணையச் சந்தை (GeM) என்பது ஓர் இயங்கலை வழியான பொது கொள்முதல் தளமாகும்.
- ❖ தமிழக மாநிலத்தில் அரசின் இணையச் சந்தை விற்பனையாளர் தளத்தினை மிகவும் மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில் துறைகள் சங்கத்துடன் (TANSTIA) இது ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ❖ கடந்த நிதியாண்டில், 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுள் தமிழ்நாடு மாநிலத்தில் அரசின் இணையச் சந்தை கொள்முதலில் இரண்டாவது மிக அதிக உயர்வு பதிவாகியுள்ளது.
- ❖ 2021-22 ஆம் நிதியாண்டில் 220.89 கோடி ரூபாயாக இருந்த கொள்முதல் மதிப்பு ஆனது 2022-23 ஆம் நிதியாண்டில் 302.5% உயர்ந்து 889.19 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

GeM
Government
e Marketplace

## சோழர் காலத்து கலைப்பொருட்கள்

- ❖ வடக்குப்பட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சியில் மன்னர் இராஜ இராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த சோழர் கால நாணயம் உட்பட கிட்டத்தட்ட 400 பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- ❖ இது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரகடம் அருகே அமைந்துள்ளது.
- ❖ இரண்டாம் கட்ட அகழாய்வின் கண்டுபிடிப்புகளில் கி.பி. 9 மற்றும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட சோழர் காலத்தைச் சேர்ந்த இரண்டு நாணயங்களும் உள்ளடங்கும்.
- ❖ இந்த நாணயங்களுள் ஒன்று இராஜ இராஜ சோழன் காலத்தில் பயன்படுத்தப்பட்டது.
- ❖ ஒரு செப்பு வில், செப்பு மூடி, கண்ணாடி மணிகள் மற்றும் வளையல்களும் இங்கு கண்டு எடுக்கப்பட்டுள்ளன.



## தமிழகத்தின் அரிசித் தேவை

- இந்திய உணவுக் கழகமானது (FCI) அதன் திறந்தநிலைச் சந்தை விற்பனைத் திட்டத்தின் (OMSS) கீழ் மாநிலங்களுக்கு கூடுதல் உணவுத் தானியங்களை வழங்குவதாக இல்லை என்ற தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.
- தமிழ்நாடு பொது வழங்கீட்டுக் கழகமானது (TNCSC), ஒரு மாதத்திற்கு 50,000 முதல் 60,000 டன்கள் வரை கூடுதல் அளவிலான கொள்முதலைச் செய்வதற்காக இந்தியத் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) மற்றும் பிற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.
- மத்திய அரசானது, தமிழகத்திற்கு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் பொது விநியோகத் திட்டத்திற்கு (PDS) மாதந்தோறும் சுமார் 2.97 லட்சம் டன் அரிசியை ஒதுக்குகிறது.

**Lagging behind** | A comparison of the rice procurement in Tamil Nadu and other select States for the Central pool*



| State | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22** |
|---|---|---|---|---|---|
| Andhra Pradesh | 40 | 48.06 | 55.33 | 56.66 | 29.24 |
| Telangana | 36.18 | 51.9 | 74.54 | 94.53 | 46.26 |
| Chhattisgarh | 32.55 | 39.71 | 50.53 | 47.62 | 61.65 |
| Odisha | 32.87 | 44.47 | 47.98 | 52.58 | 38.93 |
| Madhya Pradesh | 10.96 | 13.95 | 17.4 | 24.97 | 30.7 |
| Tamil Nadu | 9.94 | 12.94 | 22.04 | 30.53 | 22.61 |
| **All-India total** | **381.74** | **443.99** | **518.26** | **601.73** | **510.47** |

*In lakh tonnes **As on April 28, 2022. The marketing season for 2021-22 is still on

Note: The table has been prepared on the basis of data compiled for the annual Kharif Marketing Season (October-September)

Source: Food Corporation of India website

- இந்த அளவை விட கூடுதலாக, மாநிலத்திற்குச் சராசரியாக, மாதத்திற்கு 50,000 டன் முதல் 60,000 டன் வரை அரிசி தேவைப்படுகிறது.
- தமிழகத்தில் அரிசியினைப் பெறும் குடும்ப அட்டைதாரர்கள் 2.2 கோடிக்கும் அதிகமாக உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மற்றும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு இடையில், இது இந்தியத் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பிடமிருந்து 3 லட்சம் டன்களை கொள்முதல் செய்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான காரீஃப் பருவப் பயிர்களின் சந்தைப்படுத்தல் பருவத்தில், உள்மாநிலத் தேவைகளுக்காக 7 லட்சம் டன்கள் மாநிலத்தினால் தக்க வைக்கப் பட்டது.
- தற்போது, மாநிலத்தின் கிடங்குகளில் 5.4 லட்சம் டன் அரிசி கையிருப்பில் உள்ளது.
- இது தவிர, அரிசி ஆலைகளில் சுமார் 1.9 லட்சம் டன்கள் கையிருப்பாக உள்ள நிலையில், இவை இறுதியில் பொது விநியோகத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும்.

## ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள்


- இந்த ஆண்டு 1,83,497 ஆலிவ் ரிட்லி (ஒலிவ நிறச் சிற்றாமைகள்) குஞ்சுகள் தமிழகக் கடற்கரையோரம் கடலில் விடப் பட்டுள்ளன.
- 2022-23 ஆம் ஆண்டில் கடலில் விடப்பட்ட கடல் ஆமைக் குஞ்சுகளின் எண்ணிக்கை கடந்த ஏழு ஆண்டுகளில் இருந்த எண்ணிக்கையை விட மிக அதிகமாகும்.
- ஜனவரி முதல் மே மாதம் வரை நீடிக்கும் இவற்றின் இனப்பெருக்கக் காலத்தில் கடலில் விடப் பட்ட ஆமைக் குஞ்சுகளின் எண்ணிக்கையானது 2021-22 ஆம் ஆண்டில் இருந்த 1,72,339 என்ற எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 1,21,289 ஆமைக் குஞ்சுகள் கடலுக்குள் விடப்பட்டது முதல் இந்த எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் 1 லட்சத்தைக் கடந்து வருகிறது.




## மாநிலப் பறவைகள் ஆணையம்


- தமிழ்நாடு அரசு பறவைகள் ஆணையத்தினை அமைத்துள்ளது.
- இது பறவைகள் சரணாலயங்கள், பறவைகள் கூடு கட்டுவதற்கு உகந்தச் சூழ்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்தச் சுற்றுலா வசதிகளைக் கண்காணித்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டில் 17 பறவைகள் சரணாலயங்கள் உள்ள நிலையில், அவற்றுள் 14 ராம்சார் தளங்கள் உள்ளன.
- மத்திய ஆசியப் பறவைகள் வலசைப் போதல் பாதையின் ஒரு பகுதியாக தமிழக மாநிலம் உள்ளது.
- இந்த ஆணையம் பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்
    - அனைத்துப் பறவைகள் சரணாலயங்களுக்குமான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தினை மேற்கொள்ளுதல்,
    - பறவைகளுக்கான ஒரு புதிய பாதுகாக்கப்பட்டப் பகுதிகளை உருவாக்குவதற்கு உதவுவதற்காக உள்நாட்டு மற்றும் வலசைப் போகும் பறவைகள் வருகை தரும் இடங்களைக் குறிப்பிடுதல்,

- பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும்
- சூழல் சார்ந்தச் சுற்றுலா மேம்பாட்டு வாய்ப்புகள்.




## இந்தியாவின் முதல் கூட்டுறவு சங்கம்

- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திரூரில் அமைந்துள்ள இந்தியாவின் முதல் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தின் மறுசீரமைப்பு மற்றும் வளங்காப்பு பணிகள் தொடங்கப்பட்டது.
- முதலாவது திரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் கடன் சங்கமானது, விவசாயிகளுக்காக 1904 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- அந்தப் பழையக் கட்டிடத்தினை ஒட்டி ஒரு சிறிய அமர்வு அரங்கம் மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றை எடுத்துரைக்கும் அருங்காட்சியகம் ஆகியவை அமைக்கப் படவுள்ளது.




## தமிழகத்தில் சுழிய எண்ணிக்கையிலான கோவிட் பாதிப்பு பதிவு

- 2023 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று தமிழ்நாடு மாநிலத்தில் ஒரு கோவிட் தொற்றுப் பாதிப்பு கூட பதிவாகவில்லை.

- 2020 ஆம் ஆண்டில் பெருந்தொற்றுப் பாதிப்பு ஆரம்பித்ததில் இருந்து தமிழ்நாடு மாநிலத்தில் புதிய கோவிட் பாதிப்புகள் எதுவும் பதிவு செய்யப்படாதது இதுவே முதல் முறையாகும்.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 07 ஆம் தேதியன்று முதலாவது கோவிட் பாதிப்பு பதிவாகியது.
- தமிழகத்தில் கோவிட் பாதிப்புகளின் எண்ணிக்கை 36,10,593 ஆக உள்ளது.
- கோவிட் பரிசோதனையில், தமிழகத்தில் 7.09 கோடிக்கும் அதிகமான அளவு மாதிரிகள் பரிசோதிக்கப் பட்டுள்ளன.
- கோவிட் தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 35,72,497 ஆக உள்ளது.
- இறப்பு எண்ணிக்கை 38,080 ஆக உள்ளது.

## FSSAI ஆணையத்தின் சரியான உணவு முறைச் சான்றிதழ் – கடலூர்



- கடலூரில் உள்ள திருப்பாப்புலியூர் உழவர் சந்தையானது, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சரியான உணவு முறை (பழங்கள் மற்றும் காய்கறி சந்தை) சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இந்த உழவர் சந்தையானது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்டப் பல்வேறு அளவுருக்களைப் பூர்த்தி செய்ததை அடுத்து இந்தச் சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது.
- பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பணியிடங்கள் மற்றும் உணவுச் சந்தைகள் போன்ற வளாகங்களில் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் நீடித்த நிலையான உணவு விநியோகத்தினை நன்கு ஊக்குவிப்பதை சரியான உணவு முறை என்ற முன்னெடுப்பானது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கோவில் அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம்

- சென்னை உயர்நீதிமன்றமானது கோயில் அர்ச்சகர் நியமனத்தில் சாதி அடிப்படையில் அமைந்த வம்சாவளி என்ற கருத்திற்கு இடம் இல்லை என்று தெளிவாகத் தெரிவித்து உள்ளது.
- சமய நூல்கள் மற்றும் சடங்குகள் குறித்து ஒருவர் எவ்வளவு நன்கு அறிந்துள்ளார் என்பது தான் இத்தகைய நியமனங்களுக்கான ஒரே அளவுருக்களாக கருதப்படும்.
- முத்து சுப்ரமணியக் குருக்கள் 2018 ஆம் ஆண்டில் ஒரு நீதிப்பேராணை மனுவினைத் தாக்கல் செய்திருந்தார்.
- சேலத்தில் உள்ள ஸ்ரீ சுகவனேஸ்வரர் ஸ்வாமி கோவிலில் அர்ச்சகர் / ஸ்தானிகர் (அர்ச்சகர் என்றும் அழைக்கப்படும் கோயில் அர்ச்சகர்) பதவிக்காக வெளியிடப்பட்டப் பணி அறிவிப்பை எதிர்த்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.
- இந்தப் பதவி நியமனங்கள் கோயில் நிர்வாகத்தினால் கடைப்பிடிக்கப்படும் குறிப்பிட்ட ஆகம (கோயில் சடங்குகளில் பின்பற்றப்படும் வேதங்கள்) கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும், பணியிட நிரப்பல் குறித்த இந்த விளம்பரமானது மனுதாரர் மற்றும் பிறரின் வம்சாவளி உரிமையை மீறுவதாகவும் வாதிடப்பட்டது.
- ஆனால் 2016 ஆம் ஆண்டு அகில இந்திய ஆதி சைவச் சிவாச்சாரியார்கள் சேவை சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றிற்கு இடையேயான வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை நீதிபதி வெங்கடேஷ் மேற்கோள் காட்டி தனது கருத்தினைத் தெரிவித்தார்.
- கோவில் அர்ச்சகர் பணி நியமனமானது மதச்சார்பற்ற செயல்பாடு என்றும், வம்சாவளி உரிமை தொடர்பானது அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- அர்ச்சகரின் சமயச் சேவை என்பது மதத்தின் மதச்சார்பற்ற அங்கமாகும் என்றும், மதச் சேவையினை வழங்குவது மதத்தின் ஒரு ஒருங்கிணைந்த அங்கமாகும் என்று உச்சநீதி மன்றம் கூறியது.
- 2022 ஆம் ஆண்டு N. ஆதித்யன் மற்றும் திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியம் இடையேயான வழக்கில், ஒரு பிராமணர் (இந்த வழக்கில், மலையாளிப் பிராமணர்) மட்டுமே சடங்குகள் மற்றும் பூஜைகளைச் செய்ய முடியும் என்று வலியுறுத்துவதில் எந்த நியாயமும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது.





# தேசியச் செய்திகள்

## சிறப்புப் பாதுகாப்புக் குழுவிற்கான புதிய விதிகள்

- உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது உயர்நிலைச் சிறப்புப் பாதுகாப்புக் குழுவிற்கான (SPG) புதிய விதிகளை அறிவித்துள்ளது.
- இனி இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த கூடுதல் தலைமை இயக்குநர் பதவியின் தரத்திற்கு குறையாத ஒரு அதிகாரியால் இது கையாளப் படும்.
- முன்னதாக, சிறப்புப் பாதுகாப்புக் குழுவானது ஒரு தலைமைக் காவல் ஆய்வாளர் (IGP) அந்தஸ்து கொண்ட அதிகாரியின் தலைமையில் செயல்பட்டது.
- அதன் இளம் அதிகாரிகள் ஆரம்பக் கட்டத்தில் ஆட்பேருரிமையின் பேரில், முதல் ஆறு வருடக் காலத்திற்கு நியமிக்கப் படுவார்கள்.
- 1988 ஆம் ஆண்டு சிறப்புப் பாதுகாப்புக் குழுச் சட்டத்தின் 2019 ஆம் ஆண்டு திருத்தத்தின் படி, இந்தப் படைப் பிரிவானது தற்போது பிரதமர் மற்றும் அவரது நெருங்கியக் குடும்ப உறுப்பினர்களை மட்டுமே பாதுகாக்கிறது.
- பதவிக் காலத்திற்குப் பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட இல்லத்தில் வசிக்கும் முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும் இந்தப் படைப் பாதுகாப்பு அளிக்கும்.

## ஊட்டச்சத்துக் குறைபாடு குறித்த ஒரு கூட்டு மதிப்பீட்டு அறிக்கை




- 2023 ஆம் ஆண்டிற்கான 'ஊட்டச்சத்து குறைபாடு குறித்த கூட்டு மதிப்பீடுகள்' (JME) என்ற ஒரு அறிக்கையானது யுனிசெஃப், உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக வங்கி ஆகிய அமைப்புகளால் வெளியிடப் பட்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் இருந்ததை விட 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் எண்ணிக்கை 16 மில்லியன் குறைவாக இருந்தது.
- இந்தியாவில் 2012 ஆம் ஆண்டில் சுமார் 41.6% ஆக இருந்த ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி குன்றல் விகிதமானது 2022 ஆம் ஆண்டில் 31.7% ஆக குறைந்து உள்ளது.
- இந்த எண்ணிக்கையானது 52 லட்சத்தில் இருந்து தற்போது 36 லட்சமாக குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 18.7% ஆக இருந்த ஒட்டு மொத்த நலிவடைதல் பாதிப்பானது இந்த ஊட்டச்சத்துக் குறைபாடு மீதான குறிகாட்டியின் உலகளாவிய எண்ணிக்கையில் 49% பங்கினைக் கொண்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் 2.2% ஆக இருந்த உடல் பருமனின் பாதிப்பு ஆனது, 2022 ஆம் ஆண்டில் 2.8% ஆக அதிகரித்துள்ளது.
- இதில் சர்வதேச அளவில் இந்தியா 8.8% பங்களிக்கிறது.
- ஆனால் உடல் பருமனுக்கான ஒட்டு மொத்த வகைப்பாடு குறைவாகவும், உலகளாவியப் பாதிப்பு பரவலான 5.6 சதவீதத்தினை விட மிகக் குறைவாகவும் உள்ளது.
- உலகளவில், 2012 ஆம் ஆண்டில் 26.3% ஆக இருந்த வளர்ச்சி குன்றிய நிலைப் பரவலின் அதிகரிப்பு விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 22.3% ஆக குறைந்துள்ளது.

- தெற்காசியாவில் இது சுமார் 40.3 சதவீதத்திலிருந்து சுமார் 30.5% ஆகக் குறைந்ததால் அந்த எண்ணிக்கையில் மிக அதிகச் சரிவானது பதிவாகியுள்ளது.
- உலகளவில் எடை சார்ந்து ஏற்படும் பிரச்சினையில் எந்த வித முன்னேற்றமும் இல்லை, ஏனெனில் அதன் பாதிப்புப் பரவல் விகிதம் 5.5 சதவீதத்திலிருந்து 5.6% ஆக அதிகரித்து உள்ளது.





## AISHE கணக்கெடுப்பு 2020-21

- கல்வி அமைச்சகத்தின் கீழ் AISHE கணக்கெடுப்பு 2020-21 ஆனது நடத்தப்பட்டது.
- உயர்கல்வியில் பட்டியலிடப்பட்ட சாதியினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் (OBC) ஆகியோரின் சேர்க்கை முறையே 4.2%, 11.9% மற்றும் 4% ஆக அதிகரித்துள்ளது.
- இதன்படி முஸ்லீம் சமூகத்தின் சேர்க்கை 8% குறைந்துள்ளது.
- உத்தரப் பிரதேசம் (36%), ஜம்மு காஷ்மீர் (26%), மகாராஷ்டிரம் (8.5%) மற்றும் தமிழ்நாடு (8.1%) ஆகிய மாநிலங்களில் மிகக் கடுமையான சரிவு பதிவாகியுள்ளது.
- 43% முஸ்லீம் சமூகத்தினர் உயர்கல்வியில் பதிவு செய்துள்ள ஒரே மாநிலம் கேரளா ஆகும்.
- நாட்டில் உயர்கல்வியில் பதிவு செய்துள்ள மொத்த மாணவர்களில் 36% மாணவர்கள் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் ஆவர்.
- இதில் 14 சதவீதத்தினர் பட்டியலிடப்பட்ட சாதியினர் ஆவர்.
- இந்த இரு சமூகங்களும் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கிட்டத்தட்ட 50% இடங்களை ஒதுக்கீடாகப் பெறுகின்றன.
- 14 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ள முஸ்லீம் சமூகத்தினரின் உயர்கல்வி சேர்க்கை 4.6% ஆக மட்டுமே பதிவாகியுள்ளது.
- அகில இந்திய அளவில் மொத்த ஆசிரியர்களில் 56 சதவீதத்தினர் பொதுப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆவர்.
- இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த ஆசிரியர்கள் முறையே 32%, 9% மற்றும் 2.5% ஆக உள்ளது.

- ஒட்டு மொத்த ஆசிரியர்களில் முஸ்லீம்கள் 5.6% மட்டுமே உள்ளனர்.
- பாலின அடிப்படையில் 100 ஆண் ஆசிரியர்களுக்கு 75 பெண் ஆசிரியர்கள் என்ற வீதமே உள்ளது.
- 71% பெண் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை சேர்ந்த ஆசிரியர்களும் 75% பெண் பட்டியலிடப் பட்ட சாதியினர் வகுப்பினரைச் சேர்ந்த ஆசிரியர்களும் உள்ளனர், ஆனால் 100 ஆண் முஸ்லீம் ஆசிரியர்களுக்கு 59 பெண் முஸ்லீம் ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

Figure 29: Teachers: SC, ST, OBC, Muslims: Top 10 States




| | Tamil Nadu | Uttar Pradesh | Maharashtra | Karnataka | Andhra Pradesh | Telangana | Rajasthan | Madhya Pradesh | West Bengal | Kerala |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SC | 11.33 | 8.89 | 11.54 | 8.44 | 14.22 | 11.43 | 7.91 | 7.21 | 11.19 | 3.84 |
| ST | 0.25 | 0.24 | 1.69 | 2.19 | 1.59 | 3.67 | 3.18 | 2.64 | 1.53 | 0.30 |
| OBC | 71.0 | 28.9 | 22.5 | 36.9 | 36.3 | 43.1 | 31.1 | 23.6 | 10.1 | 39.2 |
| Muslim | 3.0 | 6.5 | 5.0 | 5.9 | 4.6 | 8.4 | 3.0 | 4.2 | 8.0 | 13.4 |

## ஃபௌக்கால்ட்ஸ் ஊசற்குண்டு



- கொல்கத்தாவில் உள்ள தேசிய அறிவியல் அருங்காட்சியகச் சபையானது (NCSM) புதிய பாராளுமன்றக் கட்டிடத்தில் ஃபௌக்கால்ட்ஸ் ஊசற்குண்டினை நிறுவியுள்ளது.
- இந்த ஊசற்குண்டு ஒரு முழு சுழற்சியை முடிக்க துல்லியமாக 49 மணி நேரம், 59 நிமிடங்கள் மற்றும் 18 வினாடிகள் எடுத்துக் கொள்கிறது.
- இது பூமியின் சுழற்சியை விளக்கிக் காட்டப் பயன்படுத்தப்படும் ஒரு அழகுமிக்க எளிய சாதனமாகும்.
- இந்த ஊசற்குண்டு வட துருவத்தில் நிறுவப்பட்டால், பூமியானது 'கீழே' சுழல்வது போல இதுவும் அலைவுறும்.

- பூமத்திய ரேகைப் பகுதியில், ஊசற்குண்டு நிறுவப் பட்டிருந்தால், அச்சானது பூமியுடன் சேர்ந்து சுழலும் வகையில் தோன்றும் என்பதால், சுழல் அச்சு மாறுவது போல் தோன்றாது.
- நீங்கள் பூமியில் இருக்கும் இடத்தைப் பொறுத்து, ஊசற்குண்டு வெவ்வேறு வழிகளில் சுழல்வது போல் தோற்றமளிக்கும்.

## வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு 2023

- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது (NSO) வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பின் தரவை வெளியிட்டது.
- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்குமான வேலை வாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 6.8% ஆகக் குறைந்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இது 8.2 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது.
- 2020 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 20.8% ஆக இருந்தது.
- ஆண்களின் வேலைவாய்ப்பின்மையில் ஏற்பட்டக் குறைவானது பெண்களின் வேலை வாய்ப்பின்மையை விட அதிகமாக இருந்தது.
- மூன்றாம் காலாண்டில் 22.3% ஆக இருந்த பெண் தொழிலாளர் பங்கேற்பு வீதமானது நான்காம் காலாண்டில் 22.7% ஆக மேம்பட்டது.
- வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 9% சதவீதத்திற்கும் அதிகமாகவே இருந்தது.
- பெரிய மாநிலங்களில் சத்தீஸ்கர் 31.5% என்ற அதிகப் பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தினைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு முறையே 30.5% மற்றும் 27.4% சதவீதத்தினைக் கொண்டுள்ளன.
- உத்தரப் பிரதேச மாநிலமானது 13.3% பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்துடன் மோசமான செயல்திறனைக் கொண்டுள்ளது.
- ஒட்டு மொத்தமாக, முந்தைய காலாண்டில் 10.6% ஆக இருந்த சத்தீஸ்கர் மாநிலத்தின் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 12.5% ஆக உயர்ந்துள்ளது.

| Srl. No. | Description of the Indicator | Estimate of Indicator (in per cent) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Jan, 2021 – Dec, 2021 | | | Jan, 2022 – Dec, 2022 | | |
| | | Rural | Urban | Rural + Urban | Rural | Urban | Rural + Urban |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | Ratio of female workers to male workers working as Legislators, Senior officials and Managers (age group: 15 years and above) | 22.5 | 17.6 | 20.0 | 19.5 | 18.6 | 19.0 |
| 2 | Ratio of female workers to male workers working as Professionals and Technical Workers (age group: 15 years and above) | 49.9 | 45.4 | 47.3 | 49.7 | 44.4 | 46.5 |
| 3 | Percentage of female employed with advanced degree among total employed (age group: 25 years and above) | 1.3 | 5.9 | 2.5 | 1.2 | 6.4 | 2.6 |

- அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் மாநிலத்தில் இது 11.9% ஆக உள்ளது.

- இது டெல்லியில் 3.1% ஆகவும், மேற்கு வங்காளத்தில் 4.2% ஆகவும் மற்றும் கர்நாடகா மாநிலத்தில் 5.1% ஆகவும் இருந்தது.

## கல்வி அமைச்சகத்தின் அறிக்கை

- 2021-2022 ஆம் ஆண்டில் 10 ஆம் வகுப்பில் சேர்ந்த சுமார் 35 லட்சம் மாணவர்கள் 11 ஆம் வகுப்பில் சேரவில்லை.
- இந்த 35 லட்சம் மாணவர்களில் 27.5 லட்சம் பேர் பொதுத் தேர்வில் தோல்வியடைந்துள்ள நிலையில், மேலும் 7.5 லட்சம் மாணவர்கள் 10 ஆம் வகுப்புத் தேர்வினை எழுதவில்லை.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் மற்றும் இந்தியச் சான்றிதழ் கல்விச் சபை ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் தோல்வி விகிதம் 5% வரை குறைவாக உள்ளது.
- ஆனால் மாநிலக் கல்வி வாரியங்களில் இது 16% என்ற அளவில் அதிகமாக இருந்தது.
- தவறிய 35 லட்சம் மாணவர்களில் 4.5 லட்சம் மாணவர்கள் மட்டுமே தேசியத் திறந்த நிலைக் கல்வி நிறுவனம் மூலம் தேர்வு எழுதுகின்றனர்.
- மேலும், தேசியத் திறந்தநிலைக் கல்வி நிறுவனத்தில் பதிவான தோல்வி விகிதமும் 47% முதல் 55% வரையிலான வீதத்தில் உள்ளது.
- 85% அதாவது கிட்டத்தட்ட 30 லட்சம் மாணவர்களின் இடைநிற்றல் 11 மாநிலங்களில் மட்டுமே பதிவாகியுள்ளன.
- அவை உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, ராஜஸ்தான், கர்நாடகா, அசாம், மேற்கு வங்காளம், ஹரியானா மற்றும் சத்தீஸ்கர் ஆகியனவாகும்.
- மேகாலயாவில் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் சதவீதம் 57% என்ற அளவில் குறைவாக உள்ளது.
- தேர்ச்சி விகிதமானது மத்தியப் பிரதேசத்தில் 61 சதவீதமாகவும், ஜம்மு காஷ்மீரில் 62% ஆகவும் உள்ளது.
- இது பஞ்சாப் மாநிலத்தில் 97.8% ஆகவும், கேரளாவில் 99.85% ஆகவும் உள்ளது.

## CITIIS 2.0 திட்டம்

- புத்தாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் நிலைத்தன்மை (CITIIS) ஆகியவற்றிற்கான நகர முதலீடுகள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழான ஒரு திட்டமாகும்.
- CITIIS என்பது புத்தாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் நிலைத்தன்மை (CITIIS) ஆகியவற்றிற்கான நகர முதலீடுகள் என்பதைக் குறிக்கும்.
- இது ஒருங்கிணைந்தக் கழிவு மேலாண்மை மற்றும் பருவநிலைச் சார்ந்தச் சீரமைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- போட்டித் திறன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் 18 நகரங்களில் CITIIS திட்டத்தின் இரண்டாம் கட்டமானது செயல்படுத்தப்பட உள்ளது.
- இது பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம் (AFD), கிரெடிடான்ஸ்டால்ட் ஃபர் வீடராவ்பௌ (KfW), ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனம் (NIUA) ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.





## கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டம்




- கூட்டுறவுத் துறையில் உணவு தானியச் சேமிப்புத் திறனை 70 மில்லியன் டன்கள் வரை அதிகரிக்கச் செய்வதற்கான 1 டிரில்லியன் ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்படும் உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டமாக இது இருக்கும்.
- இந்தத் திட்டமானது, நாடு முழுவதும் பரவலாக்கப்பட்டச் சேமிப்புக் கிடங்கு வசதிகளை அமைப்பதற்குக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவும்.
- இது இந்திய உணவு கழகத்தின் சேமிப்புச் சேவை மீதான ஒரு சுமையை குறைக்கும், பண்ணை விளைபொருட்களில் ஏற்படும் விரயத்தை (வீணாதலை) குறைக்கும் மற்றும் விவசாயிகள் தங்கள் விற்பனையைச் சிறப்பாக திட்டமிடவும் உதவும்.

- இது வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்துறை ஆகிய அமைச்சகங்களின் தற்போதையத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் ஒரு திட்டமாகும்.
- கூட்டுறவு அமைச்சகமானது வெவ்வேறு மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்தது 10 மாவட்டங்களில் இந்த சோதனைத் திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளது.

## PM-JAY திட்டத்தின் கீழ் 5 கோடி மருத்துவமனைச் சேர்க்கைகள்




- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB PM-JAY), திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 கோடியாக பதிவு செய்யப் பட்டுள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் மொத்த சேர்க்கைகளில் 56% தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 44% அரசுப் பொது மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- தேசிய சுகாதார ஆணையத்தினால் (NHA) நிர்வகிக்கப்படும் இந்தத் திட்டமானது, ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டுக்கு 5 லட்சம் வரையிலான ஒரு சுகாதாரக் காப்பீட்டினை வழங்குகிறது.
- இது சுமார் 12 கோடி குடும்பங்களுக்கு இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவச் சிகிச்சைக்கான அணுகலை வழங்குகிறது.
- தற்போது, இந்தத் திட்டமானது டெல்லி, ஒடிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை தவிர இந்தியாவின் 33 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அமலில் உள்ளது.

## வரைவு விமான மசோதா – 2023

- 2023 ஆம் ஆண்டு வரைவு விமான மசோதாவானது தற்போதுள்ள 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்தினை மறு ஆய்வு செய்து உருவாக்கப்பட்டது.

- ❖ இது பொது மக்களின் ஆலோசனை வழங்கீடுகளுக்காக வேண்டி 30 நாட்களுக்கு பொது வெளியில் அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ விமானத்தின் வடிவமைப்பு, உற்பத்தி, உடைமை, பயன்பாடு, செயல்பாடு, விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனைக் கட்டுப் படுத்துவதற்குமான பல்வேறு சிறந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு சட்டத்தினை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.





## மின்னணுப் பழுதுபார்ப்புத் துறைக்கான சோதனைத் திட்டம்

- ❖ உலகளாவிய மின்னணுப் பழுதுபார்ப்புத் துறையில் 20% பங்கினைக் கைப்பற்றுவதை ஒரு நோக்கமாகக் கொண்ட 2 மாத கால சோதனைத் திட்டத்தை அரசாங்கம் தொடங்கி உள்ளது.
- ❖ இது சுங்கம் மற்றும் மின்னணுக் கழிவு விதிகளை தளர்த்துவதன் மூலமும், பிற பிராந்தியங்களில் இருந்து கொண்டு வரப்படும் நுகர்வோர் மின்னணு மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்களைப் பழுதுபார்ப்பதற்கு இந்திய நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலமும் மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ இந்தியாவை உலகின் உலகளாவியப் பழுதுபார்ப்பு மையமாக மாற்றுவதற்கான முதல் படியாக இது கருதப்படுகிறது.
- ❖ பழுதுபார்ப்புச் சேவைகளைப் பொறுத்தவரையில், இந்தியாவானது சீனாவை விட 57% அளவினையும் மலேசியாவை விட 26% அளவில் குறைவான செலவின வாய்ப்பினையும் கொண்டுள்ளது.
- ❖ தற்போது வரை, பழுதுபார்ப்புச் சேவைகள் மூலம் இந்தியா பெறும் வருவாய் சுமார் 350 மில்லியன் டாலர் ஆகும்.


## இந்தியாவுடனான நாடு ரீதியிலான கூட்டுப் பங்காண்மை உத்தி: 2023-2027

- ❖ ஆசிய வளர்ச்சி வங்கி 2023-2027 ஆம் ஆண்டு காலக் கட்டத்திற்கான இந்தியாவுடனான நாடு ரீதியிலான அதன் மூலோபாயக் கூட்டுப் பங்காண்மைத் திட்டத்தை அறிவித்து உள்ளது.
- ❖ வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் பசுமை வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இது முக்கியமாக கவனம் செலுத்துகிறது.

❖ இந்தியாவுடனான வலுவான, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை இது ஆதரிக்கிறது.




## அருமண் நிரந்தரக் காந்த ஆலை




❖ விசாகப்பட்டினத்தில் உள்ள அருமண் நிரந்தரக் காந்த ஆலையைப் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

❖ விசாகப்பட்டினத்தில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மைய வளாகத்தில் அருமண் நிரந்தரக் காந்தம் உருவாக்கப் பட்டது.


❖ இது எந்த வெளிப்புறச் சக்தி மூலமும் தேவையில்லாமல் ஒரு காந்தப்புலத்தை உருவாக்கும் ஒரு வகையான காந்தமாகும்.

❖ ஒருமுறை காந்தமாக்கப் பட்டால், இதனை நீண்டக் காலத்திற்கு காந்தத் தன்மையுடன் பராமரிக்க முடியும் என்பதால் இது "நிரந்தரமானது" என்று அழைக்கப்படுகிறது.

❖ அருமண் உலோகங்களிலிருந்துத் தயாரிக்கப்படுகிற நிரந்தரக் காந்தங்கள் அருமண் நிரந்தரக் காந்தங்கள் எனப்படுகின்றன.

## தேசிய மின்சாரத் திட்டம் 2022-32

- மத்திய மின்சார ஆணையம் (CEA) 2022-32 ஆம் ஆண்டிற்கு என்று ஒரு தேசிய மின்சாரத் திட்டத்தை அறிவித்துள்ளது.
- இதில் கடந்த ஐந்தாண்டுகள் (2017-22), அடுத்த ஐந்தாண்டுகளுக்கான விரிவான திட்டம் (2022-27) மற்றும் அதற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்கான (2027-32) தொலை நோக்குத் திட்டம் ஆகியவை அடங்கும்.
- 2026-27 ஆம் ஆண்டு இறுதிக்குள் புதை படிவம் சாராத மின்சாரத்தின் பங்கு 57.4% ஆக அதிகரிக்கும்.
- இது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி 42.5% சதவிகிதத்தில் இருந்து 2031-32 ஆம் ஆண்டின் இறுதியில் 68.4% ஆக அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.





## ஸ்வச் ஜல் சே சுரக்சா பிரச்சார அறிக்கை

- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகம் ஜல் ஜீவன் மிஷன்: ஸ்வச் ஜல் சே சுரக்சா (SJSS) என்றப் பிரச்சாரத்தின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இந்தப் பிரச்சாரம் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி முதல் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- இது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை (UTs) முதன்மைப்படுத்தி நீரின் தர கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட வலியுறுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் போது கிடைக்கப் பெற்ற 90.34% அளவிலான மாசுபட்ட மாதிரிகளை மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இதில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.

## ரயில் தடம் புரளல் பற்றிய இந்திய ரயில்வேயின் அறிக்கை

- இந்தியத் தலைமைக் கணக்கு தணிக்கையாளர் (CAG) 2022 ஆம் ஆண்டில் இந்திய ரயில்வேயில் ரயில்கள் தடம் புரளல் என்பது குறித்த தனது அறிக்கையைச் சமர்ப்பித்து உள்ளார்.
- மொத்தம் 422 ரயில்கள் தடம் புரண்ட சம்பவங்களுக்குப் பொறியியல் துறையே ஒரு காரணமாக உள்ளது.

- 16 இரயில்வே மண்டலங்களில் (ZRs) ரயில்கள் தடம் புரண்ட விபத்துகள் பற்றிய 1129 'விசாரணை அறிக்கைகளின்' பகுப்பாய்வின் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள் / விபத்துகளில் ரயில்கள் தடம் புரண்டதற்குக் காரணமாக 24 காரணிகள் உள்ளதை இது வெளிப்படுத்தி உள்ளது.
- ரயில் விபத்துகளால் ஏற்பட்ட மொத்தச் சேதம்/சொத்து இழப்பு 32.96 கோடி ருபாய் என இந்த அறிக்கை தெரிவிக்கிறது.
- இவற்றில் 182 ரயில்கள் தடம் புரண்டதற்கு இயந்திரவியல் துறையின் பிழைகளும் 154 விபத்துகள் என்ஜின் ஓட்டுனர்களின் கவனக் குறைவுகளும் காரணமாக இருந்துள்ளது.
- 2017-21 ஆம் ஆண்டில் 1127 ரயில்கள் தடம் புரண்டதில், சுமார் 289 தடம் புரளல்கள் (26%) ரயில்வே தடங்களைப் புதுப்பிக்காமையால் நிகழ்ந்தவை எனவும் இந்த அறிக்கை கூறுகிறது.




## தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) 2023

- தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) 2023 ஆம் ஆண்டுக்கான இந்திய உயர் கல்வி நிறுவனங்களுக்கானத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம் (IIT) ஆனது தொடர்ந்து ஐந்தாவது முறையாக ஒட்டு மொத்தத் தரவரிசையில் ஒரு சிறந்தக் கல்வி நிறுவனமாக உள்ளது.
- பெங்களூருரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது (IISC) தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக நாட்டின் மிக சிறந்தப் பல்கலைக்கழகமாக தரவரிசைப் படுத்தப் பட்டு உள்ளது.
- டெல்லியில் உள்ள மிராண்டா ஹவுஸ் சிறந்தக் கல்லூரியாகத் தேர்ந்து எடுக்கப் பட்டு உள்ளது.
- அகமதாபாத் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி கழகம் (IIM) ஆனது நாட்டின் சிறந்த மேலாண்மைக் கல்வி நிறுவனமாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.

- ❖ மருந்தாளுனர் பிரிவில் ஹைதராபாத்தில் உள்ள தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER) ஆனது முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகமானது (AIIMS) சிறந்த மருத்துவக் கல்லூரியாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- ❖ சென்னையிலுள்ள சவீதா இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் மற்றும் டெக்னிக்கல் சயின்சஸ் நிறுவனமானது பல் மருத்துவக் கல்லூரிகளில் முதலிடத்தில் உள்ளது.
- ❖ பெங்களூருரில் உள்ள நேஷனல் லா ஸ்கூல் ஆஃப் இந்தியப் பல்கலைக் கழகமானது நாட்டிலேயே சிறந்த சட்டக் கல்லூரியாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- ❖ பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தைத் தொடர்ந்து ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் (JNU) மற்றும் ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகம் ஆகியன முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த பல்கலைக்கழகங்களாக உள்ளன.
- ❖ புது தில்லி உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமானது விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில் முதல் இடத்தைப் பிடித்து உள்ளது.
- ❖ ஐஐடி-கான்பூர் 'புதுமை/புத்தாக்கம்' என்ற பிரிவில் முதலிடம் பிடித்து உள்ளது.
- ❖ ஐஐஎஸ்சி-பெங்களூரு மற்றும் ஐஐடி-டெல்லி ஆகியவை ஒட்டு மொத்தப் பிரிவில் இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த கல்வி நிறுவனங்களாக இடம் பெற்றுள்ளன.
- ❖ இதில் தில்லி இந்துக் கல்லூரியும் மற்றும் சென்னையின் மாநிலக் கல்லூரியும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த கல்லூரிகளாக இடம் பெற்றுள்ளன.
- ❖ ஐஐஎம்-பெங்களூர் மற்றும் ஐஐஎம்-கோழிக்கோடு ஆகியன முறையே மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்து உள்ளன.
- ❖ சண்டிகரில் உள்ள மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலை நிறுவனம், மற்றும் வேலூரில் உள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி ஆகியவை இதில் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த மருத்துவக் கல்லூரிகளாக தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.




| | |
|---|---|
| Indian Institute of Technology Madras | 1 |
| Indian Institute of Science, Bengaluru | 2 |
| Indian Institute of Technology Delhi | 3 |
| Indian Institute of Technology Bombay | 4 |
| Indian Institute of Technology Kanpur | 5 |
| All India Institute of Medical Sciences, New Delhi | 6 |
| Indian Institute of Technology Kharagpur | 7 |
| Indian Institute of Technology Roorkee | 8 |
| Indian Institute of Technology Guwahati | 9 |
| Jawaharlal Nehru University, New Delhi | 10 |

## அணைகளின் நிலநடுக்கப் பாதுகாப்பிற்கான தேசிய மையம்

- அணைகளின் நிலநடுக்கப் பாதுகாப்பிற்கான தேசிய மையமாக ஜெய்ப்பூரில் உள்ள மால்வியா தேசியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (எம்என்ஐடி) அடையாளம் காணப் பட்டு உள்ளது.
- நாட்டின் இவ்வகையிலான முதல் மையமாக இது அமைக்கப்பட்டு உள்ளது.
- இந்த மையம் அணைகளின் கட்டமைப்பு மற்றும் நிலநடுக்கப் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்பச் சிக்கல்களைக் கையாள்வதில் நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்ய செய்வதற்காக உள்நாட்டுத் திறன்களை மேம்படுத்தும்.
- நாட்டிலுள்ள குறிப்பிட்ட அணைகளின் எண்ணிக்கை 5,500க்கு மேல் உள்ள நிலையில், அவற்றில் 70 அணைகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன.


## டைம்ஸ் உயர் கல்வி (THE) தாக்கங்கள் குறித்த தரவரிசை 2023




- 2023 ஆம் ஆண்டுக்கான டைம்ஸ் உயர் கல்வி (THE) தாக்கம் குறித்தத் தரவரிசையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- கோயம்புத்தூரில் உள்ள அமிர்தா விஸ்வ வித்யபீடமானது இந்தியாவின் மிகச் சிறந்தப் பல்கலைக் கழகமாக உருவெடுத்துள்ளது.
- உலகளவில் 112 நாடுகள் / பிராந்தியங்களைச் சேர்ந்த 1,591 பல்கலைக் கழகங்களில் இந்தப் பல்கலைக்கழகமானது 52வதாக தரவரிசைப் படுத்தப்பட்டு உள்ளது.
- முதல் 300 இடங்களில் உள்ள மற்ற இந்தியப் பல்கலைக்கழகங்களில் பஞ்சாபில் உள்ள லவ்லி புரொபஷனல் பல்கலைக் கழகம் 101 மற்றும் 200 ஆகியவற்றுக்கு இடையில் தர வரிசைப் படுத்தப்பட்டு உள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஷூலினி பயோடெக்னாலஜி மற்றும் மேலாண்மை அறிவியல் பல்கலைக் கழகமானது 101 மற்றும் 200 ஆகியவற்றுக்கு இடையில் தர வரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- ஒடிசாவில் உள்ள கலிங்கா இன்ஸ்டிடியூட் ஆப் இண்டஸ்ட்ரியல் டெக்னாலஜி என்ற பல்கலைக் கழகமானது 201 முதல் 300 ஆகியவற்றுக்கு இடையில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.

- ஐந்தாவது நீடித்த மேம்பாட்டு இலக்கான (SDG-5) பாலினச் சமத்துவத்தைப் பேணும் கல்வி நிறுவனங்களில் மணிபால் அகாடமி ஆஃப் ஹையர் எஜுகேஷன் 4வது இடத்தில் உள்ளது.
- SDGயின் 7வது இலக்கான மலிவு மற்றும் சுத்தமான எரிசக்திப் பிரிவில் முதல் 100 இடங்களில் இந்தியாவில் இருந்து அதிக அளவாக 5 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- SDGயின் 3வது இலக்கான நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுப் பிரிவில் முதல் 100 இடங்களில் இந்தியாவில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

## கவாச் அமைப்பு




- கவாச் என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு (ATP) அமைப்பாகும்.

- இது இந்தியத் தொழில்துறையுடன் இணைந்து ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிலை அமைப்பால் (RDSO) உருவாக்கப் பட்டுள்ளது.
- இது பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிலை-4 (SIL-4) தரநிலைகளுடன் கூடிய ஒரு அதிநவீன மின்னணு அமைப்பாகும்.
- இது ஆபத்தைக் குறிக்கும் சிவப்பு நிற சமிக்ஞை மூலம் ரயில்கள் கடப்பதைத் தடுத்து பாதுகாப்பை வழங்கச் செய்வதோடு, மோதலையும் தவிர்க்கிறது.
- பல்வேறு தகுந்த வேகக் கட்டுப்பாடுகளின் படி ஒரு ஓட்டுநர் ரயிலைக் கட்டுப்படுத்தத் தவறினால் இது ரயிலின் நிறுத்தும் தடை அமைப்பை தானாகவே செயல்படுத்துகிறது.
- கூடுதலாக கவாச் செயல்பாட்டு அமைப்பு பொருத்தப்பட்ட இரண்டு இன்ஜின்களுக்கு இடையேயான மோதலையும் இது தடுக்கிறது.
- இந்த அமைப்பு அவசரகாலச் சூழ்நிலைகளின் போது அவசர உதவி கோரல் அமைப்பு (SoS) மூலம் செய்திகளை அனுப்புகிறது.
- இதன் கூடுதல் அம்சம் ஒரு வலையமைப்புக் கண்காணிப்பு அமைப்பின் மூலம் ரயில் இயக்கங்களின் செயல்பாடுகளை மையப்படுத்திய நிகழ்நேரக் கண்காணிப்பு ஆகும்.
- மலிவான மற்றும் SIL-4 சான்றளிக்கப்பட்ட தொழில்நுட்பங்களில் 'கவாச்' ஒன்றாகும் என்பதோடு, இதன் பிழையின் நிகழ்தகவு 10,000 ஆண்டுகளில் 1 ஆக இருக்கும்
- தென் மத்திய இரயில்வே (SCR) மண்டலம் இந்த KAVACH - TACS அமைப்பினைச் செயல் படுத்துவதில் முன்னோடியாக உள்ளது.

## வழிகாட்டுதலுக்கான தேசியத் திட்டம் (NMM)


- ஆசிரியர் கல்விக்கான தேசியக் கழகம் (NCTE) நாடு முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட 30 மத்திய அரசின் பள்ளிகளில் சோதனை முறையில் / முன்னோடித் திட்டமாக NMM (National Mission for Mentoring) என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- சிறந்த வழிகாட்டுதலின் மூலம் பள்ளி ஆசிரியர்களின் ஒரு தொடர்ச்சியான தொழில் முறை வளர்ச்சியை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சமீபத்தில் NCTE ஆனது 60 வழிகாட்டிகளுக்கு 2 நாள் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தது.

## 2021-22 நிதியாண்டுக்கான நிலைத்தன்மை அறிக்கை

- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) 2021-22 நிதியாண்டுக்கான நிலைத் தன்மைப் பற்றிய முதல் அறிக்கையானது, NHAI அமைப்பின் நிர்வாக அமைப்பு, பங்குதாரர்கள், சுற்றுச்சூழல் மற்றும் பல சமூகப் பொறுப்பு முயற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- 2019-20 நிதியாண்டில் இருந்து 2021-22 ஆம் ஆண்டு வரை நேரடி உமிழ்வு 18.44 சதவிகிதமும் குறைந்த எரிபொருள் நுகர்வு மூலம் 9.49 சதவித உமிழ்வும் குறைக்கப் பட்டது.
- ஆற்றல் நுகர்வு, செயல்பாடுகள், போக்குவரத்து மற்றும் பயணம் ஆகியவற்றில் இருந்து வெளியேற்றப்படும் பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வின் அளவு 2020-21 நிதி ஆண்டில் 9.7% மற்றும் 2021-22 நிதியாண்டில் 2% என்ற அளவில் குறைந்துள்ளது.

## கையால் துப்புரவுப் பணி மேற்கொள்ளல் குறித்த அறிக்கை


- நாட்டில் மொத்தமுள்ள 766 மாவட்டங்களில் 508 மாவட்டங்களில் (66%) மட்டுமே கையால் துப்புரவுப் பணி மேற்கொள்ளப் படுவது இல்லை என்று இந்த அறிக்கை தெரிவித்துள்ளது.
- அடையாளம் காணப்பட்ட 58,000 பாதாள சாக்கடைத் தொழிலாளர்களுக்கு தலா ₹40,000 ரூபாய் ஒருமுறை வழங்கீடாக அளிக்கப்பட்டுள்ளது.
- கூடுதலாக அவர்களில் சுமார் 22,000 பேர் (பாதிக்கும் குறைவானவர்கள்) திறன் பயிற்சி திட்டங்களுடன் இணைக்கப் பட்டுள்ளனர்.
- கையால் துப்புரவு செய்பவர்களின் மறுவாழ்வுத் திட்டமானது, கழிவகற்றும் பணியை 100% இயந்திரமயமாக்கும் நமஸ்தே எனும் திட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.




## நியாய விகாஸ் இணையதளம்

- நியாய விகாஸ் இணையதளம் வழியாக நீதித்துறை உள்கட்டமைப்பு சார்ந்த பல்வேறு திட்டங்களைச் வெகு சிறப்பாகச் வழங்கச் செய்வதற்கு வசதியாக, பயனருக்கு ஏதுவான மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க ஒரு இணையதளமானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- நிதி வழங்கீடு, ஆவணப்படுத்துதல், திட்டக் கண்காணிப்பு மற்றும் ஒப்புதல் ஆகியவை பற்றிய தகவல்களுக்கான தடையற்ற முறையிலான ஒரு அணுகலை பெறும் வகையில் பங்குதாரர்களுக்கு அதிகாரமளிப்பதற்கு இந்த இணையதளம் உதவுகிறது.
- மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கான நீதிமன்றக் கூடங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளைக் கட்டமைப்பதற்காக வேண்டி பல்வேறு மாநில அரசு / ஒன்றியப் பிரதேசங்களுக்கு மத்திய அரசினால் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப் படுகிறது.

- இந்தத் திட்டத்தின் கீழ், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான நிதிப் பகிர்வு முறை மாநிலங்களைப் பொறுத்தமட்டில் 60:40 ஆகும்.
- இது வடகிழக்கு மற்றும் இமயமலைப் பகுதி சார்ந்த மாநிலங்களுக்கு 90:10 ஆகவும் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு 100% ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.




## அக்னி-1 ஏவுகணை

- அக்னி-1 ஏவுகணையின் பயிற்சி சார் ஏவுதல் சோதனையானது ஒடிசாவின் ஏபிஜெ அப்துல் கலாம் தீவில் உத்திசார் படைப் பிரிவினால் வெற்றிகரமாக மேற் கொள்ளப் பட்டது.
- இந்த நடுத்தரத் தொலைவு வரம்புடைய அக்னி-1 உந்து விசை ஏவுகணையானது 700 முதல் 1200 கிலோமீட்டர் வரையிலான இலக்குகளைத் தாக்கும் திறனைக் கொண்டு உள்ளது.
- அக்னி-I ஏவுகணையானது இந்திய இராணுவத்தின் உத்திசார் படைப் பிரிவினால் (SFC) பயன்படுத்தப் படுகிறது.



## செயல்திறன் அடிப்படையிலான வழிசெலுத்தல் அமைப்பின் செயல்விளக்கம்

- மும்பையில் ஜூஹூவில் இருந்து புனே வரை பயணிக்கும் ஹெலிகாப்டர்களுக்கான செயல்திறன் அடிப்படையிலான வழிசெலுத்தல் அமைப்பின் செயல்விளக்கத்தினை ஆசியாவிலேயே முதல் முறையாக இந்தியா மேற்கொண்டது.

- GAGAN செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி இந்த செயல் விளக்கம் என்பது மேற்கொள்ளப்பட்டது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய விமான நிலைய ஆணையம் ஆகியவை இணைந்து இந்தத் தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளன.
- அதிக துல்லியத் தன்மையினை வழங்கச் செய்கிற வகையில் சர்வதேசப் புவியிடங் காட்டி உதவியுடன் இயங்கும் புவிநிலைச் சுற்றுப்பாதை மிகையாக்கம் சார்ந்த வழி செலுத்தல் தொழில்நுட்பம் (GAGAN) என்பது ஓர் அதிநவீன விண்வெளிச் சார்ந்த மிகை ஆக்க அமைப்பாகும்.




## பிரேர்னா: வட்டார மொழிப் பள்ளி

- நாட்டின் இளையோர்களை மாற்றத்தின் ஒரு வினையூக்கிகளாக மாற்றச் செய்வதற்கு ஊக்குவிக்கும் வகையிலான 'பிரேர்னா: வட்டார மொழிப் பள்ளி' என்ற திட்டத்தினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இது இளையோர்களை மாற்றத்தின் வினையூக்கிகளாக மாற்றுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குஜராத்தின் வாட்நகர் பள்ளி 'பிரேர்னா (உத்வேகமிக்கது) : வட்டார மொழிப் பள்ளி' ஆக உருவாக்கப் பட்டு வருகிறது.
- இந்தப் பள்ளி 1888 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டு, 2018 ஆம் ஆண்டு வரை செயல்பட்டது.
- இந்தியாவின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு மாணவர்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்பர்.



## உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2023

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது தனது 5வது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் தமிழகத்தினைப் பின்னுக்குத் தள்ளி கேரள மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தக் குறியீட்டில் பஞ்சாப் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது.
- இதில் தமிழ்நாடு மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.
- சிறிய மாநிலங்கள் பிரிவில், கோவா மாநிலம் முதலிடத்தினைப் பெற்றுள்ளது.
- ஒன்றியப் பிரதேசங்களில் ஜம்மு காஷ்மீர், டெல்லி மற்றும் சண்டிகர் ஆகியவை முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றன.
- கடந்த ஆண்டு, 20 பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்திலும், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா அடுத்தடுத்த இடங்களிலும் இருந்தது.
- 2020-21 ஆம் ஆண்டில் குஜராத் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து கேரள மாநிலம் இரண்டாமிடத்திலும், தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும் இடம் பெற்றிருந்தன.

| Category- Union Territories | |
|---|---|
| Name | Rank |
| Jammu & Kashmir | 1 |
| Delhi | 2 |
| Chandigarh | 3 |

| Category- Small States | |
|---|---|
| Small State | Rank |
| Goa | 1 |
| Manipur | 2 |
| Sikkim | 3 |

| Category- Large States | |
|---|---|
| Large State | Rank |
| Kerala | 1 |
| Punjab | 2 |
| Tamil Nadu | 3 |


## பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் - 2023

- 2023 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் (நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களாகக் கருதப்படும் கல்வி நிறுவனங்கள்) விதிமுறைகளானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- மேலும் உயர்தரத்தினை மையமாகக் கொண்ட நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு இது வழி வகுக்கும்.
- 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டமானது, பல்கலைக்கழகங்கள் அல்லாத பிற கல்வி நிறுவனங்களுக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாகக் கருதப் படும் கல்வி நிறுவனங்கள் என்ற அந்தஸ்தினை வழங்குவதற்கான அதிகாரத்தினை மத்திய அரசிற்கு வழங்குகிறது.
- முன்னதாக, இதற்கான விதிமுறைகள் தொகுப்பானது 2010 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டு 2016 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் திருத்தப் பட்டன.

- இந்தியாவில் தற்போது சுமார் 170 நிகர்நிலைப் பல்கலைக் கழக நிறுவனங்கள் உள்ளன.





## நிலவுடைமைப் பாத்தியம் கோரல்



- கர்நாடக உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ரிது ராஜ் அவாஸ்தி தலைமையில் சட்ட ஆணையமானது அமைக்கப்பட்டது.
- நிலவுடைமைப் பாத்தியம் கோரல் தொடர்பானச் சட்டத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டு வருவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று 22வது சட்ட ஆணையம் தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- நிலவுடைமைப் பாத்தியம் கோரல் என்ற கருத்தானது ஒரு நிலத்தினைக் காலியாக விடக் கூடாது என்றும் அதற்கு மாறாக ஒரு முறையானப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தாக்கத்தில் இருந்து தோன்றியது.
- நிலவுடைமைப் பாத்தியம் கோரல் என்பது "தொடர்ச்சியான, தடையின்றி மற்றும் ஒரு அமைதியான முறையிலான" நில உரிமைதாரருக்கு எதிரான ஒரு உரிமைக் கோரலாக இருக்க வேண்டும்.
- உள்நாட்டில் இந்த வரம்பு நிர்ணய சட்டத்தினைக் கொண்டு வருவதற்கான முதல் முயற்சியானது "1859 ஆம் ஆண்டு XIV சட்டம்" ஆகும்.
- இது பிரிட்டிஷ் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட உரிமையியல் சார்ந்த வழக்குகளின் வரம்பினை ஒழுங்குமுறைப் படுத்தியது.
- 1963 ஆம் ஆண்டில் வரம்பு நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, நிலவுடைமைப் பாத்தியம் கோரல் பற்றிய சட்டம் குறிப்பிடத் தக்க மாற்றங்களுக்கு உட்படுத்தப் பட்டது.
- 1963 ஆம் ஆண்டு வரம்பு நிர்ணயச் சட்டத்தின் கீழ், 12 ஆண்டுகளுக்கும் மேலாக தனியார் நிலம் அல்லது 30 ஆண்டுகளுக்கு மேல் அரசு நிலம் வைத்திருக்கும் எந்தவொரு நபரும் அந்தச் சொத்தின் உரிமையாளராக முடியும்.

## தேசத் துரோக சட்ட அறிக்கை



- ❖ இந்தியாவின் 22வது சட்ட ஆணையமானது, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124Aவது பிரிவின் அரசியலமைப்பு சார்பு தன்மை மீதான ஒரு இறுதி அறிக்கையினை (தேசத் துரோகச் சட்டத்தின் பயன்பாடு) சமீபத்தில் சமர்ப்பித்தது.
- ❖ தேசத் துரோகத்தைக் குற்றவியல் சார்ந்த குற்றமாகக் கருதும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124Aவது பிரிவினைத் தக்க வைக்க அந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- ❖ எனினும் தவறான பயன்பாடுகளுக்கு உள்ளாக வாய்ப்புள்ள இந்தச் சட்டப் பிரிவினைப் பாதுகாப்பதற்கும் திருத்துவதற்கும் அது அழைப்பு விடுத்துள்ளது.
- ❖ 124A சட்டப் பிரிவானது தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக, சில மாதிரி வழிகாட்டுதல்களை மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்று அது கூறியுள்ளது.
- ❖ இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளப் பரிந்துரைகள் வலியுறுத்தல் சார்ந்தவை மற்றும் பிணைப்பு சார்ந்தவை அல்ல.
- ❖ இந்த ஆணையமானது, இந்தக் குற்றத்திற்கான தண்டனையாக அதிகபட்ச ஆயுட்காலம் அல்லது ஏழு ஆண்டுகள் அல்லது அபராதம் ஆகியவற்றை அந்த வழக்கைப் பொறுத்து விதிப்பதற்குப் பரிந்துரைத்தது.
- ❖ தற்போது, இந்தக் குற்றத்திற்கான தண்டனையானது அதிகபட்சமாக ஆயுள் தண்டனை அல்லது மூன்று ஆண்டுகள் அல்லது அபராதமாக விதிக்கப் படுகிறது.

## புதிய ஈர நிலம் மற்றும் சதுப்புநில வளங்காப்புத் திட்டம்




- ❖ உலகச் சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, நாட்டின் ஈர நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக இரண்டு புதியத் திட்டங்கள் தொடங்கப் பட்டு உள்ளன.
- ❖ இந்தப் புதிய திட்டங்கள்: அம்ரித் தரோஹர் மற்றும் MISHTI (கரையோர வாழ்விடங்கள் மற்றும் நிலையான வருமானங்களுக்கான சதுப்பு நில முன்னெடுப்பு) ஆகியனவாகும்.
- ❖ அம்ரித் தரோஹர் யோஜனா, தற்போதுள்ள ராம்சார் தளங்களின் வளங்காப்பினைப் பொது மக்களின் பங்களிப்பு மூலம் உறுதி செய்யும்.

- MISHTI திட்டமானது, நாட்டில் உள்ள சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பினை புதுப்பிக்கச் செய்யவும் பாதுகாக்கவும் உதவும்.
- தெற்காசியாவின் சதுப்புநில எண்ணிக்கையில் இந்தியா 3 சதவீதத்தினைக் கொண்டு உள்ளது.

## 13 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல்லறை போன்ற கட்டமைப்பு




- இந்தியத் தொல்லியல் துறையினால், டெல்லியின் சிரி கோட்டைப் பகுதியில் கல்லறை போன்ற கட்டமைப்பு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- கில்ஜி வம்சத்தின் மிகவும் அதிகாரம் மிக்க ஆட்சியாளராகக் கருதப்பட்ட அலாவுதீன் கில்ஜி அவர்களால், 13 ஆம் நூற்றாண்டில் சிரி கோட்டை கட்டமைக்கப் பட்டது.
- இது அவரதுப் படைகள் தங்கியிருப்பதற்கான கோட்டையானது காவற்படை நகரமாகப் பயன்படுத்தப் பட்டது.

## குடிநீர் வழங்கீடு பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை

- இந்தியாவில் 'ஹர் கர் ஜல்' திட்டத்தின் பயன்களை உலக சுகாதார அமைப்பின் இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது.
- ஜல் ஜீவன் மிஷன் (JJM) இந்தியர்கள் அனைவருக்கும் குழாய் வழியில் குடிநீர் இணைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வயிற்றுப் போக்கினால் ஏற்படும் 4,00,000 உயிரிழப்புகளைத் தடுத்தல் என்ற ஒரு பெரும் இலக்கினைப் பூர்த்தி செய்வதில் இது வெற்றி பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- மேலும், இந்த நோய்களுடன் தொடர்பாக ஏற்படும் மோசமான உடல் நிலை, குறைபாடு மற்றும் முன்கூட்டிய இறப்பு ஆகியவற்றால் நிகழும் சுமார் 14 மில்லியன் ஆயுட் காலங்களின் (DALYs) இழப்பினை இது தடுக்கிறது.
- இந்தச் சாதனை மட்டும் 101 பில்லியன் டாலர் வரையில் மதிப்பிடப்பட்ட செலவினச் சேமிப்பை ஏற்படுத்தும்.
- 2019 ஆம் ஆண்டில் 3.2 கோடி அல்லது 16.6% ஆக இருந்த குழாய் நீர் இணைப்புகளைப் பெற்றுள்ள கிராமப்புறக் குடும்பங்கள் தற்போது சுமார் 12.3 கோடி அல்லது 62% ஆக உள்ளது.

- குஜராத், தெலுங்கானா, கோவா, ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகிய ஐந்து மாநிலங்கள் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள், டாமன் டையூ & தாத்ரா நகர் ஹவேலி மற்றும் புதுச்சேரி ஆகிய 3 ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றில் இந்தத் திட்டமானது முழுமையாக அமலாக்கப் பட்டுள்ளது.
- இது இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் 98.87% ஆகவும், பீகார் மாநிலத்தில் 96.30% ஆகவும் உள்ளது.




## மேம்படுத்தப் பட்ட மற்றும் அதிக தாக்கம் கொண்ட ஆராய்ச்சிக்கான தேசியத் திட்டம்

- மின்னாற்றல் துறை அமைச்சகம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து "ஒரு மேம்படுத்தப் பட்ட மற்றும் அதிகத் தாக்கம் கொண்ட ஆராய்ச்சிக்கான தேசியத் திட்டம் (MAHIR)" என்ற தலைப்பிலான ஒரு தேசியத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- மின்னாற்றல் துறையில் சமீபத்திய மற்றும் புதிதாக உருவாகி வரும் தொழில் நுட்பங்களின் மீதான உள்நாட்டு ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் செயல்விளக்கம் ஆகியவற்றினை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது புதிதாக உருவாகி வரும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டு அவற்றைச் செயலாக்க நிலைக்கு மேம்படுத்தும்.
- 2023-24 முதல் 2027-28 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு அமல்படுத்தப் படுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில், கருத்தாக்கம் முதல் தயாரிப்பு வரையிலான தொழில்நுட்பச் செயல்முறைச் சுழற்சி அணுகுமுறையானது பின்பற்றப் பட உள்ளது.





## கல்விப் பட்டங்களுக்குப் புதிய பெயர்கள்

- பல்கலைக்கழக மானியக் குழுவானது, உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கல்லூரிப் பட்டங்களுக்கான புதியப் பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கல்வித் துறையைப் பொருட்படுத்தாமல், அனைத்து நான்கு ஆண்டு கால இளங்கலைப் படிப்புகளுக்கும் இளங்கலை அறிவியல் (BS) பட்டங்களை வழங்குவதற்கு வேண்டி இது பரிந்துரைத்துள்ளது.
- பல்கலைக் கழகங்கள் முதுகலைப் பட்டப்படிப்புகளுக்கு என்று முதுகலை அறிவியல் (MS) என்ற பெயர் முறையினை பின்பற்றலாம் என்று அக்குழு பரிந்துரைத்துள்ளது.
- கலை, மானுடவியல், மேலாண்மை மற்றும் வணிகம் போன்ற அறிவியல் சாராத கல்விப் பிரிவுகளுக்கும் இது பொருந்தும்.
- நான்காண்டு கால இளங்கலை மேதகைமைப் படிப்புகளுக்கு 'மேதகைமைப் பட்டம்' என்ற அந்தஸ்தினை அறிமுகப்படுத்தவும் இதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- நான்காண்டு கால இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கு BA (Hons), BCom (Hons), அல்லது BS (Hons) போன்று அடைப்புக் குறிக்குள் 'மேதகைமைப் பட்டம்' குறிப்பிடப் படும்.
- இந்தியாவில் வழக்கமாக, இளங்கலை அறிவியல் (BSc) பட்டப்படிப்புகள் அறிவியல் பாடங்களுடன் தொடர்புடையவை ஆகும்.
- மேலும், இளங்கலை (BA) பட்டப்படிப்புகள் கலை, மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் ஆகியவற்றினை உள்ளடக்கியது ஆகும்.




## காரீஃப் பருவப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு



**MOONG GETS THE HIGHEST RISE**

**NEW MSP OF KHARIF CROPS IN 2023-24**


| Crop | New MSP* | % (Absolute*) | Hike over 2022-23 |
|---|---|---|---|
| Moong | 8,558 | 10.4 | ₹803 |
| Sesamum | 8,635 | 10.3 | ₹805 |
| Groundnut | 6,377 | 9 | ₹527 |
| Cotton | 6,620 | 8.9 | ₹540 |
| Ragi | 3,846 | 7.5 | ₹268 |
| Jowar | 3,180 | 7 | ₹210 |
| Paddy | 2,183 | 7 | ₹143 |
| Soybean | 4,600 | 7 | ₹300 |
| Maize | 2,090 | 6.5 | ₹128 |
| Bajra | 2,500 | 6.4 | ₹150 |
| Niger Seed | 7,734 | 6.1 | ₹447 |
| Tur | 7,000 | 6 | ₹400 |
| Sunflower Seed | 6,760 | 5.6 | ₹360 |
| Urad | 6,950 | 5.3 | ₹350 |

*₹Per quintal | Paddy (Common) | Jowar (Hybrid) | Cotton (Medium Staple)

- காரீஃப் அல்லது பருவமழை காலத்தில் விதைக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு 2,183 ரூபாயாக மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

- இது கடந்த ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதை விட குவிண்டாலுக்கு சுமார் 143 ரூபாய் என்ற அளவில் அதிகரிக்கப் பட்டுள்ளது.
- 17 காரீஃப் பருவ பயிர்கள் மற்றும் வகைகளுக்கான 2023-24 ஆம் ஆண்டிற்கான குறைந்த பட்ச ஆதரவு விலை உயர்வு தொடர்பான ஒரு முடிவானது மத்தியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCEA) கூட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டது.
- பாசிப் பயறுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஒரு குவிண்டாலுக்கு 8,558 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ள நிலையில் இது கடந்த ஆண்டை விட 803 ரூபாய் அதிகரிக்கப் பட்டுள்ளது.
- காரீஃப் பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வில், இப்பயிருக்கான உயர்வு மிக அதிகமாகும்.
- துவரை அல்லது அர்ஹர் பருப்பிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையானது ஒரு குவிண்டாலுக்கு 7,000 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இது உற்பத்திச் செலவை விட 58% அதிகமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

## நிலக்கரி மற்றும் லிக்னைட் ஆய்வுத் திட்டம்




- மத்திய அரசின் ஒரு திட்டமான 'நிலக்கரி மற்றும் லிக்னைட் ஆய்வுத் திட்டத்தினை' தொடர்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையில் இந்தத் திட்டத்தினை மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், நிலக்கரி மற்றும் லிக்னைட் ஆகியவற்றிற்கான ஆய்வுப் பணிகள் இரண்டு மாபெரும் நிலைகளில் மேற்கொள்ளப் படுகின்றன. அவை:

- மேம்பாட்டு (பிராந்தியம்) ஆய்வு மற்றும்
- நிலக்கரி இந்தியா நிறுவனம் சாராத தொகுதிகளில் மேற்கொள்ளப்படும் விரிவான ஆய்வு.

## மாற்றியமைக்கப்பட்ட குறைகடத்திகள் இந்தியா திட்டம்

- ❖ மாற்றியமைக்கப்பட்ட குறைகடத்திகள் இந்தியா என்ற திட்டத்தின் கீழ் இந்தியாவில் குறைகடத்திகள் உற்பத்தி அலகுகள் மற்றும் விற்பனை அலகுகளை அமைப்பதற்கான புதிய விண்ணப்பங்களை வரவேற்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ இந்த மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ், இந்தியாவில் குறைகடத்திகளின் உற்பத்தி அலகுகளை அமைப்பதற்கான திட்டச் செலவில் 50% நிதியானது ஊக்கத் தொகையாக நிறுவனங்கள் /கூட்டமைப்பு / துணிகர முதலீட்டு நிறுவனங்களுக்குக் கிடைக்கப் பெறும்.
- ❖ இதே போல், இந்தியாவில் குறிப்பிட்டத் தொழில்நுட்பங்களின் விற்பனை அலகுகளை அமைப்பதற்கான திட்டச் செலவில் 50% நிதியானது ஊக்கத்தொகையாக கிடைக்கப் பெறும்.
- ❖ இந்தியா குறைகடத்திகள் திட்ட அமைப்பானது, இந்தத் திட்டத்திற்கான ஒரு தலைமை முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.

Semicon India

## விமானந் தாங்கிப் போர்க் கப்பல் குழும நடவடிக்கை

- ❖ இந்தியக் கடற்படையானது, 35க்கும் மேற்பட்ட விமானங்களை உள்ளடக்கிய மாபெரும் விமானந் தாங்கிப் போர்க் கப்பல் குழும (CBG) நடவடிக்கையினை அரபிக்கடலில் மேற் கொண்டது.
- ❖ சமீபத்திய ஆண்டுகளில், இந்தியப் பெருங்கடலில் அதிகரித்து வரும் சீனக் கப்பல்களின் நடமாட்டத்திற்கு மத்தியில் அதன் செயல்பாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப் பட்ட மிகப்பெரிய செயல் விளக்கங்களில் இதுவும் ஒன்றாகும்.
- ❖ விமானந் தாங்கிப் போர்க் கப்பல் குழுமம் என்பது ஒரு விமானம் தாங்கிக் கப்பல் மற்றும் அதன் துணைக் கப்பல்களைக் கொண்ட ஒரு கடற்படைப் பிரிவாகும்.
- ❖ ஐஎன்எஸ் விக்ரமாதித்யா மற்றும் ஐஎன்எஸ் விக்ராந்த் ஆகியவை பல்வேறு துணைக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் விமானங்களோடுச் சேர்ந்து இந்தப் பெரும் நடவடிக்கையில் பங்கேற்றன.



## நீரிழிவு நோய் பற்றிய இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் ஆய்வறிக்கை

**'36% HAVE HYPERTENSION'**

- While 11.4% of India's population is diabetic, 15.3% have prediabetes
- Ratio of diabetic to prediabetic people is 1:1 in Delhi, 1:1.2 in Maha, 1:1.5 in Haryana and 1:3.8 in UP
- 35.5% of people have hypertension and 81.2% dyslipidemia (abnormal levels of cholesterol)
- While 28.6% Indians have generalised obesity, 39.5% have abdominal obesity

*Source: Metabolic non-communicable disease health report of India/ICMR-INDIAB

**10 WORST AFFECTED**

| % Of Popn With | Diabetes | Prediabetes |
|---|---|---|
| Goa | 26.4 | 20.3 |
| Puducherry | 26.3 | 25.8 |
| Kerala | 25.5 | 18.3 |
| Chandigarh | 20.4 | 15.6 |
| Delhi | 17.8 | 18 |
| Tamil Nadu | 14.4 | 10.2 |
| W Bengal | 13.7 | 23.5 |
| Sikkim | 12.8 | 31.3 |
| Punjab | 12.7 | 8.7 |
| Haryana | 12.4 | 18.2 |


- ❖ இந்தியாவில் தற்போது 101 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ 2019 ஆம் ஆண்டில் 70 மில்லியனாக இருந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப் பட்ட நபர்களின் எண்ணிக்கையானது, நான்கு ஆண்டுகளில் 44 சதவீதம் அதிகரித்து உள்ளது.
- ❖ குறைந்த பட்சம் 136 மில்லியன் மக்கள் அல்லது 15.3% மக்கள் முன் நீரிழிவு நோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ கோவா (26.4%), புதுச்சேரி (26.3%) மற்றும் கேரளா (25.5%) ஆகிய மாநிலங்களில் நீரிழிவு நோயின் பாதிப்பு அதிகமாக காணப்பட்டது.
- ❖ இதில் இந்தியாவின் தேசியச் சராசரி 11.4% ஆகும்.
- ❖ "கோவா, கேரளா, தமிழ்நாடு மற்றும் சண்டிகர் ஆகிய மாநிலங்களில் உள்ள நீரிழிவு நோய்ப் பாதிப்புகளுடன் ஒப்பிடச் செய்கையில் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையின் பாதிப்புகள் குறைவாகவே உள்ளன.
- ❖ உத்தரப் பிரதேச மாநிலத்தில் நீரிழிவு நோய்ப் பாதிப்பு 4.8% ஆக உள்ள நிலையில் இது இந்தியாவிலேயே மிகக் குறைவாகும்.

- ஆனால் தேசியச் சராசரியான 15.3% உடன் ஒப்பிடுகையில் அந்த மாநிலத்தில் உள்ள நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையின் பாதிப்புகள் 18% ஆக உள்ளது.
- நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலை என்பது இரத்தத்தில் சர்க்கரை அளவு சரியான அளவை விட அதிகமாக இருந்தாலும், இரண்டாம் வகை நீரிழிவு நோயாகக் கருதப்படும் அளவிற்கு அதிகமாக இல்லாத ஒரு நிலையாகும்.

## விக்யான் விதுஷி – 2023

- இது இயற்பியல் துறையின் மீதான முனைவர் பட்டப்படிப்பு என்ற அளவில் பாலினச் சமநிலையை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மும்பையில் உள்ள ஹோமி பாபா அறிவியல் கல்வி மையத்தில் (HBCSE) தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தியா முழுவதிலும் உள்ள நாற்பது வெவ்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த, இயற்பியலில் முதுகலை அறிவியல் கல்வியில் முதலாம் ஆண்டு முடித்த 40 மாணவிகள் இந்த 3 வார அளவிலான நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

## E27 எரிபொருள்




- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப் லிமிடெட் (HPCL) நிறுவனமானது E27 எரிபொருள் மற்றும் எத்தனால் கலந்த டீசல் எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்கள் மீதான ஒரு சோதனை ஆய்வினைத் தொடங்கியுள்ளது.
- இது போன்ற விரிவான ஒரு ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளும் இந்தியாவின் முதல் எண்ணெய்ச் சந்தைப்படுத்துதல் நிறுவனம் இதுவாகும்.
- மத்திய அரசின் குழுவானது 10 முதல் 27 சதவீதம் வரையிலான எத்தனால்-பெட்ரோல் ஆகியவற்றின் வெவ்வேறு கலவைகளின் விளைவுகள் மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்கிறது.

## அதிகம் மேம்பாடு அடைந்த தொகுதி




- ஜம்மு & காஷ்மீரில் உள்ள உதம்பூர்-தோடா-கதுவா நாடாளுமன்றத் தொகுதியானது, இந்தியாவின் 550 நாடாளுமன்றத் தொகுதிகளிலேயே அதிகம் மேம்பாடு அடைந்த ஒரு தொகுதியாகும்.
- அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எய்ம்ஸ்) உட்பட மூன்று மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட இந்தியாவின் ஒரே தொகுதி இதுவாகும்.
- இந்தத் தொகுதியானது 'ஊதாப் புரட்சி'யின் பிறப்பிடமாக விளங்கியதன் மூலம் இந்தப் புகழைப் பெற்றுள்ளது.
- உலகின் மிக உயரமான இரயில்வேப் பாலமான - செனாப் பாலம் - மற்றும் உலகின் மிக நீளமானச் சுரங்கப் பாதையான - டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி சுரங்கப் பாதை ஆகியவையும் இங்கு அமைந்துள்ளன.

## Fame -II மானியம் குறைப்பு



- இந்தியாவில் மின்சார ஸ்கூட்டர்களுக்கான FAME மானியத்தை அரசாங்கம் குறைத்து உள்ள நிலையில் இந்தக் குறைப்பு ஜூன் 01 முதல் நடைமுறைக்கு வந்தது.
- அரசாங்கம் மானியங்களை வாகனச் செலவில் 40 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்துள்ளது.
- FAME திட்டமானது, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று மூன்று வருட காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் வகையில் தொடங்கப்பட்டது.
- இது மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டது.

## அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் ஊடக சம்மான் விருதுகள்

- தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகமானது, இரண்டாவது அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் ஊடக சம்மான் விருதுகளை அறிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் ஊடக சம்மான் விருதுகளின் கீழ், 22 இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் 33 சம்மான்கள் பின்வரும் வகையின் கீழ் வழங்கப் பட உள்ளன.
    - செய்தித் தாள்களில் யோகா பற்றிய சிறந்த ஊடகத் தகவல் பரவல் - 11
    - மின்னணு ஊடகத்தில் (தொலைக்காட்சி) யோகா பற்றிய சிறந்த ஊடகத் தகவல் பரவல் - 11 மற்றும்
    - மின்னணு ஊடகத்தில் (ரேடியோ) யோகா பற்றிய சிறந்த ஊடகத் தகவல் பரவல் - 11.


## அஞ்சதீப் & சன்சோதக் போர்க் கப்பல்கள்

- வெவ்வேறு வகுப்புகளின் இரண்டு போர்க் கப்பல்கள் அறிமுகப் படுத்தபட்டன.
- அஞ்சதீப் என்பது ஆழமற்ற நீர்ப்பரப்பில் இயங்கும் வகையிலான 3வது நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல் (ASWSWC) ஆகும்.
- சன்சோதக் 4வது மாபெரும் ஆய்வுக் கப்பல் (SVL) ஆகும்.
- கர்நாடாகாவில் கார்வாரில் உள்ள இந்தியக் கடற்படைத் தளமான ஐஎன்எஸ் கடம்பாவின் ஒரு பகுதியாக விளங்கும், இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு அருகில் உள்ள ஒரு தீவின் பெயரால் இதற்கு அஞ்சதீப் என்று பெயரிடப்பட்டது.
- 1961 ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர்களிடம் இருந்து கோவா பகுதியினை இந்தியா திரும்பப் பெற்ற போது அஞ்சதீப் பகுதி தனது வலுவான எதிர்ப்பினைத் தெரிவித்தது.

## பழங்குடியினருக்கான புதிய மனித வள மேம்பாட்டுக் குறியீடு

- இந்தியா முழுவதும் உள்ள 75 எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுவினரின் (PVTGs) சமூகங்களுக்காக ஒரு மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டினை (HDI) மத்திய அரசு உருவாக்க உள்ளது.
- நாடு முழுவதும் உள்ள 22,000க்கும் மேற்பட்டக் கிராமங்களில் சுமார் 28 லட்சம் எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுவினர் வாழ்கின்றனர்.

❖ இது 2023-24 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்கான 15,000 கோடி ரூபாய் மதிப்பிலான PVTG திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.




## நடுவண் தீர்ப்பாயச் சட்டத்தின் சீர்திருத்தம்



- 1996 ஆம் ஆண்டு நடுவண் மற்றும் சமரசச் சட்டத்தில், சீர்திருத்தங்களை மேற் கொள்வது குறித்த பரிந்துரைகளை வழங்கச் செய்வதற்காக முன்னாள் சட்டச் செயலாளர் T.K. விஸ்வநாதன் என்பவர் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை மத்திய அரசு அமைத்தது.
- முன்னதாக 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி BN ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.
- ஒரு வழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடுவர் மன்றத் தீர்ப்புகளோடு சேர்த்து, நடுவண் தீர்ப்பாயச் செயல்முறை, நடுவர் மன்றம், நடுவர் மன்றத்தின் நடைமுறை ஆகியவற்றில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை இந்தச் சட்டம் வழங்குகிறது.
- நடுவர் மன்றத் தீர்ப்பின் முடிவிற்கு வழக்கின் தரப்பினர் கட்டுப்பட வேண்டும் என்ற வகையில் இது இசைவு ஒப்பந்த வடிவில் வழங்கப்படுகிறது.
- இதில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் நீதிமன்றங்களுக்கு ஒரு மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறையையும் இச்சட்டம் பரிந்துரைக்கிறது.

## தேசியச் செயல்பாட்டுத் திட்டக் குறியீடு – 2023

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் "2023 ஆம் ஆண்டு தேசியச் செயல்பாட்டுத் திட்டக் குறியீட்டினை" வெளியிட்டுள்ளது.
- இது காடுகளின் அறிவியல் சார்ந்த மேலாண்மை மற்றும் புதிய அணுகுமுறைகளை உருவாக்குதல் ஆகியவற்றிற்கானதாகும்.
- இது காடுகளின் நிலையான மேலாண்மை மீதான கொள்கைகளை உள்ளடக்கிய வன மேலாண்மைத் திட்டமிடலின் அத்தியாவசியங்களை விரிவாகக் குறிப்பிடுகிறது.

## காற்றாலை ஆற்றல் ஏற்பில் முன்னணியில் விளங்கும் மாநிலங்கள்

- ராஜஸ்தான், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை 2022-23 ஆம் நிதியாண்டில் தங்கள் சாதனைகளுக்காகப் பாராட்டுகளைப் பெற்றுள்ளன.
- அதிக காற்றாலை திறன் சேர்ப்பு அளவினை எட்டியதற்காக ராஜஸ்தானுக்குப் பாராட்டு வழங்கப் பட்டது.
- தடையற்ற அணுகல் மூலம் அதிக காற்றாலை திறன் சேர்ப்பினைக் குஜராத் அடைந்து உள்ளது.
- தமிழ்நாடு காற்றாலை விசையாழிகளை மீண்டும் இயக்கத் தொடங்கியுள்ளது.
- தேசியக் காற்று ஆற்றல் நிறுவனத்தினால் (NIWE) காற்றாற்றல் தொடர்பான ஒரு வரைபடமானது தயாரிக்கப்பட்டுள்ளது.
- இது தரை மட்டத்திலிருந்து சுமார் 150 மீட்டர் உயரத்தில் நாட்டின் கடலோரக் காற்றின் ஆற்றலினை 1,164 ஜிகாவாட் ஆக மதிப்பிட்டுள்ளது.

## 4வது தேசிய நீர் விருதுகள்

- ஜல் சக்தி அமைச்சகமானது 2022 ஆம் ஆண்டு தேசிய நீர் விருதுகளுக்கான இணை வெற்றியாளர்கள் உட்பட 11 பிரிவுகளை உள்ளடக்கிய மொத்தம் 41 வெற்றியாளர்களை அறிவித்தது.

- தண்ணீரைப் பாதுகாப்பதற்காக பல்வேறு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் மேற் கொள்ளப்படும் நல்லப் பணிகளையும் முயற்சிகளையும் ஊக்குவிக்க இந்த விருதுகள் வழங்கப் படுகின்றன.
- சிறந்த மாநிலப் பிரிவில் மத்தியப் பிரதேசம் முதல் பரிசினைப் பெற்றது.
- ஒடிசா இரண்டாவது இடத்தையும், பீகார் மற்றும் ஆந்திரா மூன்றாவது இடத்தினையும் பகிர்ந்து கொண்டன.
- சிறந்த மாவட்டப் பிரிவில் ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்திற்கு விருது வழங்கப் பட்டு உள்ளது.
- சிறந்த மாவட்டப் பிரிவில் தமிழ்நாடு மாநிலத்தின் நாமக்கல் மாவட்டம் 2வது பரிசு பெற்றது.
- சிறந்த கிராமப் பஞ்சாயத்து விருதானது, தெலுங்கானா மாநிலத்தின் பத்ராத்ரி கோத்தகுடெம் மாவட்டத்தில் உள்ள ஜகன்னாதபுரம் கிராமப் பஞ்சாயத்துக்கு வழங்கப் பட்டது.
- இந்தப் பிரிவில், தமிழ்நாடு மாநிலத்தின் கரூர் மாவட்டத்தில் உள்ள கடவூர் கிராமப் பஞ்சாயத்து 2வது பரிசினைப் பகிர்ந்து கொண்டது.
- கௌஹாத்தியின் ஆகாஷ்வானி ஊடகப் பிரிவில் இரண்டாவது சிறந்த விருதினைப் பெற்றது.
- சிறந்த தொழில்துறைப் பிரிவில் தமிழ்நாடு மாநிலத்தின் காஞ்சிபுரத்தில் அமைந்த அப்பல்லோ டயர்ஸ் லிமிடெட் நிறுவனமானது 3வது பரிசினைப் பகிர்ந்து கொண்டது.




## திறந்த நிலைச் சந்தை விற்பனை ரத்து

- திறந்த நிலைச் சந்தை விற்பனைத் திட்டத்தின் (OMSS) கீழ் மத்தியத் தொகுப்பில் இருந்து மாநில அரசுகளுக்கு அரிசி மற்றும் கோதுமை விற்பனை செய்வதை மத்திய அரசு சமீபத்தில் நிறுத்தியது.
- இருப்பினும், வடகிழக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் அரிசி விற்பனை தொடரும் என அறிவிக்கப்பட்டது.
- இனி, இந்திய உணவுக் கழகத்திடம் OMSS (D) திட்டத்தின் கீழ் ஒரு ஏலத்தில் வாங்குபவர் பெறக் கூடிய அளவு 10-100 மெட்ரிக் டன் (MT) வரை ஆகும்.
- முன்னதாக, ஒரு வாங்கும் நபருக்கான ஒரு ஏலத்திற்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவு 3,000 மெட்ரிக் டன் ஆகும்.

## இந்திய மொழிகள் திட்டம்

- கூகுள் நிறுவனமானது, இந்தியாவில் உள்ளூர் செய்தி வெளியீட்டு நிறுவனங்களை ஆதரிப்பதற்காக வேண்டி தனது செய்தி முன்னெடுப்பின் கீழ் 'இந்திய மொழிகள் திட்டத்தினை' அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது பல்வேறு கூறுகளின் மூலம் செய்தி வெளியீட்டு நிறுவனங்களை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான முன்னெடுப்பாகும்.
- அவர்களின் எண்ணிமச் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள் அதிகமான வாசகர்களைச் சென்றடைவதற்கும் உதவும் வகையில் பயிற்சி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிதியுதவிக்கான அணுகல் ஆகியவை இதில் அடங்கும்.
- இது ஆங்கிலம், இந்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு, வங்காளம், மலையாளம், குஜராத்தி மற்றும் மராத்தி உட்பட மொத்தம் ஒன்பது மொழிகளிலான செய்தி வெளியீட்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கிறது.


## 2023 ஆம் ஆண்டில் கல்விக் கடன் அதிகரிப்பு




- கடந்த ஐந்தாண்டுகளில் முதல் முறையாக, 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிறைவு அடைந்த கடந்த நிதியாண்டில் கல்விக் கடன்களின் எண்ணிக்கையானது 17 சதவிகிதம் அதிகரித்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் கல்விக் கடன்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது மிகவும் சீராக இருந்ததாலும் அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் எதிர்மறையாக இருந்ததாலும் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.
- கல்விக் கடன்கள் முறையே 2021, 2020 மற்றும் 2019 ஆம் நிதியாண்டில் 3 சதவீதம், 3.3 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் குறைந்துள்ளன.

## ஓமைக்ரானுக்கு எதிரான சிகிச்சைக்காக உருவாக்கப்பட்ட mRNA தடுப்பு மருந்து

- புனேவில் அமைந்துள்ள ஜென்னோவா பயோஃபார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் என்ற பெரு நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஓமைக்ரான் திரிபிற்காக என்று உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் mRNA தடுப்பு மருந்து, GEMCOVAC-OM ஆகும்.
- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பினால் அவசரகாலப் பயன்பாட்டு வழிகாட்டுதல்களின் கீழ் இது அங்கீகரிக்கப்பட்டது.
- கோவிட்-19 தொற்றிற்கு எதிராக இந்தியாவில் உருவாக்கப்பட்ட நாட்டின் முதல் m-RNA தடுப்பு மருந்தான GEMCOVAC-19 என்ற தடுப்பு மருந்திற்கு அந்த நிறுவனம் ஒப்புதல் பெற்று ஒரு வருடத்திற்குப் பிறகு இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.





## தேசிய வெளியீட்டு நேர ஆய்வு 2023 அறிக்கை

- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஆனது 2023 ஆம் ஆண்டு தேசிய வெளியீட்டு நேர ஆய்வு (NTRS) அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, நடப்பு ஆண்டிற்கான துறைமுக வகை வாரியான சராசரி வெளியீட்டு நேரம் (சரக்கு உள்நுழைவு மற்றும் வெளியேற்றத்திற்கு ஆகும் நேரம்) பற்றியத் தகவல்களை வழங்குகிறது.
- இதன்படி சராசரி இறக்குமதி வெளியீட்டு நேரம் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது:
  - உள்நாட்டுக் கொள்கலன் கிடங்குகளுக்கான வெளியீட்டு நேரத்தில் 20 சதவீதம் குறைப்பு,
  - விமானச் சரக்கு வளாகங்களுக்கு 11 சதவீதம் குறைப்பு, மற்றும்
  - 2022 ஆம் ஆண்டினை விட 2023 ஆம் ஆண்டில் துறைமுகங்களுக்கான நேரம் 9 சதவீதம் குறைப்பு.

## நீதிமன்ற நடவடிக்கைகள் கடிகாரங்கள்

- நீதிமன்ற நடவடிக்கைகள் கடிகாரங்கள் எனப்படும் மின்னணு அடையாள அமைப்புகள் உயர் நீதிமன்றங்களின் வளாகங்கள் முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.
- இந்த முன்னெடுப்பானது நீதிமன்றம் தொடர்பான முக்கிய அளவுருக்கள் குறித்து பங்கு தாரர்களுக்குத் தெரிவிக்கவும், நீதிமன்றம் தொடர்பான தரவுகளின் முழு அளவிலான ஒரு கண்ணோட்டத்தினை வழங்குவதன் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- நீதிமன்றம் தொடர்பான முக்கிய அளவுருக்கள் பற்றி பங்குதாரர்களுக்கு இது தெரியப் படுத்தும்.




## இந்தியாவில் நகர்ப்புறப் பிரிவினையின் நிலைகள்

- இந்திய நகரங்களில் வசிப்பவர்கள் மத்தியிலான முஸ்லீம் மற்றும் பட்டியலிடப்பட்டச் சாதியினர் இடையிலான பிரிவினையின் நிலைமையானது, கறுப்பு மற்றும் வெள்ளை அமெரிக்கர்களுக்கு இடையே உள்ள பிரிவினையின் தற்போதைய நிலையினை ஒத்து உள்ளது.
- சர்வதேசக் கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார வல்லுனர்களின் குழு, 'குடியிருப்புப் பிரிப்பு மற்றும் இந்தியாவில் உள்ள உள்ளூர் பொதுச் சேவைகளுக்கான ஒரு சமமற்ற அணுகல்: 1.5 மீ சுற்றுப்புறங்களில் இருந்து பெறப்பட்ட சான்றுகள்' என்ற தலைப்பிலான ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது.
- இது 2012 ஆம் ஆண்டு சமூகப் பொருளாதார மற்றும் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் பொருளாதார மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் தரவுகளைப் பயன்படுத்தியது.
- முஸ்லீம் மக்கள்தொகையில் 26% பேர் 80%க்கும் அதிகமான முஸ்லீம் மக்கள்தொகை கொண்ட சுற்றுப்புறங்களில் வாழ்கின்றனர்.
- 17% பட்டியலிடப்பட்டச் சாதியினர், 80% பட்டியலிடப்பட்ட சாதியினர் மக்கள்தொகைக்கு மேல் உள்ள சுற்றுப்புறங்களில் வாழ்கின்றனர்.

## மக்கும் வேளாண் சார்ந்த உப தயாரிப்புப் பாத்திரங்களுக்கான BIS தரநிலைகள்





- ❖ இந்தியத் தர நிர்ணய ஆணையமானது (BIS) வேளாண் உப தயாரிப்புப் பாத்திரங்களுக்கான தரநிலைகளை வெளியிட்டுள்ளது.
- ❖ இது நெகிழி மாசுபாட்டினைக் குறைப்பது மற்றும் நிலைப்புத் தன்மையை நன்கு மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்தத் தரநிலை IS 18267: 2023 "வேளாண் உப தயாரிப்புப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவு பரிமாறும் பாத்திரங்கள் – விவரக் குறிப்பு" என்பதாகும்.
- ❖ நாடு முழுவதும் நிலவும் தரமான தேவைகளுக்கான சீரான தன்மையை உறுதி செய்வதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கான பல்வேறு விரிவான வழி காட்டுதல்களை இது வழங்குகிறது.

## ஒரு நாடு ஒரு உதவி எண்

- ❖ மத்திய அரசானது, ERSS-112 (அவசர நடவடிக்கை உதவி வழங்கீட்டு அமைப்பு) உடன் மகளிர் உதவி எண், குழந்தைகளுக்கான உதவி எண் ஆகியவற்றினை ஒருங்கிணைக்க முடிவு செய்துள்ளது.
- ❖ 2015 ஆம் ஆண்டு சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் 2(25)வது பிரிவின் கீழ் குழந்தைகளுக்கான உதவி எண் சேவைகள் வரையறுக்கப் பட்டு உள்ளன.
- ❖ இது நெருக்கடி நிலையில் உள்ள குழந்தைகளை அவசர கால அல்லது நீண்ட காலப் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவையுடன் இணைக்கின்ற 24 மணி நேர அவசர காலச் சேவையாகும்.
- ❖ நெருக்கடியில் உள்ள எந்தவொரு குழந்தையும் அல்லது அவர்கள் சார்பாக எந்தவொரு வயது வந்த நபரும் நான்கு இலக்க இலவச எண்ணை (1098) அழைப்பதன் மூலம் இந்தச் சேவையை அணுகலாம்.

- கேரளாவில் உள்ள மேம்படுத்தப்பட்ட கணினி முறைக்கான மையம் (C-DAC) ஆனது, 1098 என்ற குழந்தைகளுக்கான ஒரு உதவி எண்ணின் தன்னியக்கம் மற்றும் ERSS-112 உடன் அதனை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்கான ஒரு மொத்தத் தொழில்நுட்பத் தீர்வு வழங்குனராக (TSP) உள்ளது.




### மேக விதைப்புத் தொழில்நுட்பத்திற்கானச் சோதனை



- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகமானது (IITK) மேக விதைப்புத் தொழில் நுட்பத்திற்கான ஒரு சோதனை ஓட்டத்தினை மேற்கொண்டது.
- வறண்ட நிலை மற்றும் காற்று மாசுபாட்டை எதிர்த்துப் போராட உதவும் மழைக்கான உகந்தச் சூழ்நிலையை உருவாக்க உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேக விதைப்புத் தொழில்நுட்பம் என்பது சில்வர் அயோடைடு, உலர் பனிக்கட்டி, சாதாரண உப்பு மற்றும் பிற தனிமங்கள் போன்ற பல்வேறு இரசாயன காரணிகளைப் பயன்படுத்தி மழைப் பொழிவிற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேற் கொள்ளப் படுகிறது.

## VAIBHAV புத்தாய்வு மாணவர் திட்டம்




- அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் மற்றும் மருத்துவத் துறைகளைச் சேர்ந்த இந்தியப் புலம்பெயர்ந்தோரை இந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனங்களுடன் இணைப்பதற்கான ஒரு புதிய கூட்டுறவுத் திட்டத்தினை அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- VAIBHAV என்பது வைஷ்விக் பாரதிய வைகியானிக் என்பதைக் குறிக்கிறது.
- இந்தப் புத்தாய்வு மாணவர் திட்டமானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் செயல்படுத்தப்பட உள்ளது.
- அந்தந்த நாடுகளில் பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த (NRI/OCI/PIO) பல்வேறு சிறந்த அறிவியலாளர்கள்/தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கு இது வழங்கப்படும்.
- 75 புத்தாய்வு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்ட 18 அறிவு சார் துறைகளில் பணியாற்ற அழைக்கப்படுவார்கள்.
- இதில் குவாண்டம் தொழில்நுட்பம், சுகாதாரம், மருந்து, மின்னணுவியல், வேளாண்மை, எரிசக்தி, கணினி அறிவியல் மற்றும் பொருள் சார் அறிவியல் உள்ளிட்டவை அடங்கும்.

## கனிமப் பாதுகாப்புக் கூட்டாண்மை

- கனிமப் பாதுகாப்புக் கூட்டாண்மையில் (MSP) இந்தியா இணைக்கப்பட்டுள்ளது.
- கனிமப் பாதுகாப்புக் கூட்டாண்மை (MSP) என்பது முக்கியமான கனிம விநியோகச் சங்கிலிகளை மேம்படுத்தச் செய்வதற்காக அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு உலகளாவிய முன்னெடுப்பாகும்.
- இது 14 நாடுகளின் முக்கிய கனிமக் கூட்டாண்மை என்றும் அழைக்கப் படுகிறது.

- இது கோபால்ட், நிக்கல், லித்தியம் மற்றும் 17 "அரிய மண்" தாதுக்கள் போன்ற கனிமங்களின் விநியோகச் சங்கிலிகளில் கவனம் செலுத்துகிறது.


## ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் இரயில்





- ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் இரயிலின் முன் மாதிரி என்பது 2023-2024 ஆம் நிதியாண்டில் வடக்கு இரயில்வே நிர்வாகத்தின் ஜிந்த்-சோனிபட் பகுதிகளுக்கு இடையே தொடங்கப் படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையானது, அரியானா மாநிலம் ஜிந்த் மாவட்டத்தில் உள்ள இரயில் சந்திப்புக்கு அருகில் அமைக்கப்பட்டு வருகிறது.
- தற்போது ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில்கள் அனைத்தும் ஜெர்மனியில் மட்டும் இயக்கப் படுகின்றன.
- ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில்கள் டீசல் என்ஜின்களுக்குப் பதிலாக ஹைட்ரஜன் எரிபொருள் கலன்களைப் பயன்படுத்துகின்றன.
- இந்த மின்கலங்கள் ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவற்றினை ஒன்றிணைத்து அதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து இரயில் என்ஜினின் இயக்கிகளை இயக்க பயன்படுத்துகிறது.
- இந்தச் செயல்முறையில் தண்ணீர் என்பது ஒரு வினை விளைப் பொருளாக கிடைக்கப் பெறுவதோடு இதில் சிறிதளவு வெப்பமும் வெளியிடப் படுகிறது.

## தேசிய எரிசக்தித் தரவு: கணக்கெடுப்பு மற்றும் பகுப்பாய்வு 2021-22

- மத்திய மின்துறை அமைச்சகமானது தேசிய எரிசக்தித் தரவு : கணக்கெடுப்பு மற்றும் பகுப்பாய்வு 2021-22 என்ற தலைப்பிலான ஒரு விரிவான எரிசக்தித் துறை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- எரிசக்தி திறன் ஆணையத்தின் (BEE) இந்த அறிக்கையானது நிதி ஆயோக் அமைப்புடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவானது 249 பில்லியன் யூனிட் (BUs) மின்சாரத்தைச் சேமித்து, 2021-22 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 1.60 லட்சம் கோடி ரூபாயினை மிச்சப் படுத்தியுள்ளது.
- பல்வேறு எரிசக்தி வளங்காப்பு கொள்கைகளின் தாக்கத்தினால் 1,60,721 கோடி ரூபாய் மதிப்புள்ள மொத்த ஆற்றல் சேமிப்பு இந்தியாவில் பதிவாகியுள்ளது.
- 249 பில்லியன் அலகு மின்சாரம் இதன் மூலம் சேமிக்கப் பட்டுள்ளது.




## 'பல்வேறு வகை உணவு உட்கொள்ளுதல்' குறித்த பிரச்சாரம்




- திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின்-மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனமானது அதன் கிழங்குப் பயிர் வகைகள் அடிப்படையில் அமைந்த 'பல்வேறு வகை உணவு உட்கொள்ளுதல்' என்ற பிரச்சாரத்தை விரிவுபடுத்த தயாராகி வருகிறது.
- மத்திய கிழங்குப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனமானது, நடப்பு நிதியாண்டில் ஒடிசாவில் இந்தப் பிரச்சாரத்தினைத் தொடங்க உள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டின் இறுதியில், அந்த மாநிலத்தில் உள்ள ஒன்பது மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- பழங்குடியினச் சமூகங்களில் பெருமளவில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஈடு செய்வதற்கும், சமச்சீர் உணவு வழங்கீட்டினை உறுதி செய்வதற்காகவும், அவர்கள் மத்தியில் உயிரிச் செறிவூட்டப்பட்ட கிழங்குகள் மற்றும் அவற்றிலிருந்து தயாரிக்கப் பட்ட மதிப்புக் கூட்டப்பட்டப் பொருட்களை நன்கு பிரபலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ஒரு குறிப்பிடத்தக்க பல்வேறு வகை உணவு உட்கொள்ளுதல் ('ரெயின்போ டயட்') என்பது வெவ்வேறு வண்ணங்களில் காணப்படும் தூய்மையானப் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய வகையிலான உணவினை உட்கொள்ளும் முறையாகும்.

## 'தக்ஷிதா' கல்வி

- மத்திய அரசானது, iGOT கர்மயோகி தளத்தில் "தக்ஷிதா" என்ற பாடத் திட்டங்களின் புதிய தொகுப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- தக்ஷிதா என்பது 'நிர்வாகத்தில் முழுமையான மாற்றத்திற்கான அணுகுமுறை, அறிவு, திறன் ஆகியவற்றின் மேம்பாடு' என்பதைக் குறிக்கிறது.
- iGOT (ஒருங்கிணைந்த அரசு இயங்கலைப் பயிற்சி) கர்மயோகி தளம் என்பது அரசு அதிகாரிகளின் திறனை மேம்படுத்தும் பயணத்தில் அவர்களுக்கு வழிகாட்டும் ஒரு விரிவான இணைய தளமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## உலகச் செல்வ வள மாநாடு

- நிறுவனம் சார்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் உலக நாடுகளின் மூலதனத்திற்கான ஒரு ஆதாரமாக விளங்கும் இறையாண்மை மிக்கச் செல்வ வள நிதி நிறுவனத்தின் (SWFI) உலகச் செல்வ வள மாநாடு (GWC) ஆனது இலண்டனில் நடைபெற உள்ளது.
- உலகச் செல்வ வள மாநாடு என்ற ஒரு தளமானது இந்தியாவினைச் சேர்ந்த சில நிறுவனங்களை உள்ளடக்கிய வகையில் உலகின் மிகப்பெரிய மூலதன ஆதாரங்களில் சிலவற்றை ஈர்த்துள்ளது.
- உலகளவில் இறையாண்மைச் செல்வ நிதிகளில் நேரடி முதலீடுகளுக்குத் தகுந்த ஒரு இடமாக இந்திய நாடு கருதப் படுகின்றது.
- 2021 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட வெறும் 4.3 பில்லியன் டாலர்களுடன் ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டில் 6.714 பில்லியன் டாலர்கள் இந்தியாவில் இறையாண்மை செல்வ நிதிகளில் நேரடியாக முதலீடு செய்யப் பட்டுள்ளன.




## மீள்நிரப்பல் செயல்முறை

- மீள்வு செயல்முறையின் நோக்கமானது, ஒரு நிறுவனத்திற்கு மிகவும் நெகிழ்திறன்மிக்க நிதி சார் விருப்பத் தெரிவுகளை வழங்குவதாகும்.
- மீள்வுச் செயல்முறையானது, இந்தச் சவாலை நன்கு எதிர்கொள்ளச் செய்வதையும் உலக சுகாதார அமைப்பிற்கு அதிக நிதி நெகிழ்வுத் திறனை உறுதி செய்வதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2025 முதல் 2028 ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டு காலக் கட்டத்திற்கு மேற் கொள்ளப்படும்.
- தற்போது, உலக சுகாதார அமைப்பின் நிதியில் சுமார் 84% தாராள நன்கொடையாளர் நபர்களிடமிருந்துப் பெறப் படுகிறது.
- இந்த நிதிகளில் விருப்பத் தெரிவுகளைச் சார்ந்த தன்னார்வப் பங்களிப்புகள் அனைத்து நன்கொடைகளில் சுமார் 88 சதவீதத்தை உள்ளடக்கியதாகும்.
- இது உலக சுகாதார அமைப்பு நெகிழ்திறன் மிக்கதாகச் செயல்படுவதற்கும், அதன் தேவைகளுக்கு ஏற்ப நிதி இருப்பினை மாற்றுவதற்கும் வாய்ப்பளிப்பதில்லை.

## அனைவருக்குமான ஆரோக்கியம் - உலக சுகாதார அமைப்பு

- ‘அனைவருக்குமான ஆரோக்கியம்: முக்கியச் சேவையினை வழங்கும் வகையில் அரசப் பொருளாதாரங்களை மாற்றுதல்’ என்ற ஒரு அறிக்கையானது உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இது ஆரோக்கியம் மற்றும் நிலையான, உள்ளார்ந்த மற்றும் புத்தாக்க வழியிலான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயான பல்வேறு இணைப்புகளில் கவனம் செலுத்துவதற்கான ஒரு செயல்திட்டமாகும்.

- ❖ இது இவ்வகையான முதல் அறிக்கையாகும்.
- ❖ இந்தப் புதியதொரு பொருளாதார அறிக்கையின் அடிப்படையிலான கொள்கை அணுகு முறைகளை அறிக்கை பரிந்துரைத்துள்ளது.
- ❖ இது ஒன்றுக்கொன்று தொடர்புடைய மதிப்பு, மதிப்பு, புத்தாக்கம் மற்றும் புத்தாக்கம் ஆகிய நான்கு கருத்துருக்களில் அனைவருக்குமான ஒரு ஆரோக்கியத்தினை வழங்கச் செய்வதற்காக பொருளாதாரங்களை மறுசீரமைக்கப் பரிந்துரைத்தது.

## மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவில் போலியோ ஒழிப்பு முயற்சிகள்




- ❖ கேமரூன், சாட் மற்றும் நைஜர் ஆகிய மூன்று நாடுகள் ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய போலியோ தடுப்பு மருந்துப் பிரச்சாரத்தினை 2020 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகின்றன.
- ❖ மூன்று மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்க நாடுகள் ஐந்து வயதிற்குட்பட்ட 21 மில்லியன் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்தினை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளன.
- ❖ 19 இரண்டாம் வகை போலியோ வைரஸ் பாதிப்புகள் கண்டறியப் பட்டதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நன்கு மேற்கொள்ளும் வகையில் தடுப்பு மருந்து இயக்கம் தற்போது தொடங்கப் பட்டது.
- ❖ நைஜர் நாட்டில் இரண்டு பாதிப்புகள், சாட் நாட்டில் 10 பாதிப்புகள், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு நாட்டில் நான்குப் பாதிப்புகள் மற்றும் கேமரூன் நாட்டில் மூன்றுப் பாதிப்புகள் சமீபத்தில் பதிவாகியுள்ளன.
- ❖ மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் பதிவாகியுள்ள அனைத்துப் போலியோ நோய்களும் தடுப்பூசி மூலம் தூண்டப்பட்ட போலியோ வைரஸ் பரவலால் ஏற்படுகிறது.

## சென்சூவோ-16 ஆய்வுத் திட்டம்

- ❖ சீனா தனது முதல் பொதுக் குடிமகன் உள்ளிட்ட மூன்று விண்வெளி வீரர்களைச் சுமந்து கொண்டு டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு விண்கலத்தை ஏவியுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டிலிருந்து முழுமையாகச் செயல்பட்டு வரும் விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்பும் நாட்டின் ஐந்தாவது ஆய்வுக் கல ஏவுதல் பணி இதுவாகும்.
- ❖ ஜிங் ஹைபெங் இந்தத் திட்டத்தின் தலைமைப் பயணி ஆவார்.

- மற்ற இருவர் ஜு யாங்சு மற்றும் விண்வெளிக்குச் சென்ற முதல் சீனக் குடிமகன் ஆன குய் ஹைச்சாவோ ஆகியோர் ஆவர்.




## பழங்குடியின மக்களின் ஆரோக்கியத்திற்கான உலகளாவியச் செயல் திட்டம்




- பழங்குடியின மக்களின் ஆரோக்கியத்திற்கான ஒரு உலகளாவியச் செயல் திட்டத்தை உருவாக்குவதற்காக முன்மொழியப்பட்ட ஒரு வரைவு தீர்மானத்தினை உலக சுகாதார அமைப்பு ஏற்றுக் கொண்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, தற்போது உலகின் சுமார் 90 நாடுகளில் 476 மில்லியன் பழங்குடியினர் உள்ளனர்.
- அவர்கள் 7,000 மொழிகளைப் பேசுபவர்களாகவும், 500 வெவ்வேறுக் கலாச்சாரங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர்.

- பழங்குடியின மக்களின் ஆயுட்காலமானது இதரப் பொதுமக்களை விட 20 ஆண்டுகள் குறைவாகும்.
- பழங்குடியின மக்களின் குறிப்பிட்ட தேவைகளை அடையாளம் காண்பதற்கும் மற்றும் அவற்றிலுள்ள இடைவெளிகளை நிரப்பச் செய்வதற்குமான நெறிமுறைத் தரவுகளின் தொகுப்பை உருவாக்குமாறு 194 உறுப்பினர் நாடுகளுக்கும் வலியுறுத்தப் பட்டன.

## நீரில் மூழ்கி உயிரிழப்பதைத் தடுப்பதற்கான உலகளாவியக் கூட்டணி





- உலக சுகாதார சபையின் (WHA) உறுப்பினர் நாடுகள் நீரில் மூழ்கி உயிரிழப்பதை தடுப்பதற்கான ஒரு உலகளாவியக் கூட்டணியை நிறுவ ஒப்புக் கொண்டுள்ளன.
- 2029 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டம் வரை இந்தப் பிரச்சினை குறித்த உலகளாவியப் பொது சுகாதாரச் சிக்கல்களை நிவர்த்தி செய்யும் முதல் கூட்டணி இது ஆகும்.
- வங்காளதேசம் மற்றும் அயர்லாந்து நாட்டு அரசாங்கங்களால் முன் வைக்கப்பட்ட இந்த தீர்மானமானது நீரில் மூழ்குவதைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை நன்கு ஒருங்கிணைப்பதற்காக உலக சுகாதார அமைப்பிற்கு (WHO) அழைப்பு விடுத்தது.
- நீரில் மூழ்குவதால் ஏற்படும் 90 சதவீதத்திற்கும் அதிகமான உயிரிழப்புகள் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் தான் நிகழ்கின்றன.

## மையப்படுத்தப்பட்ட ஆய்வக வலையமைப்பு

- இந்தியா சமீபத்தில் மையப்படுத்தப்பட்ட ஆய்வக வலையமைப்பில் (CLN) இணைந்து உள்ளது.
- இது தற்போது 13 நாடுகளில் உள்ள 15 பங்குதார ஆய்வக மையங்களைக் கொண்டு உள்ள நிலையில், அவை பெருந்தொற்று மற்றும் தொற்றுநோய் பரவும் காலங்களில் பயன்படுத்தக் கூடிய தடுப்பு மருந்துகளை சோதனை செய்யும் பணியில் ஈடுபடச் செய்கின்றன.

- ❖ மையப்படுத்தப்பட்ட ஆய்வக வலையமைப்பு என்பது தொற்றுநோய்க்கான ஒரு தயார் நிலைப் புத்தாக்கக் கூட்டணியின் (CEPI) ஒரு பகுதியாகும்.
- ❖ இந்த வலையமைப்பானது, சோதனைச் செயல்முறைகளுக்கான தரப்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் அமைப்புகளைக் கொண்ட ஒரு மிகப்பெரிய உலகளாவியக் குழு ஆகும்.




## பலதரப்புக் கடற்படைப் பயிற்சி - கொமோடோ

- ❖ இந்தோனேசியா நாட்டினால் நடத்தப் படுகின்ற பலதரப்புக் கடற்படைப் பயிற்சியில் சீனா தனது போர்க் கப்பல்களுடன் பங்கேற்கிறது.
- ❖ வட கொரியா, ரஷ்யா, தென் கொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இந்தப் பயிற்சிகளில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.
- ❖ இதற்கு முன்னதாக இந்த கொமோடோ கடற்பயிற்சியானது, கோவிட்-19 தொடர்பான நடவடிக்கையால் இடைநிறுத்தப் படுவதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- ❖ இது தவிர, கம்போடியா, லாவோஸ், மலேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய சில நாடுகளுடன் இணைந்து அமானா யூயி-2023 என்ற ஒரு கூட்டுப் பயிற்சியை மேற் கொள்வதற்கும் சீன இராணுவம் திட்டமிட்டுள்ளது.


## சபாங் துறைமுக சாத்தியக்கூறு பற்றிய கூட்டு அறிக்கை

- ❖ இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகியவை இணைந்து உத்திசார்ந்த மதிப்புமிக்க சபாங் துறைமுகத்தை மேம்படுத்தச் செய்வது தொடர்பான ஒரு கூட்டு சாத்தியக்கூறு ஆய்வினை நிறைவு செய்துள்ளன.
- ❖ சபாங் துறைமுகம் ஆனது இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில் அமைந்துள்ளது.
- ❖ இது அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இருந்து சுமார் 700 கி.மீ. தொலைவில் உள்ளது.
- ❖ இந்த முக்கியமான துறைமுகம் வெற்றிகரமாக மேம்படுத்தப் பட்டால் இது மலாக்கா ஜலசந்தியை இந்தியா எளிதாக அணுகுவதற்கான வாய்ப்பினை அளிக்கும்.




## உள்நாட்டுக் குறுகிய தூர விமானங்களுக்கு தடை

- பிரான்ஸ் நாடானது கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கான முயற்சியாக ரயில் பயண வசதி இருக்கும் பகுதிகளுக்கான உள்நாட்டுக் குறுகிய தூர விமானங்களைத் தடை செய்துள்ளது.
- சராசரியாக ஒரு விமானம் ரயிலை விட சுமார் 77 மடங்கு அதிகமான CO2 வாயுவினை வெளியிடுகிறது.
- சமீபத்தில் ஆம்ஸ்டர்டாமில் உள்ள ஷிபோல் விமான நிலையமானது தனியார் ஜெட் விமானங்கள் மற்றும் சிறு வணிக விமானங்கள் பயன்படுத்தத் தடை விதித்தது.




## ஹெல்மண்ட் நதிநீர் சச்சரவு

- ஹெல்மண்ட் நதி தொடர்பாக ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே சச்சரவு உள்ளது.
- இது அந்த இரு நாடுகளுக்கும் தேவையான குடிநீர், நீர்ப்பாசனம் மற்றும் மீன் பிடித்தல் ஆகியவற்றுக்கு ஒரு முக்கியமான ஆதாரமாக உள்ளது.

- 1973 ஆம் ஆண்டில் இந்த இரு நாடுகளும் நீர் வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ஆனால் அந்த ஒப்பந்தம் இதுவரையில் ஏற்றுக் கொள்ளப் படாததால் ஹெல்மண்டின் நீர்ப் பயன்பாட்டு நிலை ஒரு சர்ச்சைக்குரியதாகவே உள்ளது.
- 1973 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் படி ஆப்கானிஸ்தான் ஈரான் நாட்டிற்கு வருடத்திற்கு வினாடிக்கு 22 கன மீட்டர் வீதம் கூடுதலாக வினாடிக்கு நான்கு கன மீட்டர் தண்ணீரை வழங்க வேண்டும்.
- ஹெல்மண்ட் நதியானது ஆப்கானிஸ்தானின் இந்து குஷ் மலைத்தொடரில் தோன்றி ஆப்கானிஸ்தான் முழுவதும் பாய்கிறது.
- இது இரு நாடுகளுக்கும் இடையே எல்லையை உருவாக்கும் ஷெலே சரக் நதியாகவும், மேற்கு நோக்கி ஈரானுக்குள் பாயும் சிஸ்தான் நதியாகவும் பிரிகிறது.





## இந்தியாவின் அன்னிய நேரடி முதலீட்டிற்கான சிறந்த தேர்வு

- 2022 ஆம் ஆண்டின் இந்தியாவில் இருந்து அன்னிய நேரடி முதலீட்டுக்கான (FDI) இலக்கு நகரமாக துபாய் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- அறிவிக்கப்பட்ட FDI திட்டங்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட FDI திட்டங்களின் கீழ் மூல தனத்திற்கான முதல் 5 ஆதார நாடுகளில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் துபாயில் அறிவிக்கப்பட்ட FDI திட்டங்களில் சுமார் 12 சதவிகிதம் இந்தியாவைச் சேர்ந்ததாகும்.
- இந்தியாவை விட அமெரிக்கா (20 சதவீதம்) மற்றும் இங்கிலாந்து (13 சதவீதம்) மட்டுமே முன்னிலையில் உள்ளன.
- ஆண்டுகளின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் இந்தியாவானது துபாயில் 78 FDI திட்டங்களைக் கொண்டிருந்த நிலையில் அது 2022 ஆம் ஆண்டில 142 ஆக உயர்ந்தது.
- இந்தியாவில் மதிப்பின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2021 ஆம் ஆண்டு 363.85 மில்லியன் டாலரிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 545.52 மில்லியன் டாலராக இது உயர்ந்து உள்ளது.

## மைக்ரோனேசியாவில் கடலுக்கடியில் கம்பி வட இணைப்புத் திட்டம்

- ❖ அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவின் கடலடிக் கம்பி வடத் திட்டத்தில் ஜப்பான் நாடும் இணைந்துள்ளது.
- ❖ இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் வலையமைப்புகளை மேம்படுத்தி அதன் மூலம் இது கிழக்கு மைக்ரோனேசியா தீவு நாடுகளை இணைக்கும்.
- ❖ தோராயமாக 2,250 கிலோமீட்டர் தொலைவிற்கு கடலுக்கு அடியில் செல்லும் இந்த வடமானது மைக்ரோனேஷியாவில் உள்ள கோஸ்ரே என்ற கூட்டாட்சி நாட்டினையும், கிரிபாட்டியில் உள்ள தாராவா மற்றும் நவுருவையும் இணைக்கும்.




## எண்ணெய் உற்பத்திக் குறைப்பு

- ❖ உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளரான சவுதி அரேபியாவானது அதன் தன்னார்வ எண்ணெய் உற்பத்திக் குறைப்பானது 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அமல்படுத்தப் படும் என அறிவித்துள்ளது.
- ❖ அந்த நாட்டில் மே மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் 10 மில்லியன் பீப்பாய் அளவிலிருந்து இனி ஒரு நாளைக்கு 9 மில்லியன் பீப்பாய்களாகக் குறைக்கப் படும்.
- ❖ பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு மற்றும் அதன் கூட்டாளிகள் (OPEC+) ஆண்டு முழுவதும் அதன் திட்டமிட்ட எண்ணெய் உற்பத்தியில் எந்த மாற்றமும் செய்யவில்லை.
- ❖ உலகில் 40% அளவிற்குக் கச்சா எண்ணெயினை விநியோகிக்கும் OPEC+ நாடுகளின் கொள்கை முடிவுகளானது அதன் விலையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

## ககோவ்கா அணை சேதம்

- ❖ தெற்கு உக்ரைனில் உள்ள நோவா ககோவ்கா அணை இடிந்து விழுந்த ஒரு நிகழ்வானது கடந்த பல தசாப்தங்களில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மிகப்பெரிய தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் பேரழிவுகளில் ஒன்றாகும்.

- ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய அணைகளில் ஒன்றான இந்த அணையில் சுமார் 18 கன கிலோமீட்டர் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.
- ககோவ்கா அணையானது, 1956 ஆம் ஆண்டில் உக்ரைனின் கெர்சன் ஒப்லாஸ்ட் என்ற பகுதியில் நீப்பர் என்ற ஆற்றின் குறுக்கே (நீப்ரோ) கட்டி முடிக்கப் பட்டது.
- புனல் மின்சார உற்பத்தி, நீர்ப்பாசனம் மற்றும் போக்குவரத்து ஆகியன இந்த அணை அமைப்பட்டதற்கான முதன்மை நோக்கங்கள் ஆகும்.




## பைசர் நிறுவனத்தின் RSV தடுப்பு மருந்து

- அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பானது (FDA), முதுபருவத்தினருக்கு ஃபைசர் இன்க் நிறுவனத்தின் சுவாச சிங்க்சியல் வைரஸ் (RSV) என்ற தடுப்பு மருந்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.
- இது முதியவர்களில் மரணத்தினை ஏற்படுத்தக் கூடிய இந்தப் பொதுவான சுவாச நோய்க்கு எதிரான இரண்டாவது தடுப்பு மருந்து இதுவாகும்.
- முன்னதாக, GSK Plc நிறுவனத்தின் இதே போன்றத் தடுப்பு மருந்திற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஒப்புதல் அளித்தது.


## மிகவும் சக்திவாய்ந்த மீயொலி காற்றோட்டச் சோதனை ஊடகம்

- சீனா, உலகின் மிகவும் சக்திவாய்ந்த காற்றோட்டச் சோதனை குகைப் பாதையினைச் சமீபத்தில் கட்டமைத்துள்ளது.
- JF-22 எனப்படும் இந்தக் காற்றோட்டச் சோதனைப் பாதையானது, 4 மீட்டர் (13 அடி) விட்டம் கொண்டதோடு, மேலும், இதன் மூலம் வினாடிக்கு 10 கிலோமீட்டர் (6.2 மைல்கள்) வேகம் வரையிலான அதிவேகக் காற்றோட்டத்தினை உருவாக்க முடியும்.

- இது ஒலியின் வேகத்தை விட 30 மடங்கு அதிகமான மேக் 30 வரையிலான மீயொலி வான் பயண நிலைகளை உருவகப்படுத்தும் திறன் கொண்டது ஆகும்.



## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர் நாடுகள்





- அல்ஜீரியா, கயானா, கொரியக் குடியரசு, சியரா லியோன் மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர் நாடுகளாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- அடுத்த ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அல்பேனியா, பிரேசில், காபோன், கானா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்குப் பதிலாக இவை நிரந்தரமற்ற உறுப்பினர்களாகச் செயல்படும்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது, 10 நிரந்தரமற்ற உறுப்பினர்கள் மற்றும் 5 நிரந்தர உறுப்பினர்கள் உட்பட 15 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

- 10 நிரந்தரமற்ற உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.
- அவற்றிற்கான வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப் படுவதோடு அந்த வாக்கெடுப்பில் போட்டியிடும் நாடுகள் மூன்றில் இரண்டு பங்கு என்ற ஒரு அளவில் பெரும்பான்மை அல்லது 128 வாக்குகளைப் பெற வேண்டும்.

## ஏர் டிஃபென்டர் 23

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளுக்கிடையேயான ஒரு இராணுவப் பயிற்சியான ஏர் டிஃபென்டர் 23 சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- 1949 ஆம் ஆண்டில் இந்த இராணுவக் கூட்டணி உருவாக்கப்பட்டதில் இருந்து மேற் கொள்ளப் பட்ட ஒரு மிகப்பெரிய பயிற்சி இதுவாகும்.
- ஜெர்மனி நாடு இந்தப் பயிற்சியினை நடத்தும் நாடாகவும் மற்றும் அதற்கானத் தளவாட மையமாகவும் செயல்படுகிறது.
- ஆறு இராணுவத் தளங்களில் 250 வரையிலான விமானங்கள் நிலை நிறுத்தப் பட்டுள்ள நிலையில் இப்பயிற்சியில் 25 நாடுகள் பங்கேற்கின்றன.




## ஃப்ரேசர் தீவின் பெயர் மாற்றம்

- ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள சிறப்புமிக்க ஃப்ரேசர் தீவு அதிகாரப்பூர்வமாக ககாரி என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- இதுவரை ஃப்ரேசர் தீவு என்று அழைக்கப்பட்ட இத்தீவிற்கு இப்பகுதியின் பாரம்பரிய உரிமையாளர்களான புட்சுல்லா மக்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக ககாரி என மறுபெயரிட முடிவு செய்யப்பட்டது.
- ககாரி பகுதியானது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தப் பகுதியில் வசிக்கும் புட்சுல்லா மக்கள் மத்தியில் மகத்தான கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.
- புட்சுல்லா மொழியில் "ககாரி" என்றப் பெயருக்கு "சொர்க்கம்" என்று பொருள் கூறப் படுகிறது.
- பூர்வீக மொழிகள், வரலாறுகள் மற்றும் மரபுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த மறுபெயரிடுதல் நடவடிக்கையானது நல்லிணக்கத்தின் ஒரு அடையாளமாக கருதப் படுகிறது.

- இது உலகின் மிகப்பெரிய மணல் தீவு மற்றும் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமாகும்.





## அட்லாண்டிக் பிரகடனம்

- இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான அமெரிக்க – ஐக்கியப் பேரரசு நாடுகளின் ஒரு பொருளாதாரக் கூட்டாண்மைக்கான அட்லாண்டிக் பிரகடனத்தினை அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் இணைந்து அறிவித்துள்ளன.
- சீனாவினால் உருவாகி வரும் ஒரு போட்டியை எதிர்கொள்ளும் வகையில், பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் ஆகியவற்றில் தொழில் சார் உறவுகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அட்லாண்டிக் பிரகடனமானது ஒரு நெகிழ்திறன் மிக்க, பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான தொடர் விநியோகச் சங்கிலியை உருவாக்குதல், உத்திசார் சார்புகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துகிறது.


## அகதிகளைச் சமமான முறையில் ஏற்பதற்கான ஒப்பந்தம்

- ஐரோப்பிய ஒன்றியமானது, அகதிகளை மிகவும் சமமான முறையில் ஏற்பதற்கான விதிகளின் திருத்தம் தொடர்பான ஒப்பந்தத்தினை மேற்கொண்டது.
- அகதிகளை ஏற்க மறுக்கும் நாடுகள் ஒரு நபருக்கு 20,000 யூரோக்கள் (USD 21,000) செலுத்த வேண்டும் என்று இந்த ஒப்பந்தம் கூறுகிறது.
- இந்தத் தொகையானது பிரஸ்ஸல்ஸினால் நிர்வகிக்கப்படும் நிதியைச் சேரும்.
- போலந்து மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் இந்த முன்மொழிதலுக்கு எதிராக வாக்கு அளித்துள்ளன.
- பல்கேரியா, மால்டா, லிதுவேனியா மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் வாக்கு அளிப்பதிலிருந்து விலகின.

Fig. 1.3. Trends in refugee (including asylum seekers) and total migrant population in the WHO European Region, 2000–2017




## கோபர்நிகஸ் ஆய்வுத் திட்டம்




- 2023 ஆம் ஆண்டு ஜூன் 08 ஆம் தேதியானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆய்வுத் திட்டத்தின் ஓர் அங்கமான கோபர்நிகஸ் எனப்படும் புவிக் கண்காணிப்புத் திட்டத்தின் 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- முன்னதாக சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கான ஒரு உலகளாவியக் கண்காணிப்பு (GMES) அமைப்பு என அறியப்பட்ட இது 1998 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- வேளாண்மை, பருவநிலை மாற்றம், பேரிடர் மேலாண்மை, நகர்ப்புற திட்டமிடல் மற்றும் பல துறைகளுக்கு உதவச் செய்வதற்காக என்று பூமியின் சுற்றுச்சூழலைப் பற்றியத் தகவல்களை வழங்கும் வகையில் கோபர்நிகஸ் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- சூரியனை மையமாகக் கொண்ட பிரபஞ்ச மாதிரியை முதன்முதலில் முன்மொழிந்த 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலந்து நாட்டினைச் சேர்ந்த நிக்கோலஸ் கோபர் நிகஸின் நினைவாக இந்தத் திட்டத்திற்கு இப்பெயரிடப்பட்டது.

## முத்தரப்பு எரிசக்தி வர்த்தக ஒப்பந்தம்

- இந்தியா, நேபாளம் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் முத்தரப்பு எரிசக்தி வர்த்தக ஒப்பந்தத்தின் வரைவினை இறுதி செய்துள்ளன.
- இந்த ஒப்பந்தமானது, இந்தியக் கட்டமைப்பு மூலம் மின் வர்த்தகம் மேற்கொள்வதனை அனுமதிப்பது குறித்த நேபாளம் மற்றும் வங்காளதேசம் ஆகியவற்றின் ஒரு நீண்டகால கோரிக்கையைப் பூர்த்தி செய்யும்.
- நேபாளம் மற்றும் வங்காளதேசத்தில் மின்சாரப் பரிமாற்ற உள்கட்டமைப்பை நன்குக் கட்டமைத்ததோடு, இந்த இரு நாடுகளுடனான எல்லை கடந்த குழாய் இணைப்புகளை உருவாக்குவதில் இந்தியா உதவியுள்ளது.




## ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படையினருக்கான நினைவுச் சுவர்




- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, பணியில் மரணமடைந்த அமைதிப் படை வீரர்களை கௌரவிக்கும் வகையில் நினைவுச் சுவர் ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நிறுவுவது தொடர்பாக இந்தியா முன்வைத்த வரைவுத் தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 'ஐக்கிய நாடுகள் சபையின் மரணமடைந்த அமைதி காப்புப் படை வீரர்களுக்கான நினைவுச் சுவர்' என்ற தலைப்பிலான ஒரு வரைவுத் தீர்மானத்தினை இந்தியா அறிமுகப்படுத்தியது.
- இந்தத் தீர்மானத்திற்கு, ஐக்கிய நாடுகள் சபையில் ஏறக்குறைய 190 உறுப்பினர் நாடுகளால் ஒரு இணை அனுசரணை வழங்கப்பட்டு, பின் ஒருமித்த கருத்துடன் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர தூதுக்குழு, மகத்தான தியாகம் செய்த இந்தியப் படை வீரர்களுக்கென என்று பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப் பட்ட மெய்நிகர் நினைவுச் சுவரினை வெளியிட்டது.

## முதல் பெருங்கடல் ஒப்பந்தம்

- பெருங்கடல் பகுதிகளின் ஆளுமைக்காகவும், மனிதக் குலத்திற்கு இன்றியமையாத தொலை தூரச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்குமான முதல் சர்வதேச ஒப்பந்தத்தினை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டது.
- இது தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர் மீதான ஒப்பந்தம் என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படுகிறது.
- சர்வதேச கடற்பகுதியில் மீன்பிடித்தல், சுரங்கம் மற்றும் எண்ணெய் பிரித்தெடுத்தல் போன்ற நடவடிக்கைகளைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு குறைந்தபட்சம் 60 உறுப்பினர் நாடுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- கடல்சார் மரபணு வளங்களின் நன்மைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான பல்வேறு கொள்கைகளை இந்த ஒப்பந்தம் நிறுவுகிறது.
- பூமியின் மேற்பரப்பின் 60 சதவீதத்திற்கும் அதிகமான நிலப்பரப்பில் பெருங்கடல்கள் பரவிக் காணப்படுகின்றன.




## கான் குவெஸ்ட் 2023 பயிற்சி

- "எக்ஸ் கான் குவெஸ்ட் 2023" எனப்படும் இந்தப் பன்னாட்டு அமைதி காப்புக் கூட்டுப் பயிற்சியில், 20 நாடுகளைச் சேர்ந்த இராணுவக் குழுக்கள் மற்றும் பார்வையாளர்கள் பங்கேற்கின்றனர்.
- இந்திய இராணுவம் சார்பாக கர்வால் ரைபிள்ஸ் படைப்பிரிவு இதில் பங்கேற்றது.
- 14 நாட்கள் அளவிலான இந்தப் பயிற்சி மங்கோலிய நாட்டினால் நடத்தப் படுகிறது.
- இது இந்தப் பயிற்சியில் பங்கேற்கும் நாடுகளின் இயங்குந் தன்மையை மேம்படுத்துதல், அவர்தம் அனுபவத்தைப் பகிர்தல் மற்றும் ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைதி காப்பு நடவடிக்கைகளுக்காக (UNPKO) சீருடைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டது.

## உலக எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு உச்சி மாநாடு

- உலக எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு உச்சி மாநாடு மற்றும் கண்காட்சியானது மகாராஷ்டிராவில் தொடங்கப்பட்டது.
- எண்ணிமப் பொது உள்கட்டமைப்பின் பரவலான தரநிலைகள், கூட்டாண்மைகள், அதன் இயங்குந் தன்மை மற்றும் மலிவுத்திறன் உள்ளிட்ட பொதுவான கொள்கைகள் மற்றும் வடிவமைப்பு அம்சங்கள் குறித்து இந்த அமர்வில் கலந்தாலோசிக்கப் பட்டன.
- இந்த மாநாட்டில், ஓர் எதிர்காலக் கூட்டணி எனப்படும் நாடுகளின் ஒரு கூட்டணியை உருவாக்கும் கருத்தாக்கத்தினையும் இந்தியா முன் வைத்துள்ளது.
- மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுக்கு இது உதவும்.
- எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு என்பது எண்ணிம அடையாளம், கட்டண உள் கட்டமைப்பு மற்றும் தரவுப் பரிமாற்ற அமைப்புகள் போன்ற தொகுதிகள் அல்லது தளங்களைக் குறிக்கிறது.




## ஓரினச் சேர்க்கை திருமணத்தினைச் சட்டப்பூர்வமாக்கிய எஸ்தோனியா



- எஸ்தோனியாவின் பாராளுமன்றமானது ஒரினச்சேர்க்கைத் திருமணத்தினைச் சட்டப் பூர்வமாக்கும் ஒரு சட்டத்தினை நிறைவேற்றியுள்ளது.
- இரண்டு பருவ வயதினரும் "தாங்கள் எந்தப் பாலினத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதனைப் பொருட்படுத்தாமல்" திருமணம் செய்து கொள்ளலாம் என்று இதில் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்தத் திருத்தப்பட்டச் சட்டமானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.
- இதன் மூலம், இத்தகைய சட்டத்தினை நிறைவேற்றிய முதலாவது முன்னாள் சோவியத் நாடு என்ற பெருமையை எஸ்தோனியா பெற்றது.

## இந்தியப் பிரதமரின் தனித்துவமிக்கப் பரிசுகள்



- இந்தியப் பிரதமர் அவர்கள், அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் அவரது மனைவி ஜில் பிடன் ஆகியோருடனானச் சந்திப்பின் போது சில அதிகாரப்பூர்வ பரிசுகளை பரிமாறிக் கொண்டார்.
- அவர்களுக்குப் பிரதமர் அளித்தப் பரிசுகளில் சந்தன மரத்தால் செய்யப்பட்ட ஒரு சிறப்ப வேலைப்பாடுகள் செய்யப் பட்டப் பெட்டி ஒன்றும் அடங்கும்.
- அந்தப் பெட்டியில் விநாயகர் சிலை, தியா (எண்ணெய் விளக்கு), மந்திரங்கள் (ஸ்லோகங்கள்) பொறிக்கப்பட்ட செப்புத் தகடு, தென்னிந்திய எள் விதைகள், ராஜஸ்தானில் கைவினை கலையால் உருவாக்கப்பட்ட 24 காரட் தங்க நாணயம் மற்றும் ஜார்க்கண்டில் கையால் நெய்யப்பட்டப் பட்டுத் துணி ஆகியவை உள்ளன.
- மேலும், 'பத்து முக்கிய உபநிடதங்கள் மற்றும் இந்து 'தாஸ் தானம்' ஆகியவற்றின் நகலும் ஜோ பிடனுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- அவர் பிடனின் மனைவியான ஜில் பிடனுக்குத் தனிப்பட்ட முறையில் தனது பரிசுகளை வழங்கிய நிலையில் அவற்றில் ஒன்று இந்தியாவின் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட 7.5 காரட் பச்சை வைரம் ஆகும்.
- இந்தப் பச்சை வைரமானது கைவினைஞர்களால் காகிதக் கூழில் உருவாக்கப்பட்டு, மிக நேர்த்தியாக வரையப்பட்ட பல அழகிய ஓவியங்களுடன் கூடிய, காகிதக்கூழால் ஆன பெட்டிக்குள் வைக்கப் பட்டிருந்தது.

- பிடன் அவர்களும் நரேந்திர மோடி அவர்களுக்கு பழங்கால ஒளிப்படக் கருவி, வன விலங்குப் புகைப்படம் எடுத்தல் பற்றிய புத்தகம் மற்றும் ராபர்ட் ஃப்ரோஸ்ட் கையெழுத்திட்ட அவரது கவிதைப் புத்தகத்தின் முதல் பதிப்பின் நகல் உள்ளிட்ட பரிசுகளையும் வழங்கினார்.


## நேட்டோ பிளஸ்

- அமெரிக்க மேலவை உறுப்பினர்கள் இந்திய நாட்டினை நேட்டோ பிளஸ் (வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு+) குழுவின் ஒரு பகுதியாக மாற்றும் மசோதாவினை அறிமுகப் படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.
- நேட்டோ பிளஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் தற்போது நேட்டோ அமைப்பின் உறுப்பினர் நாடுகள் மற்றும் ஐந்து இணை நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- அந்த 5 நாடுகள் என்பது ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், இஸ்ரேல் மற்றும் தென் கொரியா ஆகியனவாகும்.
- பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை சார்ந்த உறவுகளை மேம்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.
- நேட்டோ என்பது 31 ஒத்த எண்ணம் கொண்ட வட அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அட்லாண்டிக் கூட்டமைப்பு ஆகும்.
- இது 1949 ஆம் ஆண்டு வட அட்லாண்டிக் ஒப்பந்தம் (வாஷிங்டன் ஒப்பந்தம்) மூலம் நிறுவப் பட்டது.




## பாகிஸ்தான்-அணுமின் நிலையம்

- சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை சாஸ்மா என்ற இடத்தில் 1,200 மெகாவாட் அணுமின் நிலையத்தினை அமைப்பதற்கான 4.8 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- தற்போதுள்ள நான்கு மின் உற்பத்தி நிலையங்களின் நிறுவப்பட்ட திறன் 1,330 மெகா வாட் ஆகும்.
- மேலும் இரண்டு அணுமின் நிலையங்களும் பாகிஸ்தானில் செயல்பட்டு வருகின்றன.




## INDUS X நிகழ்வு

- இந்தியா-அமெரிக்காவின் பாதுகாப்பு விரைவாக்கச் சூழலமைப்பு (INDUS X) ஆனது வாஷிங்டன் DC நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இந்த முன்னெடுப்பானது இத்துறையில் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஊக்குவித்து, இந்திய மற்றும் அமெரிக்கப் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இரு நாடுகளிலும் உள்ள உழைக்கும் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, உலக நாடுகளின் அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்பினையும் மேம்படுத்தும்.

## வங்காளதேசத்தில் மாறுநிலைப் பண மதிப்பு நிர்ணயம்

- வங்காளதேசத்தின் மத்திய வங்கியானது, அந்த நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக சந்தை விநியோகம் மற்றும் தேவை அடிப்படையில் பண மதிப்பு நிர்ணயம் செய்ய அனுமதித்துள்ளது.
- 4.7 பில்லியன் டாலர் கடன் திட்டத்தில் இருந்து அதிகப்படியான பணத்தைப் பெறச் செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட கோரிக்கைகளின் படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.
- இந்த ஆண்டு பாகிஸ்தான், எகிப்து மற்றும் லெபனான் ஆகியவை தங்கள் நிலையான பணப் பரிமாற்று விகிதங்களைக் குறைத்துள்ளன.
- ஒரு மாறுநிலைப் பண பரிமாற்று விகிதம் என்பது ஒரு நாட்டின் நாணய மதிப்பானது மற்ற நாணயங்களுடன் ஒப்பிடப்படும் போது, சந்தை விநியோகம் மற்றும் தேவை அடிப்படையில் அந்நியச் செலாவணிச் சந்தையினால் நிர்ணயிக்கப்படும் ஒரு முறை ஆகும்.
- ஒரு நிலையான பணப் பரிமாற்று விகிதத்திற்கு முரணான இந்த விகிதத்தில் அரசு என்பது முழுமையாக அல்லது பெருமளவில் இந்த விகிதத்தைத் தீர்மானிக்கிறது.

| Fixed Exchange Rate | Basis | Flexible Exchange Rate |
|---|---|---|
| The system of exchange rate in which exchange rate is officially declared and fixed by the government. | Meaning | The system of exchange rate in which value of a currency is allowed freely to float as determined by demand for and supply of foreign exchange. |
| It ensures stability in international money market / exchange market. Day to day fluctuations are avoided. | Stability | It causes instability in the international money market. |
| It implies low risk and low uncertainty of future payments. It encourages international trade. | International Trade | Instability in foreign exchange market causes instability in the area of international trade. |
| It discourages venture capital in international money market. | Venture Capital | It encourages venture capital in international money market. |
| It is often supported with huge international reserves of gold. This is because of different currencies are directly or indirectly convertible into gold. | International Reserves | It is not to be supported with international reserves |

## செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேசப் பொருளாதார மன்றம்

- 26வது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேசப் பொருளாதார மன்றமானது, (SPIEF) ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரத்தில், சமீபத்தில் நடைபெற்றது.
- SPIEF என்பது வணிகம் மற்றும் பொருளாதாரத் துறையின் ஒரு தனித்துவமான நிகழ்வு ஆகும்.
- இது 1997 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.
- 2006 ஆம் ஆண்டு முதல் இது ரஷ்யக் கூட்டமைப்பின் தலைவரின் ஆதரவில் நடத்தப் படுகிறது.
- இந்தப் பகுதியில் நடைபெறும் உலக வணிகச் சமூகத் தலைவர்களின் ஒரு உயர்நிலைச் சந்திப்பு இதுவாகும்.

## எகிப்து - ஹீலியோபோலிஸ் நினைவகம்

- எகிப்தின் கெய்ரோ எனுமிடத்தில் உள்ள ஹீலியோபோலிஸ் (பண்டைய எகிப்து) போர் கல்லறையில் உள்ள ஹெலியோபோலிஸ் (போர்ட் தெவ்பிக்) நினைவிடத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் மரியாதை செலுத்தினார்.
- இது பெரிய ஹெலியோபோலிஸ் காமன்வெல்த் போர் கல்லறையின் ஒரு பகுதியாகும்.
- இந்த நினைவுச் சின்னமானது, முதல் உலகப் போரில் எகிப்து மற்றும் பாலஸ்தீனத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு படையெடுப்புகளில் போரிட்டு உயிரிழந்த 3,727 இந்திய வீரர்களின் நினைவாகக் கட்டமைக்கப்பட்டதாகும்.
- சூயஸ் கால்வாயின் நுழைவு பகுதியில் அமைந்துள்ள இந்த போர்ட் தெவ்பிக் நினைவுச் சின்னமானது 1926 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது.
- 1980 ஆம் ஆண்டில் ஹெலியோபோலிஸ் காமன்வெல்த் போர் கல்லறையில் இந்தியரின் பெயர்களைக் கொண்ட புதிய நினைவுச் சின்னமானது அமைக்கப் பட்டது.



## வியட்நாம் நாட்டிற்கு ஐஎன்எஸ் கிர்பான் கப்பல் பரிசளிப்பு



- இந்திய நாடானது வியட்நாமின் கடற்படைத் திறன்களை மேம்படுத்தச் செய்வதற்காக உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஐஎன்எஸ் கிர்பான் என்ற ஒரு ஏவுகணை போர்க் கப்பலினை வியட்நாம் நாட்டிற்குப் பரிசாக வழங்கியுள்ளது.
- 1991 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதியன்று கடற்படையில் இணைக்கப்பட்ட ஐஎன்எஸ் கிர்பான் ஒரு குக்ரி வகை ஏவுகணை போர்க் கப்பலாகும்.
- இது 25 நாட் என்ற அளவிற்கும் மேலான வேகத்தில் இயங்கும் திறன் கொண்டது.

## அமெரிக்காவில் மீன்கள் கொத்தாக உயிரிழப்பு



- "மீன்கள் கொத்தாக உயிரிழத்தல்" என்று அழைக்கப்படும் ஒரு நிகழ்வினால் இறந்த ஆயிரக்கணக்கான மீன்கள் அமெரிக்காவில் தென்கிழக்கு டெக்சாஸ் கடற்கரைகளில் கரை ஒதுங்கின.
- இது ஒரு குறுகிய காலத்தில் மற்றும் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் பல மீன்கள் அல்லது பிற நீர்வாழ் விலங்குகள் திடீரென மற்றும் எதிர்பாராத விதமாக உயிர் இழக்கும் நிகழ்வாகும்.
- இந்நிகழ்வில் பெரும்பாலும், நீரில் உள்ள ஆக்ஸிஜனின் அளவு குறைவதன் காரணமாக மீன்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவதால் அவை உயிரிழக்கின்றன.

## ஹிரோஷிமா செயற்கை நுண்ணறிவுச் செயல்முறை

- ஜப்பான் நாட்டினால் நடத்தப்படும் வருடாந்திர G7 நாடுகளின் உச்சி மாநாடானது ஹிரோஷிமா நகரில் நடைபெற்றது.
- G7 ஹிரோஷிமா தலைவர்களின் அறிவிப்பில் ஹிரோஷிமா செயற்கை நுண்ணறிவுச் செயல்முறையை (HAP) தொடங்கப்படுவது குறித்து அறிவிக்கப்பட்டது.
- இது செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பப் பயன்பாட்டினை நன்கு ஒழுங்குமுறைப் படுத்தச் செய்வதற்கான பல்வேறு முற்போக்கு வழிமுறைகளைத் தீர்மானிப்பதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- நம்பகமான செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தினைப் பற்றிய பொதுவான நோக்கம் மற்றும் இலக்கை அடைவதற்கு, உள்ளார்ந்த செயற்கை நுண்ணறிவு ஆளுமை மற்றும் இயங்குந்தன்மை பற்றியப் பல சர்வதேச விவாதங்களை முன்னெடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 'அமெரிக்க நாட்டிற்குள் இருந்தபடியே' H-1B நுழைவு இசைவுச் சீட்டினை புதுப்பித்தல்

- மக்களுக்கான முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, 'அந்த நாட்டிற்குள் இருந்தபடியே' H-1B நுழைவு இசைவுச் சீட்டினைப் புதுப்பித்தல் செயல்முறையை அமெரிக்கா அறிமுகப் படுத்த உள்ளது.
- H-1B நுழைவு இசைவுச் சீட்டுடன் அமெரிக்காவில் பணிபுரியும் பல இந்தியர்களுக்கு H-1B நுழைவு இசைவுச் சீட்டினைப் புதுப்பித்தல் செயல்முறையை சீராக்குவதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- அமெரிக்க நிறுவனங்களில் கோட்பாடு சார்ந்த அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவம் தேவைப்படும் பல்வேறு சிறப்புத் தொழில்துறைகளில் வெளிநாட்டு ஊழியர்களைப் பணி அமர்த்துவதற்கு அனுமதிக்கிற H-1B நுழைவு இசைவுச் சீட்டு என்பது குடியேற்றம் அல்லாத (தற்காலிக) நுழைவு இசைவுச் சீட்டு ஆகும்.
- H-1B நுழைவு இசைவுச் சீட்டானது, ஒரு சமயத்தில் மூன்று ஆண்டுகளுக்கு என்று செல்லுபடியாகும் வகையில் வழங்கப்படுகிறது.
- 2004 ஆம் ஆண்டு வரையில், குறிப்பிட்ட வகை குடியேற்றம் அல்லாத நுழைவு இசைவுச் சீட்டுகளை, குறிப்பாக H-1B, அமெரிக்காவிற்குள்ளேயேப் புதுப்பிக்கப்படக் கூடியதாக அல்லது முத்திரையிடப் படக்கூடியதாக இருந்தது.

❖ அதன் பிறகு, H-1B புதுப்பித்தலுக்காக வேண்டி, தொழிலாளர்கள் தங்கள் கடவுச்சீட்டில் H-1B விசாவினை நீட்டிப்பிற்கான அனுமதியினைப் பெற தங்கள் சொந்த நாட்டிற்குச் செல்ல வேண்டியதாக இருந்தது.

| | |
|---|---|
| **2.7 million** | Indian-origin persons in the US as of 2021, according to Migration Policy Institute |
| **73%** | Share of H-1B visas given to Indians in 2022 |
| **5** | Number of Indian-origin members in the US Congress |
| **#6** | India's rank in foreign tourist arrivals to the US (2022) |
| **28.60%** | Share of US in foreign tourist arrivals to India, the highest (2021) |

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2022-23

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது 2022-23 ஆம் ஆண்டிற்கான தனது ஆண்டறிக்கையை (வருடாந்திர ரீதியிலான அறிக்கை) சமீபத்தில் வெளியிட்டது.

❖ ஒரு நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகள் மற்றும் பொருளாதார நிலை குறித்தத் தகவல்களை இந்த அறிக்கை வழங்குகிறது.

❖ 2022-23 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் மொத்த வருமானம் 2.35 லட்சம் கோடி ரூபாயாகும்.

❖ இது 2021-22 ஆம் ஆண்டிற்கான வருமானமான 1.6 லட்சம் கோடியை விட 47% அதிகம் ஆகும்.

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது 87,416.2 கோடி ரூபாய் ஈவுத் தொகையினை மத்திய அரசின் கணக்கிற்கு மாற்ற உள்ளது.


❖ இது 2021-22 ஆம் ஆண்டில் பரிமாற்றம் செய்யப் பட்டத் தொகையை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.


❖ 2018-19 ஆம் ஆண்டில் 15.5 சதவீதமாக இருந்த மொத்தக் கடன்களில் மொத்த வாராக் கடன்களின் பங்கானது 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் முடிவடைந்த காலாண்டில் 5.8% ஆகக் குறைந்துள்ளது.

❖ 2022-23 ஆம் ஆண்டில், 30,252 கோடி மதிப்பிலான 13,530 வங்கி மோசடி வழக்குகள் பதிவாகியுள்ளது.

❖ 2021-22 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கைகள் முறையே 9,097 ஆகவும், தொகை 59,819 கோடி ரூபாயாகவும் இருந்தது.

- ❖ மொத்த அன்னிய நேரடி முதலீடு (FDI) ஆனது 2022-23 ஆம் ஆண்டில் மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 46 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது.
- ❖ இது முந்தைய நிதியாண்டை விட 26% குறைவாகும்.
- ❖ 2022-23 ஆம் ஆண்டில், மொத்தப் பணவீக்கம் சராசரியாக 6.7% ஆகும்.
- ❖ மதிப்பின் அடிப்படையில், 500 மற்றும் 2000 ரூபாய் தாள்களின் பங்கானது, பணப் புழக்கத்தில் உள்ள ரூபாய்த் தாள்களின் மொத்த மதிப்பில் 87.9% ஆகும்.
- ❖ புழக்கத்தில் உள்ள இணைய வழி ரூபாய்-மொத்த விற்பனை மற்றும் இணையவழி ரூபாய்-சில்லறை விற்பனையின் மதிப்பு முறையே 10.69 கோடி மற்றும் 5.70 கோடி ரூபாயாக உள்ளது.




## போலியான 500 ரூபாய்த் தாள்களின் புழக்கம் அதிகரிப்பு

**Denomination-wise Counterfeit Notes Detected**

| Denomination (₹) | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 2 and 5 | 9 | 1 | 3 |
| 10 | 304 | 354 | 313 |
| 20 | 267 | 311 | 337 |
| 50 | 24,802 | 17,696 | 17,755 |
| 100 | 1,10,736 | 92,237 | 78,699 |
| 200 | 24,245 | 27,074 | 27,258 |
| 500 (Specified Banknotes) | 9 | 14 | 6 |
| 500 | 39,453 | 79,669 | 91,110 |
| 1000 (Specified Banknotes) | 2 | 11 | 482 |
| 2000 | 8,798 | 13,604 | 9,806 |
| **Total** | **2,08,625** | **2,30,971** | **2,25,769** |

- ❖ 2023 ஆம் நிதியாண்டில் சுமார் 91,110 போலியான 500 ரூபாய்த் தாள்கள் கண்டுபிடிக்கப் பட்டன.

- 2022-23 ஆம் ஆண்டில், இந்திய ரிசர்வ் வங்கியில் 4.6 சதவிகிதம் போலி இந்திய ரூபாய்த் தாள்களும், மற்ற வங்கிகளில் 95.4 சதவிகித போலியான இந்திய ரூபாய்த் தாள்களும் கண்டுபிடிக்கப்பட்டன.
- அதே ஆண்டில் 78,699 போலியான 100 ரூபாய்த் தாள்களும் மற்றும் 806 போலியான 2000 ரூபாய்த் தாள்களும் கண்டறியப் பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## 2023 ஆம் நிதியாண்டின் நிதிப் பற்றாக்குறை இலக்கு

- 2022-23 ஆம் நிதியாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.4 சதவீத நிதிப் பற்றாக் குறை என்ற இலக்கை மத்திய அரசு எட்டியுள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை 17.33 லட்சம் கோடி ரூபாய் அல்லது 6.4 சதவீதமாக உள்ளது.
- ஆனால் 2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்ட ஒரு திருத்தப்பட்ட மதிப்பீடான 17.55 டிரில்லியன் ரூபாயை விட இந்தப் பற்றாக்குறை குறைவாக இருந்தது.
- 2023 ஆம் நிதியாண்டிற்கான மொத்த வருவாய் வரவுகள் ரூ.24.56 லட்சம் கோடியாகவும், மொத்தச் செலவினம் ரூ.41.89 லட்சம் கோடியாகவும் இருந்தது.
- 23.84 டிரில்லியன் ரூபாய் வருவாய் வரவுகளில், 20.97 டிரில்லியன் ரூபாய் வரி வருவாய் ஆகும்.
- வரி அல்லாத வருவாய் சுமார் 2.86 டிரில்லியன் ரூபாயாக இருந்த நிலையில், இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த 116.4% என்ற அளவை விட குறைவாக இருந்தது.
- நிகர வரி வருவாய் மற்றும் வரி அல்லாத வருவாய் ஆகியவற்றில் முறையே 13.9% மற்றும் 8.2% சரிவானது பதிவாகியுள்ளது.




## இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி

- 2022-23 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 6.1% ஆக உள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில், நம் நாட்டின் பொருளாதாரமானது முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டில் முறையே 13.1 சதவீதம், 6.2 சதவீதம் மற்றும் 4.5 சதவீதமாக வளர்ச்சி பெற்றது.
- 2022-23 ஆம் நிதியாண்டில், இந்தியாவின் பொருளாதாரமானது 7.2 சதவீதமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

- 2022 ஆம் நிதியாண்டில் 3.5% ஆக இருந்த வேளாண்மை, வனவியல் மற்றும் மீன்பிடித்தல் துறையில் மொத்த மதிப்புக் கூட்டலானது 2022-23 ஆம் நிதியாண்டில் 4% ஆக உயர்ந்து உள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் 4.7% ஆக இருந்த நிதி, மனை விற்பனை மற்றும் தொழில்முறைச் சேவைகள் ஆனது 2022-23 ஆம் நிதியாண்டில் 7.1% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- 2022 ஆம் நிதியாண்டில் 92,583 கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் மூலதனத் தேசிய வருமானம் (நிகரம்) ஆனது 2022-23 ஆம் நிதியாண்டில் 98,374 கோடி ரூபாயாக உயர்ந்து உள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் 11.1% ஆக இருந்த இந்தியாவின் உற்பத்தித் துறையின் வளர்ச்சி என்பது 2022-23 ஆம் நிதியாண்டில் 1.3% அதிக சரிவைக் கண்டது.
- 2022 ஆம் நிதியாண்டில் 14.8% ஆக இருந்த கட்டுமானத் துறையின் வளர்ச்சியானது, 2022-23 ஆம் நிதியாண்டில் 10% ஆக குறைந்துள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் பொருளாதாரம் 9.1 சதவீதமாக வளர்ச்சி பெற்றது.




## இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி




- கடந்த 9 ஆண்டுகளில் இந்தியாவின் ராணுவ ஏற்றுமதியில் அசாதாரணமாக 23 மடங்கு உயர்வானது பதிவு செய்யப் பட்டுள்ளது.

- இந்தியாவின் பாதுகாப்புத் துறையின் ஏற்றுமதிகள் ஆனது 2022-23 ஆம் நிதியாண்டில் இதுவரையில் இல்லாத அளவுக்கு 16,000 கோடி ரூபாயினை (1.9 பில்லியன் டாலர்) எட்டி உள்ளது.
- 2013-14 ஆம் நிதியாண்டில் இது 686 கோடி ரூபாயாக (82 மில்லியன் டாலர்) இருந்தது.
- இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சியடைந்த நிலையில் 2013-17 மற்றும் 2018-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அதன் பாதுகாப்பு இறக்குமதி 11 சதவீதம் குறைந்துள்ளது.

## இணைய வழி மேல்முறையீடுத் திட்டம் 2023

- மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான இணையவழி மேல்முறையீட்டுத் திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இது வருவாய் வரி விவகாரங்களுக்கான மேல்முறையீடுகளை விரைவுபடுத்தும்.
- நேரடி முறையீடு சாராத மேல்முறையீட்டுத் திட்டத்தின் கீழ், மேல்முறையீட்டு ஆணையருக்கும் வரி செலுத்துபவருக்கும் இடையிலான அனைத்து விதமான தகவல் தொடர்புகளும் தேசிய நேரடி முறையீடு சாராத மேல்முறையீட்டு மையம் (NFAC) மூலம் மேற்கொள்ளப் படுகின்றன.
- இணையவழி மேல்முறையீட்டுத் திட்டத்தின் கீழ் வருமான வரி (மேல்முறையீடுகள்) இணை ஆணையர் மற்றும் வரி செலுத்துபவருக்கு இடையேயான பல தொடர்புகள் இணைய தளம் வழியாக மேற்கொள்ளப்படுகின்றன.
- ஆனால் தேசிய நேரடி முறையீடு சாராத மேல்முறையீட்டு மையம் ஈடுபடாததால் இது நேரடியான ஒரு செயல்முறையாகும்.
- இது விரைவான தகவல்தொடர்புக்கு வழிவகுக்கச் செய்வதோடு மேல்முறையீடுகளைத் தீர்ப்பதில் உள்ள நேர இடைவெளியையும் இது குறைக்கும்.

## உலகின் 2வது பெரிய கச்சா எஃகு உற்பத்தியாளர் நாடு

| Key parameters | FY 2014-15 | FY 2022-23 | % increase |
|---|---|---|---|
| Crude steel Capacity (MT) | 109.85 | 160.3 | 46% |
| Crude steel Production (MT) | 88.98 | 126.26 | 42% |
| Total Finished Steel Production (MT) | 81.86 | 122.28 | 49% |
| Consumption (MT) | 76.99 | 119.86 | 57% |
| Per capita steel consumption (in Kg) | 60.8 | 86.7 | 43% |

- 2014-15 ஆம் ஆண்டில் நான்காவது பெரிய கச்சா எஃகு உற்பத்தியாளர் நாடாக இருந்த இந்தியா 2022-23 ஆம் ஆண்டில் இரண்டாவது பெரிய கச்சா எஃகு உற்பத்தியாளர் நாடாக மாறியுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 6.02 மெட்ரிக் டன் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், 6.72 மெட்ரிக் டன் எஃகு ஏற்றுமதியினை மேற்கொண்டு, நிகர எஃகு ஏற்றுமதியாளர் நாடாக இந்தியா திகழ்கிறது.

- ❖ 2022-23 ஆம் நிதியாண்டில், இந்தியாவின் மொத்தச் செயல்முறையாக்கப்பட்ட எஃகு உற்பத்தி 122.28 மெட்ரிக் டன் ஆகும்.
- ❖ 2014-15 ஆம் நிதியாண்டில் இருந்த 81.86 மெட்ரிக் டன்கள் என்ற அளவுடன் ஒப்பிடச் செய்கையில் இது 49% அதிகமாகும்.

## நிதி உள்ளடக்கக் கட்டுப்பாட்டகம்

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் சமீபத்தில் 'அந்தர்த்ரிஷ்டி' என்ற பெயரிலான நிதி உள்ளடக்கக் கட்டுப்பாட்டகத்தினைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு அளவுருக்களைச் சேகரிப்பதன் மூலம் நிதி உள்ளடக்கத்தின் ஒரு முன்னேற்றத்தை மதிப்பிடச் செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான நுண்ணறிவை இது வழங்கும்.
- ❖ இந்த வசதியானது நாடு முழுவதிலும் உள்ள சிறிய அளவிலான ஒரு நிதி ஒதுக்கீட்டின் அளவை மதிப்பிட்டு, அத்தகையப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும்.

## இந்தியாவின் இணையப் பொருளாதாரம்




- ❖ கூகுள், டெமாசெக் மற்றும் பெயின் & கம்பெனி ஆகியவற்றினால் 'The e-Conomy of a Billion Connected Indians (இணையம் மூலம் இணைக்கப்பட்ட பில்லியன் கணக்கான இந்தியர்களின் பொருளாதாரம்)' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் தோராயமாக 175 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் இணையப் பொருளாதாரமானது 2030 ஆம் ஆண்டில் 1 டிரில்லியன் டாலராக உயரும்.
- ❖ தற்போது சுமார் 48% ஆக உள்ள இந்தியாவின் தொழில்நுட்பத் துறைக்கான இணையப் பொருளாதாரத்தின் பங்கு 2030 ஆம் ஆண்டில் 62% ஆக விரிவடையும்.
- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4-5% ஆக உள்ள இணையப் பொருளாதாரத்தின் பங்கானது, இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து சுமார் 12-13% வரை உயரும்.


## மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கை

- ❖ மும்பைப் பங்குச் சந்தை மற்றும் தேசியப் பங்குச் சந்தை நிறுவனம் ஆகியவை 500 கோடி ரூபாய்க்கும் குறைவான சந்தை மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களுக்காக மேம்படுத்தப் பட்ட கண்காணிப்புச் செயல்முறையை நிறுவியுள்ளன.
- ❖ குறைவான சந்தை மூலதனத்தைக் கொண்ட பல்வேறு நிறுவனங்களின் பங்குகளின் மதிப்புகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் கண்காணித்து அதைக் கட்டுப்படுத்தவும், சந்தைக்கு உறுதித் தன்மையை வழங்கவும் இந்தச் செயல்முறை ஒரு செயற்கருவியாக இருக்கும்.
- ❖ மேம்படுத்தப் பட்ட கண்காணிப்பு நடவடிக்கைக் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள பத்திரங்கள் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்குக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.





## 2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் உற்பத்தி

- ❖ 2013-14 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் தாவர எண்ணெய் இறக்குமதியின் மதிப்பு 7,249.85 மில்லியன் டாலரிலிருந்து (ரூ. 44,038.04 கோடி) 20,837.70 மில்லியன் டாலராக (ரூ. 167,269.99 கோடி) உயர்ந்துள்ளது.
- ❖ இந்தியாவில் ஆண்டிற்கு 24 முதல் 25 மில்லியன் டன் வரையில் சமையல் எண்ணெய் பயன்படுத்தப் படுகிறது.
- ❖ ஆனால், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தானியத்திலிருந்து 9-10 மில்லியன் டன் சமையல் எண்ணெய் மட்டுமே கிடைக்கப் பெறுகிறது.
- ❖ மீதமுள்ள 14-15 மில்லியன் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.




## நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கான முக்கிய நடவடிக்கைகள்




**RBI notifies 4 key measures to strengthen 1,514 Urban Co-operative Banks**

10 Jun 2023 • Banking & Finance

- RBI has notified **four key measures to strengthen 1,514 Urban Co-operative Banks (UCBs) in the country.**
- UCBs can **now open new branches up to 10% of the number of branches** in the previous financial year without prior approval of RBI in their approved area of operation.
- UCBs have to get the policy approved by their board and comply with the Financially Sound and Well Managed Norms.
- The **deadline to achieve PSL target of 60% also extended to March 31, 2024.**

- ❖ முன்னுரிமைத் துறைகளுக்கான கடன் வழங்கீட்டு இலக்குகளை அடைவதற்காக என்று மேலும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் உள்ளிட்ட நான்கு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- ❖ நாட்டில் உள்ள 1,514 நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்துவதற்காக இந்த நான்கு முக்கிய நடவடிக்கைகளானது மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- ❖ நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் தற்போது, இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி எதுவுமின்றிப் புதிய கிளைகளை (அதிகபட்சம் 5 கிளைகள்) தொடங்கலாம்.
- ❖ வணிக வங்கிகளுக்கு இணையாக நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளும் ஒற்றை வரம்பில் கடனைத் திரும்பி செலுத்துதல் முறையினை மேற்கொள்ளலாம்.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்காக ஒரு தலைமை அதிகாரியை நியமிக்க உள்ளதாகவும் அறிவித்தது.

## உலக எண்ணிமப் பண வழங்கீடுகள்




- 2022 ஆம் ஆண்டில், எண்ணிமப் பண வழங்கீட்டில் முன்னணியில் உள்ள ஐந்து நாடுகளின் பட்டியலில் 89.5 மில்லியன் எண்ணிமப் பரிவர்த்தனைகளுடன் இந்தியா முதலிடத்தினைப் பெற்றுள்ளது.
- உலகின் நிகழ்நேரப் பண வழங்கீட்டில் இந்தியா 46% பங்கைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் மேற்கொள்ளப்படும் எண்ணிமப் பணப் பரிவர்த்தனைகள் மற்ற நான்கு முன்னணி நாடுகளின் கூடுதலை விட அதிகமாக உள்ளது.
- 29.2 மில்லியன் பரிவர்த்தனைகளுடன் பிரேசில் இரண்டாவது இடத்திலும் மற்றும் 17.6 மில்லியன் எண்ணிமப் பரிவர்த்தனைகளுடன் சீனா மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- 16.5 மில்லியன் எண்ணிமப் பரிவர்த்தனைகளுடன் தாய்லாந்து 4வது இடத்தில் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து 8 மில்லியன் மதிப்பிலான பரிவர்த்தனைகளுடன் தென் கொரியா இடம் பெற்றுள்ளது.

## மூன்றாவது வரிப் பகிர்வு

- மத்திய அரசானது மாநில அரசுகளுக்கான 1.18 டிரில்லியன் வரிப் பகிர்வின் மூன்றாவது தவணையை வழங்கியது.
- இது சாதாரண மாதாந்திரப் பகிர்மானமான ரூ.59,140 கோடியை விட சற்று அதிகமாகும்.
- மத்திய அரசின் வரிகள் மற்றும் கட்டணங்களின் மீதான நிகர வருமானமானது உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு ரூ.21,218 கோடி, தமிழக மாநிலத்திற்கு ரூ.4,825 கோடி, தெலுங்கானா மாநிலத்திற்கு ரூ.2,486 கோடி மற்றும் பீகார் மாநிலத்திற்கு ரூ.11,897 என அனைத்து மாநிலங்களுக்கும் பகிரப் படுகிறது.

**State-wise distribution of Net Proceeds of Union Taxes and Duties for June 2023**

| Sl. No | Name of State | Total (₹ Crore) |
|---|---|---|
| 1 | ANDHRA PRADESH | 4787 |
| 2 | ARUNACHAL PRADESH | 2078 |
| 3 | ASSAM | 3700 |
| 4 | BIHAR | 11897 |
| 5 | CHHATTISGARH | 4030 |
| 6 | GOA | 457 |
| 7 | GUJARAT | 4114 |
| 8 | HARYANA | 1293 |
| 9 | HIMACHAL PRADESH | 982 |
| 10 | JHARKHAND | 3912 |
| 11 | KARNATAKA | 4314 |
| 12 | KERALA | 2277 |
| 13 | MADHYA PRADESH | 9285 |
| 14 | MAHARASHTRA | 7472 |
| 15 | MANIPUR | 847 |
| 16 | MEGHALAYA | 907 |
| 17 | MIZORAM | 591 |
| 18 | NAGALAND | 673 |
| 19 | ODISHA | 5356 |
| 20 | PUNJAB | 2137 |
| 21 | RAJASTHAN | 7128 |
| 22 | SIKKIM | 459 |
| 23 | TAMIL NADU | 4825 |
| 24 | TELANGANA | 2486 |
| 25 | TRIPURA | 837 |
| 26 | UTTAR PRADESH | 21218 |
| 27 | UTTARAKHAND | 1322 |
| 28 | WEST BENGAL | 8898 |
| | Grand Total | 118280 |

## கடல்சார் உணவுப்பொருட்களின் அதிக ஏற்றுமதி

- 2022-23 ஆம் ஆண்டில், இந்தியாவின் கடல்சார் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியானது, அளவு மற்றும் மதிப்பு ஆகிய இரண்டின் அடிப்படையிலும், முன்பு எப்போதும் இல்லாத அளவிலான உயர்வினை எட்டியுள்ளது.
- இந்த நிதியாண்டில் ரூ.63,969.14 கோடி (8.09 பில்லியன் டாலர்) மதிப்பிலான 1.7 மில்லியன் டன் கடல்சார் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.
- இது 2021-22 ஆம் ஆண்டில் அளவின் அடிப்படையில் 26.73 சதவீதமும் அதன் மதிப்பின் அடிப்படையில் 4.31 சதவீதமும் அதிகரித்துள்ளது.
- பதப்படுத்தப்பட்ட இறால், மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஏற்றுமதிப் பொருளாக தன் நிலையைத் தக்க வைத்துக் கொண்டது.
- பதப்படுத்தப்பட்ட மீன், அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட இரண்டாவது பொருளாகும்.

- அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்திய கடல்சார் உணவுப் பொருட்களுக்கான முக்கியச் சந்தைகளாக விளங்குகின்றன.
- தென்கிழக்கு ஆசியா நான்காவது பெரியச் சந்தையாக விளங்குகின்றது.





## முதல் இழப்பு இயல்புநிலை உத்தரவாதம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, முதல் இழப்பு இயல்புநிலை உத்தரவாதக் கட்டமைப்பிற்கு (FLDG) தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, இந்திய நிதிசார் தொழில்நுட்ப வங்கிகள் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்களுடன் பங்குதாரராக இணைய வழி வகுக்கிறது.
- இந்த முடிவானது தரவு-தொழில்நுட்பம் சார்ந்த வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிசார் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான மிகவும் ஒரு சாதகமான நடவடிக்கையாக பார்க்கப் படுகிறது.
- மேலும், இந்த நடவடிக்கையானது எண்ணிமக் கடன் வழங்கீட்டுச் சூழலை நன்கு வலுப் படுத்தும்.
- இது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் (REs) மற்றும் கடன் வழங்கீட்டுச் சேவை வழங்கும் நிறுவனங்கள் (LSPs) அல்லது இரண்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையேயான இயல்புநிலை இழப்பு உத்தரவாத நடவடிக்கையானது (DLG) பொதுவாக FLDG என அழைக்கப் படுகிறது.



### ரஷ்ய எண்ணெய் இறக்குமதியானது வரலாறு காணாத அளவிற்கு உயர்வு

- ❖ இந்தியாவினால் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி என்பது, மே மாதத்தில் ஒரு நாளைக்கு சுமார் 1.95 மில்லியன் பீப்பாய்கள் என்ற சாதனை அளவினை எட்டியுள்ளது.
- ❖ இந்தியா உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் நுகர்வோர் மற்றும் இறக்குமதியாளர் நாடாக உள்ளது.
- ❖ இந்திய நாடானது, வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து 80 சதவீதத்துக்கும் அதிகமான அளவில் எண்ணெய்யினைக் கொள்முதல் செய்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


### வழிகாட்டுச் செயற்கைக்கோள் – NVS 01

- ❖ இஸ்ரோ நிறுவனமானது, இந்தியாவின் அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த NVS-01 எனப்படும் ஒரு வழிகாட்டுச் செயற்கைக்கோளினை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- ❖ இந்தியாவின் இரண்டாம் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த NavIC என்ற ஒரு வகை செயற்கைக் கோள்களில் NVS-01 முதன்மையானதாகும்.
- ❖ இது நாட்டின் வழிசெலுத்தல் திறன்களை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இந்த வலையமைப்பானது, இந்தியா உட்பட, இந்திய எல்லைக்கு அப்பால் 1500 கிமீ வரையிலான பகுதியையும் உள்ளடக்கியதாகும் .
- ❖ இதன் சமிக்ஞைகள் 20 மீட்டருக்கு மேலான உயரத்தில் ஒரு பயனர் நிலையின் துல்லியத் தன்மையையும், 50 நானோ விநாடிகளுக்கு மேலான நேரத் துல்லியத்தையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.




## GS-9209 அண்டத்தில் மீப்பெரும் கருந்துளை


- பல்வேறு ஆராய்ச்சியாளர்களால் GS-9209 என்ற அண்டத்தில் ஒரு மீப்பெரும் கருந்துளை இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது பூமியிலிருந்து 25 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இது மிகவும் தொலைதூரத்தில் அமைந்துள்ளதாக இதுவரையில் கண்டுபிடிக்கப் பட்டுப் பதிவு செய்யப் பட்டுள்ள கருந்துளைகளில் ஒன்றாகும்.
- GS-9209 அண்டமானது 2004 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இது அண்ட பெரு வெடிப்பிற்குப் பிறகு சுமார் 600 முதல் 800 மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் இது உருவானது.



## சிறிய வகை அணுக்கரு உலைகள்

- தூய்மையான ஆற்றல் மாற்றத்திற்கான உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில் 300 மெகாவாட் திறன் கொண்ட சிறிய வகை அணுக்கரு உலைகளை (SMR) உருவாக்கச் செய்வதற்கு இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது.
- இடம் மாற்றக் கூடிய மற்றும் விரைவானத் தொழில்நுட்பம் என்பதால், SMR ஆனது, ஒரு தளத்தில் கட்டமைக்கப் பட்ட நன்கு வழக்கமான அணு உலைகளைப் போலல்லாமல் இது தொழிற் சாலைகளிலும் நிறுவப்படக் கூடியது.

- ❖ எனவே, செலவு மற்றும் கட்டுமான நேரத்தில் ஒரு குறிப்பிடத்தக்கச் சேமிப்பினை இது வழங்குகிறது.
- ❖ இவை தொழில்துறை குறித்த கார்பன் நீக்கத்தில், குறிப்பாக ஒரு நம்பகமான மற்றும் தொடர்ச்சியான மின்சாரச் சேவை தேவைப்படும் இடங்களில் ஒரு நம்பிக்கைக்குரியத் தொழில்நுட்பமாகும்.
- ❖ பெரிய அளவிலான அணுமின் நிலையங்களுடன் ஒப்பிடும்போது இவ்வகை உலைகள் எளிமையானது மற்றும் பாதுகாப்பானது என்று கூறப்படுகிறது.





## டாம் தீநிரல்

- ❖ இந்திய கணினி அவசரநிலை நடவடிக்கைக் குழு அல்லது CERT-IN ஆனது ஆண்ட்ராய்டு தீநிரலுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்துள்ளது.
- ❖ 'டாம்', எனப்படும் தீநிரல் கைபேசிகள் போன்ற ஆண்ட்ராய்டு சாதனங்களில் ஊடுருவி, அழைப்புப் பதிவுகள், தொடர்புகள், வரலாறு மற்றும் ஒளிப்படப் பதிவுகள் போன்ற பல பயனர்களின் முக்கியமானத் தரவுகளை முடக்குவதாகக் கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ இந்த தீநிரல் ஆனது, "தீம்பொருள் எதிர்ப்பு நிரல்களையும் தவிர்த்து, இலக்கு வைக்கப் பட்டச் சாதனங்களில் பணயத் தீநிரல்களை நிறுவும்" திறன் கொண்டது.
- ❖ இது நம்பத்தகாத / தெரியாத மூல ஆதாரங்களில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட மூன்றாம் தரப்பு இணைய தளங்கள் அல்லது சில செயலிகள் மூலம் பரவச் செய்யப் படுகிறது.



## 2023 FW13

- ❖ சமீபத்தில் பூமியை ஒட்டி அமைந்த ஒரு புதிய குறுங்கோள் ஒன்றினைச் சமீபத்தில் அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ 2023 FW13 எனப் பெயரிடப்பட்ட இந்தக் குறுங்கோள் ஆனது "நிலவு போன்ற" அல்லது "துணைக் கோள் போன்ற" ஒரு வான் பொருளாகக் கருதப்படுகிறது.
- ❖ இந்தப் புதிய வானியல் சார்ந்த அமைப்பானது பூமியைப் போலவே சூரியனைச் சுற்றி வருகிறது.
- ❖ நிலவு போன்ற இந்த வான்பொருளானது 50 அடி (15 மீட்டர்) அளவு கொண்டதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ சூரியனைச் சுற்றி வரும் போது, இந்த நிலவு போன்ற வான் பொருளும் பூமியைச் சுற்றி வருகிறது.
- ❖ இது பூமியிலிருந்து சுமார் ஒன்பது மில்லியன் மைல்கள் (14 மில்லியன் கிலோமீட்டர்) தொலைவில் சுற்றி வருகிறது.
- ❖ இது பூமியின் நிலவு போன்று அமைந்த ஒரே துணை வான் பொருளல்ல.
- ❖ 2016 ஆம் ஆண்டில் காமோ'ஒயலேவா எனப்படும் மற்றொரு துணைக்கோள் போன்ற வான் பொருள் கண்டுபிடிக்கப் பட்டது.





## இஸ்ரேல்-1 மீத்திறன் கணினி

- ❖ என்விடியா கார்ப்பரேஷன் என்ற நிறுவனமானது, இஸ்ரேல்-1 எனப்படும் உலகின் மிக சக்தி வாய்ந்த செயற்கை நுண்ணறிவு மீத்திறன் கணினிகளுள் ஒன்றினை உருவாக்க உள்ளது.
- ❖ இஸ்ரேல்-1 கணினியானது செயற்கை நுண்ணறிவின் உச்சகட்டச் செயல்திறனின் 8 எக்ஸாஃப்ளாப்ஸ் வரையிலான ஒரு செயல்திறனை வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ எக்ஸாஃப்ளாப் என்பது ஒரு மீத்திறன் கணினிக்கானச் செயல்திறன் அளவீடு ஆகும்.
- ❖ இது ஒரு வினாடிக்கு குறைந்தது ஒரு குவிண்டில்லியன் (1018) எண்ணியல் குறியாக்கச் செயல்பாடுகளைக் கணக்கிடக் கூடியது ஆகும்.

## நியூராலிங்க் சில்லுகள்


- எலோன் மஸ்க் 2016 ஆம் ஆண்டில் நியூராலிங்க் என்ற ஒரு நரம்பியல் தொழில்நுட்ப நிறுவனத்தினை நிறுவினார்.
- நியூராலிங்க் தற்போது மூளை-கணினி இடைமுகம் எனப்படும் ஒரு மூன்றாம் வகை மருத்துவச் சாதனத்தை உருவாக்கி வருகிறது.
- இந்தச் சாதனம் ஆனது மூளையினை ஊடலைச் சமிஞ்ஞைகள் மூலம் ஒரு வெளிப்புறக் கணினியுடன் இணைத்து, முன்னும் பின்னுமாக ஒரு தொடர்ச்சியான தொடர்பினைச் செயல்படுத்துகிறது.
- இந்தச் சாதனமே இணைப்பு (லிங்க்) எனப்படும் நாணய அளவிலான ஒரு செயல்பாட்டு அலகு ஆகும்.
- இது ஒரு துல்லியமான அறுவைச் சிகிச்சையினை மேற்கொள்ளச் செய்யும் ஒரு எந்திரத்தினைப் பயன்படுத்தி மண்டை ஓட்டில் ஏற்படுத்தப் படும் ஒரு சிறிய வட்டு வடிவ சிறு பகுதியில் பொருத்தப் படுகிறது.
- இந்த சில்லுக்களிலிருந்து ஆயிரம் சிறிய நியூரான்களைப் பிரித்து மூளையில் உள்ள சில நியூரான்களுடன் இந்த எந்திரம் இணைக்கிறது.




## புதிய புறக்கோள்

- இதுநாள் வரை அறியப்பட்ட அதிக அடர்த்தி கொண்ட மற்றும் வியாழனை விட 13 மடங்கு நிறை கொண்ட புதிய வியாழன் கோள் அளவிலான புறக்கோள் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- இஸ்ரோவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அபு - PRL மேம்பட்ட ஆரத் திசைவேக வானியல் ஆராய்ச்சி அலைமானியை (PARAS) பயன்படுத்தி இந்த மிகப்பெரிய புறக்கோளின் கண்டுபிடிப்பானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புறக்கோள் ஆனது, TOI4603 அல்லது HD 245134 எனப்படும் நட்சத்திரத்தைச் சுற்றிக் காணப்படுகிறது.
- இது 731 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

- ❖ இது TOI4603 என்ற துணை இராட்சத F-வகை நட்சத்திரத்தினை 7.24 நாட்களுக்கு ஒரு முறை சுற்றி வருகிறது.
- ❖ இந்தக் கண்டுபிடிப்பானது இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது புறக் கோள் கண்டுபிடிப்பினைக் குறிக்கிறது
- ❖ மற்ற 2 கண்டுபிடிப்புகள் 2018 (K2-236b) மற்றும் 2021 (TOI-1789b) ஆகிய ஆண்டுகளில் மேற் கொள்ளப் பட்டன.




## ஃபட்டா / கான்குவரர் ஏவுகணை

- ❖ ஈரானின் ஒரு புதிய ஏவுகணையான கான்குவரர் எந்தவொருப் பிராந்திய ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பையும் ஊடுருவக் கூடியது என கூறப்படுகிறது.
- ❖ இந்த ஹைப்பர்சோனிக் ஏவுகணையானது ஒலியை விட சுமார் 15 மடங்கு வேகத்தில் செல்லும் திறன் கொண்டது ஆகும்.
- ❖ இது 1,400 கிலோமீட்டர்கள் (870 மைல்கள்) வரை செல்லக் கூடியது ஆகும்.




## வருணாஸ்திரா கடற்கணை

- ❖ வருணாஸ்திரா எனப்படும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு கனரகக் கடற்கணையானது (HWT) சமீபத்தில் வெற்றிகரமாகப் பரிசோதனை செய்யப் பட்டது.

- குறைவான வீச்சளவு வழிசெலுத்தல் அமைப்புகளைக் கொண்டுள்ள வருணாஸ்திரா என்பது கப்பலிலிருந்து ஏவப்படக் கூடிய நீர்மூழ்கி எதிர்ப்பு கடற்கணையாகும்.
- இவை 40 நாட் என்ற அதிகபட்ச வேகத்தினையும், 600 மீ ஆழம் வரை இயங்கும் ஒரு ஆற்றலையும் கொண்டுள்ளது.




## ஒளியால் இயங்கும் மீ மின்தேக்கிகள்




- ஒளியைப் பயன்படுத்தி மின்னேற்றம் செய்யக்கூடிய வகையிலான எளிதில் சுமந்து செல்லக் கூடிய மீ மின்கடத்திகளை இந்திய மற்றும் கொரிய ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது திறன் பேசிகள் மற்றும் வரைபட்டிகை போன்ற சிறிய மற்றும் உடலில் அணியக் கூடிய சாதனங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வழக்கமான லித்தியம்-அயனி மின்கலங்களுக்கு மாற்றாக அமையும்.
- இருப்பினும், இந்த வகை மீ மின்தேக்கிகளானது விரைவாக மின்னேற்றமடையும் திறன் மற்றும் மின்னிறக்கமடையும் திறன் ஆகியவற்றைக் கொண்டதாகும்.
- வழக்கமான மின்கலங்களைப் போல இவை வேதிச் சிதைவுக்கு உட்படாததால் அவை நீண்ட நாட்கள் நீடித்து உழைக்கின்றன.
- ஒரு மீ மின்கடத்திச் சாதனமானது மின்முனை, மின்பகுளி மற்றும் மின்னேற்றச் சேமிப்பான் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தின் 20வது ஆண்டு நிறைவு விழா




- ❖ ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது 2023 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று, மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டதன் 20வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.
- ❖ மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலமானது 2003 ஆம் ஆண்டில் ஐரோப்பாவினால் விண்ணில் ஏவப்பட்ட முதல் கோள் ஆய்வுக் கலமாகும்.
- ❖ எட்டு கருவிகளைக் சுமந்து சென்று, பீகிள் 2 என்ற தரையிறங்கு ஆய்வுக் கலத்தினைச் செவ்வாய்க் கிரகத்தில் இது இறக்கியது.

## இனச்சேர்க்கை நிகழாமலேயே முட்டையிட்ட முதலை

- ❖ இனச்சேர்க்கை நிகழாமலேயே முதலை முட்டையிட்ட ஒரு நிகழ்வினை (ஆண் துணை இல்லாமல்) பதிவு செய்துள்ளதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.
- ❖ கோக்குயிட்டா எனப் பெயரிடப்பட்ட இந்த முதலையானது பார்க் ரெப்டிலாண்டியா எனப்படும் கோஸ்டாரிக்கா உயிரியல் பூங்காவில் 16 ஆண்டுகளாகத் தனியாக வசித்து வந்தது.
- ❖ 2018 ஆம் ஆண்டில், அது அடைத்து வைக்கப்பட்டிருந்தக் கூண்டில் 14 முட்டைகளின் அடைவு கண்டுபிடிக்கப் பட்டது.
- ❖ அந்த முட்டைகளுள் ஒன்றில் முழுமையாக உருவம் பெற்ற முதலையின் கரு இருப்பது பின்னர் கண்டறியப்பட்டது.
- ❖ ஆண் இனம் இல்லாமல் இனப்பெருக்கம் செய்யும் திறன் விலங்கினங்களில் புதிதல்ல.
- ❖ இது ஃபேகல்டேட்டிவ் பார்த்தீனோஜெனீசிஸ் (நிலைமாற்று இனப்பெருக்கம்) என்று அழைக்கப் படுகிற நிலையில், இதன் மூலம் பெறப்பட்ட குட்டிகள் தாயின் டிஎன்ஏவை மட்டுமே பெற்றுள்ளன.
- ❖ இது முன்னர் பாம்புகள் மற்றும் பல்லிகள் மற்றும் சில வகையான மீன்களான சுறாக்கள், திருக்கை மீன் மற்றும் கொடுவா மீன் ஆகியவற்றில் காணப்பட்டது.
- ❖ இருப்பினும், க்ரோகோடிலியா வரிசையில் இது போன்ற ஒரு நிகழ்வு ஆவணப்படுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.



## விண்வெளியில் வறுத்தல் செயல்முறையினை மேற்கொள்ளச் செய்வதற்கான பரிசோதனை


- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், விண்வெளியில் முதல் முறையாக வறுத்தல் செயல்முறையினை மேற்கொண்டுள்ளனர்.
- 2,000 அடி உயரத்தில் நுண்ணீர்ப்பு விசையில், உருளைக் கிழங்கை உண்ணக் கூடிய அளவிற்குச் சமைக்க முடியுமா என்று சமீபத்தில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.
- உருளைக்கிழங்கின் மேற்பரப்பில் இருந்து எண்ணெய்க் குமிழ்கள் வெளியேறச் செய்யும் மிதப்பு என்ற ஒரு செயல்முறையானது, புவியீர்ப்பு விசையின்மையால் விண்வெளியில் நடைபெறுவதில்லை.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் குழுக்களால் மாதிரியாக்கப்பட்ட ஒரு சூழலில் வறுத்தல் செயல்முறையினை மேற்கொள்ள முடிந்தது.




## சூரியப் புயலின் மூல ஆதாரம்


- சூரியப் புயல் எனும் சூரியனிலிருந்து வெளியேறும் மின்னேற்றம் செய்யப்பட்ட துகள்கள் அல்லது பிளாஸ்மா உமிழ்வின் கதிரியக்கமானது சூரியக் குடும்பத்தில் உள்ள அனைத்து அமைப்புகள் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- பிளாஸ்மா மற்றும் அதனுடன் தொடர்புடையக் காந்தப்புலங்களின் பரவலை விரைவு படுத்துவது என்ன என்ற வினாவிற்கு விடையளிப்பதற்காகப் பார்க்கர் ஆய்வுக்கலம் பயன்படுத்தப்பட்டது.

- இந்தச் சூரியப் புயலானது வேகமாகவும் மெதுவாகவும் என வெவ்வேறு வேகங்களில் பரவுகிறது.
- பார்க்கர் ஆய்வுக் கருவி மூலம் சேகரிக்கப்பட்டத் தரவுகளானது, கரோனா துளைகளின் செயல்பாடுகள் பற்றிய நுண்ணறிவுகளை வெளிப்படுத்தியுள்ளது.
- ஒரு ஜெட் அமைப்பு சில பிரகாசமானப் புள்ளிகளாகத் தோன்றுவதைப் போல் காட்சிப் படுத்தப் படுகிற இந்தப் பகுதிகள் சூரியனின் மேற்பரப்பிலுள்ள குளியல் குழாய்களை போன்று அமைந்துள்ளன.
- இந்த கரோனா பகுதியில் ஏற்படும் துளைகள் சூரியனின் மண்டலத்தில் உள்ள வெப்பச் சலன ஓட்டங்களுடன் தொடர்புடையவை என்பதை இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் குறிப்பிடுகின்றன.
- ஒளிக்கோளத்திற்கு உள்ளேயும் வெளியேயும் செல்லும் காந்தப்புலங்கள் இந்த வெப்பச் சலன அடுக்குகளை உருவாக்குகின்ற நிலையில், இதன் விளைவாக புனல் போன்ற கட்டமைப்புகளுக்குள் காந்த ஆற்றல் தீவிரமடைகிறது.




## சுவாச சிங்க்சியல் வைரசினைக் கட்டுப்படுத்துதல்

- சுவாச சிங்க்சியல் வைரஸ் (RSV) தொற்றைக் கட்டுப்படுத்துவதில் மனித உடலில் உள்ள T செல்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று ஒரு புதிய ஆய்வு கூறுகிறது.
- T செல்கள் ஆனது RSV வைரசின் குறிப்பிட்ட ஆன்டிபாடி எதிர்வினை இல்லாத நிலையில் மனித நுரையீரல் திசுக்களில் ஏற்படும் RSV என்ற ஒரு தொற்றினைத் தன்னிச்சையாகக் கட்டுப்படுத்த முடியும்.
- ஆனால், தடுப்பூசியால் தூண்டப்பட்ட RSV வைரசிற்கான ஒரு குறிப்பிட்ட T செல் எதிர் வினையால் ஏற்படும் தொற்றினைத் தடுக்க முடியாது.
- முக்கியமாக ஆரோக்கியமான இளம் பருவத்தினரிடையே பொதுவான சளி பாதிப்பு அறிகுறிகளை ஏற்படுத்துகிற RSV என்பது அதிகளவில் தொற்றக் கூடிய வகையில் மற்றும் குறிப்பிட்டப் பருவகாலத்தில் பரவும் சுவாச வைரஸ் ஆகும்.
- குழந்தைகள், நோயெதிர்ப்புக் குறைபாடுள்ளவர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் இது மிகவும் தீவிரமான நுரையீரல் தொற்றுகளை ஏற்படுத்தும்.





## தபஸ் ஆளில்லா வான்வழி வாகனம்

- ❖ தபஸ் 201 ஆளில்லா வான்வழி வாகனமானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்தியக் கடற்படை ஆகியவை ஆளில்லா வான்வழி வாகனத்தின் இயக்க மற்றும் கட்டுப்பாட்டு திறன்களை தொலைதூரத்தில் அமைந்த ஒரு நிலக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து INS சுபத்ரா கப்பலுக்கு மாற்றுவதை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.
- ❖ இந்த ஆளில்லா வான்வழி வாகனம் (UAV) என்பது சுமார் 20,000 அடி (ASML) உயரத்தில் தடையின்றிப் பறக்கும் திறன் கொண்டதாகும்.
- ❖ தபாஸ் 201 நடுத்தர உயர வரம்புடைய நீண்ட நேரம் இயங்கும் திறன் (MALE) கொண்ட இந்த ஆளில்லா வான்வழி வாகனம் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்டது.
- ❖ உளவுத்துறை, கண்காணிப்பு மற்றும் ஆய்வுப் பணி ஆகிய பலவேறு பணிகளை மேற் கொள்வதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ இது இஸ்ரேலிய ஹெரான் ஆளில்லா வான்வழி வாகனத்தின் அதே ரகத்துடன் ஒப்பிடத் தக்கது ஆகும்.




## சிரல் போஸ்-திரவ நிலை

- ஆராய்ச்சியாளர்கள் முற்றிலும் புதிய பருப்பொருள் நிலையைக் கண்டறிந்துள்ளனர்.
- இதுவரை, உலகம் அறிந்த பருப்பொருளின் மூன்று நிலைகள் - திட, திரவ மற்றும் வாயு நிலை ஆகியனவாகும்.
- ஒரு சிறப்புப் பொருளின் இரண்டு அடுக்குகளை சுழிய வெப்பநிலையில் மிகவும் நன்கு நெருக்கமாகக் கொண்டு வருவதன் மூலம் சிரல்-போஸ் என்ற திரவ நிலை உருவாகிறது.
- இது பொதுவாகத் துகள்கள் தொடர்பு கொள்வதைத் தடுக்கும் சில உள்ளமைக்கப்பட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட அமைப்பாகும்.
- குவாண்டம் நிலையில், உலகம் அறிந்த மூன்று நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வழிகளில் இந்தப் பருப்பொருள் செயல்படுகிறது.



## நிலநடுக்கங்களுக்கும் காஸ்மிக் கதிர்வீச்சுக்கும் இடையிலான தொடர்பு





- பூமியின் மேற்பரப்பில் மதிப்பிடப்பட்ட காஸ்மிக் (அண்டம்) கதிர்வீச்சின் ஒரு செறிவில் ஏற்படும் பல மாற்றங்கள் மற்றும் நிலநடுக்கங்கள் ஆகியவற்றிற்கு இடையே ஒரு குறிப்பிடத் தக்க தொடர்பு காணப்படுவதை அறிவியலாளர்கள் அடையாளம் கண்டு உள்ளனர்.

- இந்தத் தொடர்பானது, இரண்டு வாரங்களுக்கு முன்னதாக நிலநடுக்கத்தைக் கணிக்க உதவும்.
- இதன் இடம் சார்ந்தப் பகுப்பாய்வுகள் ஒரு காஸ்மிக் கதிர்வீச்சின் செறிவு மற்றும் நில நடுக்கங்களுக்கு இடையே உள்ள தெளிவான தொடர்புகளை வெளிப்படுத்தவில்லை.
- உலக அளவில் நில அதிர்வுச் செயல்பாடுகளின் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது, இந்தத் தொடர்புகள் மிகவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளன.
- காஸ்மிக் கதிர்வீச்சின் செறிவில் ஏற்படும் மாற்றங்கள் முழு கிரகத்திலும் ஏற்படும் ஒரு நிகழ்வாக இருக்கலாம் என்று இது அறிவுறுத்துகிறது.

## காகிதத்தினால் ஆன மீமின்தேக்கி


- குஜராத் எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை நிறுவனம் (GERMI) மிக மெல்லிய, இலகு ரக மற்றும் மக்கும் தன்மையுடைய காகிதத்தினாலான ஒரு மீமின்தேக்கியினை உருவாக்கியுள்ளது.
- இது 10 வினாடிகளுக்குள் ஒரு சாதனத்தை முழுமையாக மின்னேற்றம் செய்யக்கூடிய திறன் கொண்டது ஆகும்.
- இது கடற்பாசியிலிருந்து (கடல்சார் பெரும்பூஞ்சை இனம்) உருவாக்கப் பட்டது.
- இந்தச் சாதனமானது மிகவும் அதிக இழுவிசை திறன் மற்றும் செயல்திறன் கொண்டது என்பதோடு இது விலை மலிவானதும் ஆகும்.
- மீமின்தேக்கி என்பது விரைவான மின்னேற்ற/மின்னிறக்கச் சுழற்சி கொண்ட, அதிக ஆற்றல் செறிவு மற்றும் நீண்ட ஆயுட்காலம் கொண்ட மின்வேதியியல் மின்னாற்றல் சேமிப்புச் சாதனமாகும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்ட வழிநடத்தல் குழு

- இந்தியாவின் ஒரு உயர் இலட்சியமிக்கத் திட்டமான சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தினை மேற்பார்வையிடுவதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்து உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில் (KNP), புதிதாக பிறந்த மூன்று குட்டிகள் உட்பட ஆறு சிவிங்கிப் புலிகள் இறந்ததை அடுத்து இந்த நடவடிக்கையானது எடுக்கப் பட்டுள்ளது.
- 11 பேர் கொண்ட இந்தக் குழுவைத் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) அமைத்து உள்ளது.
- இந்தக் குழுவின் தலைவராக ராஜேஷ் கோபால் (தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர் செயலாளர் மற்றும் தற்போதைய உலகப் புலிகள் மன்றச் செயலாளர்) செயல்படுவார்.
- கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், இந்தியாவின் சிவிங்கிப் புலிகளை மறு அறிமுகப் படுத்தும் ஒரு திட்டத்தைக் கண்காணிப்பதற்காக அமைச்சகமானது "சிவிங்கிப் புலிகள் பணிக் குழு" ஒன்றை ஏற்கனவே அமைத்துள்ளது.




## கோம்போநிமா இராஜகுருயி


- வட மேற்குத் தொடர்ச்சி மலையில், டயட்டம் எனப்படும் ஒற்றை செல் ஆல்காவின் புதிய இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இதற்கு ஒரு மூத்தப் புவிசார் தொல்பொருள் ஆராய்ச்சியாளரான மறைந்த பேராசிரியர் S.N. ராஜகுருவின் நினைவாக கோம்போநிமா இராஜகுருயி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது மகாராஷ்டிராவின் மலைப்பிரதேசமான மஹாபலேஷ்வரின் ஈரமான சுவர்களில் உள்ள பகுதியளவு நீர் நிறைந்த சூழலில் காணப்பட்டது.

- இது கோம்போமா மற்றும் கோம்ஃபோனிஸ் ஆகிய இரண்டு வகை உயிரிகளின் பண்புகளையும் வெளிப்படுத்துவதால், இது டயட்டம் என்ற வகை பிரிப்பில் குறிப்பிடத் தக்கச் சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது.
- ஒளிச்சேர்க்கை மூலம் வளிமண்டலத்திற்கு ஆக்ஸிஜனை வழங்கச் செய்வதன் மூலம் டயட்டம்கள் சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கின்றன.



## அண்டார்டிகாவில் ஆழ்கடல் நீரோட்டங்கள்

- அண்டார்டிகா கண்டமானது உலகம் முழுவதும் வெப்பம், கார்பன் மற்றும் ஊட்டச் சத்துக்களை மறுபரவல் (பகிர்வு) செய்யும் "நீரோட்டங்களின் தலைகீழ் சுழற்சி மாற்றம்" எனப்படும் கடல் நீரோட்டங்களின் ஒரு உலகளாவிய வலையமைப்பினை இயக்கி வருகிறது.
- பூமியின் தட்பவெப்பநிலையை நிலையாக வைத்திருப்பதற்கு இந்த தலைகீழ் சுழற்சி மாற்றம் மிக முக்கியமானதாகும்.
- ஆக்சிஜன் ஆழ்கடலை அடைவதற்கான முக்கிய வழியும் இதுவே ஆகும்.
- தலைகீழ் சுழற்சி மாற்றம் ஆனது கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு (30%) குறைந்துள்ளது என்றும், ஆழ்கடல் ஆக்ஸிஜன் அளவுகள் மிகவும் குறைந்து வருகின்றன என்றும் சமீபத்திய மதிப்பீடுகள் கூறுகின்றன.
- இது பருவநிலை மாதிரிகள் கணித்ததை விட முன்னதாகவே நடந்து வருகிறது.
- அடிமட்ட நீரின் ஓட்டம் குறைவதால், ஆழ்கடலுக்கு ஆக்ஸிஜன் பரவல் குறைகிறது.
- ஆக்சிஜன் நிறைந்த கீழ்மட்ட நீர் அடுக்கு குறைந்து வருவதால், ஆக்சிஜன் குறைவாக இருக்கும் வெப்பமான நீரோட்டத்தினால் அவை மாற்றப் பட்டு, ஆக்ஸிஜன் அளவை அது மேலும் குறைக்கிறது.
- பெரிய மற்றும் சிறிய கடல்வாழ் விலங்குகள் ஆக்ஸிஜனில் ஏற்படும் வெகுசிலச் சிறிய மாற்றங்களால் கூட பாதிக்கப் படுகின்றன.
- ஆழ்கடல் விலங்குகள் குறைந்த ஆக்சிஜன் உள்ள பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தகவமைக்கப் பட்டுள்ளன, இருப்பினும் அவை சுவாசிப்பதற்கு ஆக்சிஜன் அவசியம் வேண்டும்.
- ஆக்சிஜன் இழப்புகள் அவற்றினை மற்றப் பகுதிகளில் தஞ்சம் அடையச் செய்யக் கூடும் அல்லது அவற்றின் நடத்தைகளை மாற்றியமைக்கக் கூடும்.



## பொரியாலிஸ் சகதிமண் எரிமலை

- பேரண்ட்ஸ் கடலின் அடிப்பகுதியில் பழங்கால, மீத்தேன் உமிழும் எரிமலை இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- 'பொரியாலிஸ் சகதிமண் எரிமலை' என்று பெயரிடப்பட்ட இந்த எரிமலையானது பியர் தீவிற்குத் தெற்கே சுமார் 70 கடல் மைல் தொலைவில் 400மீ ஆழத்தில் அமைந்துள்ளது.
- இந்த எரிமலையானது நார்வே கடல் பகுதியில் கண்டறியப்பட்ட இரண்டாவது சகதி மண் எரிமலை ஆகும்.
- கிட்டத்தட்ட 300 மீட்டர் அகலமும் 25 மீட்டர் ஆழமும் கொண்ட ஒரு பள்ளத்தின் உட் பகுதியில் இந்த எரிமலை அமைந்துள்ளது.



## பிசோடோனோபிஸ் கலிங்கா

- ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள பாலூர் கால்வாயில் இருந்து ஒரு புதிய வகை விலாங்கு மீன் வகையை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- பழங்கால ஒடிசாவின் பெயரால் இந்தப் புதிய இனத்திற்கு பிசோடோனோபிஸ் கலிங்கா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது ஒபிச்திடே குடும்பம் மற்றும் ஆங்குல்லிஃபார்ம்ஸ் வரிசையைச் சேர்ந்தது மற்றும் பாம்பு போன்ற தோற்றம் கொண்டது ஆகும்.


- ❖ இதன் மூலம், இந்தியாவின் நீர்நிலைகளில் தற்போது மொத்தம் மூன்று வகையான பிசோடோனோபிஸ் உள்ளன.



## Saving Our Stripes முயற்சி

- ❖ டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ் "Saving Our Stripes" என்றப் பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.
- ❖ புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- ❖ இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, பெண் புலி மற்றும் புலிக் குட்டிகளை மையமாகக் கொண்டு இந்தியாவின் முதல் புலி கீதம் (பாடல்) மற்றும் குறும்படம் உருவாக்கப்பட்டு உள்ளது.

## எரிசக்திப் பயன்பாட்டு முன்னேற்ற அறிக்கை 2023



- 7வது நிலையான மேம்பாட்டு இலக்குக் கண்காணிப்பு : எரிசக்திப் பயன்பாட்டு முன்னேற்ற அறிக்கை 2023 என்ற தலைப்பில் ஒரு புதிய அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இது சர்வதேச எரிசக்தி முகமை (IEA), சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை, ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியியல் பிரிவு, உலக வங்கி மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், 675 மில்லியன் மக்களுக்கு இன்னும் மின்சாரம் கிடைக்கப் பெற வில்லை.
- எரிசக்திக்கான அணுகல் இல்லாமல் உள்ள உலகளாவிய மக்கள்தொகையில் 80 சதவீதத்திற்கும் அதிகமான நிலையில் 567 மில்லியன் மக்கள் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் வாழ்கின்றனர்.
- இதற்கிடையில், பெரும்பாலும் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி மற்றும் ஆசியாவில் வாழ்கின்ற 2.3 பில்லியன் மக்கள் சுத்தமான சமையல் முறைக்கான ஒரு அணுகலைப் பெறவில்லை.
- தற்போதைய முன்னேற்ற விகிதத்தில், 2030 ஆம் ஆண்டில் 660 மில்லியன் மக்கள் மின்சாரம் கிடைக்கப் பெறாமல் இருப்பார்கள் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 1.9 பில்லியன் மக்கள் தொடர்ந்து மாசுபடுத்தக் கூடிய சமையல் எரிபொருளையேச் சார்ந்திருப்பர்.
- மொத்த இறுதிக் கட்ட எரிசக்தி நுகர்வில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கு 19.1% என்ற அளவில் குறைவாக உள்ளது.


## உலகளாவியப் பெருங்கடல் கணக்கெடுப்பு



- பெருங்கடல் கணக்கெடுப்பு எனப்படுகின்ற ஒரு புதிய முன்னெடுப்பானது ஒரு தசாப்தத்திற்குள் சுமார் 100,000 புதிய கடல் இனங்களைக் கண்டறிந்து கடல் பல்லுயிர்த் தன்மை சார்ந்தத் தகவல் அறிவினை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆர்க்டிக் பகுதியில் உள்ள பேரண்ட்ஸ் கடல் பகுதியில், அறிவியலாளர்கள் குழு ஒன்று ஆய்வுக் கப்பல் மூலம் ஆய்வுப் பயணம் மேற்கொண்டது.
- ஹைட்ரஜன் சல்பைடு, மீத்தேன் மற்றும் இதர வாயுக்கள் குமிழியாக வெளியேறும் கடல் பரப்பில் உள்ள விரிசல்கள் - பனிக்கட்டி கசிவுப் பகுதியினைச் சுற்றி காணப்படும் புதிய கடல் இனங்களைக் கண்டுபிடிப்பதை அக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ இதுவரை அறியப்படாத கடல்வாழ் உயிரினங்களை கண்டறிவதற்காக என்று ஜப்பான் நாட்டினைச் சேர்ந்த நிப்பான் அறக்கட்டளை மற்றும் ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த நெக்டன் அறக்கட்டளை ஆகியவற்றினால் இணைந்து இது நிறுவப்பட்டது.
- ❖ சுமார் 10% கடல் இனங்கள் மட்டுமே முறையாக விவரிக்கப்பட்டுள்ளன என்றும், சுமார் 2 மில்லியன் இனங்கள் இன்னும் அடையாளம் காணப் படவில்லை என்றும் அறிவியல் அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

## பைபர்ஜாய் புயல்




- ❖ அரபிக்கடல் பரப்பின் மீதான 10 நாள் நகர்விற்குப் பிறகு பைபர்ஜாய் என்ற தீவிரப் புயல் குஜராத் மாநிலத்தில் கரையைக் கடந்தது.
- ❖ இந்தப் புயலுக்கு "பேரழிவு" என பொருள்படும் பெங்காலி வார்த்தையான பைபர்ஜாய் என வங்கதேசத்தால் பெயரிடப்பட்டது.
- ❖ ஜூன் 04 ஆம் தேதி தொடங்கிய இந்தப் புயல் ஜூன் 15 ஆம் தேதியன்று நிலப் பகுதியினை அடையும் முன் 10 நாட்களுக்கு அரபிக்கடலில் வடக்கு நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது.
- ❖ அரபிக்கடலில் அதிக நாட்கள் மையம் கொண்டப் புயலாக பைபர்ஜாய் புயல் மாறி உள்ளது.
- ❖ வெப்பமிக்க கடல் மேற்பரப்பின் வெப்பநிலையானது அரபிக்கடலில் ஏற்பட்ட மற்றப் புயல்களை விட பைபர்ஜோய் புயல் நீண்ட காலம் நீடிக்க உதவியது என்று அறிவியல் அறிஞர்கள் நம்புகின்றனர்.
- ❖ மார்ச் மாதத்தில் இருந்து அரபிக் கடல் கிட்டத்தட்ட 1.2 டிகிரி செல்சியஸ் வெப்பம் அடைந்துள்ளது.
- ❖ எனவே, இப்புயல் விரைவாக தீவிரமடைந்ததிற்குத் தேவையான சூழ்நிலைகள் மிகவும் சாதகமாக இருந்ததால், அது நீண்ட காலத்திற்கு அதன் வலிமையைத் தக்க வைக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தது.
- ❖ இதற்கு முன்னதாக, 2019 ஆம் ஆண்டில், அரபிக்கடலில் ஏற்பட்ட 2019 ஆம் ஆண்டின் அதி தீவிர கியார் புயல் 9 நாட்கள் மற்றும் 15 மணி நேரம் மையம் கொண்டிருந்தது.
- ❖ 2018 ஆம் ஆண்டு தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான அதி தீவிர புயலான கஜா புயல் 9 நாட்கள் 15 மணி நேரம் மையம் கொண்டிருந்தது.

- 1965 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் ஜூன் மாதத்தில் மேற்கத்திய மாநிலத்தைத் தாக்கிய மூன்றாவது புயல் பைபர்ஜாய் ஆகும்.
- ஜூன் மாதத்திற்கான 1965 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான தரவுகளின் அடிப்படையில், அரபிக் கடலில் 13 புயல்கள் உருவாகியுள்ளன.
- இவற்றில் இரண்டு குஜராத் கடற்கரையையும் (1996&1998), ஒன்று மகாராஷ்டிரா கடற் கரையையும், ஒன்று பாகிஸ்தான் கடற்கரையையும், மூன்று ஓமன்-ஏமன் கடற் கரைகளையும் கடந்ததோடு மற்றும் ஆறு புயல்கள் கடல் பரப்பில் வலுவிழந்தன.

## எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் முன்னணித்துவ திட்டத்தின் நிகர சுழிய உமிழ்வுச் சான்றிதழ்கள்





- எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் முன்னணித்துவத் திட்டத்தின் (LEED) நிகர சுழிய உமிழ்வு கொண்ட பசுமைக் கட்டிடத் திட்டங்களுடன் இந்தியா ஒரு சிறந்த நாடாக உருவெடுத்துள்ளது.
- 150 LEED நிகர சுழிய உமிழ்வு சான்றளிக்கப்பட்ட திட்டங்களில், இந்தியாவில் 45% அல்லது 73 திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.
- ஹரியானா மற்றும் தமிழ்நாடு ஆகியன சான்றிதழ் பெற்ற மாநிலங்களின் பட்டியலில் முன்னணியில் உள்ளன.
- அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முறையே 47 (30%) மற்றும் 15 (10%) அளவுச் சான்றிதழ்களுடன் அதிக LEED நிகர சுழிய உமிழ்வுச் சான்றிதழ்களைக் கொண்டுள்ள இரண்டாவது மற்றும் மூன்றாவது நாடுகளாக உள்ளன.
- LEED நிகர சுழிய உமிழ்வு என்ற சான்றிதழானது கார்பன், ஆற்றல், நீர் அல்லது கழிவு ஆகிய பிரிவுகளில் நிகர சுழியம் அல்லது நிகர நேர்மறை நிலையை அடைந்தப் பல திட்டங்களுக்கு அங்கீகாரமளிக்கிறது.

- LEED நிகர சுழிய உமிழ்வுத் திட்டங்களில் அலுவலக இடங்கள், தங்குமிட வசதிகள், சில்லறை வணிக வளாகங்கள், தொழில்துறை உற்பத்தித் திட்டங்கள் மற்றும் தரவு மையங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தியாவில் வெளியாகும் உமிழ்வுகளில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு கார்பன் உமிழ்வானது கட்டிடம் மற்றும் கட்டுமானத் துறையில் இருந்து வெளியிடப் படுகிறது.


## இந்துகுஷ் இமயமலையில் பனிப்பாறையின் அளவில் குறைவு

- இந்து குஷ் இமயமலையில் உள்ள (HKH) பனிப்பாறைகளின் அளவானது 65 சதவீதம் என்ற அளவிற்கு வேகமாக குறைந்து வருகிறது.
- இந்தப் பனிப்பாறைகளில் 2010 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஆண்டிற்கு 0.28 மீட்டர் நீருக்குச் சமமான (m w.e.) பனிப்பாறைகள் குறைந்துள்ளன.
- இது 2000 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஆண்டிற்கு 0.17 (m w.e.) ஆக இருந்தது.
- காரகோரம் மலைத்தொடரில் உள்ள பனிப்பாறைகளின் அளவும் குறையத் தொடங்கி உள்ளது.
- 2010 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இதன் பனிப்பாறைகளில் 0.09 (m w.e.) அளவில் குறைவு பதிவாகியுள்ளது.
- இந்துகுஷ் இமயமலையில் உள்ள பனிப்பாறைகள் தோராயமாக 73,173 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவியுள்ளன.
- இப்பகுதியின் சராசரி வெப்பநிலை 1951 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஒரு தசாப்தத்திற்கு 0.28 ° C என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- 2100 ஆம் ஆண்டில் , இமயமலைப் பனிப்பாறைகள் 75 சதவீத பனியை இழக்கக்கூடும்.
- சுமார் 3,500 கிமீ (2,175 மைல்கள்) பரப்பினைக் கொண்ட இந்துகுஷ் இமயமலையானது ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூடான், சீனா, இந்தியா, மியான்மர், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பரவியுள்ளது.



## களிமண்ணைப் பயன்படுத்தி மருத்துவக் கழிவுகளை அகற்றுதல்

- குவஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, கழிவுகளில் உள்ள சில நோய்க் கிருமிகளை நடுநிலையாக்குவதற்குக் களிமண் சாந்துகளைப் பயன்படுத்தச் செய்வதற்கான ஒரு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கயோலின் (வெண் களிமண்) களிமண்ணுடன் ஒப்பிடும் போது பெண்டோனைட்டில் வகையில் வைரஸ் சிதைவு விரைவாக இருப்பதாக பல ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன.
- வைரஸை அகற்றும் திறன் ஆனது பெண்டோனைட்டின் தரம் மற்றும் களிமண் பரப்புகளில் வைரஸின் பல்லடுக்கு உறிஞ்சு திறன் ஆகியவற்றின் தரத்தைப் பொறுத்தது என்பது இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டது.
- வைரஸ்களைக் கொண்ட உயிரி மருத்துவக் கழிவுகள் (BMW) மனித ஆரோக்கியம், உணவுப் பாதுகாப்பு, விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு குறிப்பிடத் தக்க ஆபத்துக்களை ஏற்படுத்துகின்றன.




## ப்ளூ பான்சி வண்ணத்துப்பூச்சி



- ஜம்மு மற்றும் காஷ்மீர் நிர்வாகமானது அந்த ஒன்றியப் பிரதேசத்தின் அதிகாரப்பூர்வ வண்ணத்துப் பூச்சியாக ப்ளூ பான்சி (ஜூனோனியா ஓரித்யா) என்பதினை அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- பொலிவுமிக்க நீல நிற வண்ணத்துப்பூச்சிகளின் இனமான ப்ளூ பான்சி, தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்காவின் பல்வேறு பகுதிகளில் காணப் படுகின்றன.
- இவை தங்கள் பிராந்திய இயல்பிற்காகப் பிரபலமாக அறியப்படுகின்றன.


- இந்த வண்ணத்துப்பூச்சிகள் தாம் வசிக்கும் பகுதிகளில் 26 என்ற அளவில் உள்ளூர் துணையினங்களைக் கொண்டுள்ளன.

## பர்மிய மயில் போன்ற அடையாளக் குறியீடுகளைக் கொண்ட மிருதுவான ஓடு உடைய ஆமைகள்

- மியான்மர் நாட்டில், பர்மிய மயில் போன்ற அடையாளக் குறியீடுகளைக் கொண்ட மிருதுவான ஒடுடைய ஆமைகளின் முட்டையிலிருந்து ஆமைக் குஞ்சுகள் வெளி வந்தன.
- நில்சோனியா ஃபார்மோசா என்றும் அழைக்கப்படும் இவை மியான்மரில் மட்டுமே காணப் படுகின்றன.
- கடந்த 90 ஆண்டுகளில் அவற்றின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 80 சதவீதம் குறைந்து உள்ளன.
- அவை IUCN பட்டியலில் மிக அருகிய நிலையில் உள்ள ஆமை இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.



## கிலாவியா எரிமலை




- ❖ அதிகளவில் செயலில் உள்ள எரிமலைகளில் ஒன்றான ஹவாயில் உள்ள கிலாவியா எரிமலை வெடிக்கத் தொடங்கியுள்ளது.
- ❖ ஹவாய் எரிமலைகள் தேசியப் பூங்காவிற்குள் அமைந்த கிலாவியா மலை உச்சியில் உள்ள அகன்ற எரிமலை வாயில் உள்ள ஹலேமாஉமாவு என்ற பள்ளத்தில் இருந்து இந்த வெடிப்பு தொடங்கியுள்ளது.
- ❖ ஒரு நாளைக்கு சுமார் 65,000 டன்கள் என்ற வீதத்தில் சல்பர் டை ஆக்சைடு வெளியேற்றப் படுகிறது.
- ❖ 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக கடந்த டிசம்பர் மாதத்தில் தான் எரிமலை வெடிப்புச் செயல்முறையானது நின்றது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக அடிமை நிலைக் குறியீடு 2023

- ❖ மனித உரிமைகள் குழுவான வாக் ஃப்ரீ அறக்கட்டளையானது 2023 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய அடிமைக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- ❖ இது 160 நாடுகளில் நிலவி வரும் நவீனகால அடிமை நிலைகளின் ஒரு மதிப்பீடாகும்.
- ❖ 2021 ஆம் ஆண்டில் எந்த ஒரு நாளிலும் 50 மில்லியன் மக்கள் நவீனகால அடிமைத் தனத்தின் சூழ்நிலையில் வாழ்கின்றனர் என்பதைக் காட்டுகிறது.
- ❖ G20 அமைப்பின் உறுப்பு நாடுகளானது, வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கின்றன என்பதால், இந்த அதிகரிப்புக்கு அதிகப் பங்கினை அளிக்கிறது.





- ❖ G20 நாடுகளில், 11 மில்லியன் மக்கள் கட்டாயத் தொழிலாளர்களாக வேலை செய்வதாக பதிவாகியுள்ளதையடுத்து இப்பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

- அதைத் தொடர்ந்து சீனா, ரஷ்யா, இந்தோனேசியா, துருக்கி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

## பட்டினி நிலை அதிகம் நிலவும் பகுதிகள் – FAO/WFP அறிக்கை

- 'பட்டினி நிலை அதிகம் நிலவும் பகுதிகள் - கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை குறித்த உணவு மற்றும் வேளாண் அமைப்பு - உலக உணவுத் திட்ட அமைப்பின் முன் எச்சரிக்கைகள்' என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- பாகிஸ்தான், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, எத்தியோப்பியா, கென்யா, காங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் சிரிய அரபுக் குடியரசு ஆகியவை அதிக தீவிரம் கொண்ட முக்கியப் பகுதிகளாக உள்ளன.
- இந்த எச்சரிக்கையானது மியான்மர் நாட்டிற்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- 22 நாடுகளில் உள்ள 18 பகுதிகளில் நிலவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை அதன் பரவல் மற்றும் தீவிரத்தன்மையினை அதிகரிக்கக்கூடும்.
- ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகள் அதிகப் பாதிப்புகளை (கவலையளிக்கக் கூடிய நிலையில் உள்ள) எதிர் கொள்ளும் நிலையில் உள்ளன.
- ஹைதி, சஹேல் (புர்கினா பாசோ மற்றும் மாலி) மற்றும் சூடான் ஆகியவை மிக அதிக கவலையளிக்கக் கூடிய நிலையில் உள்ள நாடுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.





## 11வது உலக வேலை அறிக்கை

- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது தனது 11வது ஆண்டறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், உலகளாவிய வேலைவாய்ப்பின்மையானது 5.3% அல்லது 191 மில்லியனாகக் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- இந்த ஆண்டில், ஆப்பிரிக்கா மற்றும் அரபு பிராந்தியத்தில் உள்ள குறைவான வருமானம் கொண்ட நாடுகள் பெருந்தொற்றிற்கு முந்தைய வேலைவாய்ப்பின்மை நிலைக்குத் திரும்ப வாய்ப்பில்லை.
- வட ஆப்பிரிக்காவைப் பொறுத்தவரை, 2019 ஆம் ஆண்டில் 10.9% ஆக இருந்த வேலை வாய்ப்பின்மை விகிதமானது 2023 ஆம் ஆண்டில் 11.2% ஆக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதியில் 5.7% ஆக இருந்த வேலை வாய்ப்பின்மை விகிதமானது 6.3% ஆகவும், 2019 ஆம் ஆண்டில் அரபு நாடுகளில் 8.7% ஆக இருந்த வேலை வாய்ப்பின்மை விகிதமானது 9.3% ஆகவும் தற்போது உள்ளது.
- இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 2019 ஆம் ஆண்டில் 8% ஆக இருந்த வேலை வாய்ப்பின்மை விகிதமானது தற்போது 6.7% ஆக உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஐரோப்பாவில் 6.3% ஆக இருந்த வேலை வாய்ப்பின்மை விகிதமானது தற்போது 7% ஆக உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், மத்திய மற்றும் மேற்கு ஆசியாவில் 9.2% ஆக இருந்த வேலை வாய்ப்பின்மை விகிதமானது தற்போது 7.8% ஆக உள்ளது.


Figure 1. Unemployment rate, 2007-23, world (percentage)



## ஆற்றல் மாற்றத்திற்கான குறைந்த நிதி ஒதுக்கீட்டு அறிக்கை

- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமானது (IRENA) ஆற்றல் மாற்றத்திற்கான குறைந்த நிதி ஒதுக்கீடு எனும் அறிக்கையை வெளியிட்டது.
- புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி தொழில்நுட்பங்கள், சூரிய ஒளி மின்னுற்பத்தி மற்றும் கடலோரக் காற்றாலை மின்சாரம் ஆகியவை முதிர்ச்சியடைந்த போட்டித் தன்மையுடன் உள்ளன.
- கடற்பரப்பு காற்றாலை, ஹைட்ரஜன் மின்பகுப்பான், ஆற்றல் சேமிப்பு மற்றும் வெப்ப விசையியக்கக் குழாய்கள் ஆகியவற்றை மிக அதிவேகமாகவும் மிக அதிக அளவிலும் பயன்படுத்தப் பட வேண்டியுள்ளது.

**Figure 1.1** Change in global weighted levelised cost of electricity by technology, 2020-2021




- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனின் முன்னேற்றத்தைப் பாராட்டி அதை "ஈடு இணையற்றது " என அது குறிப்பிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஈர்ப்பு குறியீட்டில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- உலகின் மிகப் பெரிய நான்காவது சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்தளத்தை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியா தனது நிகரச் சுழிய உமிழ்வு இலக்கை 2070 ஆம் ஆண்டிற்குள் அடைய $ 10 டிரில்லியன் நிதியானது தேவைப்படும்.

## பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் அறிக்கை





- உலகின் முன்னணியான மற்றும் ஒரு தன்னிச்சையான நிறுவனங்கள் மதிப்பீட்டு நிறுவனமான பிராண்ட் ஃபைனான்ஸ் தனது அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டு உள்ளது.
- இந்தியாவின் மதிப்புமிக்க நிறுவனம் என்ற பட்டத்தினை டாடா குழுமம் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- ❖ பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் உலகின் முன்னணி 500 நிறுவனங்களின் பட்டியலில் முதல் 100 இடங்களுக்குள் இடம் பெறும் வகையிலான ஓர் இந்திய நிறுவனம் என்பது, 25 பில்லியன் டாலர் என்ற நிறுவன மதிப்பீட்டினைத் தாண்டியது இதுவே முதல் முறையாகும்.
- ❖ தகவல் தொழில்நுட்ப நிறுவனமான இன்ஃபோசிஸ் இந்தியாவின் இரண்டாவது அதிக மதிப்பு மிக்க நிறுவனமாகும்.
- ❖ 374 மில்லியன் டாலர் நிறுவன மதிப்பு கொண்ட தாஜ் குழுமம், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்தியாவின் வலுவான நிறுவனமாக மாறியுள்ளது.
- ❖ இந்தியாவின் ஏழாவது மதிப்புமிக்க நிறுவனமாக மஹிந்திரா குழுமம் நன்கு முன்னேறி உள்ளது.

## உலகளாவிய வாய்வழி சுகாதார நிலை அறிக்கை - உலக சுகாதார அமைப்பு


Fig. 4. Estimated prevalence of severe periodontal disease in people aged 15 years or older per country in the Western Pacific Region (2019)




- ❖ 2019 ஆம் ஆண்டில் உலகளவில் சுமார் 3.5 பில்லியன் மக்கள் வாய்வழித் தொற்றினால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ 1990 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவான பல வாய்வழி நோய்களின் எண்ணிக்கை 1 பில்லியனுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- ❖ இது 50% ஆக அதிகரிப்பாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், இது அதே காலகட்டத்தில் பதிவான மக்கள்தொகை அதிகரிப்பான 45 சதவீதத்தினை விட பெரியது ஆகும்.
- ❖ கடந்த 30 ஆண்டுகளில் (1990-2019) பதிவான வாய்வழி நோய்களின் பாதிப்பு என்பது 30% அதிகரித்துள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டில் வாய்வழிச் சுகாதாரத்திற்காக ஒரு நபர் செலவிடும் தொகையின் உலகளாவியச் சராசரி ஆண்டிற்கு 50 அமெரிக்க டாலர்கள் ஆகும்.


## சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை

- 'எச்சரிக்கைக் கோடுகளைப் புறக்கணித்தல்: மோதல் சூழலில் சுகாதாரப் பாதுகாப்பிற்கு எதிரான வன்முறை 2022' என்ற அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- மோதல் சூழலில் சுகாதாரத் துறையினைப் பாதுகாத்தல் கூட்டணியினால் (SHCC) இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- மாலியில் உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறையானது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் அந்நாட்டில் சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிராக 46 வன்முறைச் சம்பவங்கள் அல்லது சுகாதாரத் தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக இந்த ஆவணம் கண்டறிந்துள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டில் 20 ஆக இருந்தது.
- மொத்தத் தாக்குதல்களில் பாதிக்கும் மேற்பட்டவை உக்ரைன் மற்றும் மியான்மர் ஆகிய இரண்டு நாடுகளில் மட்டுமே பதிவாகியுள்ளன.





## பாலினச் சமூக விதிமுறைகள் குறியீடு – 2023

- பாலினச் சமூக விதிமுறைகள் குறியீடு என அழைக்கப்படும் இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ஆண் மற்றும் பெண் இருபாலரிடையேயும், "உலகம் முழுவதும் ஒரு சார்புப் பாலினச் சமூக விதிமுறைகள் பரவலாக காணப் படுகின்றன: ஏறக்குறைய 90% மக்கள் ஏழு சார்பு நிலைகளில் குறைந்தபட்சம் ஒரு சார்பு நிலையினைக் கொண்டுள்ளனர்".
- 69 சதவீத மக்கள் பெண்களை விட ஆண்கள் தான் "சிறந்த" அரசியல் தலைவர்களாக உருவாகின்றனர் என்று நம்புகிறார்கள்.
- பெண்களை விட ஆண்கள் தான் சிறந்த வணிக நிர்வாகிகளாக விளங்குகிறார்கள் என்று 40 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நம்புவதாக கூறப்படுகிறது.
- 27 சதவீத மக்கள் மட்டுமே பெண்களும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளைக் கொண்டிருத்தல் ஜனநாயகத்திற்கு அவசியம் என்று நம்புகிறார்கள்.
- 25 சதவீதத்தினர் ஆண் தன் மனைவியை அடிப்பது நியாயமானது என்று நம்புகிறார்கள்.




**உலக நாடுகளின் போக்குகள்: 2022 ஆம் ஆண்டில் ஒரு வலுக்கட்டாயமான வகையிலான புலம்பெயர்வு**




- ❖ உலக நாடுகளின் போக்குகள்: 2022 ஆம் ஆண்டில் வலுக்கட்டாயமான வகையிலான புலம்பெயர்வு அறிக்கை எனப்படும் ஒரு வருடாந்திர அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகமையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 108.4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வலுக் கட்டாயமாக புலம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களில் 30 சதவீதம் பேர் குழந்தைகள் ஆவர்.
- ❖ 2023 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் உலகம் முழுவதும் உள்ள புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 110 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டு முழுவதிலும் ஏற்பட்ட பருவநிலை சார்ந்த பேரழிவுகள் 32.6 மில்லியன் மக்களின் உள்நாட்டு புலம்பெயர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.
- ❖ இதில் 8.7 மில்லியன் பேர் அந்த ஆண்டின் இறுதிக்குள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப இயலவில்லை.
- ❖ 2022 ஆம் ஆண்டில் பதிவான அனைத்து வகை புதியப் புலம்பெயர்வுகளில் பாதிக்கும் மேற்பட்டவை (54 சதவீதம்) பேரழிவு தொடர்பான உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் ஆகும்.

- மோசமான மேம்பாட்டுக் குறிகாட்டிகளைக் கொண்ட 46 நாடுகள் அல்லது குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள் உலக அகதிகளின் எண்ணிக்கையில் 20 சதவீத்தினைக் கொண்டுள்ளன.
- 2021 ஆம் ஆண்டினை விட கடந்த ஆண்டில் 19.1 மில்லியன் மக்கள் தங்கள் சொந்தப் பகுதிகளை விட்டு வெளியேற்றப் பட்டனர்.

## சமூக உணர்வுக் குறியீடு

- சமூக உணர்வுக் குறியீடானது பீரிபிளை எனப்படும் தளத்தினால் வெளியிடப்பட்டது.
- இது பல்வேறு நாடுகளின் 53 நகரங்களைத் தரவரிசைப்படுத்துகிறது.
- சமூக உணர்வு என்பது ஒரு சமூகத்தில் உள்ளவர்கள் மற்ற நபர்களைத் தங்களைச் சேர்ந்தவர்களாகவும், ஒருவருக்கொருவர் இணைந்திருப்பதாகவும் உணர வைப்பது என்பதாகும்.
- டொராண்டோ மற்றும் சிட்னி ஆகியவை உலகின் மிகச் சிறந்த நட்புமிகு நகரங்களாக குறிப்பிடப் பட்டுள்ளன.
- கானாவில் உள்ள அக்ரா, உலகிலேயே அந்நாட்டினைச் சாராத நபர்கள் மீதான மிகக் குறைந்த நட்புநிலை கொண்ட ஒரு நகரமாகத் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- மொராக்கோவில் உள்ள மராகேச், உலகின் இரண்டாவது குறைந்த குறைந்த நட்புநிலை கொண்ட நகரமாக இப்பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மும்பை, கோலாலம்பூர், ரியோ டி ஜெனிரோ மற்றும் டெல்லி ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.



## ஃபோர்ப்ஸ் இதழின் உலகின் 2000 முன்னணி நிறுவனங்களின் பட்டியல்

- 2023 ஆம் ஆண்டு உலகின் 2,000 முன்னணி நிறுவனங்களின் ஒரு தரவரிசையினைப் ஃபோர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனமானது எட்டு இடங்கள் முன்னேறி இதில் 45வது இடத்தைப் பெற்றுள்ளது.
- ஃபோர்ப்ஸ் இதழினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட உலகின் 2000 முன்னணிப் பொது நிறுவனங்களின் பட்டியலில் முதல் இடம் பெற்ற இந்திய நிறுவனம் இதுவாகும்.
- 2022 ஆம் ஆண்டு தரவரிசையில் 105வது இடத்தில் இருந்த ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா 77வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- HDFC வங்கி 128வது இடத்திலும் (2022 ஆம் ஆண்டில் 153வது இடம்) ICICI வங்கி 163 வது (2022 ஆம் ஆண்டில் 204 வது இடம்) இடத்திலும் உள்ளன.
- NTPC லிமிடெட் நிறுவனமானது இப்பட்டியலில் 433வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இப்பட்டியலில் இடம் பெற்ற மற்ற இந்திய நிறுவனங்கள்: ONGC 226, HDFC 232, LIC 363, ஆக்சிஸ் வங்கி (423) மற்றும் NTPC (433) ஆகியவையாகும்.
- 3.7 டிரில்லியன் டாலர் அளவிலான சொத்துக்களுடன் அமெரிக்காவின் மிகப்பெரிய வங்கியான ஜேபி மோர்கன் வங்கி 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக இந்த பட்டியலில் முதல் இடத்தில் இடம் பெற்றுள்ளது.
- இதில் அதானி எண்டர்பிரைசஸ் 1062வது இடத்திலும், அதானி பவர் 1488வது இடத்திலும், அதானி போர்ட்ஸ் & சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 1598வது இடத்திலும் உள்ளன.


F FORBES PREMIUM PARTNER

| RANK | NAME | COUNTRY | SALES | PROFIT | ASSETS | MARKET VALUE |
|---|---|---|---|---|---|---|
| 45. | Reliance Industries | India | $109.43 B | $8.3 B | $206.5 B | $190.7 B |
| 77. | State Bank of India | India | $56.54 B | $6.97 B | $695.2 B | $52.84 B |
| 128. | HDFC Bank | India | $25.47 B | $5.72 B | $337.5 B | $108.6 B |
| 163. | ICICI Bank | India | $22.77 B | $4.24 B | $238.3 B | $79.5 B |
| 226. | Oil & Natural Gas | India | $84.04 B | $5.38 B | $73.27 B | $24.66 B |
| 232. | HDFC | India | $18.04 B | $3.26 B | $232.82 B | $60.58 B |

## அணு ஆயுதங்கள் பற்றிய SIPRI நிறுவனத்தின் கண்டுபிடிப்புகள்

- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 350 போர் ஆயுதங்களாக இருந்த சீனாவின் அணு ஆயுதங்களின் அளவானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 410 ஆக அதிகரித்தது.
- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) மதிப்பீட்டின்படி, 2022 ஆம் ஆண்டில் 160 ஆக இருந்த இந்தியாவின் அணு ஆயுதங்கள் 2023 ஆம் ஆண்டில் 164 ஆகவும், 165 ஆக இருந்த பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் 170 ஆகவும் அதிகரித்து உள்ளன.


- ஒன்பது அணு ஆயுத நாடுகள்: அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, சீனா, இந்தியா, பாகிஸ்தான், கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு (வட கொரியா) மற்றும் இஸ்ரேல் ஆகியனவாகும்.




## பாலின இடைவெளி அறிக்கை, 2023

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பாலின இடைவெளி அறிக்கையினை வெளியிட்டது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்ற 146 நாடுகளில், பாலினச் சமத்துவத்தின் அடிப்படையில் இந்தியா 127வது இடத்தில் உள்ளது.
- இது கடந்த ஆண்டில் இருந்த இடத்தை விட எட்டு இடங்கள் முன்னேறியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் அறிக்கையில் இந்தியா 135வது இடத்தினைப் பெற்றிருந்தது.
- இந்தியாவின் ஒட்டு மொத்தப் பாலின இடைவெளியில் 64.3% இடைவெளி நிவர்த்தி செய்யப் பட்டுள்ளது.
- இந்தியா பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் வாய்ப்பு ஆகிய பிரிவுகளில் 36.7% அளவிற்கு மட்டுமே சமநிலையை எட்டியுள்ளது.
- இப்பட்டியல் இந்தியாவின் அண்டை நாடுகளை, பாகிஸ்தான் (142), வங்காளதேசம் (59), சீனா (107), நேபாளம் (116), இலங்கை (115) மற்றும் பூடான் (103) என்ற இடங்களில், தர வரிசைப் படுத்தியுள்ளது.
- ஐஸ்லாந்து தொடர்ந்து 14வது ஆண்டாக உலகிலேயே மிகவும் பாலினச் சமத்துவமிக்க நாடாக உள்ளது.
- நாடாளுமன்ற உறுப்பினர்களில் 15.1% பெண்கள் பிரதிநிதித்துவத்துடன் அரசியல் அதிகாரமளிப்புப் பிரிவில், இந்தியாவில் 25.3% சமநிலைப் பதிவாகியுள்ளது.
- இது 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முதல் அறிக்கைக்குப் பிறகு இந்தியா பெற்ற மிக உயர்ந்தத் தரவரிசையாகும்.

❖ பொலிவியா (50.4%), இந்தியா (44.4%) மற்றும் பிரான்சு (42.3 %) உள்ளிட்ட 18 நாடுகளின் உள்ளூர் நிர்வாகங்கள் 40 சதவீதத்திற்கும் அதிகமான பெண் பிரதிநிதித்துவத்தினைக் கொண்டுள்ளன.




## ராண்ட்ஸ்டாட் முதலாளிகளின் நிறுவனச் சந்தைப்படுத்துதல் மீதான உத்தி சார்ந்த நிறுவனத் தரவரிசை ஆய்வு (REBR) 2023




❖ டாடா பவர் நிறுவனமானது மிகவும் ஈர்ப்புமிக்க நிறுவனமாக உருவெடுத்துள்ளது.


❖ அதைத் தொடர்ந்து இணைய வர்த்தக நிறுவனமான அமேசான் மற்றும் எஃகு உற்பத்தி நிறுவனமான டாடா ஸ்டீல் ஆகியவை உள்ளன.

❖ தகவல் தொழில்நுட்ப நிறுவனமான டாடா ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமானது, இதில் முன்னணியில் உள்ள 10 நிறுவனச் சந்தையாக்க நிறுவனங்களில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

- இதைத் தொடர்ந்து மைக்ரோசாப்ட், சாம்சங் இந்தியா, இன்ஃபோசிஸ், டாடா மோட்டார், IBM மற்றும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ஆகியவை உள்ளன.
- இயங்கலையில் செயல்படச் செய்யும் மாபெரும் மளிகை விற்பனை நிறுவனமான பிக் பாஸ்கெட் இந்தியாவின் மிகவும் ஈர்ப்பு மிக்கப் புத்தொழில் நிறுவனச் சந்தைப் படுத்துதல் உத்தி சார்ந்த நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

## உலகப் புத்தொழில் நிறுவனச் சூழலமைவு அறிக்கை 2023

- ஸ்டார்ட்அப் ஜீனோம் நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு உலகப் புத்தொழில் நிறுவனச் சூழலமைவு அறிக்கையில் பெங்களூரு நகரம் 2 இடங்கள் உயர்ந்து 20வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், புனே 31-40 என்ற பிரிவில் இடம் பெற்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு உலகப் புத்தொழில் நிறுவனச் சூழலமைவு அறிக்கை என்பது உலகெங்கிலும் உள்ள புத்தொழில் நிறுவனச் சூழலமைவுகளின் தற்போதைய ஒரு நிலையைக் குறிப்பிடும் ஒரு விரிவானப் பகுப்பாய்வு ஆகும்.
- இந்த அறிக்கையில், சிலிக்கான் வேலி நகரம் முதலிடத்திலும், நியூயார்க் மற்றும் லண்டன் ஆகியவை 2வது இடத்திலும் உள்ளன.




## ஐரோப்பாவின் பருவநிலை 2022 அறிக்கை

- இந்த அறிக்கையானது, உலக வானிலை அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கோபர்நிகஸ் பருவநிலை மாற்றச் சேவை நிறுவனம் ஆகியவற்றினால் தயாரிக்கப் பட்டது.
- ஐரோப்பா கண்டமானது உலகின் மிகவும் வேகமாக வெப்பமடையும் ஒரு கண்டமாக உருவெடுத்துள்ளது.
- அதன் வெப்பநிலையானது கடந்த ஆண்டில், தொழில்துறைக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும் போது 2.3 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது.
- கண்டம் முழுவதும், 1991 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 30 ஆண்டுகளில் அதன் வெப்ப நிலையானது 1.5 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது.
- வானிலை தொடர்பான உற்பத்தி இழப்புகள் 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய அணு சக்தி உற்பத்தியில் தோராயமாக 0.35 சதவிகிதம் ஆகும்.

## EIU உலகின் வாழத் தகுந்த சிறந்த நகரங்கள் குறியீடு 2023

- ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னா நகரமானது, 2023 ஆம் ஆண்டிற்கான உலகின் "மிகவும் வாழத் தகுந்த நகரம்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகனும், இந்தப் பட்டியலில் தனது இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து இதில் மெல்போர்ன் மற்றும் சிட்னி ஆகிய இரண்டு ஆஸ்திரேலிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- பொருளாதாரத் தகவல் வழங்கீட்டு மையம் (EIU) என்ற அமைப்பானது இப்பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவினைச் சேர்ந்த புது டெல்லி மற்றும் மும்பை ஆகியவை 141வது இடத்திலும், சென்னை 144வது இடத்திலும் உள்ளன.
- அகமதாபாத் மற்றும் பெங்களூரு ஆகியவை முறையே 147 மற்றும் 148வது இடத்தில் இதில் உள்ளன.
- சிரியாவின் டமாஸ்கஸ் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இந்தக் குறியீட்டில் மக்கள் வாழ மிக மோசமான சூழல் கொண்ட நகரமாக உள்ளது.

**Top 10 positions**

| City | Location | Rank | Index | Stability | Healthcare | Culture & environment | Education | Infrastructure |
|---|---|---|---|---|---|---|---|---|
| Vienna | Austria | 1 | 98.4 | 100.0 | 100.0 | 93.5 | 100.0 | 100.0 |
| Copenhagen | Denmark | 2 | 98.0 | 100.0 | 95.8 | 95.4 | 100.0 | 100.0 |
| Melbourne | Australia | 3 | 97.7 | 95.0 | 100.0 | 95.8 | 100.0 | 100.0 |
| Sydney | Australia | 4 | 97.4 | 95.0 | 100.0 | 94.4 | 100.0 | 100.0 |
| Vancouver | Canada | 5 | 97.3 | 95.0 | 100.0 | 97.2 | 100.0 | 96.4 |
| Zurich | Switzerland | 6 | 97.1 | 95.0 | 100.0 | 96.3 | 100.0 | 96.4 |
| Calgary | Canada | 7 | 96.8 | 100.0 | 100.0 | 87.3 | 100.0 | 100.0 |
| Geneva | Switzerland | 7 | 96.8 | 95.0 | 100.0 | 94.9 | 100.0 | 96.4 |
| Toronto | Canada | 9 | 96.5 | 100.0 | 100.0 | 94.4 | 100.0 | 89.3 |
| Osaka | Japan | 10 | 96.0 | 100.0 | 100.0 | 86.8 | 100.0 | 96.4 |
| Auckland | New Zealand | 10 | 96.0 | 95.0 | 95.8 | 97.9 | 100.0 | 92.9 |

Source: EIU.

## THE இதழின் ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசை 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான டைம்ஸ் உயர் கல்வி இதழின் (THE) வருடாந்திர ஆசியப் பல்கலைக் கழகத் தரவரிசையில் முதல் 200 இடங்களுக்குள் பதினெட்டு இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்திய அறிவியல் கல்விக் கழகமானது, இப்பட்டியலில் இடம் பெற்ற இந்தியக் கல்வி நிறுவனங்களில் 48வது இடத்தினைப் பெற்று, தொடர்ந்து உயர்ந்த இடத்தைப் பெற்ற ஒரு கல்வி நிறுவனமாக உள்ளது.
- கடந்த ஆண்டின் தரவரிசையில், 17 உயர்கல்வி நிறுவனங்கள் முதல் 200 இடங்களுள் இடம் பெற்றன.

- ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் (2022 ஆம் ஆண்டில் 167வது இடம்) மற்றும் காந்தி நகரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகம் (கடந்த ஆண்டு 120வது இடம்) ஆகிய முக்கியக் கல்வி நிறுவனங்கள் இந்த ஆண்டிற்கான தரவரிசையில் முதல் 200 இடங்களில் இடம் பெறவில்லை.

**Top 10 Indian universities in THE's Asia University Rankings 2023**

| University | Rank |
|---|---|
| Indian Institute of Science | 48 |
| JSS Academy of Higher Education and Research | 68 |
| Shoolini University of Biotechnology and Management Sciences | 77 |
| Mahatma Gandhi University | 95 |
| International Institute of Information Technology, Hyderabad | 106 |
| Alagappa University | 111 |
| Saveetha University | 113 |
| Jamia Millia Islamia | 128 |
| Indian Institute of Technology Ropar | 131 |
| Indraprastha Institute of Information Technology Delhi | 137 |

## டைம்ஸ் இதழின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நிறுவனங்கள் – 2023

- டைம்ஸ் இதழின் 2023 ஆம் ஆண்டிற்கான மிகவும் செல்வாக்கு மிக்க 100 நிறுவனங்களின் பட்டியலில் இடம் பெற்ற இரண்டு இந்திய நிறுவனங்கள் இந்தியத் தேசியப் பண வழங்கீட்டுக் கழகம் (NPCI) மற்றும் மீஷோ ஆகியவை மட்டுமே ஆகும்.
- இந்தியத் தேசியப் பண வழங்கீட்டுக் கழகமானது, 2008 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய வங்கிகள் சங்கம் (IBA) ஆகியவற்றினால் நிறுவப்பட்டது.
- ஒரு இணைய வர்த்தகச் செயலியான மீஷோ, விதித் ஆத்ரே மற்றும் சஞ்சீவ் பர்ன்வால் ஆகியோரால் 2015 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

## உணவுக் கண்ணோட்ட அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளுக்கான உணவு இறக்குமதி மதிப்பீடுகளில் இந்த ஆண்டு 1.5 சதவீதம் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- நிகர உணவு இறக்குமதியாளராக இருக்கும் சில வளர்ந்து வரும் நாடுகள் 4.9 சதவீதம் சரிவினை எதிர் கொள்ளக் கூடும்.
- உலக உணவு வர்த்தக மதிப்பீடுகள் ஆனது 2022 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 1.5 அளவு சதவீதம் அதிகரித்து, 2023 ஆம் ஆண்டில் 1.98 டிரில்லியன் டாலராக உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

- உலக அரிசி உற்பத்தியானது, 2023-24 ஆம் ஆண்டில் 1.3 சதவீதம் அளவு அதிகரித்து 523.5 மில்லியன் டன்னாக உயரும் என கணிக்கப் பட்டுள்ளது.
- சர்வதேச வர்த்தகமானது அளவின் அடிப்படையில் 4.3 சதவீதம் குறைந்து 53.6 மில்லியன் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் சுமார் 777 மில்லியன் டன்னாக இருந்த அதிகபட்சக் கோதுமையின் உற்பத்தியானது 2023 ஆம் ஆண்டில் 3 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**Table 1. World wheat market at a glance**

| | 2021/22 | 2022/23 estim. | 2023/24 f'cast | Change: 2023/24 over 2022/23 |
|---|---|---|---|---|
| | million tonnes | | | % |
| **WORLD BALANCE** | | | | |
| **Production** | 777.7 | 800.9 | 776.7 | -3.0 |
| **Trade**[1] | 195.9 | 199.6 | 193.7 | -3.0 |
| **Total utilization** | 774.6 | 779.7 | 780.3 | 0.1 |
| Food | 524.0 | 530.7 | 535.0 | 0.8 |
| Feed | 147.7 | 151.2 | 153.0 | 1.2 |
| Other uses | 89.9 | 92.7 | 91.7 | -1.1 |
| **Ending stocks**[2] | 285.1 | 310.7 | 308.5 | -0.7 |
| **SUPPLY AND DEMAND INDICATORS** | | | | |
| **Per caput food consumption:** | | | | |
| World (kg/yr) | 67.1 | 67.1 | 67.0 | -0.1 |
| LIFDC (kg/yr) | 39.2 | 38.8 | 38.7 | -0.3 |
| World stocks-to-use ratio (%) | 37.8 | 39.8 | 38.9 | |
| Major exporters stocks-to-disappearance ratio[3] (%) | 16.5 | 19.1 | 17.7 | |
| **FAO WHEAT PRICE INDEX**[4] **(2014-2016=100)** | **2021** | **2022** | **2023** Jan-May | **Change: Jan-May 2023 over Jan-May 2022 %** |
| | 132 | 165 | 138 | -32% |


**Table 2. Wheat production: leading producers**[*]

| | 2021 | 2022 estim. | 2023 f'cast | Change: 2023 over 2022 |
|---|---|---|---|---|
| | million tonnes | | | % |
| China (Mainland) | 136.9 | 137.7 | 138.5 | 0.6 |
| European Union | 138.1 | 134.1 | 138.8 | 3.5 |
| India | 109.6 | 107.7 | 110.0 | 2.1 |
| Russian Federation | 76.1 | 102.7 | 82.8 | -19.3 |
| United States of America | 44.8 | 44.9 | 45.2 | 0.6 |
| Australia | 36.2 | 39.2 | 28.2 | -28.1 |
| Canada | 22.4 | 33.8 | 34.3 | 1.5 |
| Pakistan | 27.5 | 26.4 | 26.8 | 1.6 |
| Ukraine | 32.2 | 20.2 | 17.0 | -15.8 |
| Türkiye | 17.7 | 19.8 | 18.8 | -5.1 |
| United Kingdom of Great Britain and Northern Ireland | 14.0 | 15.5 | 14.4 | -7.6 |
| Kazakhstan | 11.8 | 16.4 | 14.1 | -14.0 |
| Iran (Islamic Rep Of) | 10.1 | 13.0 | 13.0 | 0.0 |
| Others | 100.4 | 89.4 | 94.9 | 6.1 |
| **World** | **777.7** | **800.9** | **776.7** | **-3.0** |

## உலகப் போதைப்பொருட்கள் அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டு உலக மருந்து அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகத்தினால் (UNODC) வெளியிடப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் உலகளவில் போதைப் பொருட்களை உட்கொள்ளச் செய்பவர்களின் எண்ணிக்கை 13.2 மில்லியனாக இருந்தது.
- இது முந்தைய ஆண்டில் மதிப்பிடப்பட்டதை விட சுமார் 18 சதவீதம் அதிகமாகும்.
- உலகளவில், 2021 ஆம் ஆண்டில் 296 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் போதைப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- இது கடந்தப் பத்தாண்டுகளில் பதிவான அளவை விட 23 சதவீதம் அதிகமாகும்.
- போதைப் பொருள் பயன்பாடு சார்ந்தப் பல்வேறு குறைபாடுகளால் பாதிக்கப் பட்ட நபர்களின் எண்ணிக்கையானது, 39.5 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- இது கடந்த 10 ஆண்டுகளில் பதிவான அளவை விட 45 சதவீதம் அதிகமாகும்.

❖ உலகளவில் கைப்பற்றப்பட்ட மொத்த மெத்தம்பேட்டமைனில் கிட்டத்தட்ட 90 சதவீதம் ஆனது, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா மற்றும் வட அமெரிக்கா ஆகிய இரண்டு பிராந்தியங்களில் இருந்தே கைப்பற்றப் பட்டுள்ளன.




## IMD - உலக போட்டித் தன்மை தரவரிசை


❖ சர்வதேச மேலாண்மை மேம்பாட்டுக் கல்வி நிறுவனம் (IMD) ஆனது சமீபத்திய உலகப் போட்டித் தன்மை தரவரிசையினை வெளியிட்டுள்ளது.

❖ டென்மார்க், அயர்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.

❖ 37வது இடத்தில் இருந்த இந்தியா இதில் 3 இடங்கள் சரிந்து 40வது இடத்தைப் பெற்று உள்ளது.

❖ இந்தியா 2019-2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தொடர்ச்சியாக 43வது இடத்தில் இருந்தது.


❖ மற்ற நாடுகளுடன் ஒப்பிடச் செய்யும் போது, இந்தியாவின் அரசாங்கச் செயல்திறனில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டாலும், வணிகச் செயல்திறன், உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரச் செயல்திறன் ஆகியவற்றில் சிறிதளவு பின்னடைவில் உள்ளது என்று IMD அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.



# மாநிலச் செய்திகள்

## அகமதுநகர் பெயர் மாற்றம்

- அகமதுநகர் நகரமானது, 18 ஆம் நூற்றாண்டின் மராட்டிய ராணியான அஹில்யாபாய் ஹோல்கரின் நினைவாக 'அஹில்யா நகர்' என மறுபெயரிடப்பட உள்ளதாக மகாராஷ்டிரா அரசு அறிவித்துள்ளது.
- 18 ஆம் நூற்றாண்டில், மால்வா மாகாணத்தில் மிகவும் திறன்மிக்க ஆட்சியாளராக இவர் வாழ்ந்து வந்தார்.
- இவர் மகேஸ்வர் நகரினை (மத்தியப் பிரதேசத்தில்) ஹோல்கர் வம்சத்தின் தலமாக நிறுவினார்.
- சமீபத்தில், ஔரங்காபாத் நகரினை ‘சத்ரபதி சம்பாஜிநகர்’ என்றும், ஒஸ்மானாபாத் நகரினை ‘தாராஷிவ்’ என்றும் அம்மாநில அரசாங்கம் மறுபெயரிட்டது.





## மிகப்பெரிய சூரியசக்தி நகரத்திற்கான திட்டம்

- திருவனந்தபுரத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் கூரையையும் சூரிய ஆற்றலை உற்பத்தி செய்யும் மையமாக மாற்றும் திட்டத்தினை கேரள அரசு தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மூலம், கேரள மாநிலத் தலைநகரமானது நாட்டின் மிகப்பெரிய ‘சூரியசக்தி நகரங்களில்’ ஒன்றாக மாறும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- கேரள அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்பத்திற்கான முகமையானது (Anert) இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளது.

## மாநிலச் சட்டமன்ற அமர்வுகள் பற்றிய ஆராய்ச்சிப் பகுப்பாய்வு

- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் பல்வேறு மாநிலச் சட்டசபைகள் சராசரியாக 21 நாட்கள் மட்டுமே கூடியுள்ளன.

- இந்தியாவில் ஏழு மாநிலச் சட்டசபைகள் மட்டுமே 2022 ஆம் ஆண்டில் 30 நாட்களுக்கு மேல் கூடியுள்ளன.
- கர்நாடகாவில் அதிகபட்சமாக 45 நாட்கள் கூடியுள்ள நிலையில், இதைத் தொடர்ந்து மேற்கு வங்கம் (42) மற்றும் கேரளா (41) ஆகியவை உள்ளன.
- வடகிழக்கு மாநிலங்களில் அஸ்ஸாம் மட்டுமே தேசியச் சராசரியான 21 நாட்களைத் தாண்டி மாநிலச் சட்டமன்றச் சபை அமர்வுகளைக் கூட்டியுள்ளது.
- மேகாலயா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் தலா 15 நாட்கள் மாநிலச் சட்ட மன்றச் சபை அமர்வுகளைக் கூட்டியுள்ளது.
- நாகாலாந்து சட்டப் பேரவை (NLA) வெறும் ஆறு நாட்கள் மட்டுமே கூடியுள்ளது.
- நாகாலாந்து தவிர, அருணாச்சலப் பிரதேசம் மற்றும் திரிபுரா மாநிலச் சட்டசபைகள் நாட்டிலேயே இரண்டாவது குறைந்த எண்ணிக்கையிலான (7) கூட்டங்களை நடத்தி உள்ளன.
- சிக்கிம் 10 நாட்கள் அளவிலான கூட்டங்களை நடத்தி மூன்றாவது இடத்தில் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் சராசரியாக 20 மாநிலங்கள், எட்டு நாட்களுக்கு மட்டுமே பட்ஜெட் பற்றி விவாதம் நடத்தப் பட்டுள்ளது.
- தமிழகத்தில் பட்ஜெட் விவாதம் 26 நாட்கள் நடைபெற்றது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா (15), கேரளா (14), ஒடிசா (14) ஆகியவை உள்ளன.
- டெல்லி, மத்தியப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் தலா இரண்டு நாட்கள் மட்டுமே பட்ஜெட் குறித்து விவாதம் நடத்தியுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் 28 மாநிலங்களில் சராசரியாக 21 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில் நாகாலாந்து மட்டுமே மிகக் குறைவாக மூன்று மசோதாக்களை மட்டுமே நிறைவேற்றி உள்ளது.
- அந்தந்த மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட 56% மசோதாக்கள் அதே நாளிலேயே நிறைவேற்றப் பட்டு உள்ளன.
- சுமார் 5% அளவிலான மசோதாக்கள் மட்டுமே ஒரு விரிவான ஆய்வுக்காக பேரவைக் குழுவுக்கு அனுப்பப் பட்டு உள்ளன.





## சடலத்துடன் பாலுறவுறல் (நெக்ரோபிலியா) மீதான தீர்ப்பு

- கர்நாடக உயர்நீதிமன்றம் ஒரு உயிரற்றச் சடலத்துடன் பாலுறவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஒரு தண்டனையை வெளிப்படையாகக் குறிப்பிடாத இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC) பிரிவுகளுடன் மேற்கோள் காட்டியுள்ளது.

- ❖ இந்தியத் தண்டனைச் சட்டம் (IPC) "இறந்த உடலுடன் உடலுறவில்" ஈடுபடுவதற்கான தண்டனையை மிகவும் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை, ஏனெனில் இந்தச் சட்டம் உயிருடன் இருக்கும் நபர் சம்பந்தப்பட்டச் செயல்களுக்கு மட்டுமே பொருந்தும்.
- ❖ நெக்ரோபிலியா என்ற வார்த்தையானது இறந்த சடலத்துடன் உடலுறவில் ஈடுபடும் ஒருவரின் செயலைக் குறிக்கிறது.

## 2023 நிதியாண்டில் அமைப்புசார் வேலைவாய்ப்பு உருவாக்கம்

- ❖ ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிப் பதிவின்படி இந்தியாவில் 2023 நிதியாண்டில் 1.39 கோடி பேர் புதிய அமைப்புசார் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.
- ❖ இது 2022 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது 13 சதவீதம் அதிகமாகும்.
- ❖ இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிப்பதற்கான மையத்தின் தரவுகள் 2023 நிதி ஆண்டில் வேலையின்மை விகிதம் 7.6 சதவீதமாக உள்ளது என்ற குறைந்த அளவுத் தகவலையே வெளியிட்டுள்ளது.
- ❖ 2022 ஆம் நிதியாண்டில் 8 சதவிகிதம் மற்றும் 2021 நிதியாண்டில் 10 சதவிகிதமாக இருந்த வேலையின்மை விகிதம் முந்தைய இரண்டு நிதியாண்டுகளுடன் ஒப்பிடச் செய்கையில் 2023 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.
- ❖ இந்த நிதியாண்டில் மகாராஷ்டிரா மாநிலம் 30.28 லட்சம் பேருக்கு அமைப்புசார் வேலைவாய்ப்பினை உருவாக்கி முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ 2023 நிதியாண்டில் சுமார் 14.05 லட்சம் பேருக்கு நிகர புதிய அமைப்புசார் வேலை வாய்ப்பினை உருவாக்கி தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ கர்நாடகா, ஹரியானா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் முறையே மூன்று, நான்கு மற்றும் ஐந்தாவது இடங்களை இதில் பிடித்துள்ளன.
- ❖ பெரிய மாநிலங்களில் அஸ்ஸாம் 64,432 என்ற எண்ணிக்கையில் மிகக் குறைவான அளவு அமைப்புசார் வேலைவாய்ப்பினை உருவாக்கியுள்ளது.



## ஒட்டு மொத்தச் சுற்றுச்சூழல் செயல்திறன்




- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான லாப நோக்கற்ற மையமானது 'இந்தியாவின் சுற்றுச்சூழல் 2023: புள்ளிவிவரங்கள்' என்ற பெயரில் தனது வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தெலுங்கானா மாநிலம் தனது காடுகளின் பரப்பளவினை அதிகரிப்பதிலும், நகராட்சிக் கழிவுகளைச் சுத்திகரிப்பதிலும் கண்ட அதன் பெரும் முன்னேற்றத்திற்காக வேண்டி முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், டெல்லி மற்றும் குஜராத் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தெலுங்கானா அதன் பசுமைப் பரப்பளவினை 22 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக உயர்த்தியது.
- இந்த மாநிலத்தில் உள்ள புவியியல் பகுதியில் 24.06 சதவீதமானது காடுகளால் சூழப் பட்டுள்ளது.

## KFON இணைய இணைப்பு

- கேரள அரசானது, கேரள ஒளியிழை வலையமைப்பினை (KFON) அதிகாரப் பூர்வமாகத் தொடங்கியுள்ளது.
- KFON மூலம், இணைய உரிமையை ஒரு அடிப்படை உரிமையாக அறிவித்த முதலாவது மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- அனைத்து வீடுகளுக்கும் அரசு அலுவலகங்களுக்குமான அதிவேக அகலப்பட்டை அலை வரிசை இணையச் சேவை அணுகலை உறுதி செய்வதன் மூலம் ஒரு பெரும் டிஜிட்டல் இடைவெளியினைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதன்மையாக KFON ஒரு உள்கட்டமைப்பு சேவை வழங்கும் அமைப்பாகச் செயல்படும்.




## உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் விரைவாக்கத் திட்டம்

- ஃபார்மர்ஸ் ஃப்ரெஸ் சோன் (FarmersFZ) என்ற தளமானது, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) விரைவாக்கத் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- ஃபார்மர்ஸ்FZ என்பது கொச்சியி’ல் அமைந்துள்ள ஒரு பல்லூடகச் சந்தைத் தளமாகும்.
- இது கேரளப் புத்தொழில் திட்டம் (KSUM) என்ற திட்டத்தின் கீழ் செயல்படுகிறது.
- வணிகத்தின் மேம்பாட்டிற்காக உலகெங்கிலும் உள்ள 12 வேளாண்-உணவு புத்தொழில் நிறுவனங்களின் பட்டியலில் இது இடம் பெற்றுள்ளது.



## முதல் சரக்கு வாகனப் பரிமாண வரம்பு மீட்சிப் போக்குவரத்து

- அசாமின் நுமாலிகர் சுத்திகரிப்பு லிமிடெட் (NRL) நிறுவனத்தின் விரிவாக்கத்திற்கான சரக்கு வாகனப் பரிமாண வரம்பு மீட்சி சரக்குகளின் (ODC) முதல் சரக்குப் பெட்டகம் என்பது, நீர்வழிப் பாதைகள் வழியாக கொண்டு செல்லப் பட்டது.
- இது இந்தியாவின் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் கப்பலான MV மரைன் 66 மூலம் கொண்டு செல்லப்பட்டது.
- இது மார்ச் 18 ஆம் தேதியன்று, கொல்கத்தாவில் இருந்து புறப்பட்டு, இந்திய-வங்காள தேச நெறிமுறைப் பாதை வழியாக கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் பயணித்து NRL என்ற அணைக்கரை (ஜெட்டி) பகுதியினை அடைந்தது.



## காரி இஷாத் மாம்பழம்

- காரி இஷாத் மாம்பழ வகையானது புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- இது கர்நாடகாவின் உத்தர கன்னடத்தில் உள்ள அங்கோலா தாலுக்காவில் பெரும் அளவில் விளைவிக்கப் படுகிறது.
- இந்தப் பழமானது அதன் இனிப்புச் சுவை மற்றும் பழக் கூழ்மத்திற்காகப் பிரபலமாக அறியப் படுகிறது.
- இஷாத் மாம்பழம் காரி இஷாத் மற்றும் பிலி இஷாத் என்ற இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது.

## ஒடிசாவில் உள்ள ‘இயற்கை வளைவு’

- ஒடிசாவில் உள்ள ‘பிராமணி இயற்கை வளைவினை’ ஒரு புவிசார் பாரம்பரியத் தளமாக அறிவிப்பதற்கு இந்தியப் புவியியல் ஆய்வு மையம் முன்மொழிந்துள்ளது.
- இது ஒடிசாவின் சுந்தர்கர் வனப் பிரிவின் கனிகா மலைத் தொடரில் அமைந்துள்ளது.
- அவ்வாறு அறிவிக்கப்பட்டால், புவிசார் பாரம்பரியக் குறியீட்டினைப் பெற்ற நாட்டின் மிகப்பெரிய இயற்கை வளைவாக இது இருக்கும்.
- இந்த இயற்கை வளைவு என்பது காம்தி நில அமைப்பின் மேல்நிலையில் உள்ள இரும்பு ஆக்சைடு சார்ந்த (ஃபெருஜினஸ்) மணற்கற்களால் ஆனது.

- இது 184 முதல் 160 மில்லியன் ஆண்டுகள் பழமையான கடையூழி ஜுராசிக் காலம் முதல் இடையூழி ஜுராசிக் காலம் வரையிலானதாகும்.
- இது மட்டுமல்லாமல் திருப்பதியில் உள்ள திருமலை மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் ஆகிய இடங்களில் இந்தியாவில் மேலும் இரண்டு இயற்கை வளைவுகள் உள்ள நிலையில் அவை இரண்டும் சுந்தர்கார் என்னுமிடத்தில் உள்ளதை விட சிறியவை ஆகும்.



## "சீர்திருத்த இல்லங்களாக" சிறைகள்

- உத்தரப் பிரதேச மாநில அரசானது சிறைகளை 'சுதார் கிரஹ்' (சீர்திருத்த இல்லங்கள்) ஆக மாற்ற உள்ளது.
- மேலும், மாநிலத்தின் புதிய சிறைச்சாலைச் சட்டத்தினை உருவாக்குவது தொடர்பான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது.
- தற்போது, லக்னோவில் குறைவான பாதுகாப்பு நடவடிக்கை கொண்ட சிறைச் சாலை செயல்பட்டு வருகிறது.
- சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான விவகாரங்களை உள்ளடக்கிய 1894 ஆம் ஆண்டின் சிறைச்சாலைச் சட்டம் மற்றும் 1900 ஆம் ஆண்டின் கைதிகள் சட்டம் ஆகியன தற்போது நடைமுறையில் உள்ளன.
- 1894 ஆம் ஆண்டின் சிறைச்சாலைச் சட்டத்தின் ஒரு நோக்கம் என்பது காவலில் உள்ள குற்றவாளிகளின் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட்டினைப் பேணுவதாகும்.
- 2023 ஆம் ஆண்டு மாதிரி சிறைச்சாலைச் சட்டமானது சமீபத்தில் இந்திய அரசினால் தயாரிக்கப் பட்டு வருகிறது.

## பஞ்சாப் காவல்துறை திருத்த மசோதா, 2023

- பஞ்சாப் மாநிலச் சட்டசபையானது 2023 ஆம் ஆண்டு பஞ்சாப் காவல்துறை (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- காவல்துறை தலைமை இயக்குநர் பதவிக்குத் தகுதியான நபர்களைத் தேர்வு செய்வதற்கும், நியமனம் செய்வதற்குமான ஒரு சுயாதீனமான நெறிமுறையை அறிமுகம் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அந்தச் செயல்முறையை "அரசியல் அல்லது நிர்வாகத் தலையீடுகளிலிருந்து விடுபடச் செய்யும்".

- 2019 ஆம் ஆண்டில், பஞ்சாப், கேரளா, மேற்கு வங்காளம், ஹரியானா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் அந்தந்த மாநிலச் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட இதே போன்றச் சட்டங்களின் அடிப்படையில் காவல்துறை தலைமை இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

## கர்நாடகாவின் அன்ன பாக்யா திட்டம்

- காங்கிரஸ் அரசானது, தேர்தலுக்கு முந்தைய ஐந்து வாக்குறுதிகளில் ஒன்றாக அன்ன பாக்யா திட்டத்தினை அறிவித்தது.
- இதன்படி, மத்திய அரசு தற்போது வழங்கி வரும் ஐந்து கிலோ அரிசியுடன் கூடுதலாக, வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்தினர் அட்டை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு ஒரு நபருக்கு ஐந்து கிலோ அரிசியானது வழங்கப்படும்.
- இதற்காக மாதத்திற்கு சுமார் 2.29 லட்சம் மெட்ரிக் டன்கள் அரிசி கூடுதலாக தேவைப் படுகிறது.
- முதலில் இந்த அளவு அரிசியினை வழங்க ஒப்புக் கொண்ட இந்திய உணவுக் கழகம் (FCI) ஆனது பின்னர் அதன் முடிவை ரத்து செய்தது.

## வட இந்தியாவின் முதல் தோல் வங்கி

- வட இந்தியாவின் முதல் தோல் வங்கியானது, புது டெல்லியில் உள்ள சப்தர்ஜங் மருத்துவ மனையில் திறக்கப்பட்டுள்ளது.
- உயிரிழந்த நபர்களின் உடலின் தோலைத் தானமாக அளிக்கக் கூடிய ஒரு தோல் வங்கியான இது தீக்காயங்களுக்குச் சிகிச்சையளிப்பதில் உதவியாக இருக்கும்.
- உடலின் தோலை இறந்த ஆறு மணி நேரத்திற்குள் தானம் செய்யலாம் என்ற நிலையில், பதப்படுத்தப் பட்ட பிறகு தீக்காயங்கள் மற்றும் படுகாயங்களுக்கு சிகிச்சையளிக்க இவற்றைப் பயன்படுத்தலாம்.
- இந்தியாவில் மகாராஷ்டிராவில் ஏழு, சென்னையில் நான்கு, கர்நாடகாவில் மூன்று, மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் தலா ஒன்று என மொத்தம் 16 தோல் வங்கிகள் உள்ளன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலக சுகாதார அமைப்பின் வெளியுறவு கணக்குத் தணிக்கையாளர்

- 2024 முதல் 2027 ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டு காலத்திற்கு உலக சுகாதார அமைப்பின் வெளியுறவு கணக்குத் தணிக்கையாளராக இந்தியாவின் (CAG) தலைமை கணக்குக் கட்டுப்பாட்டாளரான கிரிஷ் சந்திர முர்மு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.
- இந்தியாவின் தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் தற்போது உலக சுகாதார அமைப்பினைத் தவிர, உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (2020-2025), சர்வதேச அணுசக்தி முகமை (2022-2027), இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பு (2021-2023) மற்றும் உலக நாடுகளின் நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம் (2020-2022) ஆகியவற்றிற்கான வெளியுறவு கணக்குத் தணிக்கையாளராக உள்ளார்.
- தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் ஐக்கிய நாடுகள் சபையின் வெளியுறவுத் தணிக்கையாளர் குழுவில் உறுப்பினராக உள்ளார்.
- அவர் உயர் நிலைத் தணிக்கை நிறுவனங்களின் சர்வதேச அமைப்பு மற்றும் ASOSAI ஆகியவற்றிற்கான ஆளுகைக் குழுவின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார்.

## தென்னாப்பிரிக்காவில் காந்தி தொடர்பான ரயில் சம்பவத்தின் 130 ஆண்டுகள் நிறைவு

- ஐஎன்எஸ் திரிசூல் கப்பலானது பல வரலாற்று நிகழ்வுகளை நினைவு கூரும் வகையில் தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகருக்குப் பயணம் மேற்கொண்டது.
- இந்தியா - தென்னாப்பிரிக்கா ஆகியவற்றுக்கு இடையிலான அரசுமுறை உறவுகள் மீண்டும் தொடங்கப்பட்ட 30வது ஆண்டு விழாவும் இதில் அடங்கும்.
- 130 ஆண்டுகளுக்கு முன்பு மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பீட்டர்மரிட்ஸ்பர்க் இரயில் நிலையத்தில் ரயிலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒரு சம்பவத்தையும் இது குறிக்கிறது.
- வணிகரான தாதா அப்துல்லாவுக்கு ஒரு சட்ட ஆலோசகராகப் பணியாற்றுவதற்காக என்று காந்தி 1893 ஆம் ஆண்டில் டர்பனுக்கு வந்தார்.
- 1893 ஆம் ஆண்டு ஜூன் 7 ஆம் தேதியன்று, டிரான்ஸ்வால் மாகாணத்தில் உள்ள பிரிட்டோரியாவிற்கான ஒரு பயணத்தின் போது, அவர் முதலில் பீட்டர்மரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்திற்கு வந்தார்.
- உரிய பயணச்சீட்டு வாங்கிய பிறகு முதல் வகுப்பு பெட்டியில் அவர் அமர்ந்திருந்தார்.
- ஆனால் ஒரு ஐரோப்பியரின் உத்தரவின் பேரில் அவர் பின்னர் அந்தப் பெட்டியிலிருந்து வெளியேற்றப் பட்டார்.
- அந்த நாட்களில், 'கூலிகள்' மற்றும் வெள்ளையர் அல்லாதவர்கள் முதல் வகுப்புப் பெட்டிகளில் பயணிப்பதற்கு அனுமதிக்கப் படவில்லை.
- இன ஒடுக்குமுறைக்கு எதிரான காந்தியின் போராட்டத்திற்கும் சத்தியாக்கிரகத்தின் தோற்றத்திற்கும் இந்தச் சம்பவமானது பெரும் தூண்டுதலாக அமைந்ததாகக் கருதப் படுகிறது.




## சத்ரபதி சிவாஜி அவர்களின் முடிசூட்டு விழாவின் 350வது ஆண்டு நிறைவு




- கிரிகோரியன் நாட்காட்டியின்படி, மராட்டிய மன்னர் 1674 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதியன்று மகாராஷ்டிராவின் ராய்காட் கோட்டையில் முடிசூட்டப் பட்டார்.
- இதன் மூலம், அவர் "ஹிந்தவி ஸ்வராஜ்" அல்லது இந்துக்களின் சுயராஜ்யத்திற்கான ஒரு அடித்தளத்தை அமைத்தார்.
- இந்து நாட்காட்டியின்படி, இந்த ஆண்டு ஜூன் 2 ஆம் தேதியன்று அவரது முடிசூட்டு விழாவின் ஆண்டு நிறைவு கொண்டாடப் படுகிறது.

## கடற்படைத் தளபதி K.S. சுப்பிரமணியன்

- இந்தியக் கடற்படையின் முதல் நீர்மூழ்கிக் கப்பலின் கடற்படைத் தளபதி K.S. சுப்பிர மணியன் சமீபத்தில் காலமானார்.
- இந்தியக் கடற்படையின் முதல் நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் கல்வாரியின் (S23) தளபதியாக இவர் பணியாற்றினார்.

- 1967 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று, லாட்வியாவின் ரிகாவில் உள்ள சோவியத் கடற்படைத் தளத்தில் ஐஎன்எஸ் கல்வாரி கடற்படையில் இணைக்கப் பட்டது.
- இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வானது, இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவின் தோற்றத்தினைக் குறித்தது.



## SMOPS-2023

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) விண்கல ஆய்வுப் பணிச் செயல் பாடுகள் பற்றிய சர்வதேச மாநாட்டினை (SMOPS-2023) ஏற்பாடு செய்துள்ளது.
- இஸ்ரோ இந்த நிகழ்விற்காக என்று இத்தாலிய விண்வெளி நிறுவனம் மற்றும் சர்வதேச விண்வெளி ஆய்வுக் கழகம் மற்றும் தொழில்துறைப் பங்குதாரர்களுடன் இணைந்து ஒத்துழைப்பினை மேற்கொண்டது.
- இந்த மாநாட்டில், விண்வெளி சார் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், தொழில் துறை மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து, விண்வெளி ஆய்வுப் பணிச் செயல் பாடுகள் மற்றும் தரைக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஆகியவற்றில் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள் மற்றும் தானியக்கமாக்கல் பற்றி விவாதிக்கப்பட்டது.



## ஸ்பினோசா பரிசு

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அறிவியலாளரான ஜோயிதா குப்தாவுக்கு ஸ்பினோசா பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு நேர்மையான மற்றும் நிலையான உலகில் கவனம் செலுத்தி அவர் மேற்கொண்ட அவரது சிறந்த, முன்னோடியாக விளங்கக் கூடிய வகையிலான மற்றும் ஊக்கமளிக்கும் அறிவியல் பணிக்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.
- 'டச்சு நோபல் பரிசு' என்றும் குறிப்பிடப்படும் இந்த விருதானது டச்சு அறிவியலில் மிக உயர்ந்த தனித்துவமிக்க விருதாக கருதப் படுகின்றது.

## UITP விருது - மும்பை BEST முன்னெடுப்பு

- பொதுப் போக்குவரத்திற்கான உலகின் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றான சிறந்தப் பசுமை சார்ந்தப் பயண முன்னெடுப்புகளுக்கு UITP விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.
- இது 'பருவநிலை மற்றும் சுகாதாரம்' என்ற பிரிவில் விருதினைப் பெற்றது.
- இது 'பொது மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்து உத்தி' என்ற பிரிவில் இடம் பெற்ற முதல் மூன்று இறுதிப் போட்டியாளர்களில் ஒன்றாகும்.
- UITP விருதுகள் உலகெங்கிலும் உள்ள நகரங்கள் மற்றும் பிராந்தியங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட உயர் இலட்சியமிக்க மற்றும் புதுமைமிக்க திட்டங்களை முன்னிலைப்படுத்துகின்றன.

## சர்வதேசப் பசுமை ஆப்பிள் விருதுகள்

- தெலுங்கானாவில் அமைந்த ஐந்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் 'அழகான கட்டிடங்களுக்கான சர்வதேசப் பசுமை ஆப்பிள் விருதுகளுக்கு' தேர்வு செய்யப் பட்டு உள்ளன.
- இவை நகர்ப்புற மற்றும் மனை விற்பனைத் துறைப் பிரிவின் கீழ் தேர்வு செய்யப் பட்டு உள்ளன.
  - பாரம்பரியப் பிரிவில் மொஷம் ஜி சந்தை - சிறந்த மறுசீரமைப்பு மற்றும் மறு பயன்பாடு,
  - பாலங்கள் பிரிவில் துர்கம் செருவு என்ற கம்பிவடப் பாலம் - தனித்துவமான வடிவமைப்பு,
  - B R அம்பேத்கர் தெலுங்கானா மாநிலச் செயலக கட்டிடம் - அழகுமிக்க வகையில் வடிவமைக்கப்பட்ட அலுவலகம் மற்றும் பணியிடக் கட்டிடப் பிரிவு,
  - தெலுங்கானா காவல்துறையின் ஒருங்கிணைந்த பணிக் கட்டுப்பாட்டு மையம் - தனிப்பட்ட அலுவலகப் பிரிவு மற்றும்
  - யாதாத்ரி கோயில், லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயம் - சிறந்த சமயக் கட்டமைப்புகள் பிரிவு.

## தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது 2022-23

- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக முறையே இராணுவ செவிலியர் பணியில் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஸ்மிதா தேவ்ராணி மற்றும் பிரிகேடியர் அமிதா தேவ் ராணி ஆகியோருக்கு குடியரசுத் தலைவர் அவர்கள் தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதினை வழங்கினார்.

- இந்த விருதானது 1973 ஆம் ஆண்டில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.
- செவிலியர்கள் மற்றும் செவிலிய வல்லுநர்கள் சமுதாயத்திற்கு வழங்கும் சிறப்பானச் சேவைகளை அங்கீகரிப்பதற்காக இது வழங்கப் படுகிறது.

## தமிழ் எழுத்தாளருக்கு பால் சாகித்ய புரஸ்கார் விருது

- எழுத்தாளர் உதயசங்கர் தனது ஆதனின் பொம்மை என்ற நாவலுக்காக பால் சாகித்ய புரஸ்கார் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- கீழடி அகழ்வாராய்ச்சியைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல், "நமது அடித்தளம் குறித்து இளைஞர்களுக்கு" உணர்த்துகிறது.
- அவர் எழுதிய நூல்கள் - முன்னொரு காலத்தில் (Once Upon a time), பிறிதொரு மரணம் (One more death), மாயக்கண்ணாடி (Illusion Mirror), மற்றும் குமாரபுரம் இரயில் நிலையத்தில் ஓர் இரவு (A Night in the Kumarapuram Railway station) ஆகியவை ஆகும்.

## தமிழ் எழுத்தாளருக்கு யுவ புரஸ்கார் விருது

- திருக்கார்த்தியல் என்ற நூலிற்காக ராம் தங்கம் என்பவர் யுவ புரஸ்கார் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இது சிறுகதைகளின் ஒரு தொகுப்பாகும்.
- இவரது முதல் புத்தகமான காந்திராமன் 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- பின்னர் இவரது படைப்புகளான ஊர் சுற்றிப் பறவை மற்றும் மீனவ வீரனுக்கு ஒரு கோவில் ஆகியவை வெளி வந்தன.
- 2018 ஆம் ஆண்டு திருக்கார்த்தியல் என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது.
- இராஜாவனம் என்ற புதினம், புலிக்குத்தி என்ற அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு, கடவுளின் தேசத்தில் என்ற பயணக்கட்டுரைகள் (இரண்டு பாகங்கள்) போன்ற பல புத்தகங்களையும் இவர் எழுதியுள்ளார்.
- இந்த விருதுகளானது சாகித்ய அகாடமியினால் வழங்கப் படுகிறது.

## 2023 ஆம் ஆண்டு இக்பால் மசிஹ் விருது - லலிதா நடராஜன்

- அமெரிக்க அரசின் தொழிலாளர் துறையானது, வழக்கறிஞர் மற்றும் சமூக ஆர்வலர் லலிதா நடராஜனுக்கு குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புக்கான 2023 ஆம் ஆண்டு இக்பால் மசிஹ் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.
- தென்னிந்தியாவில் நிலவும் குழந்தைத் தொழிலாளர் முறைகளை ஒழிப்பதற்கு லலிதா தொடர்ந்து போராடி வருகிறார்.
- ஆள்கடத்தல் முறை, குறிப்பாக கொத்தடிமைத் தொழிலாளர் முறைகளால் பாதிக்கப் பட்ட குழந்தைகளை அவர் அடையாளம் கண்டு, அவர்களைச் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்க உதவி வருகிறார்.
- இக்பால் மசிஹ் விருது என்பது அமெரிக்கக் காங்கிரஸால் அறிவிக்கப்பட்ட, 2008 ஆம் ஆண்டில் தொழிலாளர் துறை செயலரால் நிறுவப்பட்ட பணப்பரிசு சாராத ஒரு விருது ஆகும்.

- குழந்தைத் தொழிலாளர் முறைகளை எதிர்த்துப் போராடும் பல்வேறு மகத்தானப் பங்களிப்புகளை இது கௌரவப்படுத்துகிறது.

## புள்ளியியல் துறைக்கான சர்வதேச பரிசு



- பிரபல இந்திய-அமெரிக்க கணிதவியலாளரும் புள்ளியியல் நிபுணருமான கலியம்புடி ராதாகிருஷ்ண ராவ் (102) புள்ளியியல் துறையில் 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேசப் பரிசினைப் பெற உள்ளார்.
- இது இத்துறையில் வழங்கப்படும் நோபல் பரிசுக்குச் சமமான பரிசாகும்.
- 75 ஆண்டுகளுக்கு முன்பு, புள்ளி விவரங்கள் சார்ந்த கருத்தாக்கத்தில் புரட்சியை ஏற்படுத்திய அவரது மகத்தானப் பணிக்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- 1945 ஆம் ஆண்டில், கொல்கத்தா கணிதச் சங்கத்தின் இதழின் அறிக்கைத் தாளில் ஒரு கட்டுரையை வெளியிட்டார்.
- அதில் அவர் நவீனப் புள்ளியியல் துறைக்கு வழி வகுத்த மூன்று அடிப்படைத் தீர்வுகளை ஒரு செயல் விளக்கம் செய்து காட்டி, இன்று அறிவியலில் பெரிதும் பயன்படுத்தப்படும் புள்ளியியல் செயற்கருவிகளை அன்றே வழங்கினார்.
- இவர் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.
- அவருக்கு இந்திய அரசினால் பத்ம பூஷன் (1968) மற்றும் பத்ம விபூஷன் (2001) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.
- புள்ளியியல் துறைக்கான முதல் சர்வதேசப் பரிசானது, 2017 ஆம் ஆண்டில் டேவிட் ஆர் காக்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்டது.

## எகிப்தின் 'ஆர்டர் ஆஃப் த நைல்' விருது

- இந்தியப் பிரதமர் அவர்கள், எகிப்தின் உயரிய அரச விருதான ‘ஆர்டர் ஆஃப் தி நைல்’ மற்றும் அவரது 13வது சர்வதேச விருதினைப் பெற்றார்.
- இது எகிப்து நாட்டிற்கு அவர் மேற்கொண்ட முதல் அரசுமுறைச் சுற்றுப்பயணம் என்பதோடு 1997 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் மேற்கொண்ட முதல் இரு தரப்பு அரசுமுறைப் பயணம் ஆகும்.
- ‘ஆர்டர் ஆஃப் தி நைல்’ விருதானது உலக நாடுகளின் தலைவர்கள், பட்டத்து இளவரசர்கள் மற்றும் துணை குடியரசுத் தலைவர்கள் ஆகியோருக்கும் வழங்கப் படச் செய்கிறது.

- இந்த விருதினைப் பெற்ற 49வது நபர் இவர் ஆவார்.



## சாகித்ய அகாடமி விருதுகள்

- சாகித்ய அகாடமியானது, இந்த ஆண்டிற்கான தனது பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற 22 பேர் மற்றும் யுவ புரஸ்கார் விருது பெற்ற 20 பேர் ஆகியோரின் பட்டியலை அறிவித்துள்ளது.
- ஒடியா மொழியில் யுவ புரஸ்கார் மற்றும் காஷ்மீரி மொழியில் பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற வெற்றியாளர்களின் பெயர்கள் இதில் அறிவிக்கப்படவில்லை.
- 2023 ஆம் ஆண்டிற்கான பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற நபர்கள்

| Awardee | Language | Title |
|---|---|---|
| **Short stories** | | |
| **Suryanath Singh** | Hindi | Kotuk App |
| **Jugal Kishore Sarangi** | Odia | Jejenka Gapa Ganthili |
| **Gurmeet Karyalvi** | Punjabi | Sachi Di Kahani |
| **Mansing Majhi** | Santali | Nene-Pete |
| **D.K. chaduvula Babu** | Telugu | Vajrala Vaana |
| **Lute Muteen Achalpuri** | Urdu | Mamta Ki Dor |
| **Pratima Nandi Narzaree** | Bodo | Gosaini Gwjwn Nwjwr |
| **Novels** | | |
| **Rothindranath Goswami** | Assamese | Powalmoni Aru Chichinger Duhsahasik Abhijan |
| **Shyamalkanti Das** | Bengali | Eroplaner Khata |
| **Vijayashree Haladi** | Kannada | Surakki Gate |
| **Tukarum Ruma Shet** | Konkani | Jaann |
| **Priya A.S.** | Malayalam | Perumazhayathe Kunjithalukal |
| **Radhavallabh Tripathy** | Sanskrit | Manavi |
| **Udhayasankar** | Tamil | Aadhanin Dommai |
| **Potery** | | |
| **Balwan Singh Jamoria** | Dogri | Kanjkan |
| **Akshay Anand 'Sunny'** | Maithili | Ol Katra, Jhol Katra |
| **Eknath Avhad** | Marathi | Chhand Dei Aanand |
| **Dholan Rahi** | Sindhi | Vanganmal Ji Shaadi |
| **Stories** | | |
| **Sudha Murty** | English | Grandparent's Bag of Stories |
| **Play** | | |
| **Madhusudan Bisht** | Nepali | Bal Ekanki Natakharu |
| **Memoir** | | |
| **Kiran Badal** | Rajasthani | Tabran Ri Duniyan |

- 2023 ஆம் ஆண்டிற்கான யுவ புரஸ்கார் விருது பெற்ற நபர்கள்

| Awardee | Language | Title |
|---|---|---|
| **Short Stories** | | |
| **Jintu Gitartha** | Assamese | Mon Mora Tora |
| **Hamiruddin Middya** | Bengali | Mathrokha |
| **Sagar Shah** | Gujarati | Get Together |
| **Manjunayak Challur** | Kannada | Phoo Mattu Ithara Kathegalu |
| **Tanvi Kamat** | Konkani | Shots |
| **Bapi Tudu** | Santali | Dusi |
| **Monika J. Panjwani** | Sindhi | Glamour |
| **Ram Thangam** | Tamil | Thirukarthiyal |
| **Tauseef Bareilvi** | Urdu | Zahan Zaad |
| **Poetry** | | |
| **Mainasori Daimary** | Bodo | Som, Jiu, Arw |
| **Nighat Nasreen** | Kashmiri | Lalli Nilvath Tchali Na Zanh |
| **Ganesh Puthur** | Malayalam | Achante Alamara |
| **Vishakha Vishwanath** | Marathi | Swatahala Swatavirudh Ubhe Kartana |
| **Naina Adhikari** | Nepali | Ghat-Pratightka Udgarharu |
| **Sanddep** | Punjabi | Chitt Da Jugraphia |
| **Deilal Mahiya** | Rajasthani | Atas Ro Olmo |
| **Plays** | | |
| **Dheeraj Bismil** | Dogri | Ahlada |
| **Historical** | | |
| **Anirudh Kanisetti** | English | Lords of the Deccan: Southern India from the Chalukyas to the cholas |
| **Criticism** | | |
| **Johny Takkedasila** | Telugu | Vivechani |
| **Novel** | | |
| **Atul Kumar Rai** | Hindi | Chandpur Ki Chanda |

## கிராமி விருதுகளின் விரிவாக்கம்




- கிராமி விருதுகளானது, இசைத் துறையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு சிறப்பானச் சாதனைகளைக் கௌரவிக்கும் விதமாக வழங்கப் படுகின்றன.
- இதில் சிறந்த ஆப்பிரிக்க இசை நிகழ்ச்சி, சிறந்த மாறுநிலை ஜாஸ் பாடல் தொகுப்பு மற்றும் சிறந்த பாப் நடனம் ஆகிய மூன்று புதியப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- 66வது கிராமி விருதுகள் என அதிகாரப் பூர்வமாக அறியப்படும் 2024 ஆம் ஆண்டு கிராமி விருது விழாவில் இந்தப் புதிய பிரிவுகள் அறிமுகப் படுத்தப்பட உள்ளன.
- கூடுதலாக, ஆண்டின் சிறந்த செவ்வியல் சாராத தயாரிப்பாளர், மற்றும் ஆண்டின் சிறந்த செவ்வியல் சாராத பாடலாசிரியர் ஆகிய பிரிவுகள் பொதுப் பிரிவிற்கு மாற்றப் பட உள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## டி20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஆட்டமிழப்புகள்

- டி20 கிரிக்கெட் போட்டிகளில் 300 ஆட்டமிழப்புகளை (கேட்சுகள் மற்றும் ஸ்டம்பிங்) செய்த முதல் இந்திய மற்றும் இரண்டாவது கிரிக்கெட் வீரர் என்ற ஒரு பெருமையை மகேந்திர சிங் தோனி பெற்றுள்ளார்.
- தோனி 214 கேட்சுகள் மற்றும் 89 ஸ்டம்பிங் உட்பட மொத்தம் 301 ஆட்டமிழப்புகளைச் செய்துள்ளார்.
- கீரன் பொல்லார்டு டி20 கிரிக்கெட் போட்டிகளில் 345 கேட்சுகளை எடுத்துள்ளார்.
- தினேஷ் கார்த்திக் 207 கேட்சுகள் மற்றும் 69 ஸ்டம்பிங் உட்பட மொத்தம் 276 ஆட்டமிழப்புகளைச் செய்துள்ளார்.
- இந்தப் போட்டியின் போது 250 ஐபிஎல் போட்டிகளில் பங்கேற்ற முதல் வீரர் என்ற பெருமையையும் தோனி பெற்றார்.

## ஆண்கள் ஜூனியர் ஹாக்கி ஆசியக் கோப்பை 2023

- ஓமனில் உள்ள சலாலாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்கள் ஜூனியர் ஆசியக் கோப்பையின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்திய ஜூனியர் ஆண்கள் ஹாக்கி அணி சாம்பியன் ஆனது.
- இந்த வெற்றியின் மூலம் ஆடவர் ஜூனியர் ஹாக்கி ஆசியக் கோப்பையில் இந்தியா அதிகப் பட்சப் பட்டங்களை வென்று புதிய சாதனையினைப் படைத்துள்ளது.
- இந்த அணி இதற்கு முன்பு 2004, 2008 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பட்டத்தை வென்று உள்ளது.
- 1988, 1992 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் பாகிஸ்தான் அணி வென்றுள்ளது.

## 3வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

- 2023 ஆம் ஆண்டு கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ஆனது உத்தரப் பிரதேசத்தில் வாரணாசியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நிறைவடைந்தது.
- பஞ்சாப் பல்கலைக்கழக அணியானது 26 தங்கம், 17 வெள்ளி மற்றும் 26 வெண்கலப் பதக்கங்களுடன் (மொத்தம் - 69 பதக்கங்கள்) பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.
- அமிர்தசரஸ் குருநானக் தேவ் பல்கலைக்கழக அணியானது, இந்த ஒட்டு மொத்தச் சாம்பியன்ஷிப் போட்டியில் 24 தங்கம், 27 வெள்ளி மற்றும் 17 வெண்கலத்துடன் (மொத்தம் 68 பதக்கங்கள்) இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- கடந்த ஆண்டு போட்டிகளின் சாம்பியனான கர்நாடகாவின் ஜெயின் பல்கலைக் கழக அணியானது, 32 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- நீச்சல் வீரர் சிவா ஸ்ரீதர் ஆடவர் பிரிவில் எட்டு தங்கம் உட்பட மொத்தம் 11 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தார்.

- ஷ்ருங்கி பாண்டேகர் மகளிர் பிரிவில் ஐந்து தங்கம் உட்பட ஒன்பது பதக்கங்களை வென்றார்.
- தமிழ்நாட்டின் சென்னைப் பல்கலைக் கழக அணியானது 7 தங்கம், 8 வெள்ளி மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களுடன் பட்டியலில் 9வது இடத்தைப் பெற்றுள்ளது.
- மற்ற தமிழகப் பல்கலைக்கழகங்கள்: SRM பல்கலைக் கழகம் (37), பாரதியார் பல்கலைக் கழகம் (42) மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (85) ஆகியவை இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

| RANKING | UNIVERSITY | | | | TOTAL |
|---|---|---|---|---|---|
| | Grand Total | 262 | 263 | 297 | 822 |
| 1 | Panjab University, (PB) | 26 | 17 | 26 | 69 |
| 2 | Guru Nanak Dev University, Amritsar | 24 | 27 | 17 | 68 |
| 3 | Jain University, Karnataka | 16 | 10 | 6 | 32 |
| 4 | Punjabi University, Patiala (PB) | 12 | 14 | 8 | 34 |
| 5 | Guru Kashi University | 9 | 10 | 9 | 28 |
| 6 | Kurukshetra University, (Haryana) | 8 | 11 | 9 | 28 |

## உலக ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி

- 2023 ஆம் ஆண்டு ஸ்குவாஷ் உலகக் கோப்பைப் போட்டியானது தற்போது சென்னையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ வணிக வளாகத்தில் நடைபெற்று வருகிறது.
- 2023 ஆம் ஆண்டு ஸ்குவாஷ் உலகக் கோப்பைப் போட்டியானது இரண்டு கட்டங்களாக நடத்தப் படுகிறது.
- 2023 ஸ்குவாஷ் உலகக் கோப்பைப் போட்டியில் பங்குபெறும் ஒவ்வோர் அணியிலும் நான்கு வீரர்கள் - இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் இடம் பெறுவர்.
- இந்திய அணி இதுவரையில் ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வென்றதில்லை.
- 1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற தொடக்கப் போட்டியில் ஆஸ்திரேலியா அணி வென்ற நிலையில், 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணி சாம்பியன் பட்டம் வென்றது.

## பிரெஞ்ச் ஓபன் போட்டி 2023

- செர்பியாவின் நோவக் ஜோகோவிச் பிரெஞ்சு ஓபன் இறுதிப் போட்டியில் நார்வேயின் காஸ்பர் ரூட் என்பவரை வீழ்த்தியதன் மூலம் தனது 23வது கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டத்தினை வென்றார்.
- ஆடவர் டென்னிஸ் போட்டியின் வரலாற்றில் மிக அதிக ஒற்றையர் கோப்பைகளை வென்ற ரஃபேல் நடாலுடனான சமனை இவர் முறியடித்தார்.

- நான்கு மேஜர் பட்டங்களில் குறைந்தது மூன்று முறையாவது வென்ற முதல் வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.
- பிரெஞ்சு ஓபன் போட்டியானது நான்கு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் ஒன்றாகும் என்பதோடு இது 1891 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப் படுகிறது.

| பட்டம் | வென்றவர் | இரண்டாமிடம் |
|---|---|---|
| **ஆடவர் ஒற்றையர்** | நோவக் ஜோகோவிச் | கேஸ்பர் ரூட் |
| **மகளிர் ஒற்றையர்** | இகா ஸ்விடெக் | கரோலினா முச்சோவா |
| **ஆடவர் இரட்டையர்** | இவான் டோடிக் மற்றும் ஆஸ்டின் கிராஜிசெக் | சாண்டர் கில் மற்றும் ஜோரன் விலீஜென் |
| **மகளிர் இரட்டையர்** | ஹ்சீஹ் சு-வீ மற்றும் வாங் சின்யு | டெய்லர் டோவ்செண்ட் மற்றும் லீலா பெர்னாண்டஸ் |
| **கலப்பு இரட்டையர்** | மியு கட்டோ மற்றும் டிம் புட்ஸ் | பியான்கா ஆண்ட்ரீஸ்கு மற்றும் மைக்கேல் வீனஸ் |

## FIFA U20 உலகக் கோப்பை 2023

- 2023 ஆம் ஆண்டு FIFA U20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் உருகுவே அணியானது இத்தாலி அணியினை 1-0 என்ற கணக்கில் வென்றதன் மூலம் பட்டத்தை வென்றது.
- FIFA U-20 2023 உலகக் கோப்பைப் போட்டியானது அர்ஜென்டினாவில் உள்ள நான்கு நகரங்களில் நடத்தப் பட்டது.
- செல்சியின் மிட்ஃபீல்டர் செசரே கசடே போட்டியின் சிறந்த ஆட்டக்காரர் (கோல்டன் பால்) மற்றும் கோல்டன் பூட் ஆகிய இரண்டு விருதுகளையும் வென்றார்.
- 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தப் போட்டியானது முன்னதாக FIFA உலக இளையோர் சாம்பியன்ஷிப் போட்டி என்று அறியப்பட்டது.
- இந்தப் போட்டியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன.
- 2023 ஆம் ஆண்டு போட்டியானது கோவிட் பெருந்தொற்று காரணமாக நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்றது.
- இந்தப் போட்டியின் வரலாற்றில் அர்ஜென்டினா அதிக FIFA U20 உலகக் கோப்பை (6) பட்டங்களை வென்றுள்ளது.

## 37வது இந்திய தேசிய விளையாட்டுகளுக்கான உருவச் சின்னம்

- 37வது தேசிய விளையாட்டுப் போட்டியின் அதிகாரப்பூர்வ சின்னம் மற்றும் ஆடை கோவாவில் வெளியிடப்பட்டது.
- இதன் அதிகாரப்பூர்வச் சின்னமான 'மோகா', என்பது கோவாவின் ஒரு தனித்துவமான அடையாளத்தைக் குறிக்கும் காட்டெருமையின் உருவத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது விளையாட்டுப் போட்டிகளுக்கும் மாநிலத்தின் பாரம்பரியத்திற்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்துகிறது.
- முந்தைய தேசிய விளையாட்டுப் போட்டிகளானது, 2015 ஆம் ஆண்டில் கேரளாவில் நடைபெற்றன.

### சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டு போட்டிகள் 2023

- முதல் முறையாக, சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஜெர்மனி நாடானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டுப் போட்டிகளில் 202 பதக்கங்களுடன் இந்தியா தனது பங்கேற்பினை நிறைவு செய்தது.
- இந்த உலகளாவிய பல்துறை விளையாட்டுப் போட்டியில் இந்தியா 76 தங்கம், 75 வெள்ளி மற்றும் 51 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
- 2025 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான போட்டிகள் முறையே இத்தாலி மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடைபெற உள்ளன.

## முக்கிய தினங்கள்


### கோவா மாநில தினம் - மே 30

- 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று கோவா மாநில அந்தஸ்தினைப் பெற்றது.
- 1510 ஆம் ஆண்டில் பீஜப்பூரின் அடில் ஷாவைத் தோற்கடித்து அல்போன்சோ டி அல்புகெர்க் கைப்பற்றியதிலிருந்து இந்தப் பகுதி ஒரு போர்த்துகீசியப் பிரதேசமாக இருந்தது.
- 400 ஆண்டுகளுக்குப் பிறகு, போர்த்துகீசியர்களிடமிருந்து கோவாவை இந்திய அரசு திரும்பப் பெற்றது.
- போர்த்துகீசியர்களிடம் இருந்து கோவாவை விடுவிப்பதற்காக இந்திய ராணுவமானது, 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் "ஆபரேஷன் விஜய்" என்ற நடவடிக்கையின் கீழ் கோவா மீது படையெடுத்தது.
- இந்திய இராணுவத்தின் இந்த இணைப்பு நடவடிக்கையானது 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதியன்று தொடங்கியது.



## உலக பால் தினம் - ஜூன் 01

- உலகளாவிய உணவாக பாலின் ஒரு முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது 2001 ஆம் ஆண்டில் இத்தினத்தினை உருவாக்கியது.





## தெலுங்கானா தினம் - ஜூன் 02

- தெலுங்கு மொழி பேசும் ஹைதராபாத் பகுதிகள் 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று ஆந்திரப் பிரதேச மாநிலத்துடன் இணைக்கப்பட்டு ஒரு ஒருங்கிணைந்த மாநிலமாக உருவானது.
- 2013 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று காங்கிரஸ் செயற்குழுவானது தெலுங்கானாவை ஒரு தனி மாநிலமாக நிறுவச் செய்வதற்கான ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியது.
- தெலுங்கானா மாநிலத்தினை நிறுவுவதற்கான 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 2014 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு மசோதாவானது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.
- இந்த மசோதா 2014 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று இந்தியக் குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இறுதியாக அந்த ஆண்டு ஜூன் 02 ஆம் தேதி அன்று தெலுங்கானா மாநிலமாக உருவாக்கப் பட்டது.

## உலகப் பெற்றோர் தினம் - ஜூன் 02

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2012 ஆம் ஆண்டில் இந்த நாளை அதிகாரப் பூர்வமாக நியமித்தது.
- உலகெங்கிலும் உள்ள பெற்றோரின் அன்பு, அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களைப் பாராட்டவும் கௌரவிக்கவும் இது ஒரு வாய்ப்பாகும்.
- இந்த நாள் பெற்றோரின் முக்கியத்துவத்தையும் குடும்பங்களின் நல்வாழ்வையும் பிரதிபலிக்கிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 1994 ஆம் ஆண்டைச் சர்வதேசக் குடும்ப ஆண்டாக அறிவித்தது.




## சர்வதேசப் பாலியல் தொழிலாளர்கள் தினம் - ஜூன் 02

- உலகளவில் பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் மற்றும் அவர்களின் போராட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இது பாலியல் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் எதிர்மறைக் கருத்துகள் மற்றும் பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சமூகத்தில் வாழ்கின்ற மிகவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட, பாதிக்கப்பட்ட மற்றும் மதிப்பு மிக்கப் பிரிவினருக்கு மரியாதை வழங்கும் விதமாக இந்த நாளானது 1976 ஆம் ஆண்டு முதல் நினைவு கூரப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நீதிக்கான அணுகல்" என்பதாகும்.

## உலக மிதிவண்டி தினம் - ஜூன் 03

- அடிப்படைப் போக்குவரத்து, பயணம் மற்றும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை வலுப்படுத்துவதற்காக மிதிவண்டி ஓட்டுதல் கலாச்சாரத்தை வளர்ப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் "மிதி வண்டியின் தனித்துவம், நீண்ட ஆயுள் மற்றும் பல்துறைப் பயன்பாடு" ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.
- முதல் மிதிவண்டி தினமானது 2018 ஆம் ஆண்டில் ஜூன் 03 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.




## வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - ஜூன் 04

- ❖ உணர்ச்சி, உடல் மற்றும் மன ரீதியான துஷ்பிரயோகத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் எதிர் கொள்ளும் வலி மற்றும் துன்பங்களை அங்கீகரிக்கும் ஒரு தினம் இது ஆகும்.
- ❖ குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க பாடுபடும் பல நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் முயற்சிகளைக் கௌரவிக்கும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- ❖ வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினமானது 1982 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று முதல்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- ❖ அந்த நேரத்தில், இந்தத் தினமானது லெபனான் போரில் பல்வேறு வகையில் பாதிக்கப் பட்டவர்களை மையமாகக் கொண்டு அனுசரிக்கப்பட்டது.

## உயிரினங்களுக்கு எதிரான உலக தினம் - ஜூன் 05

- ❖ இந்த நாள் மனிதரல்லாத விலங்குகளுக்கு அவற்றின் இனத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டச் செய்வதுடன் அவற்றின் மீதான விலங்கினவாதத்தை கண்டனம் செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ விலங்கினவாதம் என்பது இனங்களின் அடிப்படையில் வெவ்வேறு உயிரினங்களின் மீது காட்டப்படும் பாகுபாடு ஆகும்.

## உலகச் சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 05

- ❖ இந்த நாள் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இது அனுசரிக்கப் படுகிறது.
- ❖ 1972 ஆம் ஆண்டில் மனிதச் சுற்றுச்சூழல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு ஸ்வீடனில் உள்ள ஸ்டாக்ஹோமில் நடைபெற்றது.

- இந்த மாநாட்டின் விளைவாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- UNEP சுற்றுச்சூழலுக்கான ஒரு சிறப்பு நாளை முன்மொழிந்தது.
- 1972 ஆம் ஆண்டில் ஐநா பொதுச் சபை இந்த நாளை உலகச் சுற்றுச்சூழல் தினமாக அறிவித்தது.
- இந்த ஆண்டு, இது நிறுவப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு அடைந்ததைக் குறிக்கிறது.
- 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி அன்று முதல் உலகச் சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் "நெகிழி மாசுபாட்டை முறியடித்தல்" என்பதாகும்.




## சட்டவிரோத, வெளிவராத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தலுக்கு எதிரான ஒரு போராட்டத்திற்கான சர்வதேச தினம் 2023 - ஜூன் 05

- இந்த வருடாந்திர நிகழ்வானது கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புக்கு எதிரான சட்ட விரோதமான, வெளிவராத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 1995 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஒரு மாநாட்டைக் கூட்டி அத்துடன் நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கச் செய்வதற்கான நடத்தை நெறிமுறைகள் அதில் ஏற்றுக் கொள்ளப் பட்டன.
- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளுக்கான தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

- அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கடல் உணவுகளில் கிட்டத்தட்ட 32% சட்ட விரோதமாகப் பிடிக்கப் படுகிறது.
- வடகிழக்கு அட்லாண்டிக் மற்றும் அதை ஒட்டியக் கடல் பகுதிகளில் உள்ள மீன்கள் 39% அளவில் மிதமிஞ்சி பிடிக்கப் படுவதாகக் கருதப் படுகிறது.
- கடந்த 40 ஆண்டுகளில் கடல்வாழ் இனங்கள் 39% குறைந்துள்ளன.

## உலகப் பூச்சி தினம் - ஜூன் 06

- பூச்சி மேலாண்மை மற்றும் அதன் நன்மைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை பரப்பச் செய்வதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- பயிர்கள், மரங்கள் மற்றும் செடிகளைப் பூச்சிகளிருந்துப் பெருமளவில் பாதுகாப்பது பற்றி மக்களுக்குக் கற்பிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன் முதலில் பெய்ஜிங்கில் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி அன்று கொண்டாடப் பட்டது.




## ஐக்கிய நாடுகளின் ரஷ்ய மொழி தினம் - ஜூன் 06

- ரஷ்ய மொழி தினம் என்பது முதல்முறையாக 2010 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் கொண்டாடப் பட்டது.
- இது கலாச்சாரப் பன்முகத் தன்மை மற்றும் பன்மொழித் தன்மையை ஆதரிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ஜூன் மாதம் 6 ஆம் தேதியானது 1799 ஆம் ஆண்டு இதே தேதியில் பிறந்த அலெக்சாண்டர் புஷ்கின் என்பவரின் பிறந்த நாளுடன் ஒத்துப் போகிறது.
- அனைத்து ஐரோப்பிய இலக்கிய வகைகளுக்கும் ரஷ்யாவை அறிமுகப்படுத்திய மிகப் பெரிய ரஷ்யக் கவிஞராக புஷ்கின் கருதப் படுகிறார்.
- ஐநா அமைப்பு பிரெஞ்சு, ஸ்பானியம், ஆங்கிலம், அரபு, சீனம் மற்றும் ரஷ்ய மொழி ஆகிய ஆறு அதிகாரப் பூர்வ மொழிகளின் சமத்துவத்தைப் பேணுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளது.

## உலக உணவுப் பாதுகாப்புத் தினம் - ஜூன் 07

- இந்த நாள் பாதுகாப்பான உணவு நடைமுறைகளின் முக்கியத்துவத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் பாதுகாப்பான உணவின் ஒரு உலகளாவியத் தேவையை முன்னிலைப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இந்த சர்வதேச தினம் உருவாக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒரு தீர்மானத்தின் மூலம் இந்த நாள் ஏற்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு உலக உணவுப் பாதுகாப்புத் தினத்தின் கருப்பொருள் "உணவுத் தர நிலைகள் உயிர்களைக் காக்கும்" என்பதாகும்.

## உலக மூளைக் கட்டி தினம் - ஜூன் 08




- இந்த நாள் மூளைக் கட்டிகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வது மற்றும் மக்களுக்கு இது குறித்தத் தகவல்களை அளிப்பது ஆகியவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மூளைக் கட்டிகள் என்பது பொதுவாக மூளையில் அல்லது அதைச் சுற்றியுள்ள கட்டமைப்புகளுக்குள் உருவாகும் ஒரு அசாதாரண வளர்ச்சியாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் “உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் - மன அழுத்தத்திலிருந்து விலகி இருங்கள்" என்பதாகும்.

## உலகப் பெருங்கடல் தினம் - ஜூன் 08

- இந்த நாள் நமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதில் பெருங்கடல்களின் முக்கியப் பங்கையும், அவை அழிவிலிருந்துத் தடுக்கப் பட வேண்டியதன் ஒரு அவசியத்தையும் நினைவூட்டுகிறது.
- கடல்கள் பூமியின் மேற்பரப்பில் சுமார் 71% பரப்பினை ஆக்கிரமித்துள்ளன.
- புவியின் காலநிலையை நன்குப் பராமரிக்கவும், வெப்பநிலையை ஒழுங்குபடுத்தவும், ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யவும் இவை இன்றியமையாதவையாகும்.

- இந்த ஆண்டின் கருப்பொருள் "புவிக் கிரகப் பெருங்கடல்: ஓதங்கள் மாறுகின்றன" என்பதாகும்.




## உலக அங்கீகாரத் தினம் 2023 - ஜூன் 09




- இது பல்வேறு துறைகளில் அங்கீகார வழங்கீட்டின் பங்கினை அங்கீகரித்து அதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொழில் துறைகளில் போட்டித் திறன், சார்புநிலை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதில் அங்கீகாரத்தின் மதிப்பு மற்றும் நன்மைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச ஆய்வக அங்கீகாரக் கூட்டமைப்பு (ILAC) மற்றும் சர்வதேச அங்கீகார மன்றம் (IAF) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியின் விளைவாக 2007 ஆம் ஆண்டில் இந்த நாள் நடைமுறைக்கு வந்தது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அங்கீகாரம்: உலகளாவிய வர்த்தகத்தின் எதிர்காலத்தை ஆதரித்தல்" என்பதாகும்.

## குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 12

- இது ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படும் ஒரு நிகழ்வாகும்.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது இந்த நாளை 2002 ஆம் ஆண்டில் நிறுவியது.
- உலகளவில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களில் ஒவ்வொரு பத்து குழந்தைகளில் ஒன்பது குழந்தைகள் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்கள் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, அனைவருக்குமான 'சமூக நீதி. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்!' என்பதாகும்.

## சர்வதேச வெண்தோல் நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 13

- இந்தத் தினமானது உலகம் முழுவதும் வெண்தோல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதோடு அவர்கள் மீதான தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது.
- அல்பினிசம் (வெண்தோல் நோய்) என்பது ஒரு அரிதான மற்றும் மரபணு ரீதியாக மரபு வழியாகப் பெறப்பட்ட பாதிப்பு நிலையாகும் என்பதோடு, இந்த நோயினால் பாதிக்கப் படுபவரின் தோல், முடி மற்றும் கண்களில் சிறிதளவு அல்லது நிறமி (மெலனின்) இழப்பு ஏற்படுகிறது.
- இது சூரியன் மற்றும் பிரகாசமான ஒளி ஆகியவற்றினால் பாதிப்புக்குள்ளாகும் ஒரு தன்மையினை ஏற்படுத்துகிறது.
- இது ஒரு தொற்றாத நோய் நிலையாகும், என்றாலும் அல்பினிசம் பாதிப்பு உள்ளவர்கள் பார்வைக் குறைபாடுடையவர்களாகவும், தோல் புற்றுநோய்க்கு உள்ளாகும் ஒரு பெரும் வாய்ப்பினைக் கொண்டவர்களாகவும் உள்ளனர்.
- 2013 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையமானது, "அல்பினிசம் பாதிப்பு உள்ள நபர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் பாகுபாடு" என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உள்ளடக்கமே வலிமை" என்பதாகும்.

## சர்வதேச ஆவணக் காப்பக தினம் - ஜூன் 09

- இத்தினமானது 1948 ஆம் ஆண்டில் சர்வதேச ஆவணக் காப்பக சபை (ICA) நிறுவப்பட்ட தேதியை நினைவு கூரும் நாளாகும்.
- இந்த ஆண்டானது இந்த அமைப்பின் 75வது ஆண்டு நிறைவாகும்.
- இந்தியத் தேசிய ஆவணக் காப்பகம் ஆனது 1891 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் தேதியன்று கொல்கத்தா நகரில் நிறுவப்பட்டது.
- இந்தியத் தேசிய ஆவணக் காப்பகம் ஆனது 1993 ஆம் ஆண்டு பொதுப் பதிவுச் சட்டம் மற்றும் 1997 ஆம் ஆண்டு பொதுப் பதிவு விதிகள் ஆகியவற்றிற்கான அமலாக்கத் தலைமை முகமையாகவும் உள்ளது.

International Council on Archives
75th Anniversary
1948 – 2023

## உலக இரத்தத் தான தினம் - ஜூன் 14

- ❖ பாதுகாப்பான இரத்தத்தைப் பெறுவதற்கான விழிப்புணர்வைப் பரப்புவதும், இரத்தத் தானம் செய்பவர்களின் உன்னதச் செயலுக்கு நன்றி தெரிவிப்பதும் இந்த நாளின் ஒரு நோக்கமாகும்.
- ❖ இந்தத் தினமானது முதன்முதலில் 2004 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு - "இரத்தம் தானம் செய்யுங்கள், பிளாஸ்மா தானம் செய்யுங்கள், வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளுங்கள், அடிக்கடி பகிர்ந்து கொள்ளுங்கள்" என்பதாகும்.

## உலக காற்று தினம் - ஜூன் 15

- ❖ காற்றாலை ஆற்றலின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, இந்தத் தொழில்துறையில் மேலும் பல மேம்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இது விண்ட்யூரோப் மற்றும் உலக காற்றாற்றல் சபை (GWEC) ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப் பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும்.
- ❖ இந்த ஆண்டானது, 2007 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உலக காற்று தினத்தின் 16 வது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.

## உலக முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினம் - ஜூன் 15

- ❖ முதியோர்களைப் பாதிக்கும் பண்பாட்டு, சமூக, பொருளாதார மற்றும் ஜனநாயக செயல்முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் முதியோர் எதிர் கொள்ளும் வன்கொடுமைகள் பற்றிய சரியான புரிதலை வழங்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த வருடாந்திர நிகழ்வானது, முதியோர் வன்கொடுமை தடுப்புக்கான சர்வதேச வலையமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றினால் 2006 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது .
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் உலகில் உள்ள முதியோரின் எண்ணிக்கை 1.4 பில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "சுழற்சி முறைப் பாதிப்பினைத் தடுத்தல்: முதியோர்களுக்கான கொள்கை, சட்டம் மற்றும் சான்றுகள் அடிப்படையில் அமைந்த நடவடிக்கைகள் ஆகியவற்றில் நிலவும் ஒரு பாலின அடிப்படையில் அமைந்த வன்முறையை நிவர்த்தி செய்தல்" என்பதாகும்.
- சமீபத்தியத் தரவுகளின்படி, 28% அளவில் உடல்ரீதியான வன்முறையினாலும், அதைத் தொடர்ந்து அவமரியாதை (54%), வாய்மொழி வன்முறை (36%) மற்றும் புறக்கணிப்பு (29%) போன்றவற்றினாலும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

## ASEAN டெங்கு தினம் - ஜூன் 15

- டெங்கு பற்றிய பொது விழிப்புணர்வை அதிகரிப்பது, அதன் தடுப்பு மற்றும் அதன் கட்டுப்பாட்டுக்கான வளங்களைத் திரட்டுவது மற்றும் அந்த நோயைக் கையாள்வதில் பிராந்தியத்தின் உறுதிப்பாட்டினைப் பறைசாற்றுவது ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10வது ASEAN சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தின் போது இந்த நிகழ்வினை அனுசரிப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.
- இந்த முதல் பிராந்திய நிகழ்வானது 2011 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்றது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்திற்கான கருத்துரு என்பது ‘டெங்குவிற்கு எதிராகப் போராடுவதற்கான ASEAN பிராந்தியத்தின் உறுதிப்பாடு’ ஆகும்.


## வெளிநாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜூன் 16

- புலம் பெயர்ந்தத் தொழிலாளர்களின் முக்கியத்துவத்தைப் பேணுவதற்கும், அவர்களின் குடும்பங்களைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான முயற்சிகளையும் இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- பணம் அனுப்புதல் அல்லது அன்பளிப்பாக வழங்கப் படும் தொகையைப் பண வரவு எனும் பதம் குறிக்கிறது.
- பெரும்பாலும் கிராமப்புறங்களில் இருந்து செல்லும் புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள், தங்கள் குடும்பத்தை காப்பாற்ற உதவுவதற்காக, அவர்களது சொந்த இடத்திலிருந்து வெகு தொலைவில் சொற்ப ஊதியம் வழங்கும் தொழில்களை செய்கிறார்கள்.
- 2023-2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நிதி உள்ளடக்கம் மற்றும் செலவுக் குறைப்பிற்காக எண்ணிம அடிப்படையில் பணம் அனுப்புதல்" என்பதாகும்.
- இந்தத் தினமானது, 2018 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்ப்பதற்கான உலக தினம் - ஜூன் 17


- பாலைவனமாவதைத் தடுப்பது மற்றும் சேதமடைந்த நிலத்தை மீட்டெடுப்பதில் இந்தத் தினம் கவனம் செலுத்துகிறது.

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நடைபெற்ற மாநாட்டின் ஒரு விளைவாக 1994 ஆம் ஆண்டில் இந்த நாள் நிறுவப்பட்டது.
- இந்த நாள் 1995 ஆம் ஆண்டு முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டை எதிர்த்துப் போராடச் செய்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனமாக்கல் உடன்படிக்கை (UNCCD) உருவாக்கப்பட்டது.
- 2006 ஆம் ஆண்டானது, "சர்வதேசப் பாலைவனங்கள் மற்றும் பாலைவனமாக்கல் ஆண்டாக" அறிவிக்கப் பட்டது.




## உலக அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 19


- இது அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் (SCD) மற்றும் உலகெங்கிலும் உள்ள தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அரிவாள் உயிரணு சோகை நோய் என்பது அசாதாரண இரத்த சிவப்பணுக்கள் காணப் படும் நிலையினைக் குறிக்கும் ஒரு மரபணு ரீதியிலான இரத்தக் கோளாறு ஆகும்.
- இந்நோயில் செல்கள் பிறை அல்லது அரிவாள் வடிவம் மற்றும் இந்த ஒழுங்கற்ற வடிவங்களில் மாறும்.
- இது இரத்த நாளங்களில் அடைப்புகளை ஏற்படுத்தி, அதன் மூலம் பல்வேறு உடல்நலச் பாதிப்புகளுக்கு வழி வகுக்கும்.



## உலகப் பொழுதுபோக்கு நடை தினம் - ஜூன் 19

- இந்த நாள் ஓய்வு எடுத்து ஒவ்வொரு நாளிலும் காணப்படும் அழகை மீண்டும் கண்டறிய மக்களுக்கு நினைவூட்டுகிறது.
- இது உலகெங்கிலும் உள்ளவர்களைத் தங்கள் தினசரி நடைமுறையின் வேகத்தைக் குறைத்து, நிதானமாக நடப்பதை ஊக்குவிக்கிறது.
- 1979 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள மேக்கினாக் தீவில் உள்ள கிராண்ட் ஹோட்டலில் பணி புரியும் போது WT ரபே என்பவரால் இந்த நாள் நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "எளிமையின் மகிழ்ச்சியை மீண்டும் கண்டறிதல்" என்பதாகும்.

## தேசிய வாசிப்பு தினம் - ஜூன் 19





- இணையம் ஆதிக்கம் செலுத்தும் சகாப்தத்திலும் புத்தகங்களைப் படிப்பதன் மதிப்பை மக்களுக்கு நினைவூட்டுவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது கேரளாவில் 'நூலக இயக்கத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் P.N. பனிக்கரின் நினைவு நாளைக் குறிக்கிறது.
- இவர் கேரளாவில் நூலக இயக்கத்தின் மையமாக இருந்த சனாதன தர்ம நூலகத்தை நிறுவினார்.
- வாசிப்பின் தந்தை என்றழைக்கப்பட்ட இவர் 1995 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் தேதியன்று காலமானார்.
- கேரளாவின் கல்வி அமைச்சகமானது அவரது நினைவு நாளில், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 19 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரையில் வயனா வாரம் எனப்படும் வாசிப்பு வாரத்தைக் கடைபிடிக்கிறது.

## உலக முதலை தினம் - ஜூன் 17

- உலகெங்கிலும் அழிந்து வரும் முதலைகள் மற்றும் பெரிய அலகுடைய முதலைகளின் அவலநிலையை முன்னிலைப்படுத்தச் செய்வதற்காக என்று இந்த ஒரு உலகளாவிய விழிப்புணர்வுத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- முதலாவது உலக முதலை தினமானது 2017 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் தேதியன்று நடத்தப் பட்டது.
- க்ரோகோடிலியா என்ற ஊர்வன வரிசையைச் சேர்ந்த 23 வகையான நீர்வாழ் விலங்குகளில் முதலையும் ஒன்றாகும்.
- இது ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா முழுவதும் வாழும் ஒரு பெரிய நீர்வாழ் ஊர்வன இனமாகும்.
- ஆறுகள், ஏரிகள், சதுப்பு நிலங்கள் போன்ற நன்னீர் வாழ்விடங்களில் அவை திரளாக காணப் படுகின்றன.
- உப்பு நீர் வாழ் முதலை போன்ற சில இனங்கள் பெரும்பாலும் கடலோரப் பகுதிகளில் வாழ்கின்றன.
- இந்தியாவில் பரந்தகன்ற மூக்குடைய முதலை அல்லது சதுப்பு நில முதலை, கழிமுகம் அல்லது உப்பு நீர் முதலை மற்றும் கங்கை நீர் முதலை ஆகிய மூன்று முதலை இனங்கள் காணப் படுகின்றன.




## நிலையான சமையல் கலை தினம் - ஜூன் 18

- நிலையான மேம்பாட்டினை ஊக்குவிப்பதில் உணவுமுறைகள் வகிக்கும் ஒரு முக்கியப் பங்கையும், நாம் என்ன சாப்பிடுகிறோம் என்பது பற்றிய சில முக்கியமான விருப்பத் தேர்வுகளையும் இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு கூற்றுப்படி, சமையல் கலை சில நேரங்களில் உணவின் கலை என்று அழைக்கப்படுகிறது.
- இது குறிப்பிட்டப் பகுதியில் நிலவும் சமையல் பாணியையும் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 'உள்ளூர் சுவைகள் மற்றும் உலகப் பாரம்பரியத்தை பாதுகாத்தல்' என்பதாகும்.

## வெறுப்பினை உண்டாக்கும் பேச்சை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 18

- வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு என்ற உலகளாவியப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசரத் தேவையின் முக்கிய நினைவூட்டலாக இத்தினம் விளங்குகிறது.
- பிரிவினையை ஏற்படுத்தும் பேச்சுகள் பரவுவதை எதிர்ப்பதற்கும், புரிதல், மரியாதை மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்குமான கூட்டு நடவடிக்கைக்கான முக்கிய அழைப்பினை இது விடுத்துள்ளது.
- இந்த முக்கியத் தினமானது, வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உத்தி மற்றும் செயல்திட்டத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.
- இத்தினமானது 2019 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.

## மோதல் காலங்களில் நிகழும் பாலியல் வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 19

- இந்தத் தினமானது, மோதல் காலங்களில் நிகழும் பாலியல் வன்முறை என்ற முக்கியப் பிரச்சினையை முன்னிலைப்படுத்துவதையும், அதைத் தடுப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "மோதல் காலங்களில் நிகழும் பாலியல் வன்முறைகளைத் தடுத்தல், அது குறித்து உரையாற்றுதல் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவற்றிற்காக பாலினம் சார்ந்த எண்ணிம பிளவைக் குறைத்தல்" என்பதாகும்.
- இந்த நாள் 2015 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் நிறுவப் பட்டதாகும்.
- இது மோதல் காலங்களில் நிகழும் பாலியல் வன்முறையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உலகெங்கிலும் பாலியல் வன்முறைக்கு ஆளானவர்களுக்கு மரியாதை கிடைக்கச் செய்வதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக அகதிகள் தினம் - ஜூன் 20

- இந்த நாள் உலகெங்கிலும் உள்ள அகதிகள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவர்களின் நெகிழ்திறனையும் கௌரவிக்கிறது.
- இந்த நாள் மோதல்கள், துன்புறுத்தல் அல்லது வன்முறை காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள மில்லியன் கணக்கான தனிநபர்கள் எதிர் கொள்ளும் சவால்களை நினைவூட்டுகிறது.
- இது விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களின் உரிமைகளுக்காக வாதிடவும், மற்றும் பாதுகாப்பு விரும்புபவர்களுடனான ஒற்றுமையைக் காட்டவும் வாய்ப்பளிக்கிறது.
- இந்த நாள் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 04 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இது உலகளவில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பற்றிய ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும், 1951 ஆம் ஆண்டு அகதிகள் உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையும் நோக்கமாகக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Hope away from home" என்பதாகும்.

## உலக நீர்நிலையியல் தினம் - ஜூன் 21

- இந்தத் தினமானது சர்வதேச நீர்நிலையியல் அமைப்பினால் (IHO) 1921 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- கடல்சார் உயிரினங்களின் பல்வேறு அம்சங்கள் குறித்து மிகக் கவனம் செலுத்தும் ஒரு முக்கிய நிறுவனமாக இது செயல்படுகிறது.
- இந்தத் தினமானது, நீர்நிலையியல் பற்றியும், கடல்கள் மற்றும் பெருங்கடல்கள் பற்றிய மேம்பட்ட தகவல் அறிதலில் அது எவ்வாறு பங்கு வகிக்கிறது என்பது பற்றியும் விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நீர்நிலையியல் - பெருங்கடலின் எண்ணிம இணை வடிவத்தினை உருவாக்குதல்" என்பதாகும்.

## உலக இசை தினம் - ஜூன் 21





- இது உலகளாவிய மொழியாக விளங்கும் இசையினைக் கொண்டாடச் செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் உலக இசை தினமானது,1982 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் தேதியன்று பிரான்சு நாட்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Music on the Intersections" என்பதாகும்.

## சர்வதேச யோகா தினம் - ஜூன் 21

- கோடைகால சங்கிராந்தி என்பதாலும், ஆண்டின் மற்ற எல்லா நாட்களையும் விட சூரிய ஒளி அதிகம் பரவும் நாளான ஜூன் 21 ஆம் தேதி இத்தினத்திற்காகத் தேர்வு செய்யப் பட்டது.
- சர்வதேச யோகா தினம் பற்றிய கருத்தாக்கமானது, முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இந்திய அரசினால் முன்மொழியப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு வசுதேவ குடும்பத்திற்கான யோகா என்பதாகும்.
- சூரத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வில் 1.25 லட்சத்துக்கும் அதிகமான நபர்கள் கலந்து கொண்டு, ஒரே இடத்தில் அதிக மக்கள் கூடி யோகாசனம் செய்தல் என்ற புதிய கின்னஸ் சாதனையினைப் படைத்துள்ளனர்.

## சர்வதேச சங்கிராந்தி தினம் - ஜூன் 21

- கோடைகாலச் சங்கிராந்தி (கதிர் திருப்ப நாள்) ஆனது கோடைகாலத்தின் முறையான தொடக்கத்தைக் குறிக்கிறது.
- ஜூன் 21 ஆம் தேதியானது ஆண்டின் மிக நீண்ட நாள் மற்றும் குறுகிய இரவு கொண்ட தினமாகும்.
- இந்த நாளுக்குப் பிறகு பகல் நேரம் மெதுவாகவும், சீராகவும் குறையத் தொடங்கும்.
- கோடைகாலச் சங்கிராந்தியின் போது, சூரியன் மிகவும் உச்சநிலை மற்றும் வடக்கு நிலையை அடைகிறது.
- அதே போல், குளிர்காலச் சங்கிராந்தி என்பது குளிர்காலத்தின் ஒரு அதிகாரப்பூர்வத் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இது பொதுவாக டிசம்பர் 21 அன்று வருகிறது.





## சர்வதேச விதவைகள் தினம் - ஜூன் 23

- உலகளவில் விதவைகளின் அவல நிலையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் அவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வுக்காக வாதிடுவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விதவைகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் தனித்துவமான சமூக, பொருளாதார மற்றும் சட்டப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் முக்கிய அவசியத்தை நினைவூட்டுவதாக இந்த நாள் விளங்குகிறது.
- இந்த நாள் முதன்முதலில் 2011 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 'பாலினச் சமத்துவத்திற்கானப் புதுமை மற்றும் தொழில்நுட்பம்' என்பதாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை தினம் - ஜூன் 23

- இந்த நாள் பொதுச் சேவையின் அளவிட முடியாத மதிப்பையும் ஒரு உன்னதத் தன்மையையும் நினைவு கூருகிறது.

- ஒரு நாட்டின் மேம்பாட்டில், பொதுச் சேவைகளின் ஒரு முக்கியப் பங்கு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று இந்த நாளை அதிகாரப் பூர்வமாக நியமித்தது.




## அரசுமுறைச் செயல்பாடுகளில் பெண்களின் பங்கேற்பிற்கான சர்வதேச தினம் - ஜூன் 24

- உலகெங்கிலும் உள்ள அரசுமுறை மற்றும் முடிவெடுக்கும் துறைகளில் பங்கு பெற்று உள்ள ஊக்கமிக்கப் பெண்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- ஆர்மீனிய நாட்டின் தூதர் டயானா அப்கர் 20 ஆம் நூற்றாண்டின் முதல் பெண் அரசு முறை அதிகாரியாக கருதப் படுகிறார்.
- 2023 ஆம் ஆண்டிற்கான கருத்துரு என்பது "தடைகளை உடைத்தல், எதிர்காலத்தை வடிவமைத்தல் : நிலையான மேம்பாட்டிற்கு அரசுமுறை செயல்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு" என்பதாகும்.
- இந்த நாளானது கடந்த ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 76வது அமர்வில் உருவாக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, 31 நாடுகளின் அரசு மற்றும்/அல்லது அரசாங்கத்தின் தலைவர்களாக 34 பெண்கள் பணியாற்றுகின்றனர்.

## உலக வெண் புள்ளி நோய் தினம் - ஜூன் 25

- உடலில் சிறுசிறு திட்டுகளாக தோல் நிறமிகளை இழக்கின்ற ஒரு நாள்பட்ட தோல் குறைபாடான விட்டிலிகோ எனப்படும் வெண் புள்ளி நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- விட்டிலிகோ நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்குதல் மற்றும் இந்தக் குறைபாடுடன் வாழும் தனிநபர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வுக்காக என்று போராடுதல், அவர்களின் நிலைமையைப் பற்றிய ஒரு சரியான புரிதலை மேம்படுத்தச் செய்தல் ஆகியவற்றை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விட்டிலிகோ அனைத்து வயது, பாலினம் மற்றும் இனப் பின்னணியில் உள்ளவர்களைப் பாதிக்கிறது என்ற நிலையில் இந்நிலை ஏற்படுவதற்கான சரியான காரணம் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளப்படவில்லை.
- இத்தினமானது, முதன் முதலில் 2011 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.

## சர்வதேசக் கடலோடிகள் தினம் - ஜூன் 25

- சர்வதேச வர்த்தகம், உலகப் பொருளாதாரம் மற்றும் பொதுச் சமூகம் ஆகியவற்றில் இந்தக் கடல்வழி பயணர்கள் (கடலோடிகள்) ஆற்றும் தனித்துவமானப் பங்கினை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- இது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் சர்வதேசக் கடல்சார் அமைப்பினால் (IMO) தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டு கப்பல்களில் இருந்து வெளியாகும் மாசினைத் தடுப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (MARPOL) ஏற்றுக் கொள்ளப்பட்டதன் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கச் செய்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது '50 ஆம் ஆண்டில் MARPOL உடன்படிக்கை - நமது உறுதிப்பாடு மேலும் தொடர்கிறது' என்பதாகும்.




## போதைப்பொருட்களின் தவறான பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் - ஜூன் 26

- 1987 ஆம் ஆண்டு டிசம்பர் 07 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை அனுசரிப்பதற்கான முடிவினை மேற்கொண்டது.
- போதைப் பொருட்களின் தவறானப் பயன்பாடு இல்லாதச் சமூகத்தினை உருவாக்குதல் என்ற இலக்கை அடைவதற்காக உலக நாடுகளின் முயற்சிகளை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "மக்களுக்கு முதலிடம்: களங்கப் படுத்துவதையும் பாகுபாட்டையும் நிறுத்துங்கள், தடுப்பை வலுப்படுத்துங்கள்." என்பது ஆகும்.

## சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு சர்வதேச தினம் - ஜூன் 26

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று இந்த நாளின் அனுசரிப்பினை அறிவிப்பதற்கன ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- உலகெங்கிலும் உள்ள நாடுகள், பொதுச் சமூகங்கள் மற்றும் தனிநபர்களை, சித்திர வதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கும் தங்கள் ஆதரவை வழங்குமாறு அழைப்பு ஒன்றை விடுக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.

## உலகக் குளிர்பதனத் தொழில்நுட்பத் தினம் - ஜூன் 26

- இந்தத் தினமானது, தொழில்துறை அனுபவமிக்க ஸ்டீபன் கில் என்பவரால் 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ஜூன் 26 ஆம் தேதியானது, குளிர்பதனத் தொழில்நுட்பத்தின் முன்னோடியான லார்ட் கெல்வின் என்பவரின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Next Generation Cooling' என்பதாகும்.

## சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நுட்ப நிறுவனங்கள் தினம் - ஜூன் 27


- இந்தத் தினமானது, உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்களிப்பு குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 74வது முழு அளவிலான கூட்டத்தில் இந்த நாள் உருவாக்கப்பட்டது.
- உலகளவில் 90% வணிகங்கள், 60 முதல் 70% வேலைவாய்ப்பு மற்றும் 50% மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நுட்ப நிறுவனங்கள் பங்கினைக் கொண்டுள்ளன.





## தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29

- இந்தத் தினமானது இந்தியாவின் மிகவும் பழம்பெரும் புள்ளியியல் நிபுணரான P.C. மஹலனோபிஸ் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.

- இவர் இந்தியப் புள்ளியியல் துறையின் தந்தையாகக் கருதப்படுகிறார்.
- இவர் 'மஹலனோபிஸ் தொலைவு' என்ற சூத்திரத்தைக் கண்டுபிடித்தவர் ஆவார்.
- இவர் 1950 ஆம் ஆண்டில் தேசியப் புள்ளியியல் நிறுவனத்தினை (ISI) நிறுவினார்.
- 2017 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் தேதியன்று முதல் முறையாக இந்த நாள் அனுசரிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான புள்ளியியல் தினத்தின் கருப்பொருள் "நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கண்காணிப்பதற்கான தேசியக் குறிகாட்டிக் கட்டமைப்புடன் மாநிலக் குறிகாட்டிக் கட்டமைப்பை ஒத்திசைத்தல்" ஆகும்.




## சர்வதேச வெப்ப மண்டலத் தினம் - ஜூன் 29



- இது வெப்ப மண்டல நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அந்தப் பகுதியிலுள்ள நாடுகளின் குடிமக்களுக்குக் கிடைக்கப் பெறும் பல்வேறு வாய்ப்புகள் ஆகியவை குறித்து எடுத்துரைக்கிறது.
- மகர ரேகைக்கும் கடக ரேகைக்கும் இடைப்பட்ட பகுதியில் வெப்ப மண்டல நாடுகள் அமைந்துள்ளன.
- பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள், ASEAN அமைப்பு நாடுகள், வளைகுடா நாடுகள் மற்றும் தென் அமெரிக்காவின் குறிப்பிடத்தக்கப் பகுதி இப்பகுதியில் அமைந்துள்ளன.
- இந்தியாவின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளும் பூகோளத்தின் இந்த இரண்டு கற்பனைக் கோடுகளுக்கு இடைப்பட்டப் பகுதியில் அமைந்து காணப்படுகின்றன.
- 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது இந்த நாளை அறிவிப்பதற்கான ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியது.

## உலக குறுங்கோள் தினம் - ஜூன் 30

- குறுங்கோள்களின் மோதல்களின் அபாயம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அதற்காக மேற்கொள்ளப்படக் கூடிய பல்வேறு நெருக்கடி கால தகவல் தொடர்பு நடவடிக்கைகள் குறித்துப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதும் இதன் நோக்கம் ஆகும்.
- 1908 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியன்று ரஷ்யக் கூட்டமைப்பின் சைபீரியா பகுதியில் துங்குஸ்கா என்ற குறுங்கோள் மோதியதன் ஆண்டு நிறைவை இந்த நாள் குறிக்கிறது.
- இந்த நாளில், ரஷ்யாவின் சைபீரியாவில், பூமியின் மேற்பரப்பில் ஒரு விண்கல் மோதி 2,150 சதுர கிலோமீட்டர் வனப் பகுதியினை நாசம் செய்தது.
- தற்போது வரை அறியப்பட்ட பல குறுங்கோள்களின் எண்ணிக்கை 1,297,954 என நாசா தெரிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “குறுங்கோள் கண்டுபிடிப்பு” என்பது ஆகும்.

## சர்வதேசப் பாராளுமன்றத் தினம் - ஜூன் 30

- இது பாராளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் நிறுவப்பட்ட தேதியை நினைவு கூருகிறது.
- 1889 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நிறுவப்பட்ட இந்த ஒன்றியமானது தேசியப் பாராளுமன்றங்களின் ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளிடையே ஜனநாயக ஆளுமை, பொறுப்புடைமை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 930 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐஸ்லாந்து பாராளுமன்றம் (அல்திங் - Althing) ஆனது உலகின் மிகவும் பழமையானப் பாராளுமன்றமாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கிரகத்திற்கான பாராளுமன்றங்கள்" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## பாதாள உலகத்தின் நுழைவாயில்

- "பாதாள உலகத்தின் நுழைவாயில்" (Gateway to the Underworld) என்று அழைக்கப்படும் பண்டைய ஓல்மெக் என்ற கலைப்பொருள் வெற்றிகரமாக மெக்சிகோவிற்கு மீண்டும் வந்தடைந்தது.
- இது 1950 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சட்டவிரோதமாக கைப்பற்றப் பட்டது.
- இது சால்காட்ஸிங்கோவின் நினைவுச் சின்னம் 9 என அதிகாரப்பூர்வமாக அறியப் படுகின்றது.
- இது பண்டைய ஓல்மெக் நாகரீகத்திலிருந்துப் பெறப்பட்ட, மெக்சிகோவினால் அதிகம் கோரப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இது முந்தைய கிளாசிக் (செந்நெறி) காலத்தின் மத்தியக் கட்டத்தினைச் சேர்ந்தது (கிமு 800 - 400) ஆகும்.
- ஓல்மெக்ஸ் என்பது மீசோ அமெரிக்காவின் பழமையான நாகரிகங்களில் ஒன்றாகும்.
- அந்த மதிப்பீடுகளின்படி, இந்த நாகரிகமானது கி.மு. 1200 முதல் 400 வரையிலான காலக் கட்டத்தில் செழித்துப் பெருகியது.



## லிபிசான் குதிரைகள்

- லிபிசான் குதிரைகள் சமீபத்தில் யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் இடம் பெறுவதற்கான ஒரு அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளன.
- லிபிசானர்கள் என்றும் அழைக்கப்படும் இந்த உயர் ரக லிபிசான்கள், ஸ்பானியம், அரபு மற்றும் பெர்பர் ரகத்தின் குதிரைகளின் கலப்பினத்துடன் கூடிய ஸ்டாலியன் என்ற ரக குதிரைகளின் வழித் தோன்றல்கள் ஆகும்.
- அவை முதன்முதலில் 16 ஆம் நூற்றாண்டில் ஹப்ஸ்பர்க் ஆட்சியில் வளர்க்கப் பட்டன.
- எட்டு நாடுகள் கூட்டாக லிபிசான் குதிரைகளின் இனப்பெருக்கப் பாரம்பரியத்தினை அங்கீகரிப்பதற்காக விண்ணப்பித்தன.



## புராண கிலா அகழ்வாராய்ச்சிகள்

- புராண கிலா அகழ்வாராய்ச்சிகள் அது மௌரியர் காலத்துக்கு முந்தையக் குடியேற்றம் பற்றியத் தகவல்களை வெளிப்படுத்துகின்றன.
- இதில் கண்டுபிடிக்கப்பட்டப் பொருட்களில், பொதுவாக கி.மு. 1200 முதல் கி.மு. 600 வரையிலான காலகட்டத்தினைச் சேர்ந்த வர்ணம் பூசப்பட்ட சாம்பல் நிறப் பாத்திரங்களின் துண்டுகளும் அடங்கும்.
- இந்தப் புதிய அகழ்வாராய்ச்சியில் இராஜபுத்திரர் காலத்தைச் சேர்ந்த 900 ஆண்டுகள் பழமையான வைகுண்ட விஷ்ணு சிலையின் எச்சப் பகுதிகளும் கிடைத்துள்ளன.
- குப்தர் காலத்தைச் சேர்ந்த கஜ லக்ஷ்மி தேவியின் டெரகோட்டா தகடு, மௌரியர் காலத்தைச் சேர்ந்த 2,500 ஆண்டுகள் பழமையான டெரகோட்டா வளையக் கிணற்றின் கட்டமைப்பு எச்சப் பகுதிகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- மணிகள், முத்திரைகள், செப்புக் காசுகள் மற்றும் எலும்பினால் உருவாக்கப்பட்ட ஊசி ஆகியவற்றோடு சேர்த்து, 2,300 ஆண்டுகளுக்கு முந்தைய சுங்க-குஷான காலத்தைச் சேர்ந்த நேர்த்தியான, நான்கு அறைகள் கொண்ட வளாகமும் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.




## வெப்பக் குறியீட்டு அடிப்படையிலான காப்பீட்டுத் திட்டம்

- இந்தியாவின் ஒரு முன்னணி தனியார் பால்பொருட்கள் நிறுவனமான கர்நாடகாவின் mooMark, பால் பண்ணையாளர்களுக்கு வெப்பக் குறியீட்டு அடிப்படையிலான காப்பீட்டு வசதியினை வழங்கும் முதல் நிறுவனம் ஆகும்.

- சுட்டெரிக்கும் கோடை மாதங்களில் பால் விற்பனை குறைவதால் ஏற்படும் வருமான இழப்பிலிருந்து பால் பண்ணையாளர்களை பாதுகாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெப்ப அலைகளின் போது பால் உற்பத்தி குறைவதால் ஏற்படும் வருவாய் இழப்புக்குப் பால் பண்ணையாளர்களுக்கு இதன் மூலம் நிதி இழப்பீடு வழங்கப்படும்.

## ஹோமோ நலேடி புதைவிடங்கள் மற்றும் கீறல் ஓவியங்கள்

- ஒரு தொன்மைமிகு மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் இறந்த உடல்களைச் சுவர்களில் புதைக்கும் பழக்கம் கொண்டிருந்ததையும் மற்றும் குகைச் சுவர்களில் ஓவியங்களைச் செதுக்கியதற்கான ஆதாரங்களையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- நவீன மனிதர்களால் உடல்கள் புதைக்கப்பட்டதற்கான ஒரு ஆரம்பகாலச் சான்று இது ஆகும்.
- இவை இதுவரை அறியப்பட்ட ஹோமோசேப்பியன் புதைவிடங்களை விடக் குறைந்தது 100,000 ஆண்டுகள் பழமையானவை ஆகும்.
- ஹோமோ நலேடியின் மூளையானது, நவீன மனித மூளையின் அளவில் மூன்றில் ஒரு பங்காகும்.
- ஹோமோ நலேடி, பல நூறாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து அழிந்து போன மனித இனமாகும்.
- 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு அகழ்வாராய்ச்சியின் போது தென் ஆப்பிரிக்காவின் ரைசிங் ஸ்டார் குகை பகுதிகளில் ஹோமோ நலேடியின் படிமங்கள் முதன்முதலில் கண்டுபிடிக்கப் பட்டன.




## எனது கணக்கு எனது பெயர் திட்டம்

- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) வாடிக்கையாளர்கள் தங்கள் சேமிப்புக் கணக்கு எண்ணாக எந்தவொருப் பெயரையும் தேர்ந்தெடுக்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது.
- வங்கித் துறையில் வாடிக்கையாளர் தனது பெயரையோ அல்லது வேறு எந்தவொருப் பெயரையோ கணக்கு எண்ணாகத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கும் ஒரு திட்டம் அறிமுகப் படுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தத் திட்டத்தின்படி, கணக்குப் பெயரானது ஏழு எழுத்துக்கள் அல்லது ஏழு எண்கள் அல்லது ஏழு எண்ணெழுத்துக்கள் மட்டுமே சேர்ந்ததாக இருக்க வேண்டும்.




## அமெரிக்காவில் தோல் பாவைக் கூத்து நிகழ்ச்சி




- வட அமெரிக்காவின் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு (FeTNA) மற்றும் சாக்ரமாண்டோ தமிழ் மன்றம் ஆகியவற்றினால் அமெரிக்காவில் FeTNA அமைப்பின் 36வது மாநாட்டில் நிகழ்ச்சி நடத்துவதற்காக தோல் பாவைக் கூத்து B. முத்துச்சந்திர ராவிற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.
- இவர் தமிழக அரசின் கலைமாமணி விருதை வென்றவர் ஆவார்.
- தோல்பாவைக் கூத்து என்பது நிழல் பொம்மலாட்டத்தின் ஒரு வடிவம் ஆகும்.
- இந்தக் கலை வடிவமானது குறிப்பாக மதுரை, கன்னியாகுமரி, கேரளாவின் பாலக்காடு திருச்சூர் மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் பிரபலமாக காணப்படுகிறது.


## பேரழிவுகரமான உள்நோக்கிய அழுத்த வெடிப்பு

- டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை காண்பதற்கான பயணத்தில் ஐந்து பேரை ஏற்றிச் சென்ற ஆழ்கடல் நீர்மூழ்கிக் கப்பலானது "பேரழிவுகரமான ஒரு உள்நோக்கிய அழுத்த வெடிப்பினால்" துண்டு துண்டாக வெடித்துச் சிதறியது.
- டைட்டன் எனப்படும் இந்த நீர்மூழ்கிக் கப்பலானது, அமெரிக்காவைச் சேர்ந்த ஓஷன் கேட் எக்ஸ்பெட்டிஷன்ஸ் என்ற நிறுவனத்தினால் இயக்கப்பட்டது.

- டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலில், அதனை இயக்கிய அந்த நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஸ்டாக்டன் ரஷ் உட்பட ஐந்து பேர் இருந்தனர்.
- 1912 ஆம் ஆண்டு தனது முதல் பயணத்தின் போது பனிப்பாறையில் மோதி மூழ்கிய RMS டைட்டானிக் கப்பலில் இருந்த 1,500 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.
- டைட்டானிக் கப்பல் மூழ்கிக் கிடக்கும் ஆழத்தில், ஒரு சதுர அங்குலத்திற்கு சுமார் 5,600 பவுண்டுகள் அழுத்தம் உள்ளது.
- ஒரு பேரழிவுகரமான உள்நோக்கிய அழுத்த வெடிப்பு என்பது, ஒரு மில்லி வினாடிக்கு உள்ளாகவே நிகழக்கூடிய "மிக விரைவான" வெடிப்பு நிகழ்வாகும்.




## வரலாற்றுக்கு முந்தையக் காலகட்டத்தினைச் சேர்ந்தப் பாறை ஓவியங்கள் – குண்டூர்



- ஆந்திரப் பிரதேச மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள ஓர்வகல்லு கிராமத்தில், ஒரு நிலத்தில் ஒருவர் உழுது கொண்டிருப்பதைச் சித்தரிக்கும் வகையிலான ஒரு இடைக் கற்காலப் பாறை ஓவியம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

- ❖ இயற்கையாக உருவான ஐந்து குகைகளில், இரண்டு குகைகளின் பின் சுவர்கள் மற்றும் கூரைகளில் தனிச்சிறப்பு மிக்கச் சித்தரிப்புகளுடன் கூடிய பல பாறை ஓவியங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.
- ❖ இவை ஏறக்குறைய கி.மு. 5000 ஆம் காலக் கட்டத்தினைச் சேர்ந்த இடைக் கற்கால மக்களால் உருவாக்கப்பட்டன.

## ITU - IMT 2030




- ❖ சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) ஆனது ஜெனீவா நகரில் நடைபெற்ற கூட்டத்தில் 6G தொலைநோக்குக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் (UN) தொலைத்தொடர்பு முகமையானது, ஆறாவது தலை முறைத் தொழில்நுட்பம் அல்லது 6G தொழில்நுட்பத்திற்கு "IMT-2030" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- ❖ இந்தப் புதிய கட்டமைப்புப் பரிந்துரையானது பல்வேறு ஆராய்ச்சிக் குழுக்கள் மற்றும் 3GPP போன்ற வெளியுறவுத் தரநிலை மேம்பாட்டு நிறுவனங்களில் 6G தொழில்நுட்பம் சார்ந்தப் பணிகளுக்கான ஒரு அடிப்படை ஆவணமாகச் செயல்படும்.

## வாத்தினைப் போன்ற அலகுடைய டைனோசர்

- ❖ புவியின் தெற்கு அரைக்கோளத்தில் இதுவரை அறியப்படாத தாவர வகை டைனோசர் இனத்தின் எச்சப் படிவங்கள் சிலியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- ❖ வாத்தினைப் போன்ற அலகுடைய டைனோசர்கள் வாழ்ந்த பகுதிகள் பற்றி நிலவி வரும் நீண்டகாலக் கருத்துகளுக்கு இது சவால் விடுக்கிறது.
- ❖ கோன்கோகன் நானோய் என்ற இந்த உயிரினமானது 72 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக தற்போது சிலி படகோனியா என்றழைக்கப்படும் கடைக்கோடி தெற்குப் பகுதியில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது.

- மிகவும் பழமையான ஹட்ரோசார்ஸ் எனப்படும் வாத்தினைப் போன்ற அலகுடைய ஒரு வகை டைனோசர் இனங்கள் வட அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் வாழ்ந்தன.
- இவை 145 முதல் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கிரெட்டேசியஸ் காலத்தில் வாழ்ந்தன.
- சிலியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஐந்தாவது வகை டைனோசரான கோன்கோகன் நானோய் உண்மையில் 2013 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.



## அல்-ஹக்கீம் மசூதி – எகிப்து

- எகிப்தின் கெய்ரோ எனுமிடத்தில் உள்ள 11 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க அல்-ஹக்கீம் மசூதியை இந்தியப் பிரதமர் அவர்கள் பார்வையிட்டார்.
- இது இந்தியாவின் தாவூதி போஹ்ரா சமூகத்தின் உதவியுடன் மறுசீரமைக்கப் பட்டது.
- 1012 ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்ட மசூதியின் சுவர்கள் மற்றும் கதவுகளில் நன்கு நுணுக்கமான முறையில் கல்வெட்டுகள் செதுக்கப்பட்டுள்ளன.
- போஹ்ரா சமூகத்தினர் எகிப்து நாட்டில் தோன்றி அதற்குப் பின்னர் ஏமனுக்கு இடம் பெயர்ந்ததாக அறியப் படுகிறது.
- அச்சமூகத்தினர் 11 ஆம் நூற்றாண்டில் இந்தியாவினுள் குடியேறி வாழத் தொடங்கினர்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★